# பெரியார் பல்கலைக்கழகம்

NAAC 'A++' Grade with CGPA 3.61 (Cycle - 3)

State University - NIRF Rank 56 - State Public University Rank 25

Salem-636011, Tamilnadu, India

## தொலைநிலை மற்றும் இணையவழிக் கல்விமையம்

## CDOE

# இளங்கலைத் தமிழ்

**முதலாமாண்டு முதலாம் பருவம்**

## முதன்மைத் தாள் - 2

**தமிழக வரலாறும் பண்பாடும் 24DUTA02**

## 2024 – ஆம் கல்வியாண்டுமுதல் பயிலும் மாணவர்களுக்குரிய பாடநூல்

**Prepared By:**

**Centre for Distance and Online Education (CDOE)**

**Periyar University, Salem – 11.**

# பாடத்திட்டம்

| அலகு | பாடத்திட்ட விளக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1 | வரலாற்றுக் காலத்துக்கு முந்தைய தமிழகம்(கி.மு 5000 முதல் கி.பி 1 வரை) சிந்துவெளி அகழ்வாராய்ச்சி – கற்காலம் – இரும்புக்காலம் – தமிழரின் வரலாற்றுத் தொன்மை – பிற நாட்டாருடன் தமிழரின் தொடர்புகள் | 1-38 |
| 2 | சங்க காலத் தமிழர்கள்(கி.பி1 முதல் 6ஆம் நூற்றாண்டு வரை) பாண் மரபு – வேளிர் வரலாறு – மூவேந்தர்கள் – அகப்புறப் பண்பாடு – களப்பிரர்கள் காலம் | 39 – 76 |
| 3 | பல்லவர் காலத்தில் தமிழர் பண்பாடு (கி.பி 6 முதல் 9 ஆம் நூற்றாண்டு வரை) பல்லவர் ஆட்சி- கலைகளின் வளர்ச்சி- சிற்பம், ஓவியம் - கடற்கரைக் கோயில் – புடைப்புச் சிற்பங்கள் – பக்தி இலக்கியங்கள் உருவாதல். | 77-119 |
| 4 | சோழர்கள் காலம், பிற்காலப் பாண்டியர் காலம், நாயக்கர் காலம் (கி.பி 9 முதல் 18 ஆம் நூற்றாண்டு வரை) சோழர்களின் எழுச்சி, இராஜராஜ சோழன்- இராஜேந்திர சோழன்- அயல் நாட்டில் தமிழர் ஆட்சி – தஞ்சை பெரிய கோயில் – கட்டடக் கலை வளர்ச்சி- உரையாசிரியர்கள் – காப்பியங்கள் வளர்ச்சி – நாயக்கர்கள் வருகை - பாளையப்பட்டுக்கள் – கோயில் கோபுரங்கள் – சிற்றிலக்கிய வளர்ச்சி | 120-160 |
| 5 | சமூக எழுச்சிக்காலம் (19-20 ஆம் நூற்றாண்டு)<br>அச்சு நூல்கள் பதிப்பு – தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி- உ.வே.சா, சி.வை. தா பங்களிப்பு<br>தென்னிந்திய நல உரிமை சங்கத்தின் காலம் – திராவிட இயக்க காலம் - தமிழர்களின் சமூக எழுச்சி | 161 - 199 |

## நோக்கங்கள்

- தமிழக வரலற்றை அறிமுகப்படுத்துதல்.
- தமிழரின் தொன்மையை அறிதல்.
- தமிழரின் பண்பாட்டை அறிந்து கொள்ளல்.
- பிற பண்பாட்டுத் தாக்கங்கள் பற்றி அறிதல்.

## பயன்கள்

- தமிழக வரலாற்றை அறிந்து கொள்வர்.
- தமிழரின் தொன்மையை அறிந்து கொள்வர்.
- தமிழரின் பண்பாட்டினை அறிந்து கொள்வர்.
- பிற பண்பாட்டுத் தாக்கம் ஏற்படும் முறையை அறிவர்.

# அலகு – 1

## 1.1 வலாற்றுக் காலத்துக்கு முந்தைய தமிழகம் – (கி.மு 5000 முதல் கி.பி 1 வரை)

### முன்னுரை

உலகில் முதன்முதல் மக்களினம் தோன்றியது தென்னிந்தியாவில்தான் என்று சில புவியியல், மானிடலியல் வல்லுநர் கருதுகின்றனர். பலகோடி ஆண்டுகட்கு முன்னர் உண்டான மிகப் பழைய கற்பாறைப் படிவுகள் தென்னிந்தியாவிற்றான் காணப்படுகின்றன. தென்னிந்தியாவுக்குத் தெற்கில் அமைந்திருந்த லெமூரியா விற்றான் முதன்முதல் மக்களினம் தோன்றிற்று எனவும், அவ்வினமே தமிழ்நாட்டின் ஆதிகுடிகள் எனவும் லெமூரியக் கொள்கையினர் கருதுவர். தொன்மையான மொழி என்கிற பெருமையை உலக அரங்கில் பெற்றுள்ள தமிழ், வரலாறு எழுவதற்கு முன் தொன்மையான நாகரிகத்தையும் பெற்றுள்ளது. இதை, தொல்பொருள் ஆய்வு மூலம் கிடைத்த பொருள்கள் பறைசாற்றுகின்றன. அவற்றைக் குறித்து இந்த அலகில் வரிவாகக் காணலாம்.

### லெமூரியக் கண்டம்

லெமூரியக் கண்டத்தில் வாழ்ந்து வந்த மக்களின் வழிவந்தவர்கள் இப்போது தென்னிந்தியாவிலும், இலங்கையிலும், கிழக்கிந்தியத் தீவுகளிலும் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களிடம் இனவொற்றுமை, மக்கள் உடல்கூறு ஒற்றுமை, மொழி அமைப்பு ஒற்றுமை ஆகியவை பல காணப்படுகின்றன. நியூஜிலாந்தில் வாழும் ஆதிகுடிகளான மேவோரி மக்களும், இத் தீவைச் சுற்றிலும் சிதறுண்டு கிடக்கும் சிறுசிறு தீவுகளில் வாழும் மக்களும் பேசும் மொழிகளுக்கும் தமிழுக்கும் ஒரு தொடர்பு உண்டு. இஃதன்றி, தென்னிந்திய மக்களுள் சில குலத்தினரும் மரபினரும் போற்றும் வழிபாட்டுச் சின்னங்களையும் அவர்களுள் கள்ளர்கள் என்பார் எய்யும் 'பூமராங்' என்னும் மீண்டுவரும் வேட்டைக் கத்தியையும் இந்தோனேசியாவிலும் பாலினீசியாவிலும் வாழும் ஆதிகுடிகளிடம் காணலாம். மேலும் போர்னியா தீவின் ஆதி குடிமக்களான டையாக்குகளும், ஆனைமலையின் பழங்குடிகளான காடர்களும் மரமேறும் முறை ஒரேவிதமாக உள்ளது. இக் காடர்களும், தென்னிந்திய

ஆதிகுடிகளுள் மற்றோர் இனத்தவரான மலை வேடர்களும் தம் முன் பற்களைத் துணித்துக்கொள்ளும் வழக்கம் ஒன்று உண்டு. மலேசிய நாட்டினரான ஜுகுன்களும் இப் பழக்கத்தை மேற்கொண்டுள்ளனர். மற்றும் தென்னாப்பிரிக்க வாசிகளான நீக்குரோவர்களின் சாயை தென்னிந்திய ஆதிகுடிகள் சிலரிடம் தோற்றமளிக்கின்றது. லெமூரியாக் கண்டம் இருந்ததற்கும், அக்கண்டத்தில் வாழ்ந்த ஆதி மக்கள் வழி வந்தவர்களே தமிழர்கள் என்பதற்கும் மேலே கொடுத்த சான்றுகள் ஆதரவாகக் காட்டப்படுகின்றன.

தமிழர் தமிழகத்திலேயே பிறந்த ஆதிகுடிகள் என்பது லெமூரியக் கொள்கையிளரின் முடிவு. தமிழ் மக்களில் சிலர் நாட்டைவிட்டு வெளியேறிப் படர்ந்து சென்று மத்தியதரைக்கடற் பகுதியில் குடியேறிப் பின்பு பல பழம் நாகரிகங்களை வளர்த்தனர் என்றும் இவர்கள் கூறுகின்றனர். இக் கொள்கைக்குப் பேராதரவு கொடுத்தவர் பேராசிரியர் பி. டி. சீனிவாச அய்யங்கார் ஆவார். கொச்சியைச் சேர்ந்த காடர்களும் புலையர்களும், திருவிதாங்கூரைச் சேர்ந்த மலைப்பண்டாரங்களும், வயநாட்டுப் பணியர்களும், ஆந்திரநாட்டுச் செஞ்சுக்களும் பழங்கற்கால மக்களின் வழிவந்தவர்கள் என்று இனவியலார் (Ethnologists) சிலர் கருதுகின்றனர். பழங்கற் காலத்தவர்களைப் போலவே அம் மக்கள் அனைவரும் உணவைப் பொறுக்கிச் சேமித்து உண்கின்றனர். பயிரிடவோ, வேட்டையாடவோ அவர்கள் இன்னும் பயிலவில்லை; அந்த அளவுக்கு அவர்களுடைய அறிவும், நாகரிகமும் வளரவில்லை. காடர், புலையர் ஆகிய இனத்து மக்களில் நீக்கிரோவரின் இரத்தக்கலப்பைக் காணக்கூடும். நீக்கிரோவர்களைப் போலவே இவர்களும் குள்ளர்கள்; அவர்களைப் போலவே இவர்கட்கும் தலைமயிர் சுருட்டையாக உள்ளது. சென்னைக்கு அண்மையில் கிடைத்துள்ள பழங்கற்காலக் கருவிகள் தென்னாப்பிரிக்காவிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. நீக்கிரோ இனக் கூறுபாடுகள் தென்னிந்தியாவில் காணப்படுவதன் காரணத்தை ஒருவாறு ஊகித்தறியலாம். ஆதிகாலத்தில் தென்னிந்திய மக்களுக்கும் தென்னாப்பிரிக்க நீக்கிரோவர்களுக்குமிடையில் வாணிகத்தொடர்பு இருந்திருக்கக்கூடும். புயலில் சிக்கியோ, கரைதட்டியோ சிதையுண்ட கப்பல்களிலிருந்தும் உயிர் தப்பிய நீக்கிரோவர்கள் தென்னிந்தியாவில் கரையேறி நாட்டில் ஆங்காங்குக் குடியேறியிருக்கலாம். அன்றி, ஆப்பிரிக்க நீக்கிரோவர்கள்

பெருமளவில் இடம்பெயர்ந்து வந்து தென்னிந்தியாவில் குடியேற்றங்களை அமைத்திருக்கலாம். இவை வெற்று ஊகங்களேயன்றி. இவற்றுக்குச் சான்றுகள் கிடையா. ஆனால், லெமூரியாக் கண்டத்தைச் சார்ந்தவர்தாம் தமிழர் என்னும் கருத்து மிகப் பொருத்தமாய் உள்ளது.

புதிய கற்காலத்தில் கோலேரியர் என்ற இனத்தவர் இந்தியாவுக்குள் நுழைந்து பல பிரிவுகளாகப் பிரிந்து ஆங்காங்குக் குடியேறினர் என்றும், அவர்களுள் ஒரு பிரிவினர் ஒரிஸ்ஸாவிலும் ஆனைமலையிலும் குடியேறினர் என்றும் கூறுவர். இவர்கள் படு முரடர்கள் என்பர்; இவர்கள் வழிவந்தவர்கள் இன்றும் ஆனைமலையிலும் காணப்படுகின்றார்கள்; ஒரிஸ்ஸா மலைகளில் இப்போது தழையாடை புனைந்து வாழும் ஆதி குடிகளும் இவ்வினத்தவர்களே. கோலேரியர்களிடம் ஆஸ்திரேலிய ஆதிகுடிகளின் இனக் கலப்புக் காணப்படுகின்றது. கோலேரியர் முண்டா என்ற ஒரு மொழியைப் பேசினர். கோலேரியர்கள் இந்தியாவுக்குள் எப்போது நுழைந்தார்கள், எப்படி நுழைந்தார்கள் என்று விளங்கவில்லை. ஆசாம் மாநிலத்தில் வாழும் காசிகளின் உடற்கூறுகளும் மலையாள மக்களின் உடற் கூறுகளும் சில வகைகளில் ஒத்துள்ளன. காசிகளின் உடற்கூறுகளைப் போலவே கோலேரியரின் உடற்கூறுகளும் காணப்படுகின்றன. ஆசாமில் கிடைத்துள்ள பெருங்கற் புதைவுகளின் அமைப்பும் தென்னிந்தியப் பெருங்கற் புதைவுகளின் அமைப்பும் ஒரே விதமாக உள்ளன. கோலேரியர்கள் இந்தியாவின் வடகிழக்குப் பகுதியினின்றும் இடம்பெயர்ந்து தென்மேற்காகப் படர்ந்தனர் போலும். அன்றி அவர்கள் மலையாள மக்களுடன் பண்பாட்டுத் தொடர்பு கொண்டிருந்தனர் என்றும் கொள்ளலாம். மத்தியப் பிரதேசம், வங்காளம் ஆகிய இடங்களில் வாழும் ஆதிகுடிகள் பேசும் மொழிகள் சிலவற்றில் திராவிட மொழிகளின் கூறுபாடுகள் கலந்துள்ளன என்பதில் ஐயமில்லை. எனவே, முன்னொரு காலத்தில் கங்கைக்கரைகளிலும் திராவிட இனத்து மக்கள் பரவி வாழ்ந்து வந்தனர் என்று கொள்ளுவதற்கு இடமுண்டு. கோலேரியர் நாடோடிகள் அல்லர்; வேட்டையாடியே பிழைத்தவர்களும் அல்லர். அவர்கள் கைதேர்ந்த உழவர்கள். ஆங்காங்கு குடியேற்றங்கள் அமைத்து வாழ்ந்து வந்தவர்கள். அவர்கள் விலங்குகளைக் கடவுளாக வணங்கினர்; தென்புலத் தாரை வழிபட்டனர்; உயிர்நீத்தவர்கட்கும் பேய்கட்கும்

பூதங்கட்கும் உயிர்ப்பலி கொடுத்தனர். இறந்த பிறகும் உயிர்கட்கு வாழ்வு உண்டு என்று அவர்கள் நம்பினார்கள். அவர்கள் தென் புலத்தாரை வழிபட்ட காரணத்தைக்கொண்டு ஓரளவு ஒழுக்கத்தைக் கடைபிடித்து வாழ்ந்தவர்கள் என்று துணியலாம். அவர்கள் மேற்கொண்டுள்ள பழக்கவழக்கங்கள் பல திராவிட மக்களின் வாழ்க்கை முறைகளிலும் அவர்கள் வழியே பிற்காலத்திய இந்து சமூகத்திலும் இடம் பெற்றுள்ளன. ஆனைமுகத்து விநாயகக் கடவுளும், குரங்கு வடிவங் கொண்ட அனுமனும் ஆஸ்திரேலிய ஆதிகுடிகளின் விலங்கு வழிப்பாட்டினின்றும் உருவானவர்கள் என்று சிலர் கருதுவர். இக் கருத்தை மெய்பிக்கப் போதுமான சான்றுகள் இல. ஏனெனில், இக் கடவுளரின் வழிபாடு இந்தியா விற்றான் காணப்படுகிறேதேயன்றி ஆஸ்திரேலிய ஆதிகுடிகளின் வாழ்க்கையில் காணப்படவில்லை. கிடைத்தவற்றிலிருந்து இவர்கள் முற்காலத்தில் ஒன்றாக வாழ்ந்திருக்கலாம்.

திராவிடர்கள் மத்தியதரைக் கடல் வாழ்க்கையைக் கைவிட்டு வெளியேறி. இமயமலையின் வடமேற்குக் கணவாய்களின் வழியாக இந்தியாவுக்குள் நுழைந்தனர் என்று சிலர் கருதுவர். இக் கருத்தை நிலை நாட்டப் பல சான்றுகள் எடுத்துக் காட்டப்படுகின்றன. பலூசி ஸ்தானத்தில் வழங்கும் பிராஹூவி மொழிக்கும், திராவிட மொழிக்கட்கும் உள்ள இனவொற்றுமைகள் அச் சான்றுகளில் சிறந்தவையாம். ஆசியாமைனரைச் சேர்ந்த லிசியர்களும் மத்திய தரைக்கடல் இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் த்ரிம்ளை(Trimmlai) எனவும் அழைக்கப்பட்டதாக இவர்களுடைய கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. இச்சொல்லின் ஒலி திரமிளம், தமிழ் என்னும் சொற்களின் ஒலியுடன் ஓரளவு இணக்கமுடன் காணப்படுகிறது.

ஸ்பெயின், பிரான்ஸ், ஜெர்மனி, சுவீடன், கருங்கடலின் கீழ்க்கரை நாடுகள், வட ஆப்பிரிக்கா, காக்கேசிய நாடுகள், பாலஸ்தீனம், ஈரான் ஆகிய இடங்களில் கிடைக்கும் பெருங்கற் புதைகுழிகள் அடுத்துத் தென்னிந்தியாவிற்குள் காணப்படுகின்றன. உலகில் வேறெங்குமே அவற்றைக் காணமுடியாது. இக் காரணத்தைக் கொண்டு மத்திய தரைக்கடல் மக்கள் தென்னிந்தியாவுக்குக் குடிபெயர்ந்து வந்தவர்கள் என்று ஊகிக்கலாம். மேக்ரான், பலூசிஸ்தானம், சிந்து ஆகிய தரைப் பகுதிகளைக் கடந்தும், கடல் வழியாகவும் தென்னிந்தியாவுக்கு வந்து

குடியேறியவர்கள் திராவிட இனத்தினர் என்று சில ஆய்வாளர் கருதுகின்றனர். மேற்காசிய மக்களுக்கும் திராவிடருக்குமிடையே காணப்படும் பழக்கவழக்கங்களிலும் ஈரான், மெசப் பொடொமியா ஆகிய நாட்டு ஊர்ப் பெயர்களிலும் திராவிடரின் ஊர்ப் பெயர்களிலும் ஒற்றுமைகள் அமைந்திருப்பது இதற்குச் சான்றாகக் காட்டப்படுகின்றது.

அகழ்வாராய்ச்சி, இலக்கியம், மொழியமைப்பு ஆகியவற்றின் மூலம் அறிய வேண்டிய செய்திகள் விரிந்துள்ளன. ஆதிச்சநல்லூர், அரிக்கமேடு முதலிய இடங்களில் கிடைத்துள்ள புதைபொருள்கள், அயல்நாட்டுப் பயணிகளின் பூகோளக் குறிப்புகள், சங்க இலக்கியம் இவற்றைக் கொண்டு பண்டைய தமிழரின் வரலாற்றையும் பண்பாடுகளையும் விரிவான முறையில் ஆய்ந்தறிய வாய்ப்புகள் உள்ளன. மேற்காசியப் பகுதிகளில் கிடைத்துள்ள பெருங்கற் புதைவுகளின் காலம் கி. மு. 2500 2000 என்று அறுதியிடப்பட்டுள்ளது. எனவே, லெமூரியாவிலிருந்து முற்காலத்தில் சென்று இக்கால அளவில் அவ்விடங்களில் வாழ்ந்திருந்த பண்டைய மக்கள், குடி பெயர்ந்து வந்து இந்தியாவுக்குள் புகுந்து தென்னிந்தியாவுக்கு வந்து வாழ்க்கையைத் தொடங்கித் திராவிட இனத்தைத் தோற்றுவித்தனர் என்று கொள்ளுவது வரலாற்றுக்கு உடன்பாடாகும். இக்குடியேற்றம் கி. மு. 2500ஆம் ஆண்டளவிலேயே தொடங்கியிருக்க வேண்டும்.

இந்தியாவில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சிகளில் மிகப் பெரியது ஆதிச்சநல்லூரில் மேற்கொண்டதொன்றாகும். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துடன் தொடர்பு கொண்டுள்ள புதைபொருள்கள் இங்கு ஏராளமாகக் கிடைத்துள்ளன. மனித எலும்புக் கூடுகள், உரல்கள், மெருகிட்ட மட்பாண்டங்கள், இரும்பாலான சில கருவிகள், பொன்னாலும் வெண்கலத்தாலும் செய்யப்பட்ட அணிகலன்கள், பொன் வாய்ப்பூட்டுகள், சிறு வேல்கள் ஆகியவை அடங்கிய தாழிகள் ஆதிச்சநல்லூரில் கிடைத்துள்ளன. இவற்றைப்போன்ற புதைபொருள்கள் சைப்ரஸ் தீவிலும், பாலஸ்தீனத்திலும் காணப்படுகின்றன. ஆனால், அவ்விடயங்களில் இரும்பாலான கருவிகள் கிடைக்க வில்லை. ஆனால், ஆதிச்சநல்லூரில் இரும்புக் களைக்கொட்டுகளும் சூலங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இக் காரணத்தைக்

கொண்டு ஆதிச்சநல்லூர் நாகரிகம் சற்றுப் பிற்பட்ட காலத்தைச் சார்ந்ததெனக் கொள்ளவேண்டி உள்ளது.

பழங் கற்காலத்திய தமிழ் மக்களைப் பற்றிய சான்றுகள் பல கிடைத்துள்ளன. செங்கற்பட்டு மாவட்டத்தில் பல்லாவரத்துக்கு அண்மையில் கற்களினாலான கோடரிகள், உளிகள், கறண்டிகள், சுத்திகள் ஆகிய கருவிகள் சில கிடைத்துள்ளன. இக் கருவிகள் மிகவும் கரடுமுரடாகச் செதுக்கப்பட்டுள்ளன. கற்கருவிகளைச் செம்மையாகச் செதுக்கி மெருகிட அக்கால மக்கள் பயின்றிலர் போலும். கற்கருவிகளையே யன்றி மரத்தாலான ஈட்டிகளையும், தண்டுகளையும் அவர்கள் கையாண்டனர் என்று ஊகிக்கவும் இடமுள்ளது. தமிழகத்தில் வடஆர்க்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களிலும் இப் பழங்கற்காலக் கருவிகள் கிடைத்துள்ளன. இவற்றைச் சமைப்பதில் கைத்திறனோ நுட்ப அறிவோ பயன்பட்டதாகத் தெரியவில்லை. வேறு சில இடங்களில் ஈட்டிகள், தோண்டு கருவிகள், வெட்டுக் கருவிகள், சம்மட்டிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பழங்கற்காலக் கருவிகள் தமிழ்நாட்டில் வட ஆர்க்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் மிகுதியாகக் கிடைக்கின்றன. அங்கெல்லாம் பழங்கற்கால மக்கள் பரவி வாழ்ந்தனர் என்று அறியலாம்.

பழங்கற்கால மக்கள் ஓரிடத்திலும் நிலையாகத் தங்கி வாழ்ந்து வந்ததாகத் தெரியவில்லை. அவர்கள் இடம்விட்டு இடம் நகர்ந்துகொண்டே இருந்தனர். பெரும்பாலும் அவர்கள் சமவெளிகளில் வாழ்ந்து வந்தனராயினும், சிற்சில சமயம் காட்டு விலங்குகளுக்கு அஞ்சி மலைக்குகைகளில் ஒடுங்கி வாழ்ந்தது முண்டு பழங்கற்காலம் கி. மு. 35,000 ஆண்டுகட்கு முன்பிருந்து சுமார் கி.மு.10,000 ஆண்டுவரை நிகழ்ந்திருக்கக்கூடும் என அறுதியிட்டுள்ளனர். உலக வரலாறுகளில் பழங்கற்காலத்தை முற்பகுதியென்றும் பிற்பகுதியென்றும் வரையறுத்துள்ளனர். இத்தகைய பாகுபாடு ஒன்று தமிழகத்து வரலாற்றுக்கும் பொருந்துமா என்பதைப்பற்றிப் புதைபொருள் ஆய்வாளரிடையே கருத்து வேற்றுமை நிலவுகின்றது.

பழங்கற்காலத்துக்கும் புதிய கற்காலத்துக்குமிடையே இடைக்கற்காலம் ஒன்று நிகழ்ந்தது. அக்கால அளவில் வாழ்ந்த மக்கள் மிகச் சிறிய கற்கருவிகள் செதுக்கிக்கொண்டனர். சிக்கி முக்கிக் கல், அகேட் (Agate), செர்ட்டு (Chert), ஜாஸ்பர்

(Jasper) போன்ற இரத்தினக் கற்களாலும் இக் கருவிகள் சமைக்கப்பட்டன. திருநெல்வேலி மாவட்டத்தில் சாயர்புரத்திலும், கருநாடக மாநிலத்தில் பிரமகிரியிலும், கிருஷ்ணா, கோதாவரி ஆற்றுப் படுகைகளிலும் இக் கருவிகள் கிடைத்துள்ளன. இடைக் கற்காலத்தின் முற்பகுதியில் அமைந்த புதைகுழிகளில் மட்பாண்டம் காணப்படவில்லை. ஏனெனில், மட்பாண்டம் வனையும் கலையைப் பிற்பகுதியிற்றான் மக்கள் பயின்றனர். இடைக்கால முற்பகுதியிலேயே மக்கள் வேட்டையாடி வயிறு வளர்த்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. அவர்கள் மான், பன்றி, ஆடு, எலி ஆகியவற்றைப் பிடித்துத் தின்று வயிறு பிழைத்ததற்கும் சான்றுகள் உள்ளன. பிணங்களை மண்ணில் புதைக்கும் வழக்கமும் அப்போதே தொடங்கிவிட்டது.

புதிய கற்காலத்தில் வாழ்ந்த மக்கள் வாழ்க்கையில் பல சீர்திருத்தங்கள் காணப்படுகின்றன: அவர்கள் கற்கருவிகளை ஒழுங்காகவும் வழுவழுப்பாகவும் செதுக்கினர். இவை படிக்கட்டுக் கல் (Trap Rock) என்ற ஒருவகைக் கல்லினால் செய்யப்பட்டன. உளிகள், சம்மட்டிகள் போன்ற கருவிகளையெல்லாம் அவர்கள் அழகாகச் செதுக்கிப் பளப்பளப்பாகத் தேய்த்து மெருகூட்டியுள்ளனர். திருநெல்வேலி, மதுரை, திருச்சிராப் பள்ளி, சேலம், வடஆர்க்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் புதிய கற்காலக் கருவிகள் அகழ்வாராய்ச்சியின் மூலம் கிடைத்துள்ளன.

புதிய கற்கால மக்கள் ஆங்காங்குக் குடியேறி நிலையான வாழ்க்கையில் அமர்ந்துவிட்டனர். உழவுத் தொழிலையும் வளர்க்கலாயினர்; ஆடு மாடுகளைப் பழக்கிக்கொள்ளத் தொடங்கினர். படகுகள் கட்டிக் கடலில் ஓட்டக் கற்றுக்கொண் டனர். இம்மக்கள் பயின்ற கலைகள் அனைத்திலும் நெருப்பு மூட்டக் கற்றுக் கொண்டதுதான் அவர்கள் வாழ்க்கையில் நாம் காணும் தனிச்சிறப்பாகும். சிக்கிமுக்கிக் கற்களைத் தட்டியும். மரத்தைக் கடைந்தும் இவர்கள் நெருப்பு மூட்டினார்கள். இவர்கள் மட்பாண்டங்களையும் வனைந்தார்கள். கையாலும், சக்கரங்களைக் கொண்டும் சட்டிபானைகள் செய்தார்கள். பஞ்சாலும் மயிராலும் ஆடைகள் நெய்து அணிந்தார்கள்; ஓவியந்தீட்டவும் இவர்கள் ஓரளவு கற்றிருந்தனர். தம் வீட்டுச் சுவர்களின்மேல் வேட்டை நிகழ்ச்சிகளையும் நாட்டியக் காட்சிகளையும் ஓவியங்களாகத் தீட்டினர். புதிய கற்காலப் புதைகுழிகளில் சீப்புகள், எலும்பினாலும் சிப்பியினாலும் கடைந்த

மணிகள் கண்டெடுக்கப்பெற்றுள்ளன. அக்கால மக்களின் கலையுணர்ச்சியை இச் சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன. இவர்களும் பிணங்களைப் புதைப்பதையே வழக்கமாகக் கொண்டிருந்தனர்:

தமிழகத்தில் சேலம் மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பெற்ற புதிய கற்காலப் பொருள்கள் வரலாற்றுச் சிறப்புடையவைதாம். இம்மாவட்டத்தில் பையம்பள்ளி என்னும் இடத்தில் தேய்த்து மெருகிட்ட கற்கருவிகள் பல கிடைத்துள்ளன. திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, திருநெல்வேலி ஆகிய பகுதிகளிலும் புதிய கற்காலக் கருவிகளும், வேறு பல வாழ்க்கை வசதிப் பொருள்களும் அகழ்வாராய்ச்சியில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பன்னிரண்டு வகைக் கோடரித் தலைகளும் (Celts) சம்மட்டிகளும், இருவகையான கொத்துக் கருவிகளும் (adzes), அறுவகை உளிகளும், கருமாரப் பட்டடைக் கற்களும், உரல்களும், உலக்கைகளும், தட்டுகளும், தண்டுகளும், இருவகை எந்திரக் கற்களும், அம்மி குழவிகளும், தீட்டு கற்களும், எடைக் கற்களும், கற்சட்டிகளும், அம்புத் தலைகளும் அவற்றுள் சிறப்பானவை.

வரலாற்றுக்கு முற்பட்ட தமிழ் மக்கள் மிகவும் அகன்ற குழிகளில் பிணங்களைப் புதைக்கும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தனர். இக் குழிகள் 'பெருங்கற் புதைவுகள்' என்று அழைக்கப்படுகின்றன. இப் புதைவுகள் ஏற்பட்ட காலத்துக்குப் 'பெருங்கற் புதைவு' காலம் (Megalithic Period) என்று பெயர். புதிய கற்காலம் முடிவுற்றவுடன் ஏற்பட்டவை இப் பிணக்குழிகள். கற்காலப் பிணக்குழிகள் காணாத பல புதுமைகளை இக் குழிகளில் காணலாம். பெருங்கற் புதைகுழிகள் மிகமிகப் பெரியவை. இவற்றுள் புதைக்கப்பட்டிருக்கும் பொருள்களும் பலவகையானவை. பிணம் புதைப்பதற்காக மட்டும் இவை ஏற்பட்டன வல்ல; இறந்தவர்களின் நினைவுச் சின்னங்களாகவும் இவை அமைந்துள்ளன. உழவு நிலங்களையடுத்துள்ள மலைச்சரிவுகளிலும் மேடுகளிலும் இப் புதைவுகள் மிகுதியாகக் காணப்படு கின்றன. மக்கள் நிலையான வாழ்க்கையில் அமர்ந்து உழவை மேற்கொண்ட பிறகு ஏற்பட்ட குழிகள் இவை எனக் கொள்ள லாம். பெருங்கற் புதைவுகள் வடஆர்க்காடு, தென்னார்க்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் பெருமளவில் தோண்டி யெடுக்கப்பட்டுள்ளன. கேரளத்தில் கொச்சிப் பகுதியில் ‘குடைக் கல்' அல்லது 'தொப்பிக்கல்' என்ற குழிகளை அகழ்ந்து

வெளிப்படுத்தி இருக்கின்றார்கள். தென்னார்க்காட்டில் சங்கமேடு என்னும் இடத்திலும், செங்கற்பட்டு மாவட்டத்தில் சானூர், அமிர்தமங்கலம், குன்றத்தூர் என்னும் இடங்களிலும் பெருங்கற் புதை குழிகள் கிடைத்துள்ளன.

பெருங்கற் புதைவுகள் மத்தியதரைக் கடற்பகுதியிலும் காணப்படுகின்றன. அவை கி.மு. 2500-1500 ஆண்டுகளில் ஏற்பட்டவை என்று புதைபொருள் ஆய்வாளர் அறுதியிட்டுள்ளனர். அக் குழிகளுக்கும் தமிழகத்துப் பெருங்கற் புதைவுகட்குமிடையே பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. ஆனால், வேறுபாடும் காணப்படுகின்றது. மத்தியதரைக் குழிகளில் இரும்புக் கருவிகள் கிடைத்துள்ளன. தமிழகக் குழிகளில் இரும்பே கிடைக்கவில்லை. 'கார்பன் 14' என்னும் வேதியியல் மின்னணுச் சோதனையின் மூலம் பிரமகிரி 'கற்கோடரி நாகரிகம் கி. மு. 1000 ஆண்டுகட்கும் முற்பட்டதெனத் தோன்றுவதால், தமிழகப் புதைகுழிகள் கி.மு. 1000 ஆம் ஆண்டளவில் ஏற்பட்டிருக்கக்கூடும் என்று ஊகித்தறியலாம்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் மட்டும் சுமார் இருநூறு பெருங்கற் புதைவுகள் அகழப்பெற்றுள்ளன. அவை இருவகையாக அமைந்துள்ளன; ஒன்று 'குகை வட்டங்கள்' என்பது. இவ் வகைக் குழிகள் ஓர் அறையைப் போல அமைக்கப்பெற்றுள்ளன. குழியின் அடிமட்டத்தில் பலகைக்கல் ஒன்று பாவப்பட்டுள்ளது; மற்றொரு பலகைக்கல் குழியை மூடி நிற்கின்றது. தரை மட்டத்தில் குழிவாயைச் சுற்றி ஒற்றை வட்டமாகவோ அன்றி ஒன்றுக்குள் ஒன்றாக இரு வட்டங்களாகவோ கற்கள் செங்குத்தாக நாட்டப்பட்டுள்ளன. இரண்டாம் வகை, 'குழிவட்டங்கள்' என்பது. இவை ஒவ்வொன்றிலும் ஒரு தாழியோ ஒன்றுக்கு மேற்பட்ட தாழிகளோ புதைக்கப்பட்டுள்ளன; இத் தாழிகள் யாவும் மண்ணாலானவை. இவற்றுள் பிணங்கள் புதைக்கப்பட்டன. சில தாழிகளுக்குக் கால்கள் அமைக்கப்பட்டுள்ளன. குழி வட்டங்களைச் சுற்றி ஒற்றை வட்டக் கற்களை நாட்டியுள்ளனர். பெருங்கற் புதைவு காலத்தின் மக்கள் கற்கருவிகளைக் கைவிட்டு இரும்புக் கருவிகளைக் கையாளலானார்கள்.

தமிழகத்தில் புதிய கற்காலத்தையடுத்து 'இரும்புக் காலம்" தொடங்கிற்று. ஆனால், வடஇந்தியாவில் புதிய கற்காலத்தையடுத்துச் 'செம்புக் காலம்' தொடங்கிற்று. கற்காலத்துக்கும் இரும்புக் காலக்துக்கும் இடையில் செம்பு அல்லது வெண்கலக் காலம்

ஒன்று தமிழகத்தில் நிகழாதது வியப்பாகவுள்ளது. இந் நிலைக்கு இரு வேறு காரணங்கள் காட்டப் பெறுகின்றன. ஒன்று. மக்கள் வெளிநாடுகளிலிருந்து தமிழகத்துக் குடி பெயர்ந்து வந்தபோது முதன்முதல் இரும்பைத் தம்முடன் கொண்டு வந்திருக்கலாம்; மற்றொன்று, கற்காலத்திலேயே மக்கள் இரும்பைக் கண்டுபிடித்துப் பயன்படுத்தத் தொடங்கியிருக்கலாம். இரண்டாம் காரணமே பொருத்தமானதாகத் தோன்றுகிறது. மட்கலங்கள் வனைவதற்குத் தகுதியான மண்ணைத் தேடியபோது பலவகையான மண்ணையும், பாறைகளையும் ஆராய்ந்து பார்த்திருப்பார்கள்; பச்சை மட்கலங்களைச் சூளையில் சுட்டிருப்பார்கள். அப்போது அவர்கள் தற்செயலாக இரும்பைக் கண்டுபிடித்திருக்கலாம். மத்தியதரைக் கடலிலுள்ள கிரீட் என்னும் தீவிலும் பாலத்தீனத்திலும் காணப்படுவதைப் போலவே ஆதிச்சநல்லூரிலும் கற்கருவிகளுடன் இரும்புக் கருவிகளும் கலந்து காணப்படுகின்றன. செங்கற்பட்டில் பெரும்பேயர் என்னும் இடத்திலும், கேரளத்தில் தலைச்சேரி என்னும் இடத்திலும் இவ்வாறே கற்கருவிகளும், இரும்புக் கருவிகளும் கலந்தே கிடைத்துள்ளன. எனவே, தமிழகத்தில் கற்காலம் முடிவுறும் போதே இரும்புக் காலமும் தொடங்கிவிட்டது என்று கருத இட மேற்படுகின்றது.

## 1.2 சிந்துவெளி அகழ்வாராய்ச்சி

ஆரியர்கள் இந்தியாவுக்குள் நுழையும்போது வடமேற்கு இந்தியாவிலும், வடஇந்தியாலிலும் திராவிட இனத்து மக்கள் வாழ்ந்து வந்தனர் என்று சில ஆய்வாளர்கள் ஆக்ஸ்போர்டைச் சேர்ந்த பேராசிரியர் பர்ரோ (Burrow) கருதுகிறார். ஆரிய மொழியை நன்கு ஆய்ந்து இருக்கு வேதத்தில் இருபது திராவிட மொழிச் சொற்கள் ஆளப்பட்டிருப்பதாகக் கூறுகின்றார். ஏற்கெனவே சிந்து கங்கை வெளியில் செழித்து வாழ்ந்திருந்த திராவிடரிடமிருந்து பிற்காலத்தில் வந்து குடியேறிய ஆரியர் பல திராவிட மொழிச் சொற்களைத் தம் மொழியில் ஏற்றுக்கொண்டனர் என்பது இவருடைய முடிபாகும். வேறு பல ஆய்வாளரும் இவருடைய கருத்தை ஒப்புக்கொண்டுள்ளனர். லஹோவரி என்னும் ஆராய்ச்சியாளர் பல மொழிகளை ஆராய்ந்து ஒப்புநோக்கி முடிவாகத் திராவிட மொழிக்கும் ஸ்பெயின் நாட்டு பாஸ்க் (Basque) மக்களின் மொழிக்கும் இடையே பல ஒற்றுமைகளைக் கண்டார். இவ்விரு மொழிகளும் ஒரே மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்று ஒரு முடிவுக்கு வந்தார்.

சுமேரிய, எலாமைட், கப்படோசிய மொழிகளும் இக் குடும்பத்தில் பிறந்தவையே என்று அவர் கருதினார். ஸ்பானிய நாட்டைச் சேர்ந்த ஐபீரியா முதல் இந்தியாவரையில் அமைந்துள்ள நாடுகள் அனைத்தும் சமயப் பழக்கவழக்கங்களிலும், சடங்குகளிலும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தன என்று இவர் கண்டார். சுமேரியா, மெசப் பொடொமியா போன்ற மேற்காசிய நாடுகட்கும் திராவிடர்கட்குமிடையே நெருங்கிய நாகரிக, பண்பாட்டுத் தொடர்புகள் அமைந்துள்ளன. திராவிடர்கள் மேற்காசியாவினின்றும் குடி பெயர்ந்து ஈரான் வழியாக வந்து வடமேற்குக் கணவாய்களின் மூலம் சிந்துசமவெளியில் இறங்கிக் குடியமர்ந்து அங்கொரு மாபெரும் நாகரிகத்தை வளர்த்திருக்கக்கூடும். பிறகு அவர்கள் எக் காரணத்தினாலோ சிந்துவெளியைக் கைவிட்டுத் தெற்குப் படர்ந்து தமிழகத்தில் தங்கி இங்கொரு நாகரிகத்தை வளர்த்திருக்கக்கூடும். அல்லது லெமூரியாவிலிருந்து தென்னிந்தியா ஆப்பிரிக்கா முதலிய இடங்களுக்குச் சென்று சிலர் மத்திய தரைக்கடல் நாடுகளில் சில காலம் வாழ்ந்து, வடஇந்தியா வழியாகத் தெற்கு வந்திருக்கலாம்.

தமிழர் யார்?' என்னும் கேள்விக்கு விடைகாணும் முயற்சியில் ஈடுபட்டிருந்த வரலாற்றாய்வாளருள் மிகவும் சிறந்தவர் ஹீராஸ்பாதிரியார். சிந்துவெளியில் வரலாற்றுப் புகழ்பெற்ற அகழவாராய்ச்சிகள் நடைபெற்றன. அவற்றினின்றும் புதைபொருள்கள் பல கண்டெடுக்கப்பட்டன. இவ் வாராய்ச்சியில் ஈடுபட்டிருந்தவர்கள் சிந்துவெளியில் மிகப் பழங்காலத்தில் பெரியதொரு நாகரிகம் செழித்து வளர்ந்திருந்த தென்றும், பிறகு எக் காரணத்தாலோ அது அறவே அழிந்து மறைந்து போயிற்றென்றும் சில கருத்துகளை வெளியிட்டனர். சிந்துவெளியில் மொகஞ்சதாரோ, ஹரப்பா என்ற இரு நகரங்கள் அகழ்வாராய்ச்சியின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டன. இவ்விடங்கள் இப்போது பாகிஸ்தான் நாட்டில் உள்ளன. இவையே யன்றி, சானுடாரோ. கோட்டீஜி, லோதால், காளிபங்கன் என்னும் இடங்களிலும் அகழ்வாராய்ச்சிகள் புரிந்து பண்டைய நாகரிகச் சின்னங்களைக் கண்டுபிடித்துள்ளனர். இந்நான்கு இடங்களும் இந்திய நாட்டு எல்லைகளுக்குள் அமைந்துள்ளன. முதன்முதல் சிந்துவெளி நாகரிகத்தைப்பற்றி விரிவான ஆராய்ச்சிகள் செய்து அரிய பெரிய கருத்துக்களையும், விளக்கங்களையும், வரலாற்றுத் துறைக்குத் தந்துதவியவர் சர் ஜான் மார்ஷல் ஆவர்.

சில ஆயிரம் ஆண்டுகட்கு முன்பு சிந்துவெளி முழுவதும் பரவியிருந்த ஒரு பெரும் நாகரிகத்தின் சின்னங்களாம் அவை. கட்டடங்களைச் செப்பனிடுவதிலும், நகரத்தின் அமைப்பிலும் மொகஞ்சதாரோ, ஹாரப்பா ஆகிய இரு நகரங்களிடையே மிக நெருங்கிய ஒற்றுமைப்பாடுகள் பல காணப்படுகின்றன. ஆதிகாலத்தில் மொகஞ்சதாரோ செழிப்பானதொரு நகரமாக விளங்கியதாகவும், பிறகு அது வெள்ளத்தில் மூழ்கி மண்மேடிட்டுப் போனதாகவும் அதன்மேல் வேறொரு நகரம் எழுந்ததாகவும், அஃதும் பிறகு வெள்ளத்தில் அழிந்து போகவே அதன்மேல் மற்றுமொரு நகரம் அமைக்கப்பட்டதாகவும், அஃதும் வெள்ளத்தில் மூழ்கிப் போகவே மீண்டும் ஒரு நகரம் அமைக்கப்பட்டதாகவும், இவ்வாறே ஏழு நகரங்கள் ஒன்றன்மேல் ஒன்றாக எழுந்து அவை அனைத்தும் மண்ணில் புதையுண்டு போனதாகவும் தெரிகின்றது. அல்லது தோன்றிய ஒவ்வொரு நகரும் எதிரிகளால் அழிக்கப் பட்டிருக்கக் கூடுமென்றும் சிலர் கருதுகின்றனர்.

மொகஞ்சதாரோவிலும், ஹரப்பாவிலும் ஊருக்குப் புறத்தே கோட்டை கொத்தளங்கள் கட்டப்பட்டிருந்தன. அக் கோட்டைகளுக்குள் மன்னரின் மாளிகைகளும், பெரிய பெரிய நீராடுங்குளங்களும், நேருக்கு நேரான சாலைகளும், பெரிய வீடுகளும், நெற்களஞ்சியங்களும் அமைக்கப்பட்டிருந்தன. கோயில் குருக்கள் குடியிருப்பதற்காகவே தனித்தனி வீடுகள் ஒதுக்கப்பட்டிருந்தன. மொகஞ்சதாரோவில் உள்நாட்டு வெளி நாட்டு வாணிகங்கள் செழிப்புடன் நடைபெற்றுவந்தன. அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உணவுத்தானியங்கள் களஞ்சியங்களில் சேர்ப்புக் கட்டி வைக்கப்பட்டன. உலோகங்களும் நவமணிகளும் அயல்நாடுகளிலிருந்துதாம் இறக்குமதியாயின. மொகஞ்சதாரோ குடிமக்கள் அழகழகான மட்பாண்டங்கள், மண்பொம்மைகள், வெண்கலச் சிலைகள் ஆகியவற்றைச் செய்வதற்குக் கைவன்மையும் கலையுணர்ச்சியும் வாய்க்கப் பெற்றிருந்தனர். களிமண் முத்திரைகளும் செப்பேடுகளும் இந் நகரில் ஏராளமாகக் கிடைத்துள்ளன. முத்திரைகளிலும் செப்பேடுகளிலும் பொறிக்கப் பெற்றுள்ள எழுத்துக்கள் இன்னமொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்ற உண்மை இன்னும் திருத்தமாக விளக்கப்படவில்லை. செப்பேடுகளில் ஒரு வரி இடம் வலமாகச் செல்லுகின்றது; அடுத்த வரி வலம் இடமாக வருகின்றது. இவ்வெழுத்துகள் சித்திர

முறையும் ஒலி முறையும் இணைந்து பிறந்தவை என்று ஆய்வாளர் ஊகிக்கின்றனர். இச் சிந்துவெளி மொழியில் மொத்தம் முந்நூறு குறிகள் காணப்படுகின்றன. அவற்றுள் இருநூற்றைம்பது குறிகள் அடிப்படையானவை. ஏனையவை சார்பு குறிகள்.

சிந்துவெளி மக்களின் சித்திர எழுத்துகளில் மறைந்துள்ள செய்திகள் யாவை என்பதை அறிந்து கொள்ள வரலாற்று ஆய்வாளர்கள் விஞ்ஞானத்தின் துணையை நாடிவருகின்றனர். பல அறிஞர்கள் இந்த எழுத்துக்களைப் பல்வேறு கோணங்களில் ஆராய்ந்து பல்வேறு கருத்துகளை அவ்வப்போது வெளியிட்டு வந்துள்ளனர். ஒருசாரார் சிந்துவெளி மொழியானது பண்டைய தமிழ் வடிவமே என்று கூறிவருகின்றனர். இவர்களுள் முதன்மையானவர் ஹீராஸ் பாதிரியார் ஆவார். இவர் இவ்விரு மொழிக்குமிடையே பல ஒற்றுமைகளைக் கண்டார். இவருடைய கொள்கையைச் சில ஆய்வாளர் பொருத்தமற்றதெனப் புறம்பே ஒதுக்கினர். ஆனால், இக் காலத்தில் விஞ்ஞானமுறையில் நடை பெற்றுவரும் ஆராய்ச்சிகள் பாதிரியாரின் கொள்கையை மெய்ப் பித்து வருகின்றன.

ரஷியா, பின்லாந்து ஆகிய நாட்டு ஆய்வாளர் சிலர் மொகஞ்சதாரோ மொழியை விஞ்ஞான முறையில் ஆராய்ந்து அம்மொழி திராவிட மொழியின் தொடக்க உருவமேயாம் என்று முடிவுகட்டியுள்ளனர். சிந்துவெளி எழுத்துக்களை ஆராயும் பணியில் முனைந்துள்ள திரு. ஐ. மகாதேவன் அவர்களும் சிந்துவெளி மொழிக்கும் தமிழ்மொழிக்குமிடையே நெருங்கிய தொடர்பைக் காண்கின்றார். சிந்துவெளி எழுத்துக்களுக்குத் தாம் ஓரளவு விளக்கங் கண்டுள்ளதாகவும் அவர் கூறுகின்றார். அவ்வெழுத்துக்கள் சித்திரமும் ஒலிக்குறிப்பும் இணைந்து வடிவமைப்புப் பெற்றிருப்பதால் இன்றைய தமிழில் அவையனைத்தையும் பெயர்த்தெழுத இயலாதவராயுள்ளார். தம் கருத்துக்குச் சார்பாகத் திரு. ஐ. மகாதேவன் கீழ்க் காணும் சான்றுகளை எடுத்துக்காட்டுகின்றார்.

- மொகஞ்சதாரோ முத்திரைகளின்மேல் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்களுக்கும் கி. மு. இரண்டு மூன்றாம் நூற்றாண்டுகளில் பொறிக்கப்பட்ட தமிழ்-பிராமி எழுத்துக்களுக்குமிடையே பல இயைபுகள் காணப்படுகின்றன. இவ் வெழுத்துக்கள் வெளியிடும் செய்திகள் அனைத்துமே கடவுள் மாட்டுக் கொடுத்துக்கொள்ளும் விண்ணப்பங்களாக அமைந்துள்ளன.மொகஞ்சதாரோ

முத்திரை எழுத்துக்கள் தெய்வ முறையீடுகளைப்போலக் காணப்படினும், இவற்றுக்கும் தமிழ்-பிராமி எழுத்துகளுக்குமிடையே இணக்கம் ஏதும் இருப்பதாகத் திட்டமாகக் கூறுவதற்கில்லை. அப்படிக் கூறுவதற்குத் திரு. மகா தேவன் காட்டும் சான்று போதாது எனத் தோற்றுகின்றது.

- தென்னிந்தியாவில் அகழ்ந்தெடுக்கப்பட்ட பெருங்கற் புதைவுகளில் கிடைத்துள்ள பானையோடுகளின் மேல் வரையப்பட்டுள்ள கீற்றோவியங்களும் சிந்துவெளி ஓடுகளின்மேல் வரையப்பட்டுள்ள கீற்றோவியங்களும் ஒரேவிதமாகக் காணப்படுகின்றன. இங்கு ஒன்று நாம் நினைவில் கொள்ளவேண்டும். தென்னிந்தியப் புதைவுகளில் கண்டெடுக்கப்பட்ட பானையோட்டு எழுத்துகளுக்கும் சிந்துவெளி எழுத்துக்களுக்கும் பொருத்தங் காண முயல்வது நற்பயன் அளிக்க வல்லது என எண்ணுவதற்கில்லை.
- சிந்துவெளி முத்திரைகளின்மேல் மக்களின் இடுகுறிப் பெயர்களும், சிறப்புப் பெயர்களும் எழுதப்பட்டுள்ளன. இப் பெயர்களைத் தமிழ் - பிராமிக் கல்வெட்டுகளிலும், சங்கச்செய்யுள்களிலும், பதிகங்களிலும் காணலாம்.
- சிந்துவெளி முத்திரைகளின்மேல் காணப்படும் சில குறிகள் ஒருவருடைய பெயருக்கு முன்பு இணைந்துவரும் அவருடைய ஊரைத் தெரிவிப்பதாக இருக்கலாம். சங்க கால இலக்கியத்திலும், பிற்பட்ட இலக்கியங்களிலும் மக்கள் பெயர்கட்கு முன்பு அவர்களுடைய ஊரின் பெயர் இணைந்துவருவது உண்மைதான். சிந்துவெளி எழுத்துகளில் 'நகரம்' என்பதைக் குறிப்பிடும் குறியீடுகளானவை 'நகரம்' என்ற பெயரைக் காட்டும் எழுத்துச் சித்திரங்களைப் போலவே தோற்றுகின்றன.
- திரு. எஸ். ஆர். ராவ் என்பவர் சிந்துவெளி நாகரிகத்தைப்பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளவர். இவருடைய முயற்சியின் பயனாகக் குசராத் மாநிலத்தில் புதையுண்டு கிடந்த லோதால் என்ற பழந் துறைமுகப்பட்டினம் ஒன்று வெளியாயிற்று. அந் நகரத்து நாகரிகமும் மொகஞ்சதாரோ நாகரிகமும் நெருங்கிய தொடர்பு உடையன என்று அவர் கருதுகின்றார்.

சிந்துவெளி நாகரிகம் மறைவுக்கும் இந்திய நாட்டுக்குள் ஆரியர் நுழைந்ததற்கும் இடையில் நூற்றாண்டுகள் கழிந்து போயினவாதலின் நாகரிகத்தை ஆரியரின்

நாகரிகமாகக் பல சிந்துவெளி கொள்ளலாகாது. மேலும், ஆரிய நாகரிகம் நாட்டுப்புறத்தோடு ஒன்றி வளர்ந்து வந்துள்ளது. ஆனால், சிந்துவெளி மக்கள் பெரிய பெரிய நகரங்களை அமைத்துக் கொண்டு வாழ்ந்து வந்தவர்கள்; அவர்களுடைய நாகரிகம் நகர்ப்புறத்து நாகரிகமாகும். மொகஞ்சதாரோ முழுவதும் செங்கல்லால் கட்டப்பட்டதொரு நகரமாகக் காட்சியளிக்கின்றது. அதன் அழகிய தெருக்கள் யாவும் திட்டமிட்டு அமைக்கப்பட்டன. சொக்கட்டான் கோடுகளைப் போல அவை நேர் நேராக ஓடுகின்றன. நகரத்தின் சுற்றளவு சுமார் 3, 4 கி. மீ. இருக்கும். கடல் போல விரிந்தோடிய சிந்து நதிக்கரையின்மேல் அந்நகரம் அமைந்திருந்தது. நாட்டுப் புறங்களில் சிற்றூர்களில் வாழ்ந்து வந்த ஆரியரின் பொலிவற்ற நாகரிகத்துக்கும், திகைப்பூட்டும் வாழ்க்கை வசதிகள் பலவும் வாய்க்கப்பெற்ற மிகப் பெரும் நகரங்களில் வாழ்ந்துவந்த சிந்து வெளி மக்கள் வளர்த்திருந்த நாகரிகத்துக்கும் இடையே எவ்வளவு வேறுபாடு உள்ளன.

இஃதன்றி, சிந்துவெளிச் சிதைவுகளில் இலிங்க உருவங்கள் பல கண்டெடுக்கப்பட்டுள்ளன. சிந்துவெளி மக்கள் இலிங்க வழிபாடு உடையவர்கள் என இதனால் விளங்குகின்றது. வேதகால ஆரியர்கள் சிந்து வெளியில் வாழ்ந்தவர்களாக இருந்து பிறகு கங்கை வெளியில் பரவிக் குடியேறியிருப்பார்களாயின் சிந்துவெளிச் சின்னங்களான எழுத்து முத்திரைகளையும், செப்பேடுகளையும் பொறிக்கும் வழக்கத்தையும் தம்முடனே கொண்டு சென்றிருக்க வேண்டும். ஆனால், வேதகால நாகரிகத்தில் இவ்விரண்டும் காணப் படவில்லை. மொகஞ்சதாரோ களிமண் முத்திரைகளின்மேல் பசுபதி என்ற உருவில் சிவன் வடிவமும். அம்மன் வடிவமும் மிகச் சிறப்பாக இடம் பெறுகின்றன. ஆனால், இருக்கு வேதக் கடவுளருள் ஒருவரான உருத்திரன் முழு முதற்கடவுளராக ஆரியரால் ஏற்கப்படவில்லை. உருத்திரன் 'ரௌத்திராகாரத்தில்' இருப்பதாக இருக்கு வேதம் பேசுகின்றது. ஆனால், சிந்துவெளிப் பசுபதியோ அமைதியாக யோகமுத்திரையுடன் அமர்ந்து காட்சியளிக்கின்றார்.

சிந்துவெளி மக்கள் பின்பற்றி வந்த சமயமானது கோள்கள், விண்மீன்கள் ஆகிய வான மண்டலங்களுடன் மிகவும் நெருங்கிய தொடர்புகொண்டிருந்தது. அவர்கள் வானவியலையும் சோதிட நூலையும் பயின்றவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்களுடைய வாழ்க்கையில் இவை சிறப்பிடம் பெறுகின்றன, அவர்களுடைய

பெயர்களுடன் விண்மீன்களின் பெயர்களும் இணைந்திருந்தன. இக் கூறுபாடுகள் அனைத்தும் வேதகால ஆரியருக்குப் புறம்பானவையாம். ஆதி ஆரிய நாகரிகத்தில் வானவியலும் சோதிடமும் இடம் பெற்றில.பிற்கால ஆரியர்கள் பிற நாகரிகங் களிலிருந்து பல கருத்துகளையும், சொற்களையும் ஏற்றுக் கொண்டனர். அரசமரத்தைக் குறிக்கும் 'அசுவத்தம்' என்னும் சொல் சிந்துவெளி மக்களிடமிருந்து ஆரியத்தில் புகுந்ததாகும். 'பூஜை' என்னும் சொல் அனாரியச் சொல் என்றும், பூ - செய் என்னும் தமிழ்ச் சொற்றொடர் ஆரியத்தில் பூஜை என மருவி பூஜா எனவாயிற்றென்றும் சுநீத்குமார் சாட்டர்ஜி கூறுவார்.

பாணிகளின் குடியிருப்புகள் மேல் ஆரியர்கள் படையெடுத்துச் சென்றதாகவும், அதற்காகப் பாணிகள் அவர்கள்மேல் பழிதீர்த்துக் கொண்டனர் என்றும் இருக்கு வேத சுலோகம் ஒன்று தெரிவிக்கின்றது. கங்கை வெளியில் வந்து குடியேறிய சிந்துவெளி மக்களே இப்பாணிகள் என ஊகித்தற்கிடமுண்டு. அவர்களுடன் மூண்ட பூசல்களையும் போர்களையும் பாராட்டாமல், அவர்களுடைய சமயக் கோட்பாடுகளை மட்டும் ஆரியர்கள் ஏற்றுக் கொண்டனர் போலும். சிந்துவெளிக் கடவுளாகிய பசுபதியை ஆரியர்கள் தம் உருத்திரன் நிலையைவிட மேல்நிலைக்கு ஏற்றினார்கள். யோக முத்திரைகளும், சக்தி வழிபாடும், அரச மரமும் ஆரிய சமயத்தில் இடம் பெற்றுவிட்டன. பொதுவாக சிந்துவெளி நாகரிகத்துக்கும் தமிழருக்கும் தொடர்பு இருந்தன என்று கருதலாம்.

## 1.3 கற்காலம்

தமிழகத்தில் கற்காலம் என்பது சுமார் கி.மு. 15,10,000 தொடங்கி கி. மு 1,000 வரை நீடித்த காலமாகும். தமிழகத்தில் தொல்லியல் ஆய்வுகள் சுமார் 130ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றன. இதுவரை செய்யப்பட்ட அகழ்வாய்வுகள், மேற்பரப்பாய்வுகள் ஆகியவற்றின் அடிப்படையில் இவற்றின் காலங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. தற்போது தமிழகத்தில் செய்யப்பட்ட பல அகழ்வாய்வுகளிலிருந்து வெளி வந்த செய்திகள் இக்கால அளவுகளின் முறையை மாற்றி அமைக்க வேண்டிய சூழலை ஏற்படுத்தியுள்ளன. இப்பணியில் வெளிநாட்டு ஆய்வாளர்கள் ஈடுபட்டனர். முதலில் புரூஸ்புட் என்ற நிலவியல் ஆய்வாளர் 1863ல் சென்னையில் பல்லாவரம் அருகே சில கற்கருவிகளைக் கண்டெடுத்து, இவை கற்கால

மக்களின் ஆயுதங்கள் என்று கருத்து தெரிவித்தார். அதைத் தொடர்ந்து உள்நாட்டு ஆய்வாளர்களும் கள ஆய்வு மேற்கொண்டு ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டனர். புரூஸ்புட், பர்கிட், எச்.டி. சங்காலியா, வி.டி. கிருஷ்ணசாமி போன்ற பலர் இப்பணியில் ஈடுபட்டனர். 1916ல் புரூஸ்புட் தருமபுரி பகுதியிலுள்ள பர்கூர் மலைப்பகுதியில் சில கற்கருவிகளைக் கண்டெடுத்தார். இதன் பின்னர் வந்தவர்கள் இவற்றைக் கல்லாயுதங்கள் என்று கருத்துத் தெரிவித்தனர். தற்போது இவற்றைப் போன்ற கல்லாயுதங்கள் வரட்டனபள்ளி அருகிலும் கப்பல்வாடியிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை பழைய கற்காலத்தைச் சார்ந்தவை என்பது தெரியவருகின்றன. இதற்கு முன்னர் குடியம் குகைப்பகுதியில் சுமார் 30 இடங்களில் கல்லாயுதங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இங்கு அகழ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழகத்தில் கல்லாயுதங்கள் செய்யும் தொழிற்பட்டறைகளும், வாழ்விடங்களும் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவை சுமார் இரண்டு லட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை.

## கற்காலக் கருவிகள்

சென்னைக்கு அருகில் இருக்கும் கொற்றலையாற்றின் சமவெளியிலும், வட மதுரையிலும் பழைய கற்காலத்தைச் சேர்ந்த கைக்கோடரிகள், உளிகள், கத்திகள் மற்றும் சிறிய கற்கருவிகள் கிடைத்துள்ளன. பின்னர் காஞ்சிபுரம், வேலூர், திருவள்ளூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, புதுக்கோட்டை, வட ஆர்க்காடு போன்ற மாவட்டங்களிலும் இத்தகைய கருவிகள் கண்டறியப்பட்டன. இக்கருவிகள் மிகவும் கரடுமுரடாகச் செதுக்கப்பட்டுள்ளன. கல்லால் ஆன கருவிகளோடு மரத்தாலான ஈட்டிகளையும் தண்டுகளையும் அக்கால மக்கள் கையாண்டதும் தெரிய வருகிறது. மேலும் இப்பகுதிகளில் பண்டைய மக்களின் கல்திட்டைகள், கல்வட்டங்கள் முதலியன கண்டு பிடிக்கப்பட்டன. இத்தகைய கண்டுபிடிப்புகளினால், தமிழ்நாட்டில் பழைய கற்கால மக்கள் பரவி வாழ்ந்தனர் என்பது தெளிவாகிறது. பழைய கற்கால மக்கள் உணவைத்தேடி அலையும் நாடோடி வாழ்க்கை முறையை மேற்கொண்டனர். மேலும் ஓரிடத்திலும் நிலையாகத் தங்கி வாழ்ந்ததாகத் தெரியவில்லை.

சுமார் கி.மு. 3000-1,000 - தமிழகத்தில் புதிய கற்காலம்.

## பழங்கற்காலம்

பழைய கற்காலத்தில் வாழ்ந்த மக்கள், குவார்ட்சைட் எனப்படும் கரடு முரடான கற்களை வேட்டையாடுவதற்குப் பயன்படுத்தினர். எனவே இக்காலத்திற்குப் பழைய கற்காலம் என்று பெயரிடப்பட்டது. பழைய கற்காலம் சுமார் கி.மு. பத்தாயிரம் ஆண்டுகள் வரை நீடித்தது என்று கருதலாம். தமிழகத்தில் பழங்கற்காலத்தின் ஆரம்ப காலம் எப்போதென இன்னும் சரியாகக் கணிக்க முடியவில்லை. அதன் காரணம் அத்திரம்பாக்கத்தில் கி.மு. 15,10,000 காலம் மதிக்கத்தக்க பழமையான தழும்பழி ஆயுதங்கள் கிடைத்துள்ளதுதான். தழும்பழி என்பது கீழைப்பழங்கற்கால ஆயுதங்களில் தழும்புரி ஆயுதங்களுக்கு மிகவும் பிந்தியவை. தமிழகத்தில் கிடைத்த தழும்பழி ஆயுதங்களின் பழமையே கி.மு. 15,10,000 காலம் மதிக்கத்தக்க பழமையானதாக இருப்பின் அதற்கு முந்திய தழும்புரி ஆயுதங்கள் அதனினும் பழமையானதாகவே இருக்கும். அதனால் தமிழகத்தில் கீழைப்பழங்கற்கால ஆரம்பம் 20 லட்சம் ஆண்டுகளுக்கு முன்னும் செல்லலாம். கற்காலத்தின் கடைசிக்கட்டமான புதிய கற்காலம் தமிழகத்தில் கி.மு.2000 வரை நிலவியது. அதன் பிறகு பெருங்கற்களைக் கொண்டு வழிபடுதல், உலோகக் கருவிகள் போன்றவை அதிகம் வழக்கில் வந்தவுடன் கற்காலம் தமிழகத்தில் வழக்கொழிந்தது.

## கீழைப் பழங்கற்காலம்

தமிழகத்தில் கீழைப் பழங்கற்காலம் கி.மு. 15,10,000 ஆண்டுகளுக்கு முன்னர் பல லட்சம் ஆண்டுகளுக்கு முன் ஆரம்பித்து கி.மு. 50,000 வரை நிலைத்திருந்தது. சென்னையில் கிடைத்த கீழைப்பழங்கற்கால ஆயுதங்களுடன் மனித எலும்பின் கால்துண்டுகள் கிடைத்தது, தமிழகத்திலும் கீழைப்பழங்கற்கால மனிதன் வாழ்ந்தான் என்பதுக்கு ஆதாரமாய் விளங்குகிறது. முதலில் பெரிய குவாட் சயிட் பாறைகளில் நெருப்பை ஏற்றிச் சூடாக்கிய பின்னர் அதன் மேல் நீரை ஊற்றி பாறைகளைப் பிளந்து இவர்கள் ஆயுதங்களைச் செய்ததாகத் தெரிகிறது. காலம் செல்லச் செல்ல இவர்கள் உபயோகிக்கும் ஆயுதங்களில் செப்பனிடும் முறைகள் அதிகம் கையாளப்பட்டுச் செய்திறனில் ஒரு படிமுறை வளர்ச்சியைக் கண்டுள்ளனர். இவ்வளர்ச்சிக் காலங்களின் போது இவர்களின் ஆயுதங்கள் கூழாங்கற்களாலும் முழுக்கற்களாலும் முழுக்கற்களிலிருந்து உடைக்கப்பட்ட ஆயுதங்களாகவும் வளர்ந்தது. இதன்

வளர்ச்சியை தழும்புரியில் இருந்து தழும்பழி என்று கூறுவர். தமிழகத்தில் கீழைப்பழங்கற்கால மனிதர்கள் வாழ்ந்த குகைகள் பல கண்டறியப்பட்டுள்ளன. இந்த இடங்களைப் பார்க்கும் போது வடதமிழகத்திலேயே கீழைப்பழங்கற்கால மனிதர்களின் பரவல் அடர்ந்து காணப்படுகிறது.

## மத்திய பழங்கற்காலம்

தமிழகத்தில் மத்திய பழங்கற்காலம் என்பது கிமு. 50,000 - கி.மு.20,000 வரை நிலவியது. இக்காலம் தொழில்நுட்பத்திலும் வேட்டையாடுதலிலும் பெரியதோர் திருப்புமுனையை ஏற்படுத்தியது. இக்கால மக்கள் கீழைப்பழங்கற்கால மக்களிடமிருந்து பெரியதோர் தொழில்நுட்ப மாற்றங்களைப் பெற்றிருந்தனர். கடினக்கல்லாயுதங்களான தழும்புரி, தழும்பழி போன்ற ஆயுதங்களிலிருந்து செதிற்கல்லாக வளர்ந்தது. கோடாரி, ஈட்டி போன்ற சிறிது தூரம் செல்லும் இலக்கு ஆயுதங்கள் குறைந்து வில் போன்ற நீண்ட இலக்கு ஆயுதங்கள் தயாரிக்கப்பட்டன. கீழைப்பழங்கற்காலத்தவர் செதிற்கல் போன்றவற்றைக் கண்டுகொள்ளாமல் விட்டனர். ஆனால் இவர்கள் செதிற்கல்லிருந்து வில் தயாரிக்கும் தொழில்நுட்பம் கற்றுக் கொண்டனர். சுரண்டல் கருவிகள், துளைக்கருவிகள், கூர்க்கருவிகள் போன்றவற்றை தமிழக்த்தின் கற்காலத்தவர் செய்துள்ளதாகத் தெரிவதால் இக்கால மக்கள் மரவுரி, மிருகத்தோல் போன்றவற்றை ஆடைகளாகப் பயன்படுத்தியது தெரிகிறது. இக்காலத்திலேயே மனிதன் தற்போதைய உருவம் அடைந்தான்.

## மேலைப் பழங்கற்காலம்

தமிழகத்தில் மேலைப் பழங்கற்காலம் கி.மு. 20,000 முதல் கி.மு. 10,000 வரை நிலைத்திருந்தது. தமிழகத்தில் கீழைப் பழங்கற்காலம், மத்திய பழங்கற்காலம் செழித்திருந்த அளவு மேலைப் பழங்கற்காலம் வளரவில்லை என்றாலும் திருவள்ளூர் மாவட்டம் குடியம் குகையில் இவைக் காணப்படுகின்றன. ஆனால் மற்ற தென்னிந்தியப் பகுதிகளில் காணப்படும் அளவுக்குச் சிறப்பியல்புகளைக் கொண்டிருக்கவில்லை. தமிழகத்தில் வாழ்ந்த இக்கால மனிதர்கள் ஒரே கல்லில் பல சமாந்தரமான பக்கங்களையுடைய சிறிய நீள்சதுரங்கள் வரும் ஆயுதங்களை அமைக்கக் கற்றுக் கொண்டார்கள்.

## இடைக்கற்காலம்

தமிழகத்தில் இடைக்கற்காலம் அல்லது தமிழகத்தில் குறுனிக்கற்காலம் கி.மு. 10,000 முதல் கி.மு. 2,000 வரை நிலவியது. தற்போதும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தேரி என்னும் மணல் மேடுகள் 20 - 50 அடி வரை உயரத்தில் காணப்படுகின்றன. இவை அக்கால கடல் மட்ட ஏற்ற இறக்கங்களைக் காட்டுவனவாய் அமைந்துள்ளன. இவற்றில் காணப்படும் செம்மண் படிந்த கருவிகள் காலத்தால் முந்தியவையாகவும் வெண்மண் படிந்த கருவிகள் காலத்தால் பிந்தியவையாகவும் விளங்குகின்றன. இத்தேரியில் இடைக்கற்கால ஆயுதங்கள் சிலவற்றிலும், இடைக்கற்கால மற்றும் புதிய கற்கால கருவிகளும் சேர்ந்தும் காணப்படுகின்றன. இவர்களின் ஆயுதங்கள் அழுதகன்னி ஆற்றுப் படுகை போன்ற சிறு ஓடைகளிலும் காணப்படுவதால் இவர்கள் தமிழகம் முழுவதுமே பரந்திருந்தனரெனக் கொள்ளலாம். இக்காலத்திலேயே உலகத்தின் அனைத்துப் பகுதிகளைப் போலவும் தமிழகத்திலும் நிரந்தரக் குடியிருப்புகளை அமைத்துக் கொண்டது மாந்தரினம்.

## புதிய கற்காலம்

தமிழகத்தில் புதிய கற்காலம் என்பது கி.மு. 3000 முதல் 1000 வரை நிலவியது. இக்காலத்தில் மேம்பட்ட தொழிலாய் மட்பாண்டம் செய்தல் இருந்தது. கொள்ளு, பச்சைப்பயறு, ஆடு, மாடு, பன்றி, மான் போன்ற மிருகங்களையும் வளர்த்தனர். அதிலிருந்து வரும் பொருட்களை உணவிற்கு பயன்படுத்தினர். இக்காலத்திலும் மக்கள் தமிழகம் முழுதும் பரந்து வாழ்ந்ததாகவே தெரிகிறது.

## 1.4 இரும்புக் காலம்

இரும்புக் காலம் என்பது, மனிதப் பண்பாட்டு வளர்ச்சியின் ஒரு காலகட்டம் ஆகும். இக்காலகட்டத்திலே இரும்புக் கருவிகளினதும், ஆயுதங்களினதும் பயன்பாடு முன்னணியில் இருக்கும். பண்டைய அண்மைக் கிழக்கு, கிரேக்கம், பண்டைய இந்தியா ஆகிய இடங்களில் இரும்புக் காலம் கி.மு. 12 ஆம் நூற்றாண்டில் தொடங்கியது. இரும்பை உருக்குதல், அதனைக் கருவிகள் தயாரிப்பதற்கேற்ப உருவாக்குதல் என்பவற்றை உள்ளடக்கிய இரும்பின் பயன்பாடு, ஆப்பிரிக்காவின் நொக் (Nok) பண்பாட்டில், கி.மு 1200 அளவில் தோன்றியது. ஐரோப்பாவின் பிற

பகுதிகளில் இது மிகவும் பிந்திய காலத்திலேயே தொடங்கியது. இரும்புக் காலப் பண்பாடு, மத்திய ஐரோப்பாவில் கி.மு. 8 ஆம் நூற்றாண்டிலும், வட ஐரோப்பாவில் கி.மு 6 ஆம் நூற்றாண்டிலும் தோற்றம் பெற்றது. மத்திய தரைக் கடற் பகுதிகளில், கிரேக்க, உரோமப் பேரரசுக் காலத்தில் உருவான வரலாற்று மரபுகளுடனும், இந்தியாவில், பௌத்தம், சமணம் ஆகியவற்றின் எழுச்சியுடனும், சீனாவில் கன்பூசியனிசத்தின் தோற்றத்துடனும் இரும்புக்காலம் முடிவுக்கு வந்தது.

தமிழகத்தின் இரும்புக்காலம் பொதுவாகவே அறிஞர்களால் பொ.மு. 500 என்றே நிறுவப்பட்டு வந்தது. ஆனால் ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வுகள் விரைவு பெற்ற காலம் அதை இன்னும் 1500 ஆண்டுகள் பழமை வாய்ந்ததாக நிறுவியது. இதற்கு முன்னரே செம்பு, இரும்பு, தங்கம் போன்ற உலோகங்கள் இங்கு உபயோகப் படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிய வந்தது.

ஆதிச்சநல்லூர் தொல்லியல் களம் தமிழ் நாட்டின் மிகப் பழைய நாகரிகத்தைச் சேர்ந்த தொல்லியல் களங்களில் ஒன்று. தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டம் வட்டத்தில் பாயும் தாமிரபரணி ஆற்றின் கரையில் உள்ள ஆதிச்சநல்லூர் எனுமிடத்தில் உள்ளது. தொல்லியல் துறையால் அகழ்வாய்வு செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்டு வரும் ஊர்களில் முதன்மையானதாக உள்ளது. இங்குப் புதைக்கப்பட்ட முதுமக்கள் தாழிகள் வழியாக பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்தொல்லியல் களத்தை முதலில் 1903-04களில் பெருமளவில் அகழாய்வு செய்தவர் அலெக்சாண்டர் ரியோ ஆவார். பின்னர் 2004–2005 ஆண்டுகளில் தி. சத்தியமூர்த்தி என்பவர் அகழாய்வு மேற்கொண்டார். ஆதிச்சநல்லூர் அகழ்வாராய்ச்சியில் கிடைத்த இரண்டு பொருள்களை, அமெரிக்காவில் உள்ள தொல்லியல் ஆய்வகத்திற்கு அனுப்பி அங்கு கதிரியக்கக்கரிமக் காலக்கணிப்பு செய்யப்பட்டது. அதில் ஒரு பொருளின் வயது கி.மு. 905, மற்றொன்றின் வயது கி.மு. 791 என தெரியவந்துள்ளது.

## ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வு வரலாறு

ஆதிச்சநல்லூர் தொல்லியல் களம் தூத்துக்குடி மாவட்டத்தில் அமைந்துள்ளது. திருநெல்வேலி நகரத்திலிருந்து 24 கிமீ தொலைவில் தென்கிழக்காக, தாமிரபரணி ஆற்றின் கரையில் அமைந்துள்ள "ஆதி தச்சநல்லூர்" எனும் ஆதிச்சநல்லூர், உலக அளவில் பலமுறை அகழாய்வுகள் செய்யப்பட நகரங்களில் ஒன்று. 1876 ஆம்

ஆண்டில் ஆதிச்சநல்லூரில் முதலாவது அகழ்வாய்வு நடத்தப்பட்டதாகத் தெரிகிறது. ஆதிச்சநல்லூரில் முதன்முதலில் ஜெர்மன் நாட்டைச்சேர்ந்த ஜாகோர் 1876ல் அகழாய்வுகள் நடத்தினார். பின்னர் 1896 இலும் 1904 ஆம் ஆண்டிலும் ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன. அக்காலத்தில் ஆய்வுகளை நடத்திய பிரித்தானியத் தொல்லியலாளரான அலெக்சாண்டர் ரெயா (Alexander Rea) என்பவர், தென்னிந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டவற்றுள் மிகவும் பரந்த தொல்லியல் களம் இதுவெனக் குறிப்பிட்டுள்ளார். அப்போது ஆயிரக்கணக்கான தொல் பொருட்களை இவர் கண்டெடுத்துப் பதிவு செய்துள்ளார். இவற்றுள், மட்பாண்டங்கள், இரும்புக் கருவிகள், ஆயுதங்கள், நகையணிகள் என்பனவும், பொன், வெண்கலம், அரிய கல் முதலியவற்றாலான மணிகளும் (beads), எலும்புகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பண்டைத்தமிழர் நாகரிகத்தின் தொல்பழங்காலத் தொட்டில் ஆதிச்சநல்லூரில் இருந்தது எனத் தொல்லியலாளர்கள் கருதுகிறார்கள். 2004 ஆம் ஆண்டில் இங்கே நடத்தப்பட்ட ஆய்வுகள் மிகவும் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. 3,800 ஆண்டுகள் பழமையான எலும்புக்கூடுகளும் இங்குக் கண்டெடுக்கப்பட்டுள்ளன. ஏறத்தாழ 114 ஏக்கர் பரப்பளவில் நடத்தப்படும் ஆய்வில் ஏராளமான ஈமத்தாழிகள் காணப்பட்டுள்ளன. இக்களத்திலுள்ள புதைகுழித் தொகுதி மூன்று அடுக்குகளாகக் காணப்படுகின்றது. பாறைகள் நிறைந்த மலைச் சரிவுகளில் குழி தோண்டப்பட்டுச் சுட்ட களிமண்ணினால் ஆன தாழிகள் புதைக்கப்பட்டுள்ளன. ஒன்றினால் ஒன்று மூடப்பட்ட இரண்டு தாழிகளைக் கொண்ட புதைகுழிகளும் உள்ளன. பண்டைத் தமிழ் எழுத்துக்களுடன் கூடிய பல தாழிகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

## மற்ற பொருட்கள்

இங்கு கருப்பும் சிவப்பும் கலந்த பானையோடுகள், சிவப்பு, கருப்பு ஆகிய வகைப் பானைகள் கிடைத்துள்ளன. ஒருபானையில் மீது ஒரு பெண்ணுருவம், நெற்கதிர்கள், ஒரு மான் மற்றும் ஒரு பல்லி ஆகியவற்றின் உருவங்கள் ஒட்டுருவமாகக் காணப்படுகின்றன. தங்கத்திலான நெற்றிப்பட்டம், கத்தி மற்றும் வாள் போன்ற இரும்புப் பொருட்கள் மற்றும் வெண்கலப் பொருட்கள் கிடைத்துள்ளன.

### மனித எலும்புக்கூடுகள்

ஆதிச்சநல்லூரில் கிடைத்த மண்டையோடுகளில் ஆய்வாளர்கள் சேட்டர்ஜியும் குப்தாவும் பதிமூன்று எழும்புக்கூடுகளை ஆய்வுக்கு எடுத்து கொண்டு உள்ளனர். அந்த எலும்பு கூடுகளில் எட்டு ஆண்களின் மண்டை ஓடுகளும் ஐந்து பெண்களின் மண்டை ஓடுகளும் அடங்கும். அவற்றில் பெரும்பாலனவை உடைந்தும் சிதைந்தும் உள்ளன. ஆதிச்சநல்லூரில் வாழ்ந்த மனிதர்களே தென்னிந்தியாவின் பூர்வக்குடிகள் என்றும் அவர்கள் மத்திய தரை கடல் மக்கள் தென் இந்தியா வரும் முன்னர் இருந்தே தென் இந்தியாவில் வாழ்ந்து வருவதாகவும் கூறுகிறார் ஆய்வாளர் செரோம் சேக்கப்புசன். மேலும் செரோம் ஆதிச்சநல்லூர் எலும்பு கூடுகள் முந்து ஆசுத்திரோலாய்டு எலும்பு கூடுகள் என்றும் அவை மொனாக்கோ பகுதியில் கிடைத்த மேலை பழங்கற்கால ஆரிகனேசியன் பண்பாட்டு பெண்ணின் மண்டை ஓட்டுடன் ஒத்து வருவதாகவும் கூறியுள்ளார்.

## 1.5 தமிழரின் வரலாற்றுத் தொன்மை

தமிழர் ஒரு தனி இனத்தவர். தமிழர் தொன்மையும் சிறப்பும் வாய்ந்தவர். உலகில் பல மொழிகள் தோன்றி வழங்கி மறைந்து ஒழிந்தன. ஒரு சில மொழிகள் மட்டும் கால வெள்ளத்தில் அழியாமல் நிலைத்து நிற்கின்றன. அவ்வாறு நிலைத்துள்ள மொழிகளிலும் சில பேச்சு வழக்கு இழந்து இலக்கியமாகவே நிற்கின்றன. தமிழ், பழமைக்குப் பழமையாய் இலக்கிய வளம் உடையதாய் நிற்பதோடு புதுமைக்குப் புதுமையாய் கருத்துச் செல்வம் நிறைந்ததாய் என்றும் இளமைப் பொலிவுடன் விளங்குவது தமிழ் மொழியாகும். தமிழ் மொழியும் தமிழரும் பெருமைமிக்க மிகப் பழைய வரலாறு உடையவர்கள்.

தமிழினத்தின் தொன்மையும் சிறப்பும் தமிழ்ப் பழந்தமிழ் இலக்கியங்கள் என்று போற்றப்படும் தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதிணெண் கீழ்கணக்கு, திருக்குறள் இரட்டைக் காப்பியங்கள் ஆகிய நூல்களும் அயல் நாட்டிலிருந்து கடல் வழியாகவோ நில வழியாகவோ வந்து சென்ற பிறநாட்டவர் குறிப்புக்களும் தமிழின மரபின் தொன்மையையும் சிறப்பையும் நன்கு தெளிவாக்கியுள்ளன. லெமூரியா என்று கூறப்படும் அந்த நிலப்பரப்பே குமரிக் கண்டம் என்று தமிழிலக்கியத்தால் அறியப்படும் பகுதியாகும். அங்கு குமரிமலை

என்ற பெருமலை இருந்தது என்றும் பஃறுளியாறு என்ற ஆறு ஓடியது என்றும் பழந்தமிழ் இலக்கியச் சான்றுகள் அறிவிக்கின்றன. இந்தக் குமரிக் கண்டத்தில்தான் தமிழ் மக்கள் தோன்றினர் என்றும் அவர்கள் பேசிய மொழியே ஆதித்தமிழ் மொழி என்றும் ஆய்வாளர்கள் பலர் சுட்டிக் காட்டியுள்ளனர். குமரிக்கண்டம் அழிவெய்தியபின் தென்னிந்தியாவின் தொடர்ச்சியாக இலங்கை, சுமத்திரா, ஜாவா முதலிய நாடுகளை உள்ளடக்கிய ஒரு பெரும் தீவு உருவாகியது.

சங்க இலக்கியங்களில் தமிழர் நிலப் பகுதிகளின் எல்லைகள் கூறப்பட்டுள்ளன. குமரிக்கண்டத்திற்குத் தெற்கே 49 நாடுகள் இருந்தாகவும் அவை ஏழ் தெங்க நாடு, ஏழ் மதுரை நாடு, ஏழ் முன்பாலை நாடு, ஏழ் பின்பாலை நாடு, ஏழ்குன்ற நாடு, ஏழ் குணகாண நாடு, ஏழ் குறும்பனை நாடு என்பவற்றைக் குறிக்கின்றன. தமிழர் வாழ்க்கை முறை செம்மைப்பட்ட திருந்திய ஒன்றாக அமைந்திருக்கின்றது. அரசியல் வாழ்வும், சமய வாழ்வும், இல்வாழ்க்கை முறையும் இவர்களிடத்தில் சிறந்த முறையில் அமைந்திருக்கின்றன.

'ஆதிசிவன் பெற்றான் - அகத்தியன் எனை வளர்த்தான்' என்று தமிழ்த்தாய் கூற்றாக் கூறும் பாரதியும் தமிழின் பிறப்பினை தென்னாட்டவன் சிவனுடன் தொடர்புபடுத்திக் கூறுவது தமிழ் மொழியின் தொன்மைத் தன்மையைக் குறிப்பதற்கேயாகும். தமிழர் என்ற இனத்தின் இன்றைய நிலையில் தனித்தே இலக்கியங்களை மட்டுமே வைத்துக்கொண்டு தமிழ் மிகத் தொன்மையான மொழி என்று நிறுவிவிடல் இயலாததாகவுள்ளது. இன்றளவில் நடைபெறும் தொல்லியல் அகழ்வாராய்ச்சிகள் கீழடி, மணலூர், கொந்தகை, கொடுமணல், ஆதிச்சநல்லூர், சிவகளை போன்ற அகழ்வாராய்ச்சிகளில் கண்டறியப்படும் வாழ்விடங்கள், ஈமக்காடுகள், தொழிற்கூடங்களில் கண்டறியப்பட்டுள்ள க, ய என்ற தமிழி (தமிழ்) எழுத்துகள், செவ்வண்ணப் பூச்சுப் பெற்ற மட்பாண்ட ஓடுகள், மேலும் சூது பவளம், மணிகள், சுடுமண்ணால் ஆன முத்திரை, எடைக் கற்கள், வெண்கலம் கலந்த செங்கல் கட்டுமானங்கள், நுண்கற்காலத்தைச் சேர்ந்த மெல் அலகுக் கத்திகள், வழவழப்பான கல் மழுக்கள், சிறு கோடுகள் மற்றும் புள்ளிகளுடன் கூடிய தங்க நாணயங்கள், சீன மட்பாண்டத்தின் விளிம்புப் பகுதிகளுடன் ஆதிச்சநல்லூரில் முதுமக்கள் தாழிகள், மேற்கூரை ஓடுகள், கிண்ணங்கள், தூத்துக்குடி மாவட்ட சிவகளையில் காசுகள்,

கற்பந்துகள், சுடுமணல் ஓடுகள் மற்றும் கற்களால் ஆன ஆயுதங்கள் கிடைத்து உள்ளன. இவ்வாறான தொடர் ஆய்வுகள் தமிழரின் தொன்மையையும் தமிழர் வரலாற்றையும் 3 இலட்சத்து 75 ஆயிரம் ஆண்டுகளுக்கும் கூடுதலாக இருக்கும் என ஆய்வாளர்கள் மதிப்பிடுகின்றனர். இத்தகைய ஆய்வுகள், கல்வெட்டுகள் பழம்பெரும் வரலாறுகள் தமிழரின் தொன்மையும் மொழியின் தோற்றமும் ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டதாகவே விளங்குகின்றன.

தமிழ் மொழி இலக்கியங்களாலும் ஆய்வுகளாலும் தொன்மையானதாகக் காணப்பட்டாலும் தமிழர் ஒரு நாட்டினராக இந்த நூற்றாண்டில் ஒரு நாட்டில் வாழாத காரணத்தினால், தமிழர் தமது மொழி, கலை, பண்பாடு, விழுமியங்கள் போன்றவற்றில் அகச்சூழலிலும் சரி புறச்சூழலிலும் தடுமாற்றத்துடன் நிலைமாறி வாழ்கின்ற தன்மையே தமிழின் தொன்மையைப் போற்றிப் பேணுதலில் பின்னடைவாக இருக்கின்றது. இன்றைய காலத்தில் இந்தப் பூமிப்பந்தில் பலநாடுகளில் வாழும் தமிழர் தாம் வாழும் நாடுகளில் பேசும் மொழியை மற்றொரு மொழியினத்தவருடன் தொடர்புகொள்ளும் போது, ஓர் மொழியிலுள்ள சொற்கள் மற்றொரு மொழியில் கலத்தல் இயல்பாகும். மொழிக்கலப்பு என்பது மொழி வரலாற்றில் தவிர்க்க முடியாத ஒன்றாகும். சங்க காலத்திலிருந்தே தமிழுக்கும் வடமொழிக்கும் இருந்த தொடர்பை தொல்காப்பியம் மூலம் அறிகிறோம். சங்க இலக்கியங்களில் இடம்பெறும் செந்தமிழ் நடையின் தூய்மையை நோக்கும்போது அது இன்றைய மக்களுக்கு விளங்காத கடுமையை நோக்குகின்றது. இதனைத் தொல்காப்பியர் செந்தமிழ் நிலத்து எல்லையையோ கொடுந்தமிழ் நிலத்து எல்லையையோ குறிப்பிடவில்லை. செந்தமிழை இயற்சொல்லாகக் கொண்டு, வட்டார வழக்கினைத் திசைச்சொல் என்கின்றார். இந்த கொடுந்தமிழ் எனப்படும் பேச்சுத்தமிழ் பல நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் தாம் வாழும் நாடுகளில் அரசியல், சமயம், வாணிகம், கலை, பண்பாட்டுத் தேவைக்காகப் பிறமொழி பேசும் இனத்தவருடன் தொடர்பு கொள்ளும்போது, பிற மொழிச் சொற்களை தாங்கள் அறியாதவாறே உள்வாங்கிக் கொண்டு தொடர்ந்து பேச்சு வழக்கில் கையாளுகின்றார்கள். இதற்குக்காரணம் அரசியல் செல்வாக்குகளும், ஆட்சிமொழியாகவும், அரசுமொழியாகவும் மொழிகள் ஆதிக்கம் செலுத்தத் தவறுவதால் ஆகும். பழந்தமிழ் இலக்கியங்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்,

பாலை என்னும் ஐவகையான நிலங்களைக் குறிப்பிடுகின்றன. இவ்வகையான நிலப்பகுதிகளும் ஒருவகையான பண்பாட்டு நிலைக் கூறுகள் ஆகும். ஏனெனில் ஒவ்வொரு நிலத்திற்குமுரிய முதல்பொருள் (நிலம், பொழுது), கருப்பொருள் (தெய்வம், உணவு, விலங்குகள், மரம் செடி, கொடிகள், பறவை, தோற்கருவிகள், தொழில், யாழ் போன்ற நரம்புக்கருவிகள்), உரிப்பொருள் (புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல், இவற்றின் சூழலும்) ஆகியன வரையறுக்கப்பட்டவை. இதில் முதல், உரி, கருப்பொருட்கள் பண்பாடு சார்ந்தவை. இவ் ஐந்திணைகளும் மனித வளர்ச்சிகளைக் குறிப்பனவாகவும் பண்பாட்டு நிலைகளை எடுத்துக் கூறுவதாகவும் தமிழ் இலக்கிய மரபில் இலக்கண வகைமைகளாக அமைவதையும் காணலாம். இவை தமிழர் மரபு பற்றி விளக்கி நிற்பவை.

இந்த வகையில் தமிழர் அரசியல் சார்ந்த நிலங்கள் எல்லைகள் நிரந்தரமானதாக இருந்ததில்லை. பேரரசர்கள், சிற்றரசர்கள், குறுநில மன்னர்கள், மண்மீட்பு விடுதலை இயக்கங்கள் போன்றோரின் படைகள் அரசியல் சார்ந்த நிலவியல் எல்லைகளை மாற்றிக்கொண்டே இருந்தன. தொன்மைக்காலப் பழந்தமிழ் இலக்கியங்கள் கூறும் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் நீண்ட கால ஆட்சியில் இருந்தாலும் நிலப்பரப்புகள் நிரந்தரமானதாக இருந்தில்லை. பழந்தமிழகம் ஐந்து நாடுகளாக இருந்தாக வரலாற்று ஆசிரியர் கூறுகின்றனர். இவை சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு, தொண்டை நாடு, கொங்கு நாடு போன்றனவாகும். இந்த நாடுகளின் நிலவியல் எல்லை என்பது இன்றைய தமிழகம், கேரளம், மற்றும் ஆந்திரா, கருநாடகத்தின் சிலபகுதிகள் ஆகும். இதன் பின்னர் வந்த ஆங்கிலேயர் காலத்தில் பல்வேறு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது. இந்திய விடுதலைக்குப்பின் மொழி அடிப்படையிலான மாநில நிலவியல் எல்லைப் பகுப்பு அமைக்கப்பட்டது. இந்த நிலவியல் எல்லைகள் தெளிவாகவும் துல்லியமாகவும் வரையறுப்பு செய்யப்படவில்லை. குறிப்பாக இருமொழி பேசும் குழுக்களை ஒரு எல்லைக்குள் எவ்வாறு அடக்குவது என்ற குழப்பம் நிலவியது. இவ்வாறன குமுகாயச் சூழலில் குழுக்களின் நிலவியல் எல்லைகளை வரையறுப்பது கடினம். இதன் விளைவாக இன்றைய தலைமுறை மொழி, இனம் என்று பல சிக்கல்களை எதிர்நோக்குகின்றது.

உலகில் தவறுதாலாகப் புரிந்து கொள்ளப்பட்ட வரலாறுகளில் தமிழர் வரலாறும் ஒன்றாகிவிட்டது. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொடங்கி இன்று வரையிலும் உள்ள உலகில் வாழ்கின்ற தமிழர் வரலாற்றினை தக்க சான்றுகளுடன் தொகுத்துத் தொடர்புபடுத்திப் பார்ப்பது நன்று. தாய்த்தமிழ் மண்ணில் வாழ இயலாது கடல் கடந்து சென்று வாழும் மண்ணில் வாழுகின்ற தமிழினம் தமது ஆதிக்குடிகள் பற்றிய வரலாற்று பதிவுகளை கண்டறிந்து எதிர் கால தலைமுறைக்கு எடுத்துரைத்துச் செல்வது முக்கியமாகின்றது. தமது மக்களின் வரலாற்றை, உண்மைத் தன்மையை உறுதியோடும் கடமை உணர்வோடும் எடுத்துரைக்க வேண்டும். குமரிக்கண்டம் தொடக்கம் தமிழீழம் வரை தமிழர் வரலாறு நீண்டு செல்கின்றது. இன்று தமிழன் உலகின் அனைத்து நாடுகளிலும் பரந்து விரிந்து வாழ்கின்றான். தமிழனின் மண் பிற இனத்தவனின் கையில் இருப்பதுதான் இதற்குக் காரணமாக அமைகின்றது. தாய் நாட்டில் தன்மானத்துடன் வாழ வழியின்றி இருக்கும் சூழலில், பிற நாடுகளில் வாழ்கின்ற தமிழர் ஒவ்வொருவரும் தமக்கென்ற ஒரு தாய் நாட்டை உருவாக்க வீரத்துடனும் ஓர்மத்துடனும் போராடவேண்டும். புறநானூற்றில் தமிழரின் வீரத்தை நாம் அனைவரும் படித்ததுண்டு, ஆனால் யாரும் பார்த்தது இல்லை. ஆனால் அந்த தமிழரின் வீரம் நம் கண்முன்னால் உலகம் முழுவதும் பறைசாற்றப்பட்டது இந்த நூற்றாண்டில்தான் என்பது வரலாற்று உண்மை.

## 1.6 பண்டைய தமிழரின் அயல்நாட்டுத் தொடர்புகள்

'திரைகட லோடியுந் திரவியம் தேடு' என்பது ஒரு மூதுரை. காலத்தால் பிற்பட்டதாயினும் பழந்தமிழரின் வாழ்க்கைப் பண்பாடுகளுள் ஒன்றை இது தெற்றென விளக்குகின்றது. பண்டைத் தமிழர்கள் சோம்பித் திரிந்தவர்கள் அல்லர்; உழைத்து உழைத்து வாழ்க்கையில் இன்பம் காணுவதிலேயே கண்ணுங்கருத்துமாய் விளங்கியவர்கள். அவர்கள் மலைகளுடனும், காடுகளுடனும், கடலுடனும் கலந்து உறவாடி னார்கள். மேற்கே கிரீஸ், ரோம், எகிப்து முதல் கிழக்கே சீனம் வரையில் கடலோடிப் பிழைத்தார்கள். எகிப்து, பாலஸ்தீனம், மெசப்பொடோமியா, பாபிலோனியா ஆகிய நாடுகளுடன் பண்டைய தமிழர்கள் வாணிகத் தொடர்பு வைத்துக் கொண்டிருந்தனர். தமிழகத்துப் பண்டங்களான ஏலம், இலவங்கம், இஞ்சி, மிளகு ஆகியவற்றுக்கு மேற்காசிய நாடுகளில் பண்டைய நாள்களிலேயே

வேட்கையுண்டு. யூதர்களின் ஆதி சமயத் தலைவரான மோசஸ் என்பார் தாம் நிகழ்த்தி வந்த இறை வழிபாட்டில் ஏலக்காயைப் பயன்படுத்தினார் எனப் 'பழைய ஏற்பாடு' கூறுகின்றது. மோசஸ் கோயில் கட்டி வழிபாடு செய்தது கி.மு.1490-ல் என்பர். தென் அராபிய நாட்டு அரசி ஷேபா என்பாள் இஸ்ரேலின் மன்னன் சாலமனைக் காணச் சென்றபோது ஏலம், இலவங்கம் போன்ற நறுமணப் பண்டங்களைக் கையுறையாகக் கொண்டுபோனதாகவும் பழைய ஏற்பாட்டில் ஒரு குறிப்புக் காணப்படுகின்றது. சாலமன் ஆண்ட காலம் கி.மு. 1000 என்று அறுதியிட்டுள்ளனர். இவருடைய காலத்தில் டயர் நாட்டு மன்னர் ஹீராம் என்பாரின் ஏவலின்கீழ் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை சில மரக்கலங்கள் கீழை நாடுகளுக்குப் பாய்விரித்தோடிப் பொன், வெள்ளி, தந்தம், குரங்குகள், துகிம் (தோகை அதாவது மயில் தோகை), ஆல்மக் (அகில் மரங்கள்). விலையுயர்ந்த இரத்தினங்கள் ஆகிய சரக்குகளை ஏற்றிக்கொண்டு வந்தனவாம். சாலமன் மன்னனுக்கு அளிக்கப்பெற்ற இப் பண்டங்களின் பெயர்கள் யாவும் தமிழ்ப் பெயர்களின் சிதைவுகளே என்பதில் ஐயமில்லை.

பாபிலோனியாவில் நிப்பூர் என்ற இடத்தில் முரஷு என்பவரும் அவர் மக்களும் நடத்தி வந்த காசு வாணிகத்தில் கணக்குப் பதியப்பட்ட களிமண்ணேடுகள் சிலவற்றில் பாபிலோனியர் தமிழக வணிகருடன் கொண்டிருந்த பற்று வரவுகள் குறிக்கப்பட்டுள்ளன. அதே காலத்தில் தமிழ் வணிகர்கள் பாபிலோன் நகரத்தில் குடியேறி அங்கேயே தங்கித் தம் தொழிலை நடத்தி வந்ததற்கும் இவ்வேடுகள் சான்று பகர்கின்றன. தமிழகத்துக்கும் எகிப்துக்குமிடையே ஏற்பட்டிருந்த வாணிகத் தொடர்பு மிகப் பழைமையானதாகும். அது எப்போது தொடங்கியிருக்கும் என்னும் கேள்விக்குப் பலவாறான விடைகள் அளிக்கப்படுகின்றன. பல நூற்றாண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட 'எரித்திரியக் கடலின் பெரிப்ளூஸ்' (Periplus of the Erithraean Sea) என்னும் நூலை டபிள்யூ. எச். ஸ்காபி என்பார் பதிப்பித்துள்ளார். தம் பதிப்புரையில் அவ்வாசிரியர் 'கிரேக்க மக்கள் அநாகரிகத்தினின்றும் விழித்தெழுவதற்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே எகிப்தும் பண்டைய இந்திய நாடுகளும் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தன. பாரசீக வளைகுடாவின் வடதிசையில் இந்நாடுகள் ஒன்றோடொன்று பண்டமாற்றுச் செய்து கொண்டன' என்று கூறுகின்றார்.

பண்டைய தமிழகத்திலிருந்து ஏற்றுமதியான பண்டங்களுள் சிறப்பானவை மஸ்லின் துணியும், ஏலம், இலவங்கம் போன்ற நறுமணப் பண்டங்களுமாம். எகிப்தின் பதினேழாம் அரசு பரம்பரையினர் காலத்தில் (கி. மு. 1500- 1350) அந் நாட்டில் இறக்குமதியான சரக்குகள் பல தந்தத்தினால் கடையப்பட்டவை என அறிகின்றோம். இவற்றில் சில தென்னிந்தியாவில் இருந்துதான் ஏற்றுமதியாயிருக்க வேண்டும். தென்னிந்தியாவுக்கும் சுமேரியாவுக்குமிடையில் கி. மு. நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வாணிகப் போக்குவரத்து நடைபெற்று வந்ததென்று சேஸ் (Sayce) என்பார் தம் ஹிப்பர்ட் சொற்பொழிவுகளில் (1887) குறிப்பிட்டுள்ளார். இரண்டு பழங்கால உடைகளைக் குறிப்பிடும் பாபிலோனிய நாட்டுப் பட்டியல் ஒன்றில் மஸ்லின் என்னும் துணிவகையைக் குறிக்கும் 'சிந்து' என்னும் சொல் எழுதப்பட்டுள்ளது. மஸ்லின் என்பது மிகமிக நுண்ணிய துணிவகையாகும். இத்துணி தமிழகத்திலிருந்து பாபிலோனியாவுக்கு ஏற்றுமதியாகி இருக்க வேண்டும். சிந்து என்னும் சொல் தமிழில் கொடியைக் குறிக்கும். கொடி துணியாலானது. எனவே, இச் சொல் துணியையே குறிக்கலாயிற்று. கன்னடத்திலும் துளுவிலும் துணிக்குச் 'சிந்து' என்று பெயர் வழங்குவது குறிப்பிடத்தக்கது. இத் துகில் தமிழகத்திலிருந்து பாபிலோனியாவுக்குக் கடல் வழியாகத்தான் சென்றிருக்கவேண்டும்; அன்றிப் பாரசீகத்தின் வழியாகச் சென்றிருக்க முடியாது. பாரசீக மொழியில் 'சி' என்னும் எழுத்தொலி 'ஹி' என்று மாறும். பாரசீகத்தின் வழியாக இத்துணி ஏற்றுமதியாகி இருந்தால் அதன் பெயர் 'ஹிந்து' என்று மாறியிருக்க வேண்டும். அப்படியின்றி அது பாபிலோனியாவில் 'சிந்து' என்றே வழங்கிற்று. எனவே, கேரளத்திலிருந்து துணியானது கடல் வழியாக நேராகவே பாபிலோனியாவுக்குச் சென்றது என்று ஊகிக்க வேண்டியுள்ளது. சிந்து என்னும் சொல்லுக்கும் சிந்து என்னும் ஆற்றின் பெயருக்கும் எவ்விதமான தொடர்பும் இல்லை.

பண்டைய நாள்களில் தென்னிந்தியாவுக்கும் மடகாஸ்கருக்கு இடையே நெருங்கிய வாணிகத் தொடர்பு இருந்து வந்ததாகத் தெரிகின்றது. தென்னிந்தியர் பலர் வாணிகத்தின் பொருட்டாகவே மடகாஸ்கருக்குச் சென்று குடியேறினர். தம்முடைய முன்னோர் முன்னொருகாலத்தில் தென்னிந்தியாவில் மங்களூரினின்றும் குடிபெயர்ந்து மடகாஸ்கருக்கு வந்து தங்கிவிட்டார்கள் என்று அந்நாட்டு மக்கள்

கூறிக்கொள்கிறார்கள். அந் நாட்டின் பழம் பெயர் 'மலே' என்பது. சமஸ்கிருத சொற்கள் கலந்த இந்தோனேசிய மொழியை மடகாஸ்கர் மக்கள் வழங்கி வருகின்றார்கள்.

கிரேக்கர்கள் தமிழகத்துடன் வாணிகத்தில் இறங்கியது கி.மு. ஐந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்திலாகும். இவ் வாணிகத்தின் மூலம் தமிழ்ச் சொற்கள் பல கிரேக்க மொழியில் நுழைந்து இடம்பெற்றுள்ளன. சொபோகிளீஸ், அரிஸ்டோபேனீஸ் முதலிய கிரேக்க அறிஞரின் நூல்களில் இவற்றைக் காணலாம். 'அரிசி' என்னும் தமிழ்ச் சொல் கிரேக்க மொழியில் நுழைந்து 'அரிஸா' என்று உருக்குலைந்தது. அம் மொழியில் கருவா (இலவங்கம்) என்னும் தமிழ்ச் சொல் 'கார்ப்பியன்' என்றும், இஞ்சி வேர் 'சின்ஞிபேராஸ்' என்றும், பிப்பாலி 'பெர்ப்பெரி' யாகவும் உருமாற்றம் அடைந்தன. இரு வேறு மொழிகளுக்கிடையே தோன்றும் சொற்கலப்புகளைக் கொண்டே அம்மொழி பேசும் நாடுகளுக்கிடையே நிலையான வாணிகத் தொடர்பு இருந்து வந்தது என்று உறுதியாகக் கூறமுடியாது. எனினும், அந் நாடுகள் ஒன்றோடொன்று கடல் வாணிகத்தில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்று ஒரு முடிவுக்கு வரலாம்.

தமிழகத்து நறுமணப் பொருள்களின் சுவையையும், ஏனைய ஏற்றுமதிப் பண்டங்களின் பெருமையையும் கிரேக்கர்களின் மூலமே ரோமாபுரி மக்கள் அறிந்து கொண்டனர். எனினும். கி.பி. முதலாம் நூற்றாண்டுவரையில் ரோமரின் வாணிகம் பெருமளவு விரிவடையவில்லை. இக் கால வரம்புக்கு முற்பட்ட ரோம மன்னரின் நாணயங்கள் தமிழ்நாட்டில் இதுவரையில் கிடைக்கவில்லை என்பது அதற்கு ஒரு சான்றாகும். ரோமாபுரிச் சக்கரவர்த்தி அகஸ்டஸின் உடன்காலத்தவர், ஸ்டிராபோ (Strabo) என்ற நூலாசிரியர். இவர் பூகோள நூல் ஒன்றை எழுதியுள்ளார். 'எரித்திரியக் கடலின் பெரிபுளூஸ்' (Periplus of the Erithraean Sea) என்று அழைக்கப்படும் வேறொரு வரலாற்று நூலும் (கி.பி.60) கிடைத்துள்ளது. இதன் ஆசிரியர் இன்னார் எனத் தெரிய வில்லை. பிளினி என்பார் உயிரியல் நூல் ஒன்றையும் (கி. பி. 70). தாலமி பூகோள நூல் ஒன்றையும் எழுதிவைத்துள்ளனர். சேரநாட்டுத் துறைமுகப் பட்டினங்களான 'தொண்டியைத் திண்டிஸ் என்றும், முசிறியை முஸிரிஸ் என்றும், பொற்காட்டைப் பகரி என்றும், குமரியைக் கொமாரி' என்றும் ரோமர்கள்

குறிப்பிட்டுள்ளனர். அவற்றைப் போலவே, தமிழகத்தின் கீழைக் கடற்கரைத் துறைமுகங்களான கொற்கையைக் கொல்சாய் என்றும், நாகப்பட்டினத்தை நிகாமா என்றும் காவிரிப்பூம்பட்டினத்தைக் கமரா என்றும், புதுச்சேரியைப் பொதுகே என்றும், மரக்காணத்தைச் சோபட்மா என்றும், மசூலிப்பட்டினத்தை மசோலியா என்றும் அந் நூல்கள் குறிப்பிடுகின்றன. சேரநாட்டுத் துறைமுகங்கள் அனைத்தும் கண்ணனூருக்கும் கொச்சிக்குமிடையில் அமைந்திருந்தன. அரேபியாவிலிருந்தும், கிரீஸிலிருந்தும் வாணிகச் சரக்குகளை ஏற்றிக்கொண்டு வந்த எண்ணற்ற நாவாய்கள் முசிறியில் செறிந்து கிடந்தனவென்று பெரிபுளூஸ் கூறுகின்றது.

தமிழகத்துடன் ரோமர்கள் மேற்கொண்டிருந்த வாணிகம் அவர்களுடைய பேரரசரின் ஆதரவின்கீழ்ச் செழிப்புடன் வளர்ந்து வந்தது. இவ் வாணிகத்தின் வளர்ச்சியில் பேரரசர் அகஸ்டஸூம் பேரூக்கங் காட்டினார். ஆர்மஸ் (Hormuz) துறைமுகத்திலிருந்து ஏறக்குறைய நூற்றிருபது மரக்கலங்கள் பாய்விரித்தோடியதைத் தாம் நேரில் கண்டதாக ஸ்டிராபோ கூறுகின்றார். பாண்டிய மன்னன் ஒருவன் தன் தூதுவர் இருவரைத் தன் அரசவைக்கு அனுப்பி வைத்ததாக அகஸ்டஸ் என்ற ரோமாபுரிப் பேரரசரே கூறுகின்றார். ரோமாபுரியுடன் தமிழகம் மேற்கொண்டிருந்த கடல் வாணிகம் காலப்போக்கில் பல மாறுதல்களுக்கு உட்பட்டது. ரோமாபுரிப் பேரரசின் ஆட்சி முடிவுற்றபின் ரோமரின் வாணிகம் தமிழகத்தில் மட்டுமன்றி மசூலிப்பட்டினத்திலும், ஓரிஸ்ஸா கடற்கரையிலும் பரவலாயிற்று. ரோமாபுரி நாவாய்கள் அங்கெல்லாம் நங்கூரம் பாய்ச்சின.

விசிகாத்து மன்னன் கி. பி. 410-ல் ரோமாபுரியைக் கைப்பற்றினான். அந்நகரத்துக் குடிமக்களின்மீது தண்டம் ஒன்று விதித்தான். ரோமர்கள் மூவாயிரம் பவுண்டு மிளகு தனக்குத் திறை செலுத்தவேண்டும் என்றும், தவறினால் தான் ரோமாபுரியை அழித்துவிடப் போவதாகவும் மருட்டினான். ரோமர்கள் தம் நகரைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு அம் மன்னன் கேட்ட அவ்வளவு மிளகையும் செலுத்தித் தம் நகரை மீட்டுக் கொண்டார்களாம். தமிழகத்துப் பண்டங்கள் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டிலும் ரோமாபுரிக்குத் தொடர்ந்து ஏற்றுமதியாகிக் கொண்டிருந்தது என்ற செய்தியை இவ் வரலாறு உறுதி செய்கின்றது.

பண்டைய தமிழர்கள் மத்திய தரைக்கடல் நாடுகளுக்குத் தம் சரக்குகளைத் தாமே நேர்முகமாக ஏற்றிச் செல்லுவதில்லை. மாமன்னன் அலெக்சாண்டர் (கி.மு. 356-323) காலத்துக்கு முன்பு தமிழகத்து வணிகர்கள் பாபிலோனியாவைக் கடந்து அப்பால் சென்றதாகத் தெரியவில்லை; செங்கடலிலும் அவர்கள் நுழையவில்லை. இவர்கள் செங்கடல் வரையில் ஏற்றிச் சென்ற சரக்குகளைப் பினிஷியரும் கால்டேயரும் ஏற்றுக்கொண்டு மத்தியதரைக் கடல் நாடுகளுக்கு அவற்றை எடுத்துச் சென்று விலையாக்கினர்.

சேரநாட்டுக் கடற்கரையில் அமைந்திருந்த துறைமுகங்களில் வந்து தங்கிய கிரேக்கக் கப்பல்கள் மிகவும் பெரியவை. பருவக் காற்றுகளின் பயனை அறிந்தபிறகு ரோமாபுரியின் வாணிகம் ஓங்கி உச்ச நிலையை எட்டிற்று. செல்வஞ் செழித்த ரோமாபுரிப் பிரபுக்கள் முதலீடு செய்து மிகவும் பெரிய மரக்கலங்களைக் கட்டு வித்தார்கள். வாணிகத்தின் வளர்ச்சிக்கேற்ப அக் கப்பல்களின் எண்ணிக்கையும் அளவும் பெருகிக்கொண்டே போயின. எகிப்தியரும் கப்பல் கட்டும் கலையில் சளைத்தவர்களல்லர். இந்திய சமுத்திரத்தைக் கடந்து செல்லுமளவுக்கு மிகப் பெரிய கப்பல்களை அவர்கள் ஓட்டினர். எகிப்தியர் செலுத்திய கப்பல்கள் சிலவற்றிற்கு ஏழு பாய்மரங்கள் விரிக்கப்பட்டிருந்தனவாம்.

தமிழகத்திலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்குப் பலவகையான பண்டங்கள் ஏற்றுமதியாயின. புலி, சிறுத்தை, யானை, குரங்கு, மயில், கிளி, வேட்டை நாய்கள் ஆகியவற்றைத் தமிழகம் ஏற்றுமதி செய்தது. தமிழகத்து வேட்டை நாய்கள், தரத்தில் மேலானவை என அயல்நாடுகளில் மிகவும் பாராட்டப்பெற்றன. புலிகள் ஒரு வேளை வட இந்தியாவிலிருந்தும் ஏற்றுமதியாகியிருக்கக்கூடும். ஆனால், யானைகள் தமிழகத்தில் மட்டுந்தான் உயிர்வாழ்ந்தன. ஆகையால், யானைகள் ஐரோப்பிய நாடுகளுக்குக்குத் தமிழகத்திலிருந்துதான் போயிருக்க வேண்டும். அயல் நாட்டினர் சில பாம்பினங்களையும் தமிழகத்தில் கொள்முதல் செய்தனர். மேலை நாட்டினர் தமிழகத்தில் வாணிகம் செய்த பண்டங்களில் மிகவும் விலையுயர்ந்தவை யானைத் தந்தங்களும் முத்துக்களுமேயாம். தமிழகம் ஏற்றுமதி செய்த சரக்குகளில் சாலச் சிறந்தவை இலவங்கம், மிளகு, இஞ்சி, ஏலம், அரிசி, நுண்வகைக் கலிங்கங்கள், தேக்கு, கருங்காலி, நூக்கு, சந்தனம் ஆகிய கட்டட மரவகைகள் முதலியன. மிளகும் இஞ்சியும்

மருந்துகள் செய்யப் பயன்பட்டன. ஹிப்பாகிரேட்டல் என்ற புகழ் பெற்ற கிரேக்க மருத்துவர் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இந்திய மருத்துவ முறைகளையும், மருந்து வகைகளையும் கையாண்டு வந்தார். அவர் மிளகை 'இந்திய மருந்து' என்றே குறிப்பிடுகின்றார். நல்லெண்ணெயின் பயனைக் கிரேக்கர்கள் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலேயே நன்கு அறிந்திருந்தனர். நல்லெண்ணெய் பண்டைய தமிழரின் உணவுப் பண்டங்களுள் ஒன்றாகும். ரோமரும் நல்லெண்ணெயை இறக்குமதி செய்தார்களா என்பது தெரியவில்லை. தமிழகத்துக் கருங்காலி மரங்கள் ரோமாபுரியில் பெருமளவில் விற்பனையாயின. பாரசீக வளைகுடாத் துறைமுகங்களில் தமிழகத்துத் தேக்க மரங்களைக் கொண்டு கப்பல்கள் கட்டினார்கள். தேக்க மரங்கள் சேர நாட்டுக் காடுகளிலிருந்தும் கன்னட நாட்டிலிருந்தும் வெட்டி ஏற்றுமதி செய்யப்பட்டவை என்பதில் ஐயமில்லை.

தமிழகம் மேலைநாடுகளுடன் கொண்டிருந்த வாணிகத் தொடர்பைப்பற்றிச் சங்க இலக்கியங்களில் பல சான்றுகள் காணப்படுகின்றன. தமிழர்கள் அந் நாடுகளிலிருந்து தேயிலையும் பொன்னையும் இறக்குமதி செய்தனர். பல யவனர்கள் தமிழக மன்னர் அரண்மனைகளில் கைவினைக் கம்மியராகவும். காவற்காரராகவும் பணிபுரிந்தனர். 'யவனர் நன்கலந் தந்த தண் கமழ் தேறல் பொன் செய் புனைகலத் தேந்தி நாளும் ஒண்டொடி மகளிர் மடுப்ப என்று புறநானூற்றுச் செய்யுள் ஒன்று கூறுகின்றது 'சுள்ளிஅம் பேரியாற்று வெண்நுரை கலங்க யவனர் தந்த வினை மாண் நன்கலம் பொன்னொடு வந்து கறியொடு பெயரும் வளம் கெழு முசிறி ஆர்ப்பு எழ...' ஒடிந்த மரச் சுள்ளிகளை ஏந்தி வரும் பேரியாற்றில் குமிழ்ந்தெழும் வெள்ளை வெளேரென்று மின்னிய நுரைகள் கலங்கும்படி யவனர் செய்து முற்றிய அழகிய வேலைப்பாடமைந்த உறுதியான மரக்கலங்கள் பொன்னைக்கொண்டு வந்து கொட்டிவிட்டு மிளகு மூட்டைகளை ஏந்திச்செல்லும் பேரொலி எழும் வளம் மிகுந்த முசிறிப்பட்டினம்.. என்று அகநாநூறு குறிப்பிடுகின்றது.

மேலைநாடுகளுடன் மட்டுமின்றிக் கீழைநாடுகளான சீனம், மலேசியா, ஜாவா (சாவகம்), வடபோர்னியா ஆகிய நாடுகளுடனும் தமிழகமானது மிகவும் வளமானதொரு கடல் வாணிகம் நடத்தி வந்தது குறிப்பிடத்தக்கதாகும். சீனத்துடன் தமிழகம் மேற்கொண்டிருந்த வாணிகத் தொடர்பானது மிகவும் பழைமையானதாகும்.

இத்தொடர்பு கி.மு.ஆயிரம் ஆண்டளவிலேயே தொடங்கிவிட்டதெனத் தெரிகின்றது. தமிழகத்துப் பண்டங்கள் கி. மு. ஏழாம் நூற்றாண்டிலேயே சீனத்தில் இறக்குமதியாயின என்று அந்நாட்டு வரலாறுகள் அறிவிக்கின்றன. சீனத்துப் பட்டாடைகளையும், சருக்கரையையும் தமிழகம் ஏற்றுக் கொண்டது. இதனால் இன்றளவும் பட்டுக்குச் சீனம் என்றும், சருக்கரைக்குச் சீனி என்றும் பெயர் வழங்கி வருகின்றது. சீனம் என்னும் சொல்லுடன் இணைந்து வரும் தமிழ்ச் சொற்கள் இன்னும் பல உண்டு.

பிலிப்பீன் தீவுகளில் அண்மையில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சிகளில் இரும்புக்காலப் புதைபொருள்கள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் கத்திகள், கோடாரிகள், ஈட்டிகள் போன்ற கருவிகள் அனைத்தையும் கி.மு. முதலாம் ஆயிரம் ஆண்டில் தமிழ் மக்கள் பயன்படுத்தி வந்த கருவிகளைப் பெரிதும் ஒத்துள்ளன. கிழக்காசிய நாடுகளுக்கும் ரோமாபுரிக்குமிடையே நடைபெற்று வந்த கடல் வாணிகத்தில் தமிழகமும் பெரும்பங்கு ஏற்று வந்தது. சீனம், மலேசியா, சாவகம் முதலிய நாடுகளிலிருந்து தமிழகம் பண்டங்களைக் கொள்முதல் செய்து அவற்றை மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துவந்தது. மேலை நாடுகளுடன் தமிழகம் கொண்டிருந்த கடல் வாணிகம் குன்றிய பிறகு கீழை நாடுகளுடனான அதன் வாணிகம் மேலும் மேலும் வளர்ந்து வரலாயிற்று. தமிழகத்து மக்கள் இந் நாடுகளில் பல குடியேற்றங்களை அமைத்துக்கொண்டனர்; இந் நாடுகளுடன் அரசியல் தொடர்புகளைப் பெருக்கிக்கொண்டனர்; இங்கெல்லாம் தம் நாகரிகத்தையும் பண்பாடுகளையும் பரப்பினர்.

தமிழகம் அயல்நாடுகளுடன் மேற்கொண்டிருந்த வாணிக உறவானது தமிழரின் நாகரிகம், பண்பு, கலை ஆகியவற்றின் வளர்ச்சிக்குக் கைகொடுத்து உதவிற்று. குறிப்பாக வட இந்திய வாணிகத் தொடர்பினால் தமிழகத்துக்கு ஏற்பட்ட நல் விளைவுகள் பல; தீமைகளும் பல. வட இந்தியாவிலிருந்து வாணிகச் சரக்குகளுடன் ஆரிய மக்களும் சிறுசிறு கூட்டமாகத் தமிழகத்தில் நுழையலானார்கள். வடநாட்டுடன் வாணிகத் தொடர்பை மேற்கொண்ட தமிழகத்துக்கு மற்றொரு சீர்கேடு விளையலாயிற்று. அவர்கள் தமிழரோடு தமிழராய்க் கலந்து தமிழரின் வாழ்க்கையையே தாமும் வாழ்ந்து தமிழரின் வாழ்க்கை மரபுகளில் பல மாற்றத்தை

உண்டாக்கினார்கள். அவர்கள் புனைந்த புராணக் கதைகள் எல்லாம் அவ் வெற்றிக்குத் துணைபுரிந்தன. எடுத்துக்காட்டாக, விசுவா மித்திர முனிவருக்கு மக்கள் ஐம்பதின்மர் என்றும், அவர்களின் வழிவந்தவர்களை ஆந்திரர், புண்டரர், சபரர், புலிந்தர், முதிபர் ஆகியவர்கள் என்றும், அவர்கள் அனைவருமே 'தாசர்கள்' என்றும் ஐந்திரேய பிராமணம் என்னும் சமஸ்கிருத நூல் கூறுகின்றது.

மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் கி. மு. மூன்றாம். இரண்டாம் நூற்றாண்டுக் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. அக் காலத்திலேயே சமண சமயம் தமிழகத்தில் பரவிவிட்டதற்கு இவை சான்று பகர்கின்றன. வடநாட்டில் சந்திரகுப்தர் காலத்தில் மிகக் கொடியதொரு பஞ்சம் ஏற்பட்டதாகவும் அதனால் பத்திரபாகு என்ற சமண முனிவர் ஒருவர், சமணர் பலர் தம்மைப் பின்தொடர, தெற்கு நோக்கி வந்து மைசூரில் குடியேறினார் என்றும் செவிவழிச் சமண வரலாறுகள் கூறுகின்றன. கி. பி. 3ஆம் நூற்றாண்டில் கங்கர்களின் ஆட்சி தோன்றும் முன்பே சமண சமயம் வேரூன்றிவிட்டது. இஃதன்றிச் சேர நாட்டிலும், கடற் கரையோரம் சமணர், பௌத்தர் ஆகிய இரு சமயத் துறவிகளும் தம் சமயப் பணிகளைத் தொடங்கிவிட்டனர். இவர்கள் தங்கியிருந்த குகைகள் பல திருவிதாங்கூர்ப் பகுதியில் காணப்படுகின்றன. வடக்கே கி.மு. 4 ஆம் நூற்றாண்டில் மகதப் பேரரசராக விளங்கிய நந்தர்கள் தமிழகத்தின்மேல் படையெடுத்தாகச் சில வரலாறுகள் கூறுகின்றன. நந்தரையடுத்து மௌரியக்குடி மன்னர்கள் மகதப் பேரரசைக் கைப்பற்றி ஆட்சிபுரியத் தொடங்கினர். அக்காலத்தில் கோசர்கள் தமிழ் மன்னர்மேல் பகைமை பூண்டிருந்தனர். அவர்களுக்கு உடந்தையாக மோரியர் தமிழகத்தின்மேல் படையெடுத்து வந்தனர். ஆனால், மோகூர் மன்னன் பழையன் என்பவன் அவர்களை வெற்றியுடன் எதிர்த்து நின்று புறமுதுகிட்டோடச் செய்தான். அகநானூற்றுள் மாமூலனார் என்ற பழந்தமிழ்ப் புலவர் இச் செய்தியைத் தெரிவிக்கின்றார். இவ் வகப்பாட்டுச் சான்றுகளினின்றும், அசோகரின் கல்வெட்டுச் செய்திகளி னின்றும் மோரிய அரசு இக் காலத்திய சென்னைப்பட்டினம் வரையில் பரவியிருந்தது என அறியலாம்.

அசோகர் வடக்கே ஆண்ட காலத்திலேயே பௌத்தமும் ஆரியப் பண்பாடுகளும் தமிழகத்தில் ஆங்காங்கு புகுந்து பரவத் தொடங்கினவாகையால் ஆரிய தமிழ் மொழிகளுக்குள் ஏற்பட்ட கலப்பினால் பிராகிருதம் என்ற புதுமொழி ஒன்று

உருவாயிற்று. இப்போது திராவிட மொழிகள் வழங்கும் இடங்கள் யாவற்றிலும் பிராகிருத மொழி பரவி வந்தது. பண்டைய தமிழகத்தில் சங்க காலம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது தமிழகத்தின் வடக்கிலும், வடமேற்கிலும் சதவாகனர் செழிப்புடன் விளங்கினர். இவர்கள் அரசியல் அமைப்பிலும் நிருவாகத்திலும் சிறந்து விளங்கியவர்கள். இவர்களுடன் வாணிகம் செய்யவந்த சாகர்களும் கிரேக்கர்களும் இவர்களுடனே தங்கித் தாமும் இவர்களுடைய பழக்கவழக்கங்களை மேற்கொண்டனர். இவ்வாறாகத் தமிழர்களின் அயல் நாட்டுத் தொடர்பு மிகப் பரந்து பட்டதாக இருந்தது.

## தொகுப்புரை

- தென்னிந்தியாவில் தமிழகத்திற்கு வடக்கில் கடலுக்குள் மூழ்கிய லெமூரியா கண்டத்தில்தான் முதன்முதலில் மாந்தர் இனம் தோன்றியதாவும், அவர்கள் பழந்தமிழர்கள் என்பது ஆய்வாளர்களின் தரவுகளின் மூலம் தெரிய வருகிறது.
- புதிய கற்காலத்தின் புலங்கு பொருட்கள் இந்தியாவின் பல பகுதிகளில் கிடைத்துள்ளது. குறிப்பாக, செங்கற்பட்டு மாவட்டத்தில் பழங்கற்கால மனிதர்களின் புலங்கு பொருட்கள் கிடைத்துள்ளன.
- சிந்துவெளி அகழ்வாராய்ச்சி தமிழர்களின் நகர நாகரிகத்தை நமக்கு வெளிக்காட்டும் விதமாக அமைந்துள்ளது.
- ஆதிச்சநல்லூர் தொல்லியல் களத்தில் தமிழர் பயன்படுத்திய முதுமக்கள் தாழி அதிகளவில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.
- மொகஞ்சதாதோவில் கண்டெடுக்கப்பட்ட பொருட்களில் உள்ள எழுத்துக்களுக்கும் தமிழ் – பிராமி எழுத்துக்களுக்குமிடையே நெருங்கிய தொடர்பு உள்ளது.
- தமிழரின் வராலாற்றுத் தொன்மையை அகழாய்வுப் பொருட்களாலும், அயல்நாட்டுத் தொடர்புகளாலும் நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது.

## மாதிரி வினாக்கள்

### ஒரு மதிப்பெண் வினாக்கள்

1. தமிழகத்தில் பழங்கற்கால கருவிகள் கிடைக்கப்பெற்றுள்ள இடங்கள்?

**அ) வேலூர், செங்கற்பட்டு** ஆ) சேலம், ஈரோடு

இ) தஞ்சை, திருச்சி ஈ) பெரம்பலூர், நீலகிரி

2. அகேட் (Agate) என்பது _________ கருவி.

அ) பழைய கற்காலம் ஆ) புதிய கற்காலம்

**இ) இடைக்காலம்** ஈ) இரும்பு காலம்

3. படிக்கட்டுக் கல் என்னும் கற்களினால் கருவிகளைச் செய்த காலம்?

அ) பழைய கற்காலம் **ஆ) புதிய கற்காலம்**

இ) இடைக்காலம் ஈ) இரும்பு காலம்

4. வரலாற்றுக்கு முற்பட்ட தமிழ் மக்கள் குழிகளில் பிணங்களைப் புதைக்கும் நிலையை எவ்வாறு அழைப்பர்?

அ) கற்றளிகள் **ஆ) பெருங்கற் புதைவுகள்**

இ) முதுமக்கள் தாழி ஈ) புதைகுழி

5. முதன்முதல் சிந்துவெளி நாகரிகத்தைப்பற்றி விரிவான ஆராய்ச்சிகள் செய்தவர்?

அ) ஹீராஸ் பாதிரியார் ஆ) பர்ரோ

**இ) சர் ஜான் மார்ஷல்** ஈ) லஹோவரி

### ஐந்து மதிப்பெண் வினாக்கள்

1. பழைய கற்காலம் குறித்து எழுதுக.

2. சிந்துசமவெளி அகழ்வாராய்ச்சி குறித்து எழுதுக.

3. திரு. ஐ. மகாதேவன் அவர்கள் கூறும் மொகஞ்சதாரோ பற்றி கூறுக.

### பத்து மதிப்பெண் வினாக்கள்

1. சிந்துவெளி அகழ்வாராய்ச்சி குறித்துக் கட்டுரை வரைக.

2. தமிழர்களின் கற்காலம் எவ்வாறு இருந்தது என்பதை விளக்கி உரைக்க.

3. தமிழரின் வரலாற்றுத் தொன்மை குறித்துக் கட்டுரை வரைக.

4. பண்டைய தமிழரின் அயல்நாட்டுத் தொடர்புகள் பற்றிய கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

## மாதிரி வினாக்களுக்கான விடைகள்

### ஒரு மதிப்பெண் வினாக்கள்

1. அ) வேலூர், செங்கற்பட்டு
2. இ) இடைக்காலம்
3. ஆ) புதிய கற்காலம்
4. ஆ) பெருங்கற் புதைவுகள்
5. இ) சர் ஜான் மார்ஷல்

……………………

# அலகு – 2

## சங்க காலத் தமிழர்கள் (கி.பி 1 முதல் 6 ஆம் நூற்றாண்டு வரை)

## பாண் மரபு- வேளிர் வரலாறு – அக புற பண்பாடு – களப்பிரர்கள் காலம்

### முன்னுரை

தமிழிலக்கியத்தின் தொன்மையானது பாணர் மரபிலிருந்தே தொடங்குகின்றது. இதிலிருந்து தொழிற்பட்டு, நீண்ட படிமலர்ச்சிக்குப் பின்னரே புலவர் மரபு ஏற்பட்டது. பாணர்கள் என்றாலே சங்க காலத்தில் வாழ்ந்த பாணர்களே நம் நினைவுக்கு வருவார்கள். சங்க இலக்கியத்தில் பேசப்படும் பாணர்களுடைய முன் தொடர்ச்சி யார்? பின் தொடர்ச்சி யார்? என்பவை பற்றி விரிவான புரிதல் தேவை. எந்த ஒரு மரபுக்கும் முன்னும் பின்னும் தொடர்ச்சியுண்டு. மனிதகுலப் படிமலர்ச்சியில் (evolution) எந்த ஒரு சமூக முறையும் தீடீரென தோன்றிவிடுவதில்லை. சீரான வளர்ச்சியும் மாற்றமும் அடைந்த பின்னரே ஒவ்வொரு புதிய சமூக முறையும் படிமலர்ச்சியடைகின்றது. இந்நிலையில் பாணர் மரபிற்கான முன், பின் தொடர்ச்சிகள் பற்றி அறிவதற்கு இலக்கியம், வரலாறு, கல்வெட்டியல், இனவரைவியல் (ethnography) சான்றுகளே பெரிதும் உதவ முடியும். இக்கட்டுரையில் இனவரைவியல் தரவுகளை முன்வைத்து இதனை ஆராயலாம்.

### 2. 1 பாண் மரபு

சங்க இலக்கியத்திற்கு உயிர்நாடியாக விளங்கிய பாணர் மரபு எங்கிருந்து தொடங்கியது? அது எவ்வாறு வளர்ந்தது? அது சங்க காலத்தோடு நின்றுவிட்டதா? சங்க மரபின் படிமலர்ச்சி அடுத்தடுத்த கட்டங்களில் எவ்வாறு தொடர்ந்தது? அதில் பாணர் மரபின் நிலை என்ன? பாணர் மரபு இன்றுள்ளதா? இருக்கின்றதென்றால் அது எவ்வாறு உள்ளது? இவை பற்றியெல்லாம் அறிவதற்குப் பழங்குடிகள் (tribes) பற்றிய நுட்பமான, காலப்பார்வை சார்ந்த ஆய்வு தேவைப்படுகிறது. கூடவே, சமகாலப் பழங்குடிகள், நாடோடிகள் (nomads) பற்றிய இனவரைவியல் பார்வையும் தேவைப்படுகிறது.

**பாணர் மரபின் தோற்றம்**

தமிழ்ச் சமூகத்தின் நீண்ட படிமலர்ச்சியை மிகவும் நுட்பமாக நோக்கினால் பாணர் மரபின் முன் தொடர்ச்சியானது பழங்குடிகளின் மூதறிவாளனிடமிருந்தே (shaman) தொடங்குகிறது. மந்திர ஆற்றல், முன்னறியும் திறன், குறிசொல்லுதல், நிமித்திகம், தீர்க்க தரிசனம், தெய்வமேறி நிற்கும் தன்மை (பூமரமாதல்), சடங்குகள் நிகழ்த்துதல், மருத்துவம் செய்தல் என்பன போன்ற பண்புகளைக் கொண்ட இத்தகைய முதுவாய் மனிதர்கள் பழங்குடி மாந்திரிகத்தின் தொடர்ச்சியைக் காட்டுபவர்கள் ஆவர். சங்க இலக்கியங்களில் காணப்படுகின்ற முதுவாய் வேலன், முதுவாய்ப் பெண்டிர், முதுவாய்ப் பல்லி போன்ற சொல்லாட்சிகள் இதனை மெய்ப்பிக்க உதவும் கருத்தினங்களாகும். இதன் தொடர்ச்சியாகவே சங்க காலத்தில் பாடகர் மரபினரை “முதுவாய்ப் பாணன்” (புறம்.319), “முதுவாய் இரவல்” (புறம்.48) என்று கூறும் வழக்குகள் புறநானூற்றில் பயின்று வருகின்றன. ஆதலின் தொல் பழங்குடிச் சமூகத்தில் மூதறிவாளன் எனக்கூடிய மரபிலிருந்து “முதுவாய்ப் பாணன்” எனும் படிமலர்ச்சியை இங்கு மீட்டுருவாக்க முடிகிறது.

## பிற்காலப் பாணர்கள்

இனி, பாணர் மரபின் தொடர்சியை அறிய முற்படுவோம். தமிழ்ச் சமூகத்தின் படிமலர்ச்சியைப் பார்க்கும்போது சங்ககாலத்தில் ஏற்பட்ட சமூகப் படிமலர்ச்சியின் அனைத்துப் படிநிலைகளையும் இன்றும் காணமுடிகிறது. அன்றிருந்த அத்தனை வகையான குடியினரும் 2500 வருடங்களுக்குப் பின்னர் இன்றும் காணப்படுகின்றனர். குறிஞ்சித் திணைக்குரிய வேட்டுவர்கள், முல்லை நிலத்து ஆயர்கள், நெய்தலுக்குரிய கடலோரச் சமூகங்கள், மருத நிலத்து வேளாண் குடிகள் ஆகிய அனைத்து வகையான குடியினரை இன்றும் காணமுடிகிறது. எண்ணற்ற மாற்றங்கள் ஏற்பட்டிருப்பினும், அமைப்பு முறையான சூழியல் தொடர்ச்சியை (ecological continuity) இனங்காண முடிகிறது. இதற்கு இணையான சமூகவியல் தொடர்ச்சியும் இருக்க முடியுமல்லவா? அவ்வாறாயின் சங்க இலக்கியத்தின் வழி அறியப்படும் பாணர்களுக்கு இணையான குடியினர் இன்றும் உள்ளனரா? எவ்வாறு உள்ளனர்? இதற்கான புரிதலை பூர்வ திராவிடர்கள் பற்றிய இனவரைவியல் வழி ஆராய வேண்டும்.

## கோண்டுகளின் பர்தான்கள்

சங்ககாலப் பாணர்களுக்கு இணையானவர்களாக, மிகவும் நெருக்கமானவர்களாக இருப்பவர்கள் கோண்டுகளின் இசைவாணர்களாகிய பர்தான்களே. கோண்டுகள் பூர்வ திராவிடர்கள். இந்தியாவின் மிக முக்கியமான பழங்குடியினர் இவர்களே. இன்று இந்தியாவிலுள்ள 461 பழங்குடிகளில் மிக அதிகமான மக்கள் தொகை கொண்டவர்கள் இவர்களே. இன்று இவர்கள் நடு இந்தியாவில் ஆறு மாநிலங்களில் பரவி வாழ்கிறார்கள். நடு இந்தியாவில் வாழும் 5 மில்லியன்களுக்கும் மேற்பட்ட கோண்டுகளுக்குச் சில ஆயிரம் பர்தான்கள் இசைக் கலைஞர்களாக ஊழியம் செய்கின்றனர் (நைட் 2000 – 2001).

பர்தான்கள் வாசிக்கும் பாரம்பரியமான இசைக்கருவி 'பாண' (bana) எனப்படுகிறது. இது சங்ககாலப் பாணர்கள் இசைத்த சீறியாழுக்கு நெருக்கமானது எனக் கருதலாம். பாண ஓரளவு வீணையைப் போன்றே காணப்படுகிறது; மூன்று நரம்புகளைக் கொண்டிருக்கிறது (நைட் 2000 - 2001: 101). இதன் நீளம் 71 செ.மீ. உடல் பகுதி கோல் எனப்படும். 15 x 21 செ.மீ. அளவுள்ள அடிக்கட்டை செவ்வகப் பலகையால் ஆனது. பாணவின் முகத்தை மண்ணைப் பார்த்துக் கவிழ்த்து வைத்தால் ஓரளவு ஆமை போன்று தோன்றும். இந்தப் பலகையிலிருந்து முன்பக்கமாக நீளும் மூங்கில் குழலின் நீளம் 34 செ.மீ. அடிப்பகுதியை இடது தோள்பட்டையின் மேல் வைத்துக்கொண்டு கீழ்ப்பகுதியை இடது கையால் சாய்வாகப் பிடித்துக்கொண்டு வலது கையால் இழுத்து வாசிப்பார்கள். மத்தியப் பிரதேசத்தில் எங்கும் காணக்கூடிய இசைக்கருவிகள் சரிந்தா (sarinda), சாரங்கி (sarangi) இரண்டுமாகும். ஆனால் பாண மட்டும் பர்தான்கள் வாழும் சிற்றூர்களில் மட்டுமே காண முடியும். முகலாயர்கள் இப்பகுதியைக் 'கோண்டுவானா' என்றே அழைத்தார்கள். இதன் பொருள் 'கோண்டுகளின் தேசம்' என்பதாகும். கோண்டுவானாவுக்குரிய இசைக் கருவியாகவே இன்றும் பாண இருந்து வருகிறது. மற்ற இசைவாணர்களிடம் இக்கருவியைக் காண முடியாது.

கோண்டுவானாவில் வரலாறு நெடுக கோண்டுகளின் பாணர்களாகப் பர்தான்கள் உள்ளனர் (நைட் 2000 - 2001: 101, ரெங்கையா முருகன் 2007). பர்தான்கள் இன்றும் பாணர்கள் போல் சுற்றித் திரிந்து வாழ்ந்து

கொண்டிருக்கிறார்கள். கோண்டுகளின் பொற்காலத்தை இன்றும் நினைவு கூறுகிறார்கள். கோண்டவானி வீரயுகப் கதைகளையும், பாண்டவானிக் கதைகளையும், மகாபாரதக் கதைகளையும் ஊர் ஊராகச் சென்று தங்கள் ஆண்டைகளிடம் வாசித்துக் காட்டுகின்றனர் (ஹிவாலே 1946). இன்று ஏறக்குறைய 80 கோண்டு கிராமங்களுக்கு ஒரு பர்தான் செயல்படுகிறார்.

பர்தான்கள் தங்கள் எஜமானர்களான கோண்டுகளின் வீட்டில் நடக்கும் எல்லா வகையான சுபச் சடங்குகளிலும் கலந்து கொண்டு ஊழியம் பண்ணுவார்கள். சடங்கு சம்பிரதாயங்களில் பாணா இசைக்கருவியை மீட்டிக் கொண்டு கோண்டு மன்னர்களின் கதையைப் பாடுவார்கள்; அந்த ராச்சியங்களின் வீரதீர வரலாற்றை எடுத்துரைப்பார்கள்.

கோண்டு அரசர்கள் நர்மதை ஆறு நெடுக 52-க்கும் மேற்பட்ட கோட்டைகளை மலையுச்சியில் அமைத்து ஆண்டு வந்தார்கள். குப்தப் பேரரசுக்குப் பின்னர் ஏறக்குறைய 10- ஆம் நூற்றாண்டிலிருந்து 17- ஆம் நூற்றாண்டு வரை சிறப்பாக ஆண்டவர்கள் கோண்டு அரசர்கள். முகலாயர்களின் வருகைக்குப் பின்னர், குறிப்பாக அக்பர் ஆட்சிக் காலத்தில் கோண்டுகளின் ஆட்சி சின்னாபின்னமாகிச் சிதறிவிடுகிறது (ஹிவாலே 1946).

கோண்டுகளின் இனவழிச் சகோதரர்கள் பர்தான்கள். இவர்களைக் கோண்டுகள் பிரதான் என்றும் அழைப்பார்கள் (ஹெய்மண்டார்ஃப் 1951). இதன் பொருள் ‘முதல் மந்திரி’ என்பதாகும். இன்று பர்தான்கள் இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை கோண்டு ஆண்டைகளிடம் சென்று அவர்களின் குல வரலாற்றுப் பெருமைகளைப் பாடி தானம் பெற்றுத் திரும்புவார்கள். இதற்கிடையில் கோண்டுக் குடும்பங்களில் சுபநிகழ்ச்சிகள் நடந்தால் அவற்றில் கலந்து கொண்டு சடங்கு ஊழியமும் செய்வார்கள். அதற்குரிய தானமும் பெற்றுத் திரும்புவார்கள்.

சங்ககாலப் பாணர் மரபின் பின் தொடர்ச்சியை வடஇந்தியாவில் வாழும் கோண்டுப் பழங்குடிகள் பல நூற்றாண்டுகள் கடந்தும் தொடர்ந்து பேணி வருகின்றனர். இந்நிலையில் பாணர் மரபினை வடஇந்தியத் தொல்திராவிடர் மரபோடு இணைத்தறிய வேண்டிய ஒரு புதிய வாயில் திறக்கப்பட்டிருக்கிறது. கூடவே, வடஇந்தியாவில் உள்ள கோந்த் (Kondh) போன்ற இன்னும் சில முக்கியமான

தொல்திராவிடப் பழங்குடிகளிடமும் பாண்மரபு பின்பற்றப்பட்டு வருகின்றது (ஹிவாலே 1946, ஹெய்மண்டார்ஃப் 1951, முர்குத் 1991, மிஸ்ரா 2007).

பர்தான்கள் சத்தீஷ்கரில் 'பர்காணியா' என்றும், மகாராட்டிரத்தில் 'பட்டாரி' என்றும், ஆந்திராவில் 'பிரதான்' என்றும் அழைக்கப்படுகின்றனர். இன்னொரு திராவிடப் பழங்குடியான கோந்த் பழங்குடிகளின் பாணர்கள் 'பொகுவா''மாரல்' எனப்படுகின்றனர் (மிஸ்ரா 2007: 38, 55), வட இந்திய திராவிடப் பழங்குடிகளிடம் குறுநில மன்னராட்சி முறை இருந்த வரை பாணர் மரபு மிகச் சிறப்பாகப் பேணப்பட்டு வந்தது. சுருங்கிய வடிவில் அதன் தொடர்ச்சியை இன்றும் காணமுடிகிறது. தென்னிந்தியாவிலும் தமிழ்ச்சூழலிலும் பின்னாளில் இம்மரபு சாதியச் சமூகமுறையில், கிராமிய வாழ்வு முறையில் வேறுவகையில் உருமாற்றம் பெற்றது.

## கிராமிய நாகரிகத்தில் பாணர்களின் உருமாற்றங்கள்

தமிழகத்தில் குறிப்பிட்ட சில சாதியினர் ஒரு குறிப்பிட்ட பிரிவினரைத் 'தங்களின் பிள்ளைகள்', 'தங்கள் உடன்பிறந்தவர்கள்', 'தங்கள் ஆதரவில் வாழ்பவர்கள்' என்னும் உரிமை கொடுத்து ஆதரவு தருகின்றனர். இவ்விரு சமூகத்தாருக்குமான பரஸ்பர உறவின்முறை அவர்களின் சாதித் தொன்மத்தில் காணமுடிகிறது (பக்தவத்சல பாரதி 2003). தத்தம் ஆண்டைச் சாதியாரை அண்டி வாழும் இவர்கள் சங்ககாலப் பாணர்கள் போன்றே தமக்கான நிலைகுடிகளின் ஆதரவை நம்பி வாழ்கின்றனர். காப்பாளர்களாக, ஆண்டைகளாக ஏற்றுக் கொண்ட இவர்களிடம் ஆண்டுதோறும் குறிப்பிட்ட காலத்தில் சென்று பணம், பொருள், தானியங்கள், புளி, மிளகாய் உள்ளிட்ட விலைபொருட்கள், துணிமணிகள், ஆட்டுக்குட்டி, மாட்டுக்கன்று, பாத்திரம் ஆகியவற்றைப் பெறும் உரிமையைக் கொண்டுள்ளனர்.

இவ்வாறு ஆண்டை சாதிகளிடம் சென்று ஆதரவு பெறும் சமகாலப் பாணர்கள் தனித்தனியான பெயர்களைக் கொண்டிருப்பினும் பொதுவாக இவர்கள் "குடிப்பிள்ளைகள்", "சாதிப்பிள்ளைகள்" என்று அழைக்கப்படுகின்றனர். சங்ககாலத்தில் பாண் மரபுக்குரியவர்கள் பலரையும் நாடிச் செல்ல, சில பொருநர்கள் மட்டும் தத்தம் மன்னர்களை மட்டுமே பாடுவோம் என்று உறுதி பூண்டிருந்ததைப் புறநானூறு 382ம் பாடல் கூறுகிறது. குறிப்பிட்ட மன்னர்களின் அரண்மனைகளை மட்டும் சார்ந்து வாழும் 'மன் மகளிர்', 'சாயினத்தார்' போன்றோரும் இருந்துள்ளனர்

(பதிற். 52, 60). இத்தகைய முறையை ஒத்ததாகக் குடிப்பிள்ளைகளின் முறையும் காணப்படுகிறது.

தமிழ்ச் சமூகத்தின் படிமலர்ச்சியில் குறுநில மன்னராட்சி சிதையத் தொடங்கிய போது பாணர்களின் வாழ்வும் சிதையத் தொடங்கியது. பல்வேறு தொழில் செய்வோராக மாறினர். இதன் தொடர்ச்சியாகப் பிற்காலத்தில் அவர்கள் செய்யும் தொழிலால் மேலும் பல பிரிவினர்களாகப் படிமலர்ச்சி பெற்றனர். அண்டை மாநிலமான கேரளத்தில் பாணர்கள் பிற்காலத்தில் திருவரங்கப் பாணன், மீன்பிடிக்கும் பாணன், குடைகட்டிப் பாணன், புள்ளுவப் பாணன் எனப் பல்வேறு தொழில்களை ஏற்றுப் பிரிந்து விட்டதைக் காண முடிகிறது. எட்கர் தர்ஸ்டன் தென்னிந்தியச் சாதிகளும் பழங்குடிகளும் பற்றிய தொகுப்புப் பணியில் ஈடுபட்டிருந்த காலகட்டத்தில் (1890 - 1909) பாணர்கள் பாணர், மலையன் எனும் இரண்டு பெயர்களில் அறியப்பட்டதைக் கூறுகிறார். இவர்கள் மந்திரித்தல், ஆவிகளை விரட்டுதல் ஆகியவற்றில் பெரிதும் ஈடுபட்டிருந்தனர். திருவிதாங்கூரில் தையல்காரர்களாகவும், மலபாரில் குடைசெய்பவர்களாகவும் காணப்பட்டதையும் தர்ஸ்டன் பதிவு செய்துள்ளார். பாணர் பெண்கள் மருத்துவச்சிகளாகவும் இருந்துள்ளனர்.

இன்று பாணர்கள் இசைத் தொடர்பு ஏதுமின்றித் தமிழகத்தின் திருநெல்வேலி மாவட்டத்தின் பல பகுதிகளில் வாழ்வதைத் தொ. பரமசிவன் கூறுகிறார். 17ஆம் நூற்றாண்டில் தோல் தைப்பவர்களாகவும், பின்னர் ராணுவ உடைகள் தைப்பவர்களாகவும், அதற்குப் பின் தானியங்கிப் பட்டறைகளில் செயற்கைத் தோல் (ரெசின்) தைப்பவர்களாகவும், இந்நூற்றாண்டின் இடைப்பகுதியில் துணி தைப்பவர்களாகவும் இருந்து வந்துள்ளனர்.

மாமன்னன் இராசராசன் காலத்தில் இப்பாணர் மரபினர் அவன் அமைத்த தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் சூற்றி, சாக்கை, அறிஞ்சி என்பவராகப் பணியாற்றியுள்ளதை அவனது கல்வெட்டுகள் வழி அறிய முடிகிறது. இவ்வாறாகப் பாணர்கள் பிற்காலத்தில் பலவாறாக மாறிவிட்ட நிலையினை அறிய முடிகிறது.

சங்ககாலப் பாணர்களின் நேர் குடிவழித் தொடர்ச்சி அல்லது நேர் வாரிசுகள் இன்றும் தொடர்கிறார்களோ இல்லையோ, அவர்களுடைய ஆயர்வாழ்வு சாராத நாடோடியம் (non-pastoral nomadism) நீண்ட படிமலர்ச்சிக்குப் பின்னரும்

நிலைத்திருக்கிறது. இத்தகைய நாடோடியத்தில் பரஸ்பரம் சார்ந்து வாழும் “பரிசில் வாழ்வு முறை” தமிழ்ச் சமூகத்தின் படிமலர்ச்சியில் அறுபடாமல் இன்றும் வாழ்வாதாரத்திற்குரிய ஒரு சமூக முறையாக இருப்பதைக் காணமுடிகிறது. எனினும் பண்டைய பாணர் மரபு இந்தியாவின் வடபகுதியில் வாழும் திராவிடப் பழங்குடிகளிடம் (கோண்டுகள், கோந்த்கள்) அறுபடாமலும், தென்னிந்தியாவில் கிராமச் சமூகத்தில் உருமாறியும் நிற்கிற ஒரு சமூக முறையாகப் படிமலர்ச்சி பெற்றுள்ளது.

பண்டைய பாண்மரபுக்குரிய பலவகையான கலைத்தொழில்களை இன்று பல்வேறு நாடோடிக் குடியினர் தத்தம் வாழ்வாதாரமாக ஏற்றுக்கொண்டுள்ளனர். தமிழகத்தில் பூம்பூம்மாட்டுக்காரர், மண்டிகர், பதானியர், நாழிமணிக்காரர், ஜங்கம பண்டாரம், குடுகுடுப்பை நாயக்கர், குறவர், வாக்ரி (நரிக்குறவர்), வேட்டைக்காரன், சாட்டையடிக்காரர், சாதிப்பிள்ளை, பண்டாரம், ஜோகி, குளுவர், பக்கீர், கும்பார், பாம்பாட்டிக்காரன் போன்ற நாடோடி / அரை நாடோடிச் சமூகத்தினர் சங்ககாலப் பாண்மரபின் மாறுபட்ட தொடர்ச்சி எனக் கருதத்தக்க அளவில் உருமாறிய சமூக முறைகளோடும், தகவமைப்புகளோடும் வாழ்ந்து வருகின்றனர்.

இன்றைய நாடோடிகளின் வாழ்வியல் தகவமைப்புகளில் பழைய பாணர் நாடோடிகளின் படிமலர்ச்சிக் கூறுகளை இனங்காண முடிகிறது. அன்று குறுநில மன்னர்களை அண்டி வாழ்ந்த பாணர்களின் நிலை ஒருபுறமிருக்க, பின்னாளில் குடிப்பிள்ளைகள் கிராமிய அமைப்பில் சாதிகளை அண்டி வாழத்தலைப்பட்டனர். இத்தகைய படிமலர்ச்சி நிலைகள் கருத்தூன்றி ஆராய்வதற்குரியதாகும்.

## 2.2 வேளிர் வரலாறு

வேளிர் வரலாற்றைப் பற்றித் தமிழ்நாட்டில் வழங்கிவந்த பழைய செய்திகள் சிலவற்றை, ஆசிரியர் நச்சினார்க்கினியர் தொல்காப்பியப் பாயிரவுரையில், "தேவரெல் லாங்கூடி 'யாம் சேரவிருத்தலின் மேருத்தாழ்ந்து தென்றிசை உயர்ந்தது; இதற்கு அகத்தியனாரே ஆண்டிருத்தற்குரியர்' என்று குறிப்பிடுகின்றார். நச்சினார்க்கினியர் எழுத்தின்படி, வேளிரென்பவர் கண்ணன் வழியினராயின், அவரை நாம் யாதவர் என்றே அழைக்கலாம்: என்னெனின் - அப்பெருமான் அவதரித்தது யதுவமிசத்திலென்பது அனைவரும் அறிந்த ஒன்று. இனி, இவ்வேளிர்

துவாரகையினின்று தென்னாடு புகுந்த பழைய யாதவராயின், அன்னோர் வரலாறு பண்டைத் தமிழ் நூல்களில் குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஆனால், இவர்கள் கண்ணன் காலத்தை அடுத்துத் தெற்கே வந்தேறியவராக என்று கூறுகிறார். வேளிர் துவாரசையினின்று வந்தேறியவர் என்பதற்கு இலக்கியமுள்ளதாயிலும், அவர் யாதவ குலத்தவரென்பதை விளக்கம் குறிப்புகள் நூல்களில் கிடைக்கவில்லை.

வேளிர்கள் தொடக்கத்தில் சிற்றரசுகளாக இருந்த காலங்களில் இவர்க்கும் சேர சோழ பாண்டியர்க்கும் அடுத்தடுத்துப் போர் நிகழ்ந்து வந்ததாக அறியப்படுகின்றது. அப்போது இருந்த வேளிர் நாடுகள்: கொண்கானம், ஒளிகாடு, முத்தூற் அக்கூற்றம், பொதிகைநாடு, மிழலைக்கூற்றம், குண்டூர்க் கூற்றம், வீரை, துளுநாடு முதலியன. பிற்காலத்தில் அவ்வேளிர்பால் பெண் எடுத்து சம்பந்தம்பெற்ற பேரரசர்கள் அவரது சிற்றரசுகளை ஆதரித்து வந்ததோடு, அவரினத்து வேளாளர் பலரைத் தம் அரசுக்கு உரியவராக்கி நாடுகள்பல அளித்தும், வரிசைகள் கொடுத்தும் அமைச்சராகவும் தண்டத்தலைவராகவும் நியமித்துப் போற்றிவந்தனர். இப்படி அமைச்சுப் பூண்டவர்கள், பாண்டியரிடம் 'காவிதி' என்ற பட்டத்துடனும், சோழரிடம் 'ஏனாதி' என்ற பட்டத்துடனும் விளங்கினர்.

பண்டைக் காலத்தே தமிழ்நாட்டில் விளங்கிய சிற்றசருள் பெரும்பாலோர் இவ்வேளிர் குலத்தவரேயாவார். பண்டை வேளிர் தமிழ்நாட்டில் குடியேறியமை கி.மு 10ஆம் நூற்றாண்டு காலகட்டமாகும். தமிழ்ப் பெருங்கவிகள் இவர்களைப் பாடிப் பயன் பெற்றனர். ஆதி வேளிர் குலத்தவராகச் சங்க நாளில் விளங்கிய பெருவள்ளல்கள் ஆய், வேள் – ஆவி, வேள் – பேகன், வேள் - எவ்வி, வேள்- பாரி, நன்னன் – வேண்மான்.

## வேள் ஆய்

இவனுக்கு ஆய் அண்டிரன் எனவும் பெயர். இவன் வேளாண் மரபினன். இவனது ஊர் பொதிகைக்கருகிலுள்ள ஆய்க்குடி. கடையெழு வள்ளல்களுள் ஒருவன், சுரபுன்னை மாலையையுடையவன். இவ்வள்ளல் “வேளிர்” கூட்டத்தைச் சேர்ந்தவனென்பது “மாவேள்ஆய்” “தேர்வேள்ஆய்” எனப் புறநானூற்றில் வருந்தொடர்களால் அறிய முடிகிறது. அவன் தலைநகர் “ஆய்குடி” யென்னும் பெயர் பெற்றதென்பதும் தெளிவாம். இவன் மலை வேற்றரசரால் தாக்கமுடியாத

அரண்வலியுடையதென்பர். ஆய் நாட்டில் யானைகள் மிகுந்த காடுகளுண்டென்றும், பரிசிலர்க்கு யானைக்கொடை மிகுதியாக அளித்தவன் ஆய் என்றும் சொல்லப்படுகின்றன. இவ்வள்ளலுக்கு “அண்டிரன்” என்னும் மறு பெயருமுண்டென்பது. இவனைப் பற்றிய பாடல்கள் பலவற்றில் காணலாம். புறநானூற்றுரையாளரும் “அண்டிரன்” என்பது ஆய் என்னும் மன்னனுக்கு மற்றொரு பெயர் என்று கூறுகிறார்.

இவன், ஒருகால் நீலநாகமொன்றால் தான் பெற்ற பெருமை வாய்ந்ததோர் ஆடையை, சிவபிரானே அணியத்தக்கவர் என்று கருதி அப்பிரானுக்கு உவந்து சாத்தினனென்று சிறு பாணாற்றுப்படையில் வியக்கப்படுகின்றான். இதனை, “நீலநாக நல்கிய கலிங்கம், ஆலமர் செல்வற் கமர்ந்தனன் கொடுத்த, சாவந்தாங்கிய சாந்துபுலர் திணிதோள், ஆர்வ நன்மொழி ஆய்” என்பதனால் அறிக.

ஒருகால் இப்புலவர் காட்டுவழியே சென்றபோது ஆண்டு வாழும் யானைக்கூட்டங்கள் தம் கண்ணுக்குப் புலப்பட, அப்போது, “மழைக்கணஞ்சேக்கு மாமலைக் கிழவன், வழைப்பூங்கண்ணி வாய்வா எண்டிரன், குன்றம் பாடின கொல்லோ, களிறுமிக வுடையவிக் கவின்பெறு காடே” என்னும் இனிய பாடலைப் பாடினர். ஆயின் யானைக்கொடை, காட்டிடை யானைகளைக் கண்டதும் தம் நெஞ்சில் தோன்ற அப்போது தானே சுரந்த பாடல் இது.

## வேள் – ஆவி

வேள் ஆவியின் வரலாறுகள் விசேடமாக நூல்களினின்று அறியப்படவில்லை. பதிற்றுப்பத்து 4-6-8-ம் பத்துக்களின் பதிகங்களால், வேளாவிக்கோமான் என்பவனுக்குப் பதுமன் என்ற பெயர் வழங்கியதென்பதும், இப் பதுமனுடைய மகளிர் இருவர்- நெடுஞ்சேரலாதன், செல்வக்கடுங்கோ வாழியாதன் என்ற சேரவரசர்களுக்கு முறையே வாழ்க்கைப்பட்டவரென்பதும், இம் மகளிர் வயிற்றில், நெடுஞ்சேரலாதனுக்குக் களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலும் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனும்; செல்வக்கடுங்கோவுக்குத் தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும்பொறையும் முறையே பிறந்த மக்களென்பதும் விளங்குகின்றன. இதனால், பதுமன் எனப் பெயர் பெற்ற வேளாவிக்கோ, சேர அரசர் பலர்க்குப் பாட்டனானவனென்பது அறியப்படும். இச் சேரர்களில், தகடூர் எறிந்த பெருஞ் சேரலிரும்பொறையைப் பதிற்றுப்பத்தின்

எட்டாம் பத்தாற் பாடிய அரிசில்கிழார் என்றபுலவர், ஆவிவமிசத்தவனும் வள்ளலுமாகிய பேகனென்பவனாற் துறக்கப்பட்ட அவன் மனைவி கண்ணகியை அவனோடு சேர்த்தல்வேண்டி, அவ் வள்ளலைப் பாடின செய்தி 146-ம் புறப்பாட்டால் தெரிகிறது.

## வேள் – பேகன்

இவன், மேலே தனியாகக் குறித்த ஆவியின் குடியில் உதித்த பெருந்தகையாவன்; இவனை வையாவிக்கோப் பெரும்பேகன் எனவும் வழங்குவர். கடைச்சங்கநாளில் விளங்கிய கடையெழுவள்ளல்களில் இவனும் ஒருவன் என்பது "முரசுகுடிப்பிகுப்பவும்" என்னும் புறப்பாட்டாலும் (158) சிறுபாணாற்றுப் படையில் 84 - முதல் 122-வரையுள்ள அடிகளாலும் விளங்கும். இவனது வரையா வள்ளன்மையைப் பரணர் என்னும் பழைய புலவர் புகழுமிடத்து, “குளத்திலும் வயலிலும் களர்நிலத்தும் ஒப்பப்பெய்யும் வரையறையில்லாத மாரிபோலப், பேகனும் கொடையிடத்துத் தான் அறியாமைப் படுவதல்லது, பிறர் படைவந்து பொரும்போது அப்படையிடத்துத் தான் அறியாமைப்படான்" என்று அவனது கொடைமடத்தைச் சிறப்பிப்பர். பேகன் குளிரால் நடுங்கிய மயிலுக்குத் தன் மீது போர்த்தியிருந்த ஆடையைக் கொடுத்தவன். அத்தைகைய வள்ளல் தன்மை உடையவன். பேகனுக்கும் அவன் மனைவி கண்ணகிக்கும் நேர்ந்த பிரிவினைக் கண்ட புலவர் பெருமக்களாகிய கபிலர், பரணர், அரிசில்கிழார், பெருங்குன்றூர்கிழார் என்ற சான்றோர்கட்கு எட்டியதும், அப்புலவர்கள் முன் போலக் கண்ணகியும் பேகனும் சேர்ந்து வாழ்விக்க முயன்றனர். ஆனால் அது நடைபெறவில்லை.

## வேள் – எவ்வி

பழைய வேளிர் தலைவருள் எவ்வி என்னும் பெயர்பெற்றவன் ஒருவன். கடைச்சங்கத்தவரான கபிலர் என்னும் புலவர், இருங்கோவேள் என்பவனை "எவ்விதொல்குடி"யைச் சேர்ந்தவனாகக் கூறுவர். வேள் எவ்வியின் நாடு மிழலைக்கூற்றம் என்பதும் இக் கூற்றம் கடற்கரையைச் சார்ந்து, பல ஊர்கள் உடையது என்று புறநானூறு கூறுகிறது. மிழலைக்கூற்றம் பாண்டி நாட்டின் சில பகுதியையும் முன்பு கொண்டிருந்ததென்பது, திருவாலவாயுடையார் புராணத்தில் திருப்பெருந்துறையைச் சார்ந்த பிரதேசம் மிழலைக் கூற்றத்தைச் சார்ந்திருந்ததாகக்

கூறப்பட்டிருத்தலால் வெளியாகின்றது. இனி எவ்வியின் மற்றோர் ஊராகிய உறத்தூர் நீடாமங்கலத்தை அடுத்து உள்ளது. ஒருகால், இந்நீடாமங்கலமே நீடூர்ஆயினும் ஆகலாம்.

இவ் வேள் எவ்வி, அன்னி என்பவனுக்கு நட்பினன் என்பதும் அந்த அன்னி, தன் காவன்மரமாகிய புன்னையைத் திதியன் என்பான் அழிக்கவந்தபோது கடுஞ்சினங்கொண்டு போர்க்கு எழும்ப, அச்சினத்தை ஆற்றவேண்டி அவ்வன்னிக்கு வேள் எவ்வி வேண்டிய நன்மொழி கூறவும் அவன் கேளாமல் திதியனோடு பொருது வீழ்ந்தானென்பதும் 126-ம் அகப்பாட்டால் தெரியவருகின்றன.

## வேள் - பாரி

பாரி என்பவன் பறம்பு நாட்டிற்குத் தலைவன். வேளிர் குலத்தைச் சார்ந்தவன். அப்பறம்பு, மலையும் மலையைச் சார்ந்த முந்நூறு ஊர்களையும் உடையது. இவன் பறம்பு மலைக்கும் பறம்பு நாட்டிற்கும் தலைவன். குறுநில மன்னன் என்று அழைக்கப்பட்டவன். குறுநில மன்னனேயானாலும் பெரு நில மன்னர்க்குரிய தகுதிகள் பலவும் அமையப்பெற்றவன். இவன் வீரமும் ஈரமும் ஒருங்கே அமைந்து விளங்கியவன். உலகைக் காப்பதற்கு மாரியும் பாரியுமன்றி வேறல்லர் என்பதாம். இதன் நுண்பொருளைச் சிந்திக்கவும். இது வரம்புகடந்த புகழ்ச்சியேயானாலும், பாரி கொடைத்திறத்திற்கு ஓர் எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தான் என்பதில் ஐயமின்று. இவன் இங்ஙனம் கொடையில் சிறந்து காணப்பட்டமையால்தான், ஆளுடைய நம்பியாகிய சுந்தரர் தம் திருப்பாட்டில், "கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினும் கொடுப்பாரிலை," என்று இவன் கொடுக்கும் ஆற்றலைப் புகழ்ந்து பாடியுள்ளனர்.

### பாரி முல்லைக்குத் தேர் ஈந்தது

பாரி இன்னார்க்கு இது கொடுத்தல், இன்னார்க்கு இது கொடுத்தல் ஒண்ணாது என்று எண்ணும் இயல்பினனல்லன். ஒருசமயம் பாரி தன் மலைவளங்காணத் தன் ஆழியில் ஊர்ந்து வெளியே சென்றவன், வருகின்ற வழியில் ஒரு முல்லைக்கொடி படர்ந்து தென்றலங் குழவி மெல்லெனத் தவழ்தலால், அலைப்புண்டு ஆடிக்கொண்டிருந்தது. அதனைக் கண்டான் பாரி. உடனே தன் வையத்தினின்று கீழே இழிந்தனன். "ஆ! இம்முல்லைக்கொடி, தான் நன்கு செழித்துப் படர் தற்குரிய கொழுகொம்பு இன்றி இப்படி அலைகிறது போலும்! என்று எண்ணினவன், தான் வந்த

தேரினை அது படர்தற்கு அதன் அண்மையில் நிறுத்தி, அக்கொடியினையும் அதன் மேல ஏற்றித் தான் நடந்தே தன் திருமாளிகையை நோக்கித் திரும்பினான். அத்தகைய கொடைத் தன்மை கொண்டவன்.

கபிலர், பாரியின் மகளிரை இருங்கோவேள் என்பானுக்கு அறிமுகப்படுத்திக் கூறவேண்டிய நிலையேற்பட்டது; அந்நிலையிலும் பாரியைப்பற்றி வேறு எதையும் கூறாமல், இவன் முல்லைக்குத் தேர் ஈந்த கொடைத் திறத்தினேயே எடுத்து மொழிந்தனர். இவ்வாறே விச்சிக்கோவிடமும் பாரி மகளிரை மணந்துகொள்ளவேண்டி அவர்கள் இன்னார் என எடுத்துக்காட்டுகையிலும், “பூத்தலை அறாஅப் புனைகொடி முல்லை, நாத்தழும்பு இருப்பப் பாடாதாயினும், கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த, பரந்து ஓங்கு சிறப்பின் பாரிமகளிர்” என இதனையே எடுத்து மொழிந்துள்ளார். ஆகவே, இவன் முல்லைக்குத் தேர் ஈந்த சிறப்பு மூவுலகு முற்றும் எட்டியது புலனாகிறது.

## நன்னன் வேண்மான்

நன்னன் வேண்மான் என்பவன், சங்கநாளிலே தமிழகத்தில் பெருவள்ளலாக விளங்கிய ஒரு சிற்றரசன். இவன் வேளிர் குலத்தைச் சேர்ந்தவனென்பது, இவனுக்கு வழங்கும் 'வேண்மான்' (அகம்-97.)'வேள்'(மலைபடுகடாம்-94.) என்னும் அடைகளால் விளங்குகின்றது. வேண்மான் - வேளிர் தலைவன். சங்கநூல்களிலே, நன்னன் என்னும் பெயருடையாரிருவர் காணப்படுகின்றனர். இவரிலொருவன் பத்துப்பாட்டில் ஒன்றாகிய மலைபடுகடாம் கொண்டவன். அப் பாட்டியற்றிய இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்க் கௌசிகனார் தாம் பாடிய வேண்மானை நன்னன் சேய் நன்னன் என்று (மலைபடு-அடி-64.) கூறுதலால், மற்றவனாகிய நன்னன் இவ்வேண்மானுடைய தந்தையென்று தெரிகின்றது. இவ்விருவருள் மகனாகிய நன்னனே புலவர் புகழ்ச்சிக்கு இலக்காக விளங்கியவன். இவனை 'நன்னன் ஆய்' எனவும் வழங்குவர் (அகம்-356) . பத்துப்பாட்டில் இந்நன்னற்குப் 'பல்குன்றக்கோட்டத்துச் செங்கண்மாத்துவேள்" (பத்துப்பாட்டு-பக்-372) என்னும் அடை கொடுக்கப்பட்டிருக்கிறது. தொண்டைமான், கோமான் என்பவற்றிற்போல, 'மான்' விகுதி தலைமைச் சிறப்புணர்த்துவது.

நன்னனது நவிரமென்னும் மலைமேல் 'காரியுண்டிக் கடவுள்' எனப் பெயர் பெற்ற சிவபிரான் கோயிலொன்றுண்டு என்பர். இந்நன்னனது சோலையிலே இவன்

தின்று மகிழ்தற்கென்றே வைத்துவளர்க்கப்பட்ட ஒரு மரத்தின் இனிய காயொன்று அச்சோலைப்பக்கத்தோடும் ஆற்றில் வீழ்ந்து அயலதாகிய துறையில் ஒதுங்க, ஆங்குக் குளித்தற் பொருட்டு வந்த சிறுமியொருத்தி அந்தக் காயை அறியாதெடுத்துத் தின்றனள். இச்செய்தியைச் சோலை காவலரால் அறிந்த இந்நன்னன் பெருஞ்சினங் கொண்டவனாய்த், தான் தின்னுதற்குரிய காயை அப்பெண்ணெடுத்துத் தின்று விட்டதின் பொருட்டு, அவளைக் கொலை புரிந்துவிடும்படி கட்டளையிட்டனன். இச்செய்தியறிந்த அப்பெண்ணின் தந்தை, நன்னனிடம் நேரிற் சென்று "அரசே! என்மகள் செய்த பிழையைப் பொருத்தருள்க என்று பலவாறாக மன்றாடினான். ஆனால் நன்னன் தான் எடுத்த முடிவில் பின் வாங்கவில்லை. நன்னனுக்கு மகனாகிய நன்னன் பெருவள்ளலாய்ப் புலவர் புகழ்ச்சிக்கு உரியவனாக விளங்கினும், இவன் தந்தை புரிந்த தீச்செய்கைகளை இவனற் செய்கைகள் பிற்காலத்து மறைத்திடவில்லை. தந்தை நன்னன் பெண்கொலை புரிந்த பெரும்பழி மட்டும் உடையனல்லன். அவன் கல்வியருமை அறியாத கசடனுமாதலால், தன்பாற் பரிசில்பெறவேண்டிவரும் நல்லிசைப் புலவரை யெல்லாம் வெறுத்து, அவர் தன்பால்வாராமல் தன் வாயிற்கதவை அடைத்து வந்தான். இஃது, அக்காலத்து விளங்கிய புலவர்களுக்கெல்லாம் பெருவியப்பும் பெருங்கோபமு மூட்டியதோடு, அவன்மேல் வசை பாடவும் அவர்களைத் தூண்டியது. இவ்வாறாக நன்னனின் தந்தை நன்னன் என்பான் நடந்து கொண்டான்.

## இருக்குவேளிர்

புதுக்கோட்டையை அடுத்துள்ள கொடும்பாளூர், அன்ன வாசல், ஒல்லையூர் ஆகிய மூன்று கூற்றங்கள் கொண்ட நாட்டை ஆண்டுவந்த குறுநில மன்னர்கள் இவர்கள். இவர்களுடைய தலைநகரம் கொடும்பாளூர். இவ்வூரில் எழுப்பப்பட்டுள்ள மூவர் கோயிலில் பூதிவிக்கிரமகேசரி என்ற மன்னன் செதுக்குவித்த கல்வெட்டு ஒன்று காணப்படுகின்றது. அதில் மன்னர் பரம்பரை ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது. அஃதாவது:

1. யானைப் படையை முறியடித்த மன்னன், 2. பரவீரசித், 3. மழவரை வென்ற வீரதுங்கன், 4. அதிவீரன், 5. சங்ககிருது, 6. நிருப கேசரி, 7.வாதாபிகொண்ட பரதுர்க்கமர்த்தனன், 8. சமராபி ராமன்; அதிராசமங்கலப் போரில் சளுக்க மன்னனைக்

கொன்றவன், 9. பூதி விக்கிரமகேசரி. புதுக்கோட்டைக்கு அண்மையிலுள்ள தேனிமலையில் 7ஆம் நூற்றாண்டினதெனக் கொள்ளப்படும் கல்வெட்டு ஒன்றில் இருக்குவேள் ஒருவன் அங்கிருந்த சமணமடத்துக்குத் தானம் செய்து கொடுத்த செய்தி ஒன்று கிடைக்கின்றது. அம் மன்னன் இன்னான் எனத் தெரியவில்லை.

பூதி விக்கிரமகேசரி வீரபாண்டியனுடன் போரிட்டு வெற்றி கண்டான் என்றும், அவன் பல்லவர் படைகளைக் கொன்று காவிரியாற்றில் செந்நீர் ஓடச்செய்தான் என்றும், வஞ்சிவேள் என்பானைக் கொன்றான் என்றும் கொடும்பாளூர்க் கல்வெட்டு மேலும் கூறுகின்றது. அவனுக்குக் கற்றளி, வரகுணா என்று இரு மனைவியர் உண்டு. தென்னவன் இளங்கோ வேளார் என்னும் மறவன் பூதியார் என்பவன் மனைவி கற்றளிப்பிராட்டி யார் என்று ஒரு கல்வெட்டுக் கூறுகின்றது. தில்லைத்தானம் கல்வெட்டினின்று வரகுணப் பெருமானார் என்பவர் பராந்தக இளங்கோ வேளாரின் அரசர் என்று அறிகின்றோம். எனவே. பூதி விக்கிரமகேசரியானவன் பராந்தக சுந்தர சோழனுக்குக் கீழ்ப்பட்ட ஒரு சிற்றரசன் என்று கொள்ளலாம். மற்றும் லால் குடியில் கிடைத்துள்ள ஒரு கல்வெட்டுச் செய்தியானது நங்கை வரகுணப் பெருமானார் சோழ மன்னனோடு உடன்பிறந்தவள் எனக் கூறுகின்றது. தனக்குக் கற்றளியின் வயிற்றில் பிறந்த இரு ஆண் மக்களுக்கு விக்கிரமகேசரி பராந்தகன் என்றும், ஆதித்தன் என்றும் பெயரிட்டான். கொடும்பாளூரைச் சேர்ந்த பராந்தகச் சிறியவேளான் சோழரின் படைத் தலைவர்களுள் ஒருவன்; சிங்களத்துப் படையெடுப்பில் தலைமை தாங்கியவன்.

முதலாம் பராந்தகனுக்கும் கொடும்பாளூர் இருக்குவேளிர்களுக்கும் இடையே நட்புறவு வளர்ந்திருந்தது. அக் காரணத்தாலேயே வீரபாண்டியனை வெல்லுவதற்கு விக்கிரமகேசரி சோழ மன்னருக்கு உதவி செய்துள்ளான் என்று அறிகின்றோம்.

பூதி விக்கிரமகேசரி வென்று முடிகொண்ட வஞ்சிவேள் இன்னான் என அறியமுடியவில்லை. காவிரிக்கரையில் இந்த விக்கிரமகேசரி பல்லவர்களை எவ்வாறு போரிட்டு வென்றிருக்க முடியும் என்பதும் விளங்கவில்லை. கொடும்பாளூர்க் கல்வெட்டின் காலத்தைக் கண்டராதித்தியன் காலத்துக்கு முற்பட்டதாகக் கொள்ளுவதற்கில்லை. எனவே, இந்தப் பூதி விக்கிரம கேசரியானவன் இராஷ்டிரகூட மன்னன் கிருஷ்ணன் சோழ நாட்டின்மேல் படையெடுத்து வந்தபோது போர்க்கோலங் கொண்டு அவன்மேல் வெற்றி கண்டுள்ளான். எனவே, பல்லவன் என்னும் சொல்

'வல்லபன்' என்னும் சொல்லின் மரூஉவாக இருக்கலாம் என்று ஊகிக்க வேண்டியுள்ளது. இக் கருத்துக்கு மாறுபட்ட கருத்துக்களும் வரலாற்றாய்வாளரிடம் காணப்படுகின்றன.

கொடும்பாளூரிலுள்ள மூவர்கோயிலைக் கட்டியவர்கள் இருக்கு வேளிர்கள். இவர்கள் காளாமுக அல்லது பாசுபத சைவத்தின் வளர்ச்சிக்கு உதவியுள்ளனர். சோழப் பேரரசானது 12ஆம் நூற்றாண்டில் வீழ்ச்சியுற்ற பிறகு இருக்கு வேளிர்களின் செல்வாக்கும் மங்கிவரலாயிற்று. சோழப் பேரரசில் இவர்கள் பல பெரும் ஆட்சிப் பொறுப்புகளைச் செலுத்தி வந்துள்ளனர். இருக்குவேள், இருங்கோவேள் என்பன ஒரு பொருட் பெயர்கள். சோழர் ஆட்சிக் காலக் கல்வெட்டுகள் சிலவற்றில் 'மும்முடிச் சோழ இருக்குவேள்' என்ற பெயரும் வழங்கியதாகக் குறிப்புகள் உள்ளன. மூவேந்த வேளான், இளங்கோ வேளான் என்ற பெயர்களும் இருக்கு வேளிரைக் குறிக்கின்றன. இவர்கள் சோழரின் அரசமைப்பில் செயலாளராகவும், நாட்டுக் கண்காணிப்பாளராகவும், கோயில் நிருவாகிகளாகவும் பணிபுரிந்து வந்துள்ளனர். சோழேந்திரசிங்க மூவேந்த வேளான், நெறியுடைச் சோழ மூவேந்த வேளான், உதயமார்த்தாண்ட மூவேந்த வேளான், வீரசோழ இருங்கோ வேள், குலோத்துங்க மூவேந்த வேளான், பரகேசரி மூவேந்த வேளான், சோழன் மூவேந்த வேளான், இராசேந்திரசிங்க மூவேந்த வேளான் என்ற பெயர் படைத்த இருக்கு வேளிர்கள் பெரிய ஆட்சிப் பொறுப்புகளில் அமர்த்தப்பட்டிருந்தனர்.

## 2.3 மூவேந்தர்கள்

மூவேந்தர் என்பது பண்டைய தமிழகத்தை ஆண்ட சேர, சோழ, பாண்டிய மன்னர்களைக் குறிக்கும். இவர்களில் சேரர்கள் கேரள, தமிழகத்தின் மேற்குப் பகுதிகளை ஆண்டனர். சோழர்கள் திருச்சி, தஞ்சை பகுதிகளையும் பாண்டியர்கள் மதுரைப் பகுதிகளையும் ஆட்சி செய்தனர்.

### மூவேந்தர் பெயர்க் குறிப்பு

மூவேந்தரை "முடியுடை மூவேந்தர்" எனச் சிறப்பித்துக் கூறுதல் மரபு. முதற்காலத்தில் முடி அணியும் உரிமை இவர்களுக்கு மட்டுமே இருந்ததாலேயே இவர்கள் வேந்தர் எனப்பட்டனர். வேந்தன் என்பது வேய்ந்தோன் என்பதன் மரூஉ ஆகும்.

## சேரர்

பண்டைத் தமிழகத்தில் புகழ் பெற்று விளங்கிய மூன்று நாடுகளுள் ஒன்றாகத் தமிழகத்தின் மேற்குக் கரையில் அமைந்திருந்த சேர நாட்டை ஆண்ட அரசவழியினரிச் சேர்ந்தவர்களே சேரர்கள் எனப்படுகிறார்கள். சேரர்களின் ஆட்சி கிமு 300-200 முதல் கிபி 15ஆம் நூற்றாண்டு வரை நிலைத்தது. சேரரகளின் கொடி விற்கொடி ஆகும். சேரர்கள் வில்லால் அம்பு எய்வதில் சிறந்தவர்களாக் இருந்தனர் என்று உய்த்துணரலாம். சேர மன்னர்கள் பனம்பூ மாலை அணிந்தனர். மூவேந்தர்களில் ஒருவரான இவர்கள் கரூரையும், வஞ்சியையும் தலை நகராகக் கொண்டிருந்தனர். சில சேர அரசர்கள் தொண்டியையும் தலைநகராகக் கொண்டு ஆண்டனர்.கொள்ளம், கொடுங்கள்ளூர் மற்றும் திரிசூர் போன்ற இடங்களில் இருந்து கண்டெடுக்கப்பட்ட ரோமானிய, கிரேக்க, அரேபிய நாணயங்கள் மூலம் சேரர்கள் மற்ற நாடுகளுடன் வைத்திருந்த வணிகம் பற்றி அறிகிறோம்.

## சோழர்

சோழர் குலம் வளம் பொருந்திய காவிரி ஆற்றுப் படுகைப் பகுதியிலேயே தோற்றம் பெற்றது. கி.பி பத்தாம், பதினோராம், பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில், சோழர் வலிமை மிகவும் உயர் நிலையில் இருந்தது. அக்காலத்தில் அந்நாட்டையாண்ட மன்னர்களில், முதலாம் இராஜராஜனும், முதலாம் இராஜேந்திரனும் முதன்மையானவர்கள். அவர்கள் காலத்தில் சோழநாடு, படையிலும், பொருளாதாரத்திலும், பண்பாட்டிலும் வலிமை பொருந்திய பேரரசாக ஆசியா முழுவதிலும் செல்வாக்குக் செலுத்தியது. இவர்களுடைய எல்லை வடக்கே ஒரிசா வரையிலும் கிழக்கில் ஜாவா, சுமத்ரா, மலேசியா வரையும், தெற்கே மாலைத்தீவுகள் வரையிலும் விரிந்து இருந்தது.

சோழர்களின் கொடி புலிக்கொடி. அவர்கள் சூடும் மலர் ஆத்தி.

## பாண்டியர்

பாண்டியர்கள் மதுரை, திருநெல்வேலி, மற்றும் தற்போதைய கேரளத்தின் தென்பகுதி ஆகியவற்றை ஆட்சி செய்தனர். பாண்டியர்கள் வேப்பம் பூ மாலை அணிந்தவர்கள் எனவும் மீன்கொடியினை உடையவர்கள் எனவும் சங்க கால

நூற்குறிப்புகள், கல்வெட்டுக்கள், சாசனங்கள் மற்றும் மெய்க்கீர்த்திகளும் வரலாற்று மூலங்களாக உள்ளன.

## 2.4 தமிழர் அக புற பண்பாடு

தமிழகத்து வரலாற்றுக்குட்பட்ட காலம் சங்க காலம். இக் காலத்தில் தமிழரின் நாகரிகம் முழு மலர்ச்சியுற்றிருந்தது. பாண்டியன், சோழன், சேரன் என்ற முப்பெரும் மன்னர் அரசாண்டு வந்தனர். பாண்டியரின் தலைநகரம் மதுரை; சோழரின் தலைநகரம் காவிரிப்பூம்பட்டினம். புகார் அல்லது பூம்புகார் என்றும் இந் நகரத்துக்குப் பெயர்கள் உண்டு. சேரனின் தலைநகரம் வஞ்சி என்பது. தமிழ்மொழி வழங்கி வந்ததால் நாட்டுக்குத் தமிழகம் என்றும், மக்களுக்குத் தமிழர் என்றும் பெயர்கள் எய்தின. ஆகவே. நாட்டுக்கும். மக்களுக்கும் அவர்கள் பேசிய மொழிக்குமிடையே நெருங்கிய ஒரு தொடர்பைக் காண்கின்றோம். தமிழ் மக்கள் தாம் பேசிய மொழியுடன் இணைந்து வாழ்ந்தனர். தமிழர் வேறு. தமிழ் வேறு என்று பிரிக்க முடியாத அளவு அம் மொழியானது தமிழர் வாழ்வில் இடங்கொண்டது. தமிழரின் வாழ்வு, தமிழர் பேசிய மொழி. தமிழர் வாழ்ந்த நிலம் ஆகிய இம் முன்றுக்கும் இயல்பான, நெருங்கிய தொடர்பு ஒன்று உண்டு என்ற உண்மை தமிழரின் நாகரிகத்தின் அடிப்படைத் தத்துவமாக அமைந்துள்ளது. இந்த தத்துவத்தை விளக்குவனவே சங்க இலக்கியங்கள். இவ்விலக்கியங்களின் துணையின்றித் தமிழரின் பண்டைய வரலாற்றையும் பண்பாட்டையும் அறிந்துகொள்ள முடியாது. தமிழ் நிலத்தின் உயிர்நாடி தமிழ் மக்கள்; தமிழ் மக்களின் உயிர்நாடி தமிழ் மொழியாகும்.

சங்ககால மன்னர்கள் எழுப்பிய எழிலோங்கு அரண்மனைகள், மாளிகைகள், அங்காடிகள், கோயில்கள், துறை முகங்கள், பந்தர்கள், அவர்கள் ஓட்டிய நாவாய்கள் அனைத்தும் இப்போது மறைந்துவிட்டன. ஆனால், அவர்கள் காலத்துப் புலவர்கள் பாடிய பாடல்கள் பல இப்போதும் எஞ்சி நிற்கின்றன. எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும், பதினெண்கீழ்க்கணக்கும், சிலப்பதிகாரமும், மணிமேகலையும் பழந்தமிழரின் சால்பை விளக்கிக் காட்டுகின்றன.

ஓரறிவுடைய புல் முதல் ஆறறிவுடைய மக்கள் ஈறாகிய உயிர்ப்பொருள்களும் ஏனைய உயிரில்லாத பொருள்களும் முதற்பொருள்களின் சார்பாக நின்று கருக்கொண்டு உலகின்மேல் தோற்றுகின்றன ஆகையால் அவற்றுக்குக்

கருப்பொருள்? என்று பெயர் வழங்கிற்று. மக்கள் வாழ்க்கையின் செய்திகளைப் புலப்படுத்துவது உரிப்பொருள் எனப் பெயர் பெற்றது. முதற்பொருள் இரண்டனுள் நிலமானது நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டது: காடும் காட்டைச் சார்ந்த இடமும் முல்லை என்றும், மலையும் மலையைச் சார்ந்த இடமும் குறிஞ்சி என்றும், வயலும் வயலைச் சார்ந்த இடமும் மருதம் என்றும், கடலும் கடலைச் சார்ந்த இடமும் நெய்தல் என்றும் பெயர் பெற்றன. முல்லைக்குக் கடவுள் மாயோன் (திருமால்). குறிஞ்சிக்குக் கடவுள் சேயோன் (முருகன்), மருதத்தின் கடவுள் வேந்தன் (இந்திரன்). நெய்தலுக்குக் கடவுள் வருணன். இந் நான்கு பிரிவுகளல்லாமல் வேறொரு நிலப்பிரிவும் உண்டு. அதற்குப் 'பாலை' என்று பெயர். 'முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து, நல் இயல்பு இழந்து, நடுங்குதுயர் உறுத்துப் பாலை என்பதோர் படிவங் கொள்ளும்' என்று பாலை நிலம் விளக்கப்படுகின்றது. அதாவது கோடை வெய்யிலில் மரஞ்செடிகள் உலர்ந்து, நீர் நிலைகள் வறண்டு காணப்படும் இடங்கட்குப் பாலை என்று பெயர். இந் நிலத்துக்குத் தெய்வம் கொற்றவை. இவ்வைந்து நிலத்தின் பாகுபாடுகளுக்குத் 'திணைகள்' என்று பெயர்.

'திணை' என்னும் சொல்லுக்குக் 'குடி' என்றும் ஒரு பொருள் உண்டு. குடிகள் வாழும் நிலமும் 'திணை' எனப்பட்டது. சொல்லிலக்கணத்தில் விளக்கப்படும் திணைகள் வேறு. அவை உயர்திணை, அஃறிணை என்பன. பொருள் இலக்கணத்தில் விளக்கப்படும் இவ்வைந்து திணைகளும் மக்கள் வாழ்க்கையைப் பற்றியவை. திணை என்னும் சொல் நிலத்தை மட்டுமன்றி நிலத்தின் அமைப்பு, அங்கு வாழும் மக்கள் இயல்பு, அங்கு உயிர் வாழும் விலங்குகள், பறவைகள், செடி கொடிகள் மரங்கள், உழவுப் பயிர் வகைகள், மக்கள் வழிபட்டு வந்த தெய்வங்கள் ஆகிய யாவற்றையும் குறித்து நிற்கும்.

மொழிக்கு மட்டுமன்றி மக்களுடைய வாழ்க்கைக்கும் இலக்கணம் வகுத்துக் கொண்ட பெருமை பழந்தமிழரைச் சாரும். வாழ்க்கைக்கு ஒழுங்குமுறைகள் வகுத்துக் கொடுத்த இலக்கணத்துக்குப் பொருள் இலக்கணம் என்று பெயர். தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே திணைகள் வழக்கில் இருந்துவந்தன. அவை தொல்காப்பியரால் நிறுவப்பெற்றவை அல்ல. எனவே, பொருளிலக்கணமும் தொல்காப்பியத்துக்கு முன்பு இயற்றப் பட்டிருக்க வேண்டும். 'முதலெனப் படுவது நிலம்பொழுது இரண்டின் இயல்பு

என மொழிப இயல்பு உணர்ந்தோரே' என்று தொல்காப்பியர் தமக்கு முன்பு இலக்கணம் வகுத்திருந்த ஆசிரியர்களைச் சுட்டிக் காட்டுகின்றார்.

ஒரு மொழியில் இலக்கணம் வகுக்கப்படும் முன் இலக்கியம் வளர்ந்திருக்க வேண்டும். மொழியானது பல காலம் வளர்ந்து வந்த பிறகுதான் பொருள்களையும் அவற்றைக் குறிக்கும் சொற்களையும் திட்டமாக வரையறுத்து உணரவேண்டிய நெருக்கடி ஒன்று நேரும். அப்படி வரையறுக்கத் தவறினால் எண்ணங்களிலும் பேச்சிலும் தடுமாற்றமும் குழப்பமும் ஏற்படும். இந்த இழிநிலையை ஒரு மொழியானது எய்தாதவாறு அதற்கு இலக்கண வரம்பீடு செய்தல் இன்றியமையாததாகும். அதைப் போலவே, மக்கள் வாழ்க்கைக்கு இலக்கண விதிமுறைகள் வகுப்பதற்கு முன்னர் அவ் வாழ்க்கை நன்கு வளர்ச்சியும் வளமும் பெற்றிருக்க வேண்டும். வளர்ச்சி பெற்று நிலைத்து வாழும் சமூகத்துக்குத் தான் ஒழுங்கு விதிகள் தேவைப்படும். ஒழுக்கமுறைகளை வகுத்து அவற்றின்படியே மக்கள் வாழ வேண்டுமென்று விதிப்பது இயற்கைக்கு முரணாகும். எனவே, தமிழில் பொருள் இலக்கணம் ஒன்று தோன்றுவதற்கு முன்பே மக்கள் அதில் வகுத்த வாழ்க்கையை வாழ்ந்து வந்தனர் என்பதில் ஐயமின்று. அவ் வாழ்க்கையை விளக்கிக் காட்டுமளவுக்குத் தமிழரிடையே இலக்கிய வளம் நிரம்பி இருக்க வேண்டும்.

நிலத்தைப் பாகுபாடு செய்ததைப் போலவே காலத்தையும் பாகுபாடு செய்திருந்தனர். காலம், பெரும்பொழுது என்றும் சிறுபொழுது என்றும் இருவகையாகப் பிரிக்கப்பட்டது. ஓராண்டின் தட்ப வெப்ப மாறுபாடுகளைக் காட்டிய கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் ஆகிய காலங்கள் பெரும்பொழுதுகள். காலை, நண்பகல், எற்பாடு, மாலை, யாமம், வைகறை ஆகியவை சிறுபொழுதுகள். பெரும் பொழுதை ஆண்டு, திங்கள், கிழமை, நாள், நாழிகை, நொடி எனவும் பகுத்திருந்தனர்.

முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் ஆகிய நான்கு திணைகளில் வாழ்ந்த மக்கள் உழைத்துப் பொருளீட்டுவர்; காதலிப்பர்; மணப்பர்; இல்லறத்தில் நின்று இன்பம் துய்ப்பர். இவ்வொழுக்கங்கள் யாவும் மக்களுக்கே உரியன. எனவே, அவற்றுக்கு உரிப்பொருள் என்று பெயர். ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் கண்டு

காதலித்து மணந்து இல்லறம் நடத்தி வருவதை 'அகம்' என்றும், மக்கள் அரசியல் வாழ்விலும் போரிலும் ஈடுபடுவதைப் 'புறம்' என்றும் பொருள் இலக்கணம் குறிப்பிடும்.

உலக அமைப்பை முதல், கரு, உரி என மூன்றாக வகுத்து, உலகில் வாழும் மக்களின் வாழ்க்கையை அகம் என்றும் புறம் என்றும் பாகுபடுத்தி, அதை இயற்கையுடன் இயைபுறுத்தியது பண்டைய தமிழரின் சிறந்தொரு பண்பாடாகும். பழந்தமிழகத்தில் மக்கள் இல்லற வாழ்க்கையையே பெரிதும் பாராட்டி வந்தனர். ஒருவனும் ஒருத்தியும் இணைந்து வாழ்வாங்கு வாழ்வாராயின் அவர்களுக்கு வீடுபேறு தானாக வந்தெய்தும் என்பது தமிழரின் கொள்கையாக இருந்தது. இக் காரணத்தினாலேயே திருவள்ளுவரும் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பாலை மட்டும் பாடினார்; வீட்டைப்பற்றிப் பாடினாரில்லை. அவருடைய காலத்திலேயே ஆரியரின் பழக்க வழக்கங்களும், புராணங்களும், தத்துவங்களும் தமிழகத்தில் குடி புகுந்துவிட்டன. தருமம், அருத்தம், காமம், மோட்சம் என்னும் ஆரியரின் புருடார்த்தங்களைத் திருவள்ளுவர் அறிந்திருப்பார். இருப்பினும் அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பாலையே தமிழரின் பண்பாட்டுக்கு உடன்பாடாகக் கொண்டு, மரபு வழுவாது அவர் திருக்குறள் என்னும் அறநூலை இயற்றினார். 'இல்லற மல்லது நல்லற மன்று' என்பது பிற்காலத்து எழுந்த கொன்றைவேந்தன் மொழியாகும். ஒருவனுடைய உலக வாழ்க்கைக்கு இன்றியமையாத துணை அவன் மனைவியே ஆவாள். அவளுக்கு 'வாழ்க்கைத் துணை' என்னும் சிறப்பைக் கொடுக்கின்றார் திருவள்ளுவர்.

சங்க இலக்கியங்களுள் பெரும்பாலானவை அகப்பொருளையே பேசுகின்றன, எட்டுத்தொகையுள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு ஆகியவை அகப்பொருள் சார்புடையவை. பல வகையிலும் ஒத்த நலன்களையுடைய ஒருவனும் ஒருத்தியும் கூடுங்காலத்துப் பிறப்பது இன்பம். அதனை இன்னதென்று சொல்லால் விளக்க முடியாது; அவர்கள் அகத்தால், அதாவது உள்ளத்தால்தான் உணர முடியும். அத்தகைய இன்பம் அகம் எனப்பட்டது. ஏனைய இன்பங்கள் யாவும் புறமாகும். அகத்தில் காதல் மலர்கின்றது; புறத்தில் வீரம் சிறக்கின்றது. ஆண் பெண் விருப்பத்தினால் அகத்திணை உண்டாகின்றது. மண்ணாசையாலும், பொன்னாசையாலும், பசியாலும் புறத்திணை உண்டாகின்றது.

மணப் பருவம் எய்திய காதலர்கள் தாமாகவே கூடியோ அன்றிப் பிறரால் கூட்டப் பெற்றோ கணவன் மனைவியாவர், காதலர்கள் தாமாகக் கூடும் கூட்டத்துக்குக் 'களவு' என்று பெயர். பிறர்க்கு உரித்தான ஒரு பொருளை அவரறியாவாறு அவரிடமிருந்து கவர்ந்து கொள்ளுவது 'களவு' எனப்படும். பழந்தமிழர் ஊழின் பெருவலியில் நம்பிக்கை கொண்டவர்கள். ஆகவே, காதலர்கள் ஒன்றுகூடுவதற்கே அவர்களை ஊழ் கூட்டுவிக்க வேண்டும் என்று அவர்கள் கருதினர். காதலர் இருவர் ஒருவரையொருவர் ஒருமுறை கண்டு உள்ளத்தைப் பறிகொடுத்து விடுவராயின், மீண்டும் அவர்கள் வேறு யாரையும் காதலிப்பதில்லை. அவர்களுடைய திருமணம் எவ்விதமான இடையூறுமின்றி நடைபெறுவதற்குக் காதலனின் தோழனும், காதலியின் தோழியும் துணை நிற்பர். அகப்பொருள் இலக்கணத்தில் காதலனைத் தலைவன் என்றும், காதலியைத் தலைவி என்றும் அழைப்பது மரபாகும்.

தம் காதல் முற்றுப்பெறுவதற்கு இடையூறுகள் நேருமாயின் தலைவனும் தலைவியும் சேர்ந்து ஊரைவிட்டே வெளியேறி விடுவதுமுண்டு. அவர்களுடைய காதலின் உறுதியையும் நேர் மையையும் பாராட்டி அவர்கள் பெற்றோர்கள் அவர்கட்குத் 'திருமணம் முடித்து வைப்பர். களவு ஒழுக்கமானது இரண்டு மாத காலத்துக்குமேல் நீடிக்கக்கூடாது என்பது மரபு. 'இந்த உலகத்தையே நான் உனக்கு ஈடாகப் பெற்றாலும் நான் உன்னைக் கைவிடேன்' என்று தலைவன் தலைவிக்கு உறுதி கூறுவான். அவள் வேப்பங்காயைக் கொடுத்தாலும் அதை வெல்லக்கட்டியென மகிழ்ந்துண்பான் அவன். "தலைவன், 'உன் கூந்தலைப் போல நறுமணமுள்ள மலர் ஒன்றை உலகிலேயே நான் கண்டதில்லை' என்று தன் காதலியின் கூந்தலைப் பாராட்டி இன்புறுவான்.

அகத்திணையுள் திருமண வாழ்க்கை 'கற்பு' என அழைக்கப்படுகின்றது. தலைவன் தலைவியர் இருவரின் பெற்றோரும் அவர்களுடைய திருமணத்துக்கு உடன்படுவர். திருமணம் ஒரு நல்ல நாளில் நடைபெறும். தீய கோள்கள் இடம் விட்டு விலகவும், நிலா உரோகிணியுடன் கூடவும் வேண்டும். விடியற் காலையில்தான் திருமணம் நடைபெறும். திருமணப் பந்தலில் புதுமணல் பரப்பப்படும்; மாலைகள் தொங்கவிடப்படும்; அழகிய விளக்குகளை ஏற்றி வைப்பார்கள். வயது முதிர்ந்த மங்கல மகளிர் தண்ணீரைக் குடங்களில் முகந்து தம் தலையின் மேல் தூக்கிக் கொண்டு வந்து

'சிறு மண்டை' என்னும் அகன்ற வாயுடைய கலத்தில் பெய்து கொடுப்பர். குழந்தைகளைப் பெற்றெடுத்த மங்கல மகளிர் நால்வர் கூடி அத் தண்ணீரை வாங்கி, அதில் பூவிதழ்களையும், நெல் மணிகளையும் சொரிந்து அத் தண்ணீரினால் மணமகளை நீராட்டுவார்கள். இச் சடங்குக்கு 'வதுவை நன்மணம்' என்று பெயர். அப்போது அப் பெண்டிர், 'இவள் கற்பு நெறியினின்றும் வழுவாமல், தன்னைக் கொண்ட கணவனை விரும்பிப்பேணும் விருப்பமுள்ள துணைவி யாவாளாக' என அம் மணமகளுக்கு வாழ்த்துக் கூறுவர். மண மகளின் பெற்றோர் 'பெரிய ஓர் இல்லத்துக் கிழத்தியாக ஆவாய்' என்று வாழ்த்தி அவளை மணமகனுக்குக் கொடுப்பர். உளுத்தம் பருப்புடன் கலந்த அரிசிப் பொங்கல் மண விழாவுக்கு வந்தவர்கட்கு இடையறாது வழங்கப்பெறும். இறைச்சியும் நெய்யும் கூட்டி ஆக்கிய வெண்சோற்றையும் வழங்குவதுண்டு.

திருமண வினைகள் தொடங்கும் முன்பு கடவுள் வழிபாடு நடைபெறும். மணமுழவு முழங்கும். வெண்மையான நூலில் வாகையிலைகளையும், அறுகம்புல் கிழங்குகளையும் கோத்த மாலையை மணமகள் அணிந்து கொள்ளுவாள். மணமகன் மணமகளுக்குத் தாலி கட்டியதாகச் சங்கத் தமிழில் சான்று ஏதும் கிட்டவில்லை. 'ஈகையரிய இழையணி மகளிரொடு அதாவது பிறர்க்குக் கொடுத்தற்கரிய இழை - என்று புறப்பாடல் ஒன்றில் குறிப்புக் காணப்படுகின்றது. ஆனால், அது திருமணத்தின்போது அணிவிக்கப்பட்டது என்பதற்குச் சான்றில்லை. ஐம்படைத் தாலியையும் புலிப்பல் தாலியையும் குழந்தைகட்குக் காப்பணியாக அணிவிக்கும் வழக்கம் அக் காலத்து உண்டு. ஆனால், திருமணத்தின் போது மங்கலநாண் பூட்டும் வழக்கம் பழந்தமிழரிடையே இல்லை போலும். அவ் வழக்கம் இருந்திருப்பின் எல்லாத் திருமணச் சடங்குகளையும் குறிப்பிடும்போது தாலி கட்டுவதென்னும் தலையாய சடங்கைக் குறிப்பிடாமல் இரார். ஆரியர் பண்பாடும் பழக்க வழக்கங்களும் பெருகிவந்த காலத்து எழுந்த நூலான சிலப்பதிகாரத்திலும் தாலி கட்டும் சடங்கைக் குறிப்பிடவில்லை. ஆனால், தமக்குத் திருமணம் ஆகிவிட்டதைத் தெரிவிப்பதற்காக அக்காலத்துப் பெண்கள் மங்கல அணி ஒன்றை அணித்திருக்க வேண்டுமென்றும், திருமண நாளன்று அம் மங்கல அணியை ஊர்வலமாகக் கொண்டுவரும் வழக்கம் இருந்தது என்றும் அறிகின்றோம். இம் மங்கல அணியையே மேலே எடுத்துக் காட்டிய

புறப்பாட்டுக் குறிப்பிடுகிறது போலும். 'மங்கல அணி' என்று வரும் வேறு இடங்களில் அடியார்க்கு நல்லார் அதற்கு 'இயற்கையழகு' என்றே உரை கண்டுள்ளார். எனவே, பழந்தமிழர் மாங்கலிய நாண் பூட்டித் திருமணம் முடித்தனர் என்று திட்டமாகக் கூறுவதற்கில்லை. ஆண்டாள் நாச்சியார் கண்ணன் தம்மை மணந்ததாகக் கண்ட கனவைத் தம் தோழியினிடம் கூறும்போது திருமணச் சடங்குகள் அத்தனையும் கூறியவிடத்துத் தமக்குக் கண்ணன் தாலி கட்டியதாகக் கூறவில்லை. 'மைத்துனன் நம்பி மதுசூதனன் வந்தென் கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீ நான்' என்று மட்டுந்தான் தெரிவிக்கின்றார். கந்தபுராணம், பெரிய புராணம் ஆகிய நூல்களில் குறிப்பிடப்படும் திருமணங்களிலும் மணமகன் மணமகளுக்குத் தாலி கட்டியதாகத் தெரியவில்லை. சீவகசிந்தாமணியில் அரசியர் அணித்திருந்த 'நாணுள்ளிட்டுச் கடர்வீச நன்மாணிக்க தகுதாலி'யும் திருமணத்தின்போது கட்டப்பட்டதென்று கொள்ளுவதற்குச் சான்றில்லை. எனவே, திருமணத்தின்போது மணமகன் மணமகளுக்குத் தாலி கட்டும் வழக்கம் பத்தாம் நூற்றாண்டுக்கு முன்பு ஏற்படவில்லை என்று ஊகிக்க வேண்டியுள்ளது. இவ் வழக்கத்தைத் தெரிவிக்கும் முதல் கல்வெட்டு கி.பி. 958 ஆம் ஆண்டுக்குரியதாகும்.

திருமண நாளன்று இரவே மணமக்கள் மணவறையில் கூட்டப்பெறுவர். "அங்கு மணமகள் கசங்காத புத்தாடையால் தன் உடல் முழுவதும் போர்த்துக் கொண்டிருப்பாள். சங்க காலத்துத் திருமண விழாவைப்பற்றிக் கூறும் அகப்பாட்டுகள் இரண்டிலும் புரோகிதன் ஒருவன் இடையிலிருந்து மணவினைகள் புரிந்ததாகச் செய்திகள் இல. ஆனால், கோவலன் கண்ணகியை மணந்தபோது மாமுது பார்ப்பான் மறைவழி காட்டியதாகவும் மணமக்கள் தீ வலம் செய்ததாகவும் இளங்கோவடிகள் கூறுகின்றார். சங்க காலம் முடிவுற்றுக் கி.பி. 5 ஆம் நூற்றாண்டுக்குள் திருமணங்களில் பார்ப்பான் புரோகிதம் செய்யும் வழக்கம் மக்களிடையே பரவிவிட்டதென இதனால் அறிகின்றோம்.

பெண்ணின் கற்பைப் போற்றி வந்தனர் பழந்தமிழர். கற்புடைய மனைவியைத் தவிர்த்து ஒருவன் பெறும்பேறு வேறு ஒன்றும் இல்லை என்று அவர்கள் கருதினர். பேகன் என்ற மன்னன் தன் மனைவி கண்ணகியைப் பல நாள் துறந்திருந்தான். 23 மன்னரைப் போலவே பொதுமக்களும் பரத்தையர் நட்பில் திளைத்து வருவதுண்டு.

அருவருக்கத்தக்க இத் தீய ஒழுக்கம் மருதத்திணை மக்களின்பால் மட்டுந்தான் காணப்பட்டது. பரத்தையரைத் தொல்காப்பியனார் 'காமக்கிழத்தியர்' என்று குறிப்பிடுகின்றார். இச்சொல்லுக்கு நச்சினார்க்கினியர் 'காமக்கிழத்தியராவர் கடனறியும் வாழ்க்கையுடையராகிக் காமக்கிழமை பூண்டு இல்லறம் நிகழ்த்தும் பரத்தையர்' என்று விளக்கந் தருகின்றார்.

களவு ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்டு காமத்துப் பால் வகுத்த திருவள்ளுவர் கணவன் பரத்தையரை விரும்பித் தன் மனைவியை விட்டுப்பிரிவதும், மனைவியானவள் தன் கணவனுடைய 'அடங்கா ஒழுக்கத்தை'க் கண்டு மனம் புழுங்குவதும் ஆகிய அகத்துறைகட்கு இலக்கணம் கண்டிலர். திருக்குறளில் பரத்தையர் என்னும் சொல்லை அவர் ஆளுவதில்லை. பொருட்பாலில் மட்டும் ஆடவரிடம் காணப்பட்ட சில குற்றங்குறைகளை விலக்குமாறு விதிகள் வகுக்கும்போது 'வரைவின் மகளிர் அதாவது, 'பொருட்பெண்டிர்' உறவு இழுக்குத் தரும் என்றும், பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில் ஏதில் பிணந் தழீஇ யற்று' என்றும், 'பொருட்பொருளார் புன்னலந் தோயார் அருட்பொருள் ஆயும் அறிவினவர்' என்றும் கூறுகின்றார். ஆகவே, பரத்தையர் ஒழுக்கம் சங்க காலத்தில் வாழ்ந்த ஆடவரிடம் ஒரு கறையாகவே காணப்படுகின்றது. பரத்தையரிடம் உறவு பூண்டு ஒழுகின தம் கணவனைப் பெண்கள் பொறுமையுடன் வாழ்க்கையில் ஏற்றுக்கொண்டு அவனுடன் புலந்தும், பிறகு அவன் செய்த பிழையை மறந்தும் வாழ்ந்து வந்தனர் என்று அறிகின்றோம்.

கணவன் தன்னைப் பிரிந்து சென்றால் மனைவிக்கு ஊடல் ஏற்படுவதுண்டு. ஒருவர் இவர்கள் வழக்கில் தலையிட்டா லொழிய அவ்வூடல் எளிதில் தீருவதில்லை. தோழி, தாய், பார்ப்பான், பாங்கன், பாணன், பாடினி, இளையர், விருந்தினர், கூத்தர், விறலியர், அறிவர், கண்டோர் ஆகியவர்கள் அனைவருக்குமே இவ்வூடலைத் தீர்த்து வைக்கும் உரிமையுண்டு. கணவன் மனைவியரிடையே அடிக்கடி ஊடல் ஏற்பட்டால்தான் வாழ்க்கையில் இன்பம் ஊறும் என்றும், ஆனால் அந்த ஊடலை நீடிக்க விடக்கூடாதென்றும் திருவள்ளுவர் அறிவுறுத்துகின்றார்,

திருமணமான பிறகு கணவன் மேலும் கல்வி கற்பதற்கோ பொருள் தேடுவதற்கோ தன் மனைவியைவிட்டுப் பிரிய நேருவதுண்டு, கல்விக்காக ஏற்படும்

பிரிவு மூன்றாண்டுகட்கு மேல் நீடிக்கக்கூடாது என்பது மரபு. மன்னனுடைய போர்ப் பணியை மேற்கொண்டோ, மன்னனுடைய கடமைகள் வேறு எவற்றையேனும் ஏற்றோ, அன்றிப் பொருள் தேடவோ கணவன் தன் மனைவியைவிட்டுப் பிரிய நேர்ந்தால், அப் பிரிவு ஓராண்டுக்கு மேல் நீடித்தலாகாது. பரத்தையர் உறவை மேற்கொண்டு தன் மனைவியைப் பிரிந்து சென்றவனும் தன் மனைவிக்குப் பூப்புத் தோன்றி மூன்று நாள் கழித்துப் பன்னிரண்டு நாள் வரையில் மீண்டும் வந்து தன் மனைவியைக் கூட வேண்டும். ஆனால், கோவலன் கண்ணகியை விட்டுப் பிரிந்து நீண்ட நாள் மாதவியுடனே வாழ்ந்திருந்தான். சங்க காலத்திய கட்டுப்பாடு சிலப்பதிகாரக் கதை நிகழ்ந்த காலத்தில் தளர்ந்து விட்டது போலும், மருதத்திணை ஒழுக்கமாக இருந்து வந்த இவ்விழுக்கானது பிற்காலத்திலும் தமிழர் வாழ்வுக்குச் சீர்கேட்டை விளைத்து வந்துள்ளது.

கல்வி கற்கவும், பொருளீட்டவும், மன்னனுக்காகத் தூது செல்லவும் கணவன் பிரியும்போது மனைவி அவனுடன் செல்லும் வழக்கம் இல்லை. பெண்கள் போர்ப் பாசறைகளில் தம் கணவனுடன் தங்கக்கூடாதென்றும் ஒரு மரபு இருந்து வந்தது. தான் காதலித்த ஒரு பெண்ணை மணக்க வாய்க்காத ஆண் மகன் சில சமயம் மடலேறுவதுண்டு. பனங்கருக்கினால் குதிரை ஒன்று செய்து அதன்மேல் அவன் ஏறி அமர்ந்து தன் காதலியின் வடிவந்தீட்டிய கொடி ஒன்றைத் தன் கையில் ஏந்திக்கொள்ளுவான். இந்த ஊர்தியைத் தெருத் தெருவாக இழுத்துச் செல்லுவார்கள். பனங்கருக்கினால் அறுப்புண்ட அவன் உடலில் குருதி வடியும். ஊராரும், பெண்ணின் பெற்றோரும் அவன் துயரைக் சண்டு இரக்கங்கொண்டு அப் பெண்ணை அவனுக்கே மணமுடிப்பார்கள். பெண்கள் மடலேறுதலில்லை. ஆனால், பிற்காலத்தவரான திருமங்கையாழ்வார் தலைவி ஒருத்தி பிரிவாற்றாமை மேலீட்டால் 'காதல் கைமிக்கு மடலூரத் துணிந்தாள்' என்று பாடுகின்றார்.

## சங்க புறவாழ்வியல்

கி.மு. 3ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி.1ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் படைக்கப்பட்டவை சங்க இலக்கியங்கள் என்பது பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட வரலாற்று உண்மையாகும். இந்தக் காலகட்டம் என்பது சிற்றரசுகளை அழித்துப் பேரரசுகள் உருவாகிக் கொண்டிருந்த காலகட்டமாகும். சமூகவியல்

பார்வையில் சொல்வதானால், இனக்குழுச் சமூகம் அழிந்து நிலவுடைமைச் சமூகம் கட்டமைக்கப்பட்ட காலகட்டமாகும். சமூக வாழ்நிலையில், பரத்தையர் ஒழுக்கம் போன்றவற்றால் தனிமனித, குடும்ப நெறிச் சிதைவுகளும் போர், நிலையற்ற ஆட்சி போன்றவற்றால் அரசியல், சமூக நெறிப் பிறழ்வுகளும் அரங்கேறிக் கொண்டிருந்த காலகட்டம் அது. இத்தகைய தனிமனித, அரச, சமூக நெறிச் சிதைவுகளிலிருந்து சமூகக் கட்டமைப்பைக் காப்பாற்ற முனைந்தனர் சங்கப் புலவர் பெருமக்கள். அவர்கள் தங்கள் அறநெறிக் கருத்துக்களை வலியுறுத்திச் சொல்லாமல், அறிவுறுத்திச் சொல்லும் பாங்கைக் கைக்கொண்டனர். அறந்தலைப்பட்ட சமூகம் அமைய புறந்தலைப்பட்ட சமூகத்தின், குறிப்பாக அரச சமூகத்தின் போர்வெறியும் வேள்வி நெறியும் குறைய வேண்டியது அவசியமாகிறது.

சமூக நிறுவனங்கள் அனைத்தும் அரச சமூகத்தின் கருத்தியலால் ஆளப்படும் சமூக அமைப்பில் சங்கச் சமூகக் கோட்பாடுகளில் மாற்றம் ஏற்பட்டால்தான் தனிமனிதர்களின் நீரோடை போன்ற இயங்குதலைப் பெறும். இத்தகைய கண்ணோட்டத்தில், சங்ககாலப் புறநானூற்றுப் புலவர்கள் அறச் சமூக உருவாக்கத்துக்கு மிகப் பெரிய தொண்டாற்றியுள்ளனர்.

## சங்க இலக்கியத் திணை, துறை மரபுகள்

சங்க இலக்கியங்கள் எனப்படும் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களுள் இலங்கும் சிந்தனைகள் பன்முகப் பரிமாணங்கள் கொண்டவை. அவற்றைத் தொகுத்தாரின் பொதுப்பார்வையில் அவை அகம், புறம் எனப்பட்டன. அக மாந்தர்கள்தான் புற மாந்தர்களாகவும் செயலாற்றியுள்ளனர் என்ற நோக்குநிலையில் பார்த்தால் ஒன்று மற்றொன்றின் மீது ஏற்படுத்தியுள்ள தாக்குரவுகளைப் புரிந்து கொள்ளலாம். இந்த அடிப்படையில், சங்க இலக்கியத் திணை, துறை மரபுகளை எண்ணிப் பார்க்கலாம்.

சங்க இலக்கியங்களுக்கான திணை, துறை பாகுபாடுகள் முற்றிலும் புறப்பொருள் வெண்பாமாலையின் இலக்கப்படிச் செய்யப்பட்டுள்ளன. வேறுவகையில் சொன்னால், தொல்காப்பிய இலக்கண வரையறைகளுக்கு அப்பாற்பட்ட திணைகளும் துறைகளும் சங்க இலக்கியங்களுக்குள் உள்ளன. திணை

என்பது ஒழுக்கம். ஆகலின், அகத்திணை, புறத்திணை என்பன அவ்வத்திணைக்களுக்கே உரிய ஒழுக்கலாற்று வரையறைகளைக் குறிக்கின்றன.

பொருள் இலக்கணம் என்பதுள் உள்ள 'பொருள்' என்பது வாழ்க்கை என்னும் பொருளடையது. எனவே, வாழ்க்கையின் பொருளை, வாழ்க்கைக்கான பொருளை எடுத்துரைப்பதே அகம், புறம் என்பன. இவற்றோடு 'திணை' என்னும் வாழ்வியலொழுகலாறு - வாழ்வியல் ஒழுக்கம் இணையும் போது அகத்திணை, புறத்திணை எனப்படுகின்றன. இத்திணைகளின் உள் இயல்புகளைத் தனித்தனி அலகுகளாக விவரிப்பன துறைகள் எனப்படுகின்றன. இதை,

"பொருள், பொதுவான பாடுபொருள், அல்லது
நுவல்பொருள், திணை - பாட்டுச் சூழல், மற்றும்
துறை - பாட்டின் அடிக்கருத்து" (கைலாசபதி., க.2006: 261)

எனப் பாகுபடுத்தி விளக்குகிறார். க. கைலாசபதி இந்தப் புரிதலோடு மேலும் நுட்பமாக நோக்குகையில், பொருள் என்பது வாழ்க்கை, திணைகள் என்பவை வாழ்க்கையின் பரிணாம வளர்ச்சிக் கூறுகள் துறைகள் என்பவை திணைகளின் பரிமாணக் கூறுகள் என்பதும் தெரிய வருகிறது.

உலகில் தமிழில் மட்டுமே பொருள் இலக்கணம் உள்ளது. தமிழில் மட்டுமே திணைகளை மலர்களின் பெயரிட்டு அழைக்கும் வழக்கம் உள்ளது; தமிழில் மட்டுமே மலர்சூடிப் போரிடும் வழக்கமும் உள்ளது. அகவாழ்க்கையில் திணை என்பது நிலத்தைக் குறிக்கிறது. புறவாழ்க்கையில் திணை என்பது உள்ளத்தைக் குறிக்கிறது. நிலம், நிலத்தில் விளையும் உற்பத்திப் பொருள்கள், இதனடிப்படையிலான உற்பத்தி உறவுகள் அனைத்தும் சேர்ந்து அந்தந்த நிலங்களுக்கேயுரிய வாழ்வியலால் கோட்பாடுகளை உருவாக்குகின்றன. இவற்றில், நிலம் முதற்பொருள்; உற்பத்திப் பொருள்கள் கருப்பொருள்கள், வாழ்வியல் கோட்பாடு உரிப்பொருள் என்பது அகத்திணை வாழ்வியல். இதே முதற்பொருளில் ஆளும் மாந்தர் - அவர் சீறூர் மன்னரோ முதுகுடி மன்னரோ, குறுநில மன்னரோ, வேந்தரோ - யாராயினும் அவர் வாழும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய திணைகளின் உற்பத்தி உறவுகளில் விளையும் வெட்சி முதலான அவ்வத் திணைகள் துறைகளின் நோக்குநிலைகளே புறவாழ்வியல்.

உலகியல் வாழ்க்கை பொருளியலை அடிப்படையாகக் கொண்டது. பொருளியல் வாழ்க்கை அரசியல் போக்கின் அடிப்படையில் உருவாவது. எனவே, அரசியல் போக்கை அறவியல் நோக்கு நிலையில் அமைத்தால்தான் சமூக வாழ்வியல் சமூக வாழ்வியலாய் அமையும் என்பதைப் புறநானூற்றுப் புலவர் பெருமக்கள் தங்கள் பாடல்களின் அடிநாதமாக அமைத்துள்ளனர். போர் நிகழ்த்தும் நெறிகளை - போருக்கான படிநிலை வளர்ச்சிக் கூறுகளை - போரின் பரிணாம வளர்ச்சி நிலைகளை வெட்சி முதலான புறத்திணைகள் பாடுகின்றன. போரின் பரிமாணங்களை அவ்வத் திணைகள் சார்துறைகள் எடுத்துக் காட்டுகின்றன. இத்திணைகளைப் பாடுவதிலும், எந்தத் திணைகள் சமூக வாழ்நிலையைச் செம்மைப்படுத்துவனவோ அந்தத் திணைகளையே அதிகம் பாடியுள்ளனர் என்பது புறநானூற்றுப் புலவர்களின் சமூகநலச் சிந்தனைப் பார்வையைத் தெளிவுபடுத்துகின்றது.

## புறநானூற்றுத் திணை, துறை மரபுகள்

புறம் என்றாலே போர், வீரம் என்ற ஒரு பொதுக்கருத்து மக்களின் பொதுப்புத்தியில் ஏற்றப்பட்டுவிட்டது. போரையும் வீரத்தையும் தவிர்த்துப் புற இலக்கியங்களில் எவ்வளவோ சமூகச் சிந்தனைக் கூறுகள் உள்ளன என்பதை அழுத்தந் திருத்தமாகச் சொல்ல வேண்டியுள்ளது. போர்ச்சிறப்பு, வெற்றிச் சிறப்பு, வீரச்சிறப்பு ஆகியவற்றைப் பாடியுள்ளதே புறநானூறு, மிஞ்சிப் போனால் கூடுதலாகக் கொடைச் சிறப்பும் இடம் பெற்றுள்ளது என்பது ஒரு பொது நோக்கு நிலை. ஆனால், இவ்வாறு சில அலகுகளுக்குள் அகப்படாத ஏராளமான சமூக அலகுகளின் எண்ணம், சிந்தனை, எதிர்பார்ப்பு, ஏக்கம், சோகம். அழுகை, கோபம், ஏமாற்றம், இலக்கு எனப் பல்வேறு பரிமாணங்களைக் கொண்டதாகப் புறநானூறு விளக்குகிறது.

புறப்பொருள் வெண்பாமாலை கூறும் பன்னிரு புறத்திணைகளுள் உழிஞைத் திணையைத் தவிர்த்த 11 திணைகளுக்கான பாடல்களைக் கொண்டுள்ளது புறநானூறு வெட்சி - 5, வஞ்சி - 11, தும்பை - 27, வாகை - 77, காஞ்சி - 31, பாடாண் - 143, கரந்தை - 12, நொச்சி - 6, பொதுவியல் - 70, கைக்கிளை - 3, பெருந்திணை - 5 என ஆக மொத்தம் 398 பாடல்கள் புறநானூற்றில் அமைந்துள்ளன.

இவற்றுள் திணைகளில் பாடாண் திணையே மிகுதியாகப் பாடப் பெற்றுள்ளது. புறநானூற்றில் இடம் பெற்றுள்ள 65, துறைகளிலும் பாடாண் திணை சார்ந்த

இயன்மொழித் துறை மட்டும் 51 பாடல்களில் இடம் பெற்றுள்ளது. இத்திணைகளும் துறைகளும் தொல்காப்பியர் காலத்துக்கு முந்திய இலக்கணவாதிகளால் வீரம், போர் குறித்தன மட்டுமாகவே வரையறுக்கப்பட்டுள்ளது. தொல்காப்பியரும் அவருக்குப் பின்வந்த புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர் ஐயனாரிதனார் போன்றோரும் ஒவ்வொரு திணையினது புழங்கு தளங்களை மறப் பொருண்மைகளிலிருந்து அறப்பொருண்மைகளை நோக்கி நகர்த்தியுள்ளனர். புலவர்களும் தங்கள் பாடல்களில் இத்தகைய மாற்றங்களைப் பதிவு செய்துள்ளனர். இந்த மாற்றங்கள் அனைத்தும் சமூக மாற்றத்தின் விளைவுகளாகும். இனக்குழுச் சமூகமாக இருந்த சங்கச் சமூகம் நிலவுடைமைச் சமூகமாக வளர்ந்து, அந்த நிலவடைமைச் சமூகம் வணிக சமூகத்தின் கருக்களைத் தன்னகத்தே வளர்த்துக் கொண்டிருந்தது. இத்தகையில் சமூக மாற்றப் படிநிலை வளர்ச்சிக் கூறுகளைத் தன்னகத்தேக் கொண்டிருந்த காலம் சங்க காலமாகும்.

ஒவ்வொரு சமூக அமைப்பின் பன்முக வளர்ச்சிக்கும், பங்களிப்புச் செல்வோரைப் பாராட்டுதல் இயல்பே. அவ்வாறு, பாராட்டப் பயன்பட்ட திணைதான் பாடாண் திணை. எனவேதான், இத்திணைப் பாடல் எல்லாப் பகுதியின் தலைவர்கள், வள்ளல்கள் மீதும் பாடப்பட்டனவாகத் திகழ்கின்றன. போர்ச்சிறப்பு, வெற்றிச் சிறப்புகளை மட்டுமே பாடப்பட்டுவந்த பாடாண் திணையின் துறைப்பாகுபாடுகளில் அன்பு, அருள், ஈகை போன்ற உயர்ந்த பண்பு நலன்களும் இடம் பெற்றிருப்பதை இத்தகைய கண்ணோட்டத்தில் காணலாம். அதிலும் - அதாவது துறைப்பாகுபாட்டிலும் இயன்மொழி அதிகமாக இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. பாடப்படும் ஒருவரின் சிறப்புக்கும் இயல்புக்கும் அவர்களது முன்னோர்களின் மரபணு - இயல்புத் தொடர்ச்சி என்பதை மனங்கொண்டு, முன்னோர்களின் மேதக்க செயல்களை வீரன் ஒருவன் மீது ஏற்றிப் புகழ்வதே இயன் மொழி அதிகமாக இடம் பெற்றிருப்பதற்கான காரணமாகும்.

**இனக்குழு அறச்சமூகம்**

சங்கச் சமூகத்தின் தலைமை மாந்தர்களாக அறியப்படும் சிற்றூர் மன்னன், குறுநில மன்னர், முதுகுடி மன்னர், வேந்தர் ஆகிய நால்வரில் முதலிருவரும் இனக்குழுச் சமூகத்தவராவர், இறுதி இருவரில் ஒருவர் நிலவுடைமைச் சமூக

அமைப்பின் தொடக்ககாலத்தவர், அடுத்தவர் நிலவுடைமை சமூக அமைப்பின் முதிர்நிலைக் காலத்தவராவர். இவர்களுள், இனக்குழுச் சமூகத்தவர் பெரும்பான்மையோர் குறிஞ்சி, முல்லை நிலங்களிலும், சிறுபான்மையோர் மருதம், நெய்தல் நிலங்களிலும் வாழ்ந்து வந்திருக்க வேண்டும். நிலவுடைமைச் சமூகத்தவர் பலரும் மருத நிலத்தின் பரந்த பகுதிகளிலும் சிலர், பிற நிலங்களிலும் வாழ்ந்து வந்தனர். கிடைத்துள்ள சான்றுகளின் அடிப்படையில், புறநானூற்றின் 285 முதல் 335 வரையிலான பாடல்கள் சிற்றூர் மன்னர்களைப் பற்றியவை. இவர்கள் புன்செய் நிலப்பகுதியை ஆண்டவர்களாய்க் காணப்படுகின்றனர். 336 முதல் 335 வரையிலான பாடலக்ள் முதுகுடி மன்னர்களைப் பற்றியவை. இவர்கள் மருத நிலத்தை ஆண்டவராய் உள்ளனர். குறுநில மன்னர்கள் மலைக்குத் தலைவர்களாகவே உள்ளனர். வேந்தர்கள் பெரும்பான்மை மருத நிலப்பகுதிகளையும் சிறுபான்மை பிறநிலப் பகுதிகளையும் ஆண்டவர்களாகத் திகழ்கின்றனர்.

புறநானூற்றில் மிகச்சில பாடல்களே வெட்சி, கரந்தை, போர்களைப் பாடுவனவாய் உள்ளன. வெட்சிப் பாடல்கள் - 5, கரந்தைப் பாடல்கள் - 12, இவை அனைத்தும் பாடப்பட்டோர் பெயரில்லாப் பாடல்களாகவே உள்ளன. மூதின் முல்லை, வல்லாண் முல்லைப் பாடல்களும் பாடப்பட்டோர் பெயரில்லாப் பாடல்களாகவே உள்ளன. இவை அனைத்தும் சிற்றூர் மன்னர்கள் தமக்காக நிலங்கவர் போர்களில் ஈடுபட்டதாகச் சான்றொன்றும் இல்லை. ஆனால், வெட்சி, கரந்தைப் போர்களில் மிகுதியாக ஈடுபட்டுள்ளனர். போரிலும் ஈடுபடுவதிலும் வெட்சி, கரந்தைப் போர்களில் மட்டுமே ஈடுபடுவது என்ற அறத்தைப் பின்பற்றிய சமூகமாக இனக்குழுச் சமூகம் விளங்குகிறது என்பது தெளிவாகிறது.

## இனக்குழுச் சமூகத் தொழில்கள்

இனக்குழுவாக இணைந்து ஓரிடத்தில் தங்கிக் கூடிப் பேசிப் பகிர்ந்து வாழ்வதற்கு முன்னர் மனித சமூகம் நாடோடி - வேட்டைச் சமூகமாக இருந்து வந்துள்ளது. வேட்டைச் சமூகத்தின் பண்புகளும் தொழில்களும் இனக்குழுச் சமூகத்திலும் தொடர்ந்து இருந்து வந்துள்ளது. வாழ்வியலோடு வயிற்றியலோடு தொடர்புடைய தொழிலாக இருந்த வேட்டையாடுதலைப் புறநானூறு பரக்கப் பதிவு செய்துள்ளது.

மனித சமூகத்தின் முதற்கருவி கற்கருவி, முதற்கலங்கள் மட்கலங்களாகும். இவற்றைப் பயன்படுத்தி வேட்டைச் சமூகம் தன் வாழ்வியலைத் தகவமைத்துக் கொண்டுள்ளது. வேட்டுவர்களின் தலைவனான வல்வில் ஓரியின் வில்லாற்றலை வன்பரணார் புறநானூற்றில் 152வது பாடலில் பாடியுள்ளார். வேட்டுவச் சிறார்கள், விற்பயிற்சி செய்தமையை ஆவூர் கீழாரும் (புறநா.322) ஆலத்தூர் கிழாரும் (புற நா.324) ஆழகுறக் காட்டியுள்ளனர். வேட்டுவர்களின் குடியிருப்புகளுக்கருகே எயினப் பெண்கள் பறவைகளை வேட்டையாடி அவற்றைச் சுட்டுச் சமைத்து உண்டு மகிழ்ந்தனர் என்பதை ஆலங்குடி வங்கனாரும் (புறநா.319), வீரை வெளியனாரும் (புறநா.320) பாடியுள்ளனர்.

## 2.4 களப்பிரர்கள்

களப்பிரர் யார்? எங்கிருந்து வந்தவர்கள்? எப்போது தமிழகத்தில் நுழைந்தார்கள் என்னும் ஆய்வு இன்னும் முடிந்த பாடில்லை. களப்பிரரைக் களவர் என்றும், கள்வர் என்றும் தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. தொண்டை மண்டலம், சோழ மண்டலம், பாண்டி மண்டலம் ஆகியவற்றுள் ஒன்றேனும் இவர்களுடைய கொடுமையினின்றும் தப்பவில்லை. தமிழகத்துக்கு இவர்களால் ஏற்பட்ட குழப்பமும் இழப்பும் அளவிறந்தன. இவர்கள் கொடுங்கோலர்கள்; கலியரசர்கள். இவர்களைப் பற்றிய சில விளக்கங்கள் வேள்விக்குடிச் செப்பேடுகளிலும் பல்லவர்கள், சளுக்கர்கள் ஆகியவர்களுடைய செப்பேடுகளிலும் கிடைத்துள்ளன. கடுங்கோன் என்ற பாண்டிய மன்னன் ஒருவனாலும், சிம்ம விஷ்ணு, முதலாம் நரசிம்மவர்மன் என்ற பல்லவ மன்னர்களாலும், முதலாம் விக்கிரமாதித்தன், இரண்டாம் விக்கிரமாதித்தன் என்ற சளுக்க மன்னர்களாலும் களப்பிரர்கள் அழிவுற்றனர் என அறிகின்றோம். இவர்கள் கொடும்பாளூர் முத்தரையருடன் (கி. பி. 8-11ஆம் நூற்றாண்டு) தொடர்பு கொண்டவர்கள் எனச் சிலர் கருதுவர். மதுரையைச் சிறிது காலம் ஆண்டுவந்த கருநாடரே களப்பிரர்கள் என்றும் ஒரு கருத்து நிலவுகின்றது. தமிழ் இலக்கியத்திலும் கல்வெட்டுகளிலும் குறிப்பிடப்படுபவர்களும், வேளாள குலத்தைச் சார்ந்தவர்களுமான களப்பாளர் என்பர். களப்பிரர் என்ற பெயரில் விளங்குகின்றனர் என்று சிலர் ஊகிக்கின்றனர். இவ்வூகம் பொருத்தமானதாகத் தெரியவில்லை.

களவர் இனத்தைச் சேர்ந்தவனான புல்லி என்ற மன்னன் ஒருவன் வேங்கடத்தை ஆண்டுவந்தான். தமிழகத்திற்கு வடக்கே ஆட்சிபுரிந்த சாதவாகனரின் வீழ்ச்சியாலும், பல்லவர்களின் கை ஓங்கி வந்ததாலும், சமுத்திரகுப்தனின் படையெடுப்பினாலும் கி.பி. 3, 4 ஆம் நூற்றாண்டுகளில் தொண்டை மண்டலத்தில் மிகப் பெரியதோர் அரசியற் குழப்பம் ஏற்பட்டது. அப்போது வேங்கடத்தைச் சார்ந்து வாழ்ந்து வந்த களப்பிரர்கள் திடீரென்று குடிபெயர்ந்து தெற்கு நோக்கிப் பாய்ந்து பல்லவரையும், சோழரையும்,பாண்டியரையும் ஒடுக்கித் தமிழகத்தில் கலகமும் கொள்ளையும் கொலையும் விளைவித்தனர். சோழநாட்டைக் கைப்பற்றி ஆண்டு வந்தவன் களப்பிர மன்னனான அச்சுதவிக்கிராந்தன் என்பவன். தொண்டை நாட்டில் களந்தை என்னும் இடத்தில் கூற்றுவன் என்றொரு மன்னன் ஆண்டு வந்தனன் எனவும், அவனே கூற்றுவ நாயனாராகத் திருத்தொண்டத் தொகையில் இடம் பெற்றனன் எனவும் பெரிய புராணம் கூறும்." இவன் களப்பிர குலத்தைச் சார்ந்தவன் என்று சிலர் கொள்ளுகின்றனர். கருநாடக தேசத்துக் கல்வெட்டுகளில் கலிகுலன், கலிதேவன் என்னும் குறிப்புகள் காணப்படுகின்றன. கன்னட நாட்டுக் கலிதேவன் ஒருவனைப்பற்றிக் கொப்பரம் செப்பேடுகள் பேசுகின்றன. களபோரா என்னும் பெயருள்ள குலம் ஒன்று இருந்ததாக மைசூர் இராச்சியத்தின் பேலூர்க் கல்வெட்டு ஒன்று குறிப்பிடுகின்றது. களப்பிரர் என்போர் கன்னட நாட்டுடன் தொடர்பு கொண்டவர்களா என்று ஐயுறவும் இடமுண்டு.

களப்பிரர் முதலில் பௌத்தராகவும் பிறகு சமணராகவும் சமயச் சார்புற்றிருந்தனர். களப குலத்தைச் சார்ந்த அச்சுத விச்கிராந்தன் என்றொரு மன்னன் சோழ நாட்டைக் கைப்பற்றி அரசாண்டு வந்தான் என அறிகின்றோம். இவன் காலத்தில் புத்ததத்தர் என்ற பௌத்த அறிஞர் 'விநய விநிச்சயம்' என்னும் நூலைத் தாம் எழுதியதாகக் கூறுகின்றார். பிற்காலத்தில் களப்பிரர்கள் சமண சமயத்தைத் தழுவி அதன் வளர்ச்சிக்குத் துணைபுரியலானார்கள். களப்பிரர் காலத்தில் ஆக்கத் துறைகள் பலவற்றில் வளர்ச்சி காணப்பட்டது. பௌத்த சமண ஒழுக்கங்கட்குச் செல்வாக்கு உயர்ந்தது. பௌத்தரும் சமணரும் வைதிகச் சடங்குகளையும், வேள்விகளையும், ஆரிய சமயத்தவர்களையும் மறுத்தவர்கள். கொல்லாமை, புலால் உண்ணாமை, பொய்யாமை, பிறப்பினால் உயர்வு தாழ்வு காணாமை என்னும் உயர்ந்த அறங்களை

ஓம்பி வளர்த்தவர்கள். ஆயிரம் வேள்விகள் வேட்பதினும் ஓர் உயிரைக் கொல்லாமையே அறமாகும் என்று புத்தர் போதித்த அறத்தை வலியுறுத்தி வந்தனர் பௌத்தர்கள். நாடெங்கும் சமணப் பள்ளிகளும், பௌத்த விகாரைகளும் அமைக்கப்பட்டு வந்தன. மக்களுக்குள் ஒழுக்கத்தையும், அமைதியையும், பிற உயிர்கள்மாட்டு அன்பையும் வளர்ப்பதில் சமண பௌத்தத் துறவிகள் முனைந்து வந்தனர். பாண்டி நாட்டில் சமண நிர்க்கிரந்தர்கள் எண்ணற்றவர்கள் வாழ்ந்து வந்தனர் என யுவான் சுவாங் என்னும் சீன யாத்திரிகர் எழுதுகின்றார். இக் காரணங்களால் வேள்விகளையும், குல வேறுபாடுகளையும் படிகளாகக் கொண்டு உயர்ந்து வந்த வைதிக சமயம் தன் செல்வாக்கை இழந்து வந்தது.

களப்பிரர் காலத்தில் தமிழ் மொழிக்குத் தாழ்வும், பிராகிருதத்துக்கும் பாலி மொழிக்கும் அரசாங்கச் செல்வாக்கும் கிடைத்தன. எனினும் தமிழ், மன்னரின் ஆட்சி மொழி என்ற ஓர் உயர்நிலையினின்றும் இழிந்ததாயினும் சமயத்தையும் தத்துவத்தையும் ஒழுக்கத்தையும் பொதுமக்களுக்குப் புகட்டும் நிலைமையை எய்திற்று. தமிழில் போதித்தாலொழியத் தத்தம் சமயங்கள் மக்களின் கருத்தைக் கவரா எனப் பௌத்தரும் சமணரும் நன்கு உணர்ந்தனர்.

பூச்சியபாதர் என்பவரின் மாணவரான வச்சிரநந்தி என்பார் மதுரையில் 'திராவிட சங்கம்' ஒன்றை நிறுவினார் (கி.பி.470) சமண அறத்தைப் பரப்புவதும், சமணக் கொள்கைகளை விளக்கக் கூடிய நூல்களைத் தோற்றுவிப்பதுமே இச் சங்கத்தின் நோக்கமாகும். பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் பல இச் சங்க காலத்தில் இயற்றப் பெற்றவையாம். மணிமேகலையும் சிலப்பதிகாரமும் இக்காலத்தில் எழுந்தவையெனத் தோன்றுகின்றன. நீலகேசி, குண்டலகேசி, யசோதர காவியம், சீவக சிந்தாமணி ஆகிய காவியங்கள் தமிழில் தோன்றுவதற்குக் காரணமாக இருந்ததும் இத் திராவிட சங்கத்தின் தொண்டே காரணமாகும். எதையும் ஏற்றுக்கொள்ளும் விரிந்த உளப்பான்மையும். எப்பொருள் எத்தன்மைத்தாயினும். அப்பொருள் மெய்ப்பொருள் காணும் பண்பும் வாய்க்கப் பெற்றவர்கள் தமிழர்கள். தமிழர்கள் புறச் சமயத்தார்கள் மேற்கொண்ட தமிழ் வளர்ச்சிப் பணிகளைப் பாராட்டி ஏற்றுக்கொண்டனர். பௌத்த சமண அறவொழுக்கங்கள் பலவற்றையும் அவர்கள் பின்பற்றலானார்கள். தாம் எண்ணிய சமயத்தை எண்ணியாங்குத் தழுவிக்கொள்ளும்

பண்பாட்டைச் சிறப்புரிமையாகக் கொண்டிருந்தனர் என அறிகின்றோம். சமணரும், பௌத்தரும், வைதிகரும், ஏனையோரும் நெருங்கி நின்று, பூசலின்றி, இணைந்து வாழ்ந்து வந்தனர். ஆனால், சமயவாதிகளுக்குள் சொற்போர்கள் அவ்வப்போது ஆங்காங்கு நிகழ்வதுண்டு. குண்டலகேசி என்னும் பௌத்த காவியமும் நீலகேசி என்னும் சமணகாவியமும் இதை உறுதிப்படுத்துகின்றன. வஞ்சிமாநகரில் சமயக் கணக்கர் பலர் தத்தம் திறங்களை எடுத்துக் கூற மணிமேகலை அவற்றை எல்லாம் கேட்டதாகத் தெரிகின்றது. இளம் பெண்துறவி ஒருத்தியின் முன்பு தத்துவ அறிவில் சிறந்த பல்சமயச் சான்றோர் ஓரவையில் அமர்ந்து தத்தம் சமயக் கருத்துகளை எடுத்து வாதித்தார்கள் என்பதிலிருந்து அக் காலத்து மக்களின் அறிவின் உயர்ச்சியும், பண்பாட்டின் மேம்பாடும் தெற்றென விளங்குகின்றன. களப்பிரர் காலத்தில் வழங்கி வந்த பல்வேறுபட்ட சமயங்களுள் சிறப்பானவை வைதிகம், சைவம், பிரமவாதம், ஆசீவகம், நிகண்டம், சாங்கியம், வைசேடிகம், பௌதிகம் அல்லது உலோகாயதம் என்பன. இச் சமயங்களை வளர்த்த அறிஞர்கள் வாய்ப்பு நேர்ந்தபோது தத்தம் கொள்கைகளை மக்களுக்கு எடுத்து விளக்கி வந்தனர். எனினும், சமயப் போர்கள் ஏதும் நிகழவில்லை.

பௌத்தர்கள் கடவுள் ஒருவர் உளர் என்னும் கொள்கையை ஒப்புக்கொள்ளுவதில்லை. இக்காரணம் ஒன்றே பௌத்தத்துக்கு வேர்கொல்லியாக மாறிற்று. சமணர்கள், அருகனைக் கடவுளாக வழிபட்டனர். சமணக் கொள்கைகளை விளக்கக்கூடிய பல நூல்களை இவர்கள் தமிழிலேயே இயற்றிப் பொதுமக்கள், மன்னர்கள் ஆகிய அனைவருடைய கருத்தையும் கவர்ந்தனர். பௌத்தர்களைப் போலவே சமணரும் கொல்லாமையாகிய நோன்பை மேற்கொண்டவர்கள் எனினும் இவர்கள் வைதிகச் சமயத்துடனும் தொடர்புகொண்டு பௌத்தத்துக்கு மாறான சில வைதிகக் கொள்கைகளையும் சமணத்தில் ஏற்றுக்கொண்டனர். வாசுதேவனையும் பலதேவனையும் தம் தெய்வ வரிசையில் இவர்கள் சேர்த்துக் கொண்டனர். திருமகள் வழிபாடும் இவர்கட்கு உடம்பாடாக இருந்தது. சமணருக்கும் பௌத்தருக்கும் இடையிட்ட கருத்து வேறுபாடுகளின் காரணமாக அவர்களுக்குள் அடிக்கடி பூசல்கள் நேர்ந்தன. அவற்றில் சமணரின் கை ஓங்கி வந்தது. பௌத்தர்கள் காஞ்சிபுரம், காவிரிப்பூம்பட்டினம் போன்ற பெரிய நகரங்களில் மட்டும் விகாரைகள் அமைத்துச்

சமயப்பணி செய்து வந்தனர். ஆனால் சமணரோ நகரங்களிலும், நாட்டுப்புறங்களிலும், மலைக்குகைகளிலும், காடுகளிலும் படர்ந்து சென்று எண்ணற்ற சமணப்பள்ளிகள் நிறுவியும் தமிழில் அரிய இலக்கிய இலக்கணங்கள் இயற்றியும் பொதுமக்களுடன் மிகநெருங்கிய தொடர்பு ஏற்படுத்திக்கொண்டனர்.

இக் காரணத்தால் பௌத்தத்தின் செல்வாக்குக் குறைந்துகொண்டே வந்து இறுதியில் அச் சமயமானது நாட்டினின்றும் ஒருங்கே மறைந்து போகுமளவுக்கு அதன் நிலை குன்றிவிட்டது. பின்னர்ப் போட்டியில் எஞ்சி நின்ற சமணம் ஒன்றே சைவத்தையும் வைணவத்தையும் தனித்து நின்று எதிர்த்துப் போராட வேண்டிய நெருக்கடி நிலை ஏற்பட்டுவிட்டது. பௌத்தர் ஒருவர் மறைமுகமாகச் சிவனை வழிபட்டதாகவும் பெரியபுராணம் கூறுகின்றது.

சிவன் வழிபாடு தொன்றுதொட்டே தமிழகத்தில் வழங்கி வருகின்றது. சிவனையே முழுமுதற் கடவுளாகப் பண்டைய தமிழர் வழிபட்டுவந்தனர் எனச் சங்க இலக்கியச் செய்திகள் கூறுகின்றன. பல இடயங்களில் சிவனுக்குக் கோயில்கள் எழுந்தன. சிவனைப் பற்றிய புராண வழக்குகள் அத்தனையும் தமிழகத்தில் அப்போதே பரவிவிட்டன. சைவ வழிபாட்டில் அடிப்படையான கொள்கைகள் சில உண்டு. அவை: ஒருவன் செய்கின்ற வினை, வினையைச் செய்கின்றவன், செய்த வினையால் அவனுக்கு நேரிடும் விளைவுகள், வினைபுரிபவனையும் அவன் புரியும் வினையின் பயனையும் ஒன்று கூட்டும் கடவுள் ஆகிய நான்கு மெய்ப்பொருள்கள் ஆகும். சிவன் வழிபாடும், ஊழ்வினையில் ஆழ்ந்த உடன்பாடும் தமிழ்நாட்டில் ஊறிப் போயிருந்தமையால் கடவுள் இல்லை என்று திட்ட வட்டமாகக் கூறிய பௌத்த சமயத்துக்குச் செல்வாக்குக் குன்றிவந்ததில் வியப்பேதுமில்லை. அஃதுடன் பௌத்த சமயத் தலைவனான அச்சுத விக்கிராந்தன் கடுங்கோன் என்ற' பாண்டியனாலும், சிம்ம விஷ்ணு என்ற பல்லவ மன்னனாலும் ஒறுக்கப்பட்டு அவனுடைய ஆட்சிக்கு ஒரு முடிவு ஏற்பட்ட பிறகு பௌத்தத்துக்கு வெகு விரைவாக இறங்குமுகம் ஏற்பட்டு வந்தது.

## பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்

எட்டுத்தொகை பத்துப்பாட்டு மேல்கணக்கு நூல்கள் எனப்படும். நாலடி முதலாகக் கைந்நிலை ஈறாகப் பதினெட்டு நூல்களும் கீழ்க்கணக்கு எனப்படும். சங்க

காலம் கி.பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட காலமாகும். அதனை அடுத்துத் தோன்றிய இலக்கியங்கள் புதியதொரு மரபினைக் கொண்டுள்ளன. அவ்விலக்கியங்களைச் சங்கம் மருவிய நூல்கள் என்பர். நீதி நூல்கள் சிலவும், அகப்பொருள் புறப்பொருள் பற்றிய நூல்கள் சிலவும், இக்காலத்தில் தோன்றின. இவையே பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் எனப்பட்டன.

கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் களப்பிரர் ஆட்சி கால் கொண்டது. அக்காலத்தில் சங்க இலக்கியம் போன்ற குறிக்கோள் இலக்கியங்கள் வளரவில்லை. பெரும்பாலும் நீதி நூல்களே எழுந்தன. வெண்பா, ஆசிரியம், வஞ்சி, கலி, மருட்பா என்னும் பா வகையால் 50 முதல் 500 அடி வரையுள்ள செய்யுள்களை மேல் கணக்கு என்பர். கணக்கென்பது இலக்கியம் என்னும் பொருளுடையது. அறம், பொருள், இன்பம் எனும் மூன்றையும் ஐந்தடிகளுக்கு மிகாத செய்யுள்களால் அடுக்கிச் சொல்லுதல் கீழ்க்கணக்காகும், இவை பெரும்பாலும் வெண்பா வகையினவே.

அடிநிமிர் பில்லாச் செய்யுள தொகுதி
அறம்பொருள் இன்பம் அடுக்கி அவ்வகைத்
திறம்பட வருவது கீழ்க்கணக் காகும். - பன்னிருபடலம்

1. நாலடியார், 2. நான்மணிக்கடிகை, 3. இனியவை நாற்பது, 4. இன்னா நாற்பது, 5. கார் நாற்பது, 9. களவழி நாற்பது, 7. ஐந்திணை ஐம்பது, 8. ஐந்திணை எழுபது, 9. திணைமொழி ஐம்பது. 10. திணைமாலை நூற்றைம்பது 11. திருக்குறள், 12. திரிகடுகம், 13. ஆசாரக்கோவை, 14. பழமொழி, 15. சிறுபஞ்சமூலம், 16. முதுமொழிக்காஞ்சி, 17. ஏலாதி. 18. கைந்நிலை என்பன கீழ்க்கணக்கு நூல்களாகும். களப்பிரர்கள் காலத்தில் அற நூல்கள் அதிகம் தோன்றின என்பதை இதன் மூலம் அறியலாம்.

## தொகுப்புரை

- தமிழிலக்கியத்தின் தொன்மையான வரலாறு பாணர் மரபிலிருந்தே தொடங்குகிறது.
- வேளிர் குலத்தில் தோன்றியவர்களுள் கடையேழு வள்ளல்கள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றனர்.
- மூவேந்தர்கள் தமிழகத்தில் மிகப் பெரிய பேரரசினை நிறுவி, தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டு அரசாட்சி புரிந்துள்ளனர்.
- தமிழ் இலக்கியத்தில் அக, புற பண்பாடு மிக முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. இலக்கியங்கள் இதைப் பிரதிபலிக்கும் ஒன்றாக இருக்கிறது.
- களப்பிரர் ஆட்சியில் அற இலக்கியங்கள் அதிகளவில் தோன்றியுள்ளன.
- தமிழர்களின் அகப் பண்பாடு மற்ற மொழி இலக்கியங்களில் இல்லாத அளவில் தனித்தன்மையான அமைப்பைப் பெற்றுள்ளது.

## மாதிரி வினாக்கள்

### ஒரு மதிப்பெண் வினாக்கள்

1. பர்தான்கள் வாசிக்கும் பாரம்பரியமான இசைக்கருவி?

**அ) பாண** ஆ) பர்தானி இ) குழல் ஈ) மேளம்

2. வேளிர்கள் எங்கிருந்து தமிழகத்திற்கு வந்தனர்?

அ) மதுரா ஆ) ஆக்ரா **இ) துவாரகை** ஈ) குவாலியர்

3. அமைச்சர்களுக்குக் காவிதி என்னும் பட்டத்தை வழங்கியவர்கள்?

அ) சேரர் ஆ) சோழர் **இ) பாண்டியர்** ஈ) பல்லவர்

4. மடலேற்றம் பற்றிப் பாடிய ஆழ்வார்?

அ) நம்மாழ்வார் **ஆ) திருமங்கையாழ்வார்**

இ) பெரியாழ்வார் ஈ) பொய்கையாழ்வார்

5. புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பிடும் புறத்திணைகளின் எண்ணிக்கை?

அ) 7 ஆ) 10 **இ) 12** ஈ) 15

### ஐந்து மதிப்பெண் வினாக்கள்

1. பாணர்களின் வாழ்வுச் சிதைவு குறித்து எழுதுக.
2. வேள் – பேகன், வேள் – எவ்வி குறித்து எழுதுக.
3. இருக்குவேளிர் குறித்து எழுதுக.
4. தமிழரின் புற பண்பாடு குறித்து எழுதுக.

### பத்து மதிப்பெண் வினாக்கள்

1. சங்க காலப் பாண் மரபு குறித்துக் கட்டுரை வரைக

2. வேளிர் குல மன்னர்கள் குறித்து எழுதுக.

4. பண்டைத் தமிழர்களின் அகப் பண்பாடு குறித்து எழுதுக.

4. களப்பிரர்கள் தமிழகத்தில் செலுத்திய செல்வாக்குக் குறித்து எழுதுக.

## மாதிரி வினாக்களுக்கான விடைகள்

### ஒரு மதிப்பெண் வினாக்கள்

1. அ) பாண 2. இ) துவாரகை

3. இ) பாண்டியர் 4. ஆ) திருமங்கையாழ்வார் 5. இ) 12

………….

# அலகு – 3

## பல்லவர் காலத்தில் தமிழர் பண்பாடு (கி.பி 6 முதல் 9 ஆம் நூற்றாண்டு வரை) பல்லவர் ஆட்சி- கலைகளின் வளர்ச்சி- சிற்பம், ஓவியம் - கடற்கரைக் கோயில் – புடைப்புச் சிற்பங்கள் – பக்தி இலக்கியங்கள் உருவாதல்.

### முன்னுரை

இந்தியாவிலேயே மிகச் சிறந்த நகரங்களாக விளங்கியவை ஏழு என்பர். அவற்றுள் சிறந்தோங்கி வருவது காஞ்சிபுரமாகும். இங்குக் காணப்படும் நூற்றுக்கணக்கான கோயில்களும், குளங்களும் மறைந்துபோன பேரரசுகளையும், பேரரசர் களையும் நினைவூட்டுகின்றன. காஞ்சிமாநகரம் ஏறக்குறைய ஆறு நூற்றாண்டுக் காலம், கி. பி. மூன்று முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரையில், பல்லவரின் ஆட்சியில் இருந்துவந்தது. சங்க இலக்கியத்தில் பல்லவரைப் பற்றிய குறிப்பு ஒன்றும் காணப்படவில்லை. ஆனால், பல்லவர்கள் எழுதி வைத்துச் சென்ற கல்வெட்டுகள், எழுதிக் கொடுத்துள்ள செப்பேடுகள் ஆகியவற்றைக்கொண்டு அவர்களைப் பற்றிய வரலாற்றை ஒருவாறு கோவை செய்துகொள்ளலாம். பல்லவர்களுடைய கல்வெட்டுகள் மகேந்திரவாடி, தளவானூர், பல்லாவரம், திருச்சிராப்பள்ளி, திருக்கழுக்குன்றம், வல்லம், மாமண்டூர், மண்டகப்பட்டு, சித்தன்னவாசல். மாமல்லபுரம் ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பல்லவர்கள் முதன்முதல் பிராகிருத மொழியில் சாசனங்களைப் பொறித்து வந்தனர் (கி.பி. 250-350). பிறகு சமஸ்கிருத மொழியில் செப்பேடுகளையும் கல்வெட்டுகளையும் பொறிக்கும் வழக்கத்தை மேற்கொண்டனர். கல்வெட்டுக்கள் கி.பி. 7ஆம் நூற்றாண்டில் கிரந்த - தமிழ் எழுத்தில் எழுதப்பட்டன. இவர்களின் ஆட்சி சிறப்பையும் இவர்கள் வளர்த்த கலைகள் பற்றியும் இந்த அலகில் வரிவாகக் காணலாம்.

### 3.1 பல்லவர் காலத்தில் தமிழர் பண்பாடு

**பல்லவர் ஆட்சி**

பல்லவரின் அரசியல் முறைகள் ஆதியில் சாதவாகனரின் அரசியல் முறைகளுடனும், கௌடிலியரின் அர்த்தசாத்திரக் கோட்பாடுகளுடனும் மிக

நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது, பல்லவருடைய பண்பாடுகள் பலவும் தமிழ் மன்னனுடைய பண்பாடுகட்கு முற்றிலும் முரண்பாடாகக் காணப்பட்டன. அவர்கள் வடமொழியையே போற்றி வளர்த்தனர். இக் காரணங்களைக் கொண்டு பல்லவர் பரம்பரையின் தொடக்கம் தமிழகத்துக்குப் புறம்பாக ஏற்பட்டிருக்கவேண்டும் என்று ஆய்வாளர் சிலர் கருதுகின்றனர். சாதவாகனரின் ஆட்சி குன்றிவரும்போது பல்லவர்கள் தொண்டைமண்டலத்தைக் கைப்பற்றினார்கள் என்றும், அதற்கு முன்பு அவர்கள் சாகர்களுடன் இணைந்திருந்து மேற்கிந்தியப் பகுதிகளிலும், சிந்து வெளியிலும், 'பஹ்லவர்' அல்லது 'பார்த்தியர்' என்ற பெயரில் குடியேறி வாழ்ந்து வந்தார்கள் என்றும் ஒரு கருத்து நிலவுகின்றது. பல்லவர்களுடைய கல்வெட்டுகளிலும், செப்பேடுகளிலும் **பஹ்லவர்** என்னும் சொல்லே வழங்கப்படவில்லை. பல்லவர்கள் அசுவமேத யாகம் வேட்பது வழக்கமாகக் கொண்டிருந்தனர். ஆனால், பஹ்லவர்களிடம் இவ்வழக்கம் காணப்படவில்லை. அவர்கள் அந்நியப் பண்பாட்டினர். காஞ்சிபுரம் வைகுண்டப் பெருமாள் கோயிலில் யானையின் மத்தகத்தைப் போன்று வடிவமைக்கப்பட்ட உருவம் ஒன்று மணிமுடி சூடிய கோலத்தில் தீட்டப்பட்டுள்ளது. இதைக் கொண்டு பல்லவர்கள் பார்த்தியர்களைச் சேர்ந்தவர்கள் எனவும் கூறுவர். ஏனெனில், இந்தோ பாக்டிரிய மன்னனான டெமீட்டிரியஸ் என்பான் ஒருவனுடைய உருவம் அவனுடைய நாணயம் ஒன்றின்மேல் இத்தகைய முடியுடன் காட்சியளிக்கின்றது. இச் சான்று ஒன்றை மட்டும் கொண்டு பல்லவர்கள் பார்த்தியர்களைச் சேர்ந்தவர்கள் என்று கொள்வது பொருந்தாது.

தளவானூர்க் குகைக் கல்வெட்டுகளில் மகேந்திரவர்ம பல்லவனே 'தொண்டை' மாலை அணிந்தவன் எனக் குறிப்பிடப் படுகின்றான். பல்லவர்கள் சாதவாகனரின் கீழ்க் குறுநில மன்னராகவும், ஆட்சி அலுவலராகவும் செயற்பட்டு வந்தனர் என்றும், 'பல்லவர்' என்னும் சொல்லும் தொண்டையர் என்னும் சொல்லும் ஒரு பொருளையே குறிக்குமென்றும், சாதவாகனப் பேரரசு வீழ்ச்சியுற்ற பிறகு இப் பல்லவர்கள் காஞ்சிபுரத்தில் தம் பெயரில் ஆட்சிப் பரம்பரையொன்றைத் தொடங்கினர் என்றும், அதன் பின்னர்த் தொண்டையர் என்னும் பெயர் மறைந்து பல்லவர் என்னும்

பெயருக்கு இடங்கொடுத்தது என்றும் டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார் கருதுவார்.

பல்லவர்கள் தொண்டை மண்டலத்திலேயே தோன்றியவர்கள் என்னும் கொள்கைக்கும் போதிய சான்றுகள் எடுத்துக் காட்டப்படுகின்றன. மோரிய மன்னன் அசோகனின் குடி மக்களுள் புலிந்தர் என்றோர் இனத்தவரும் இருந்தனரென அப் பேரரசனின் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. அக்காலத்தில் தொண்டை மண்டலத்தில் குறும்பர் என்ற ஓரினத்தினர் வாழ்ந்து வந்தனர். இவர்களே அப் புலிந்தர்கள் போலும். வயலூர் என்ற இடத்தில் இராசசிம்மனின் தூண் கல்வெட்டு ஒன்று கிடைத்துள்ளது. அக் கல்வெட்டில் அசோகனின் முன் பரம்பரையைக் கூறிவரும்போதும் அசுவத்தாமாவின் பெயரையடுத்தும், அசோகன் பெயருக்கு முன்பும் 'பல்லவன்' என்னும் ஒரு பெயர் காணப்படுகின்றது. எனவே, அசோகனுக்கு முன்னே பல்லவப் பரம்பரை இருந்ததாக ஊகிக்க இடமுள்ளது. அசோகனின் கல்வெட்டுகள் சிலவற்றுள் புலிந்தர்கள் 'பலடர்' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளனர். பலடர் என்னும் சொல் காலப் போக்கில் பல்லவர் என்றும் மாறியிருக்கக் கூடும் என்றும் சிலர் எண்ணுகின்றனர். தொண்டை மண்டலம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து கி. பி. முதல் நூற்றாண்டு வரையில் மிகவும் புகழ்பெற்று விளங்கியதற்கு மணிமேகலை சான்று பகர்கின்றது. கரிகால் சோழன் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் பாலாற்றுக்குத் தென்புறத்திலிருந்த தொண்டை மண்டலப் பகுதியை வென்று சோழ நாட்டுடன் இணைத்துக் கொண்டான். அப்போது காஞ்சிபுரத்தில் வழங்கிவந்த மோரிய நிறுவனங்களை அவன் அழித்திருக்க முடியாது. ஏனெனில், பல்லவர்கள் சாதவாகனருக்குத் திறை செலுத்தி வந்தனர். ஆகையால், சாதவாகனருடைய பாதுகாப்பு காஞ்சிபுரத்துக்கு அரண் செய்தது. சாதவாகனரின் ஆட்சி கி.பி. 225-ல் வீழ்ச்சியுற்றது. அவர்களுக்குப் பின்னர்க் காஞ்சிபுரத்தில் பல்லவரே முழு ஆட்சிப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டனர்.

சிவஸ்கந்தவர்மன் கி.பி. நான்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில் காஞ்சிபுரத்தினின்றும் அரசாண்டான். அப்போது அவனுடைய அரசு வடக்கே கிருஷ்ணா நதியிலிருந்து தெற்கில் தென்பெண்ணைவரையில் பரவியிருந்தது. அவன் காலத்திய சாசனங்கள் பிராகிருத மொழியில் பொறிக்கப்பட்டன. ஸ்கந்தவர்மன் வழிவந்தவன் விஷ்ணுகோபன். அவன் ஏறத்தாழக் கி.பி. 350-375 ஆண்டுகளில் ஆட்சி

புரிந்தவன். சமுத்திரகுப்தன் என்ற மோரிய மன்னனிடம் தோல்வியுண்ட பன்னிரண்டு தட்சிணாபத அரசருள் விஷ்ணுகோபனும் ஒருவன். பல்லவ சமஸ்கிருதச் செப்பேடுகளில் பதினாறு மன்னரின் பெயர்கள் காணப்படுகின்றன. அவர்கள் கி.பி. 330-575 கால அளவில் ஆண்டு வந்தவர்கள். பல்லவ மன்னர் பரம்பரையில் முன்னே கூறப்பட்ட வீரகூர்ச்சா என்பவனும், பிறகு ஸ்கந்த சிஷ்யனும் ஆண்டகாலத்தில் காஞ்சிபுரத்தில் பிராமண கடிகைகள் நடைபெற்று வந்தன. சிம்மவிஷ்ணுவின் அரசாட்சியானது தெற்கில் கும்பகோணம் வரையில் விரிவுற்று நின்றது. இவனுடைய அரசவைப் புலவரான பாரவி என்பார் 'கிராதார்ச்சுனீயம்' என்னும் வடமொழிக் காவியத்தை இயற்றினார். சிம்மவிஷ்ணுவின் உருவமும், இவருடைய பட்டத்தரசிகள் இருவரின் உருவமும் மாமல்லபுரத்தில் புடைப்போவியங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன.

சிம்மவிஷ்ணுவுக்குப் பிறகு அவன் மகன் முதலாம் மகேந்திர வர்மன் (சு.கி.பி. 600-630) பட்டத்துக்கு வந்தான். இவனுக்கு விசித்திரசித்தன் என்றொரு விருது பெயருமுண்டு. பல்லவர் பரம்பரையிலேயே புகழ் ஏணியில் ஏறி நின்ற முதல் மன்னவன் மகேந்திரன்தான். இவன் காலத்தில்தான் பல்லவ சளுக்கப் போர்கள் தொடங்கலாயின. பல்லவர்களுக்கும் கடம்பர்களுக்குமிடையே நெருங்கிய நட்புறவு இருந்து வந்தது. சளுக்க மன்னனான இரண்டாம் புலிகேசியின் முன்னோர்கள் கடம்பரை வென்று அடிபணிய வைத்தனர். அதனால் கடம்பரின் நண்பர்களான பல்லவர்களுக்கும் சளுக்கர்களுக்கும் அடிக்கடி போரும் பூசலும் மூண்டு வந்தன, சளுக்கர்கள் வேங்கியைப் கைப்பற்றி மகேந்திரன்மேல் வெற்றிகண்டனர். காஞ்சிபுரத்தை அடுத்துள்ள புள்ளலூர் என்ற இடத்தில் மகேந்திரவர்மன் சளுக்கரை அழித்தான் என்று காசக்குடிச் செப்பேடுகள் கூறுகின்றன. இவன் செந்தகாரி (கோயில் கட்டுபவன்), மத்தவிலாசன் (இன்பம் விரும்புபலன்), சித்திரகாரப் புலி (ஓவியர்க்குப் புலி) என்ற விருதுகள் சிலவற்றையும் மேற்கொண்டான்.

## முதலாம் நரசிம்மமவர்மன் (சு. கி. பி. 630-668)

மகேந்திரவர்மனுக்குப் பிறகு அவன் மகன் முதலாம் நரசிம்மவர்மன் அரியணையேறினான். போரிலும் புகழிலும், தன் தந்தை மீனும் நரசிம்மவர்மன் மேம்பட்டு விளங்கினான். சளுக்கரின்மேல் அவன் பல வெற்றிகளைக் கொண்டான்.

மணிமங்கலத்தில் ஒரு முறையும், வாதாபியில் இரு முறையும் அவன் சளுக்க மன்னன் இரண்டாம் புலிகேசியின்மேல் போர்தொடுத்து மாபெரும் வெற்றி பெற்றான். இரண்டாம் வாதாபிப் போர் வரலாற்றுப் புகழ்பெற்றதாகும். அப்போரை நடத்தி வெற்றிவாகை சூடி வந்த படைத்தலைமையர் பரஞ்சோதியே, பிறகு சிறுத்தொண்ட நாயனாராகத் திருத்தொண்டத் தொகையில் இடம் பெற்றார். நரசிம்மவர்மன் இரண்டாம் வாதாபிப் போரில் அந் நகரைக் கைப்பற்றிய பிறகு புலிகேசி நீண்ட நாள் உயிர் வாழவில்லை. அவன் காலமான பிறகு (கி. பி. 642) சளுக்கர் நாட்டில் ஏற்பட்ட குழப்பத்தின் காரணமாக அந் நாட்டின் தென்பகுதிகள் பதின் மூன்று ஆண்டுகள் பல்லவரின் ஆட்சியில் இருந்து வந்தன. அக் கால அளவில் மூன்று அரசர்கள் சளுக்க அரியணைமேல் அமர்ந்து ஆட்சி புரிந்து வந்தனர் என விக்கிரமாதித்தன் கல்வெட்டுகள் கூறுகின்றன. அம் மூவரும் பல்லவனுக்கு அடிபணிந்திருந்தனர் போலும். இரண்டாம் புலிகேசியினிடம் ஹர்ஷவர்த்தனன் தோல்வியுற்றுத் தன் வீரத்துக்குக் களங்கம் கற்பித்துக் கொண்டான். அதே புலிகேசியை வென்று வாகை சூடி முதலாம் நரசிம்மவர்மன் தன் தந்தைக்கு ஏற்பட்ட இழுக்குக்குக் கழுவாய் கண்டான்; 'வாதாபிகொண்டான்' என்னும் ஒரு விருதையும் பெருமையுடன் புனைந்துகொண்டான்.

முதலாம் நரசிம்மவர்மனிடம் மாபெரும் கடற்படை ஒன்று இருந்தது. அதன் துணையைக்கொண்டு இருமுறை இலங்கை யின்மேல் படை செலுத்திச் சென்று வெற்றி கண்டான். அவன் தன் நண்பன் மானவர்மன் என்ற சிங்கள மன்னனுக்கு இலங்கையின் அரசுரிமையை வழங்கினான் (கி.பி. 631). இந் நரசிம்மவர்மன் சிவனிடத்தில் பெரிதும் ஈடுபாடுடையவன். மாமல்லபுரத்துச் சிற்பங்களைப் படைத்துத் தமிழகத்து வரலாற்றில் அழியாத புகழிடத்தைப் பெற்றுக்கொண்டான். இவன் காலத்தில் சீன யாத்திரிகன் யுவான் - சுவாங் காஞ்சிபுரத்துக்கு வந்திருந்தான் (கி.பி. 640). அவனுடைய குறிப்புகளிலிருந்து அவன் கண்ட தொண்டை மண்டலத்தைப் பற்றிய செய்திகள் பல கிடைக்கின்றன. காஞ்சிபுரம் ஆறு மைல் சுற்றளவு இருந்தது. அக் காலத்துத் தமிழகத்து நகரங்களுள் இது மாபெரும் நகரமாகக் காட்சி அளித்தது. அந் நகரில் நூறு பௌத்தப் பள்ளிகள் நடைபெற்று வந்தன. அங்குப் பதினாயிரம் பிக்குகள் தங்கி அறம் வளர்க்க வசதிகள் அமைக்கப்பட்டிருந்தன. இப்பள்ளிகளில்

பெரும்பாலன திகம்பரப் பிரிவைச் சார்ந்தவை. தமிழகத்தில் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் பௌத்தத்துக்குச் செல்வாக்குக் குன்றியது. நாலந்தாப் பல்கலைக் கழக ஆசிரியர் தருமபாலர் என்பார் காஞ்சிபுரத்திலிருந்து பயின்று சென்றவர்தாம். அக் காலத்தில் தொண்டை மண்டலத்து மக்கள் கல்வியறிவுக்கும் சமயவளர்ச்சிக்கும் அளித்திருந்த செல்வாக்கின் உயர்ச்சியை இதனால் நாம் நன்கு அறிந்து கொள்ளுகின்றோம்.

முதலாம் நரசிம்மவர்மனுக்குப் பின்னர் அவன் மகன் இரண்டாம் மகேந்திரவர்மன் பல்லவ அரசனாக முடிசூட்டிக் கொண்டான். இவன் ஈராண்டுகளே அரசாண்டான் (சு.கி.பி. 668-670). அவன் வருணாசிரம தருமத்தை நிலைநாட்டினான் எனவும், கடிகைகளை வளர்த்தான் எனவும் கல்வெட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன. அவன் சளுக்க மன்னன் விக்கிர மாதித்தனுடன் போரில் ஈடுபட்டிருந்தான் என்று அறிகின்றோம்.

இரண்டாம் மகேந்திரனுக்குப் பின்பு அவனுடைய மகன் முதலாம் பரமேசுவரவர்மன் (சு.கி.பி.670 -695) அரசாண்டான். சளுக்க மன்னன் தொடர்ந்து பல்லவருக்குத் தொல்லை கொடுக்கலானான். சளுக்க மன்னன் விக்கிரமாதித்தன் கைகளில் பரமேசுவரவர்மன் தோல்வியுற்றான் எனவும், பல்லவ குடும்பத்தையே சளுக்கர்கள் வேரறுத்துவிட்டனர் எனவும் விக்கிரமாதித்தனுடைய கடவால் செப்பேடுகள் (கி. பி. 674) தெரிவிக்கின்றன. அவன் காவிரியின் தென்கரையில் உள்ள உறையூரிலிருந்து அவ்வேடுகளை எழுதி வழங்கியதாகவும் அவற்றினின்றும் அறிகின்றோம். ஆனால், பல்லவருடைய சாசனக் குறிப்புகள் கடவால் செப்பேடுகள் கூறும் செய்திக்கு முற்றிலும் முரணாகக் காணப்படுகின்றன. திருச்சிக்கு அண்மையில் பெருவளநல்லூரில் பல இலட்சம் சேனையுடன் போராடிய விக்கிரமாதித்தனைப் பல்லவ மன்னன் வென்று, அச்சளுக்க மன்னன் சுற்றிய கந்தையுடன் போர்க்களத்திலிருந்து ஓடச் செய்தான் என்று கூரம் செப்பேடுகள் கூறுகின்றன. பரமேசுவரவர்மன் சிறந்த சிவத்தொண்டன். காஞ்சிபுரத்திற்கு அண்மையில் கூரம் என்ற இடத்தில் சிவன்கோயில் ஒன்று எழுப்பினான்.

முதலாம் பரமேசுவரவர்மனுக்குப் பிறகு அவன் மகன் இரண்டாம் நரசிம்மவர்மன் இராசசிம்மன் (சு.கி.பி. 095-722) மணி முடி சூட்டிக்கொண்டான். இவனுடைய கல்வெட்டுகள் அனைத்தும் சமஸ்கிருதத்திலேயே

பொறிக்கப்பட்டுள்ளன. இவன் ஏறக் குறைய இருநூற்றைம்பது விருதுகளைத் தன் பெயருடன் இணைத்துக் கொண்டான். அவற்றுள் சிறப்பானவை இராசசிம்மன், சங்கரபத்தன், ஆகமப்பிரியன் என்பனவாம். பிராமணரின் கடிகைகளின் வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிந்து வந்தான். மேலும், பல சிறப்புகளை இவனுடைய ஆட்சியில் காண்கின்றோம். சீன தேசத்துக்குத் தூது ஒன்றை அனுப்பிப் படைத்துணை பெற்றுத் திபேத்தின்மேல் போர்தொடுத்தான். இரண்டாம் நரசிம்மவர்ம பல்லவனின் ஆட்சி சில தீவுகளிலும் செலுத்தப்பட்டு வந்தது. அஃதுடன் கிழக்கிந்தியத் தீவு இராச்சியங்களுடன் இவன் நட்புறவு வைத்திருந்தான்.

இவ்விரண்டாம் நரசிம்மவர்மன் காலத்தில் காஞ்சிபுரத்தில் வாழ்ந்திருந்த தண்டி என்ற வடமொழிப் புலவர் தமிழில் அணியிலக்கணம் ஒன்றை இயற்றியுள்ளார். அது அவர் பெயராலேயே 'தண்டியலங்காரம்' என்று வழங்கி வருகின்றது. இப் பல்லவ மன்னன் பனைமலை, மாமல்லபுரம் ஆகிய இடங்களிலும் கற்றளிகள் எழுப்பியுள்ளான். மாமல்லபுரம் நகரமே இவன் காலத்தில் அமைக்கப்பட்டதுதான். அங்கு ஒரே பாறையில் குடையப்பட்டுள்ள கோயில்களும் சிற்பங்களும் கடற்கரைக் கோயிலும் இவன் காலத்தில் செதுக்கப்பட்டவையேயாம். இம் மன்னனுக்குப் பெரும் புகழையும், சைவசமயத்தில் என்றும் அழியாத இடத்தையும் பெற்றுக் கொடுத்தது காஞ்சிபுரத்தில் இவன் எழுப்பிய கைலாசநாதர் கோயிலாகும். திருத்தொண்டத் தொகையில் நாயன்மார்களுள் ஒருவராகச் சேர்க்கப்பட்டிருக்கும் பூசலார் நாயனார் திருநின்றவூரில் சிவபெருமானுக்குத் தம் நெஞ்சிலேயே கோயில் ஒன்றை எழுப்பிய காலத்தில் காஞ்சிபுரத்தில் கற்றளி ஒன்றை இம் மன்னன் கட்டி, அதில் சிவ பெருமானை எழுந்தருளுவித்தான் எனப் பெரியபுராணம் கூறும். திருத்தொண்டத் தொகையில் கழற்சிங்க நாயனாராகச் சேர்க்கப்பட்டுள்ள மன்னன் இந் நரசிம்மவர்ம பல்லவன்தான். இவனுக்கு அழகில் சிறந்த மனைவியர் இருவர் இருந்தனர். ஒருத்தி நடனத்தில் மிகவும் வல்லவள். அவள் பெயர் அரங்கப் பதாகை.

இரண்டாம் நரசிம்மவர்மனுக்குப் பிறகு அவன் மகன் இரண்டாம் பரமேசுவரவர்மன் (கி.பி. 722-730) பட்டமேற்றான். இவன் நீண்ட நாள் அரசாட்சியில் நீடித்திருக்கவில்லை. இவனுடைய ஆட்சியின் இறுதியாண்டுகளில் சளுக்கர்கள் பல்லவரின்மேல் மீண்டும் படையெடுத்தனர். விளந்தை என்ற ஊரில் நடை பெற்ற

போரில் இவனைக் சங்க மன்னன் ஸ்ரீ புருஷன் என்பான் கொன்றான். பரமேசுவரன் இறந்த பிறகு நாட்டில் அரசுரிமைக் குழப்பம் ஒன்று ஏற்பட்டது. அரசுரிமையை ஏற்று அரியணை ஏற யாருமே முன்வரவில்லை. அந்த நேரத்தில் பல்லவரின் இளைய பரம்பரையைச் சேர்ந்த இரணியவர்மனிடம் மக்கள் முறையிட்டுக் கொண்டனர். அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி அவன் பன்னிரண்டு வயதே நிரம்பிய தன் மகன் பரமேசுவரனுக்கு முடி சூட்டுவிக்க ஒப்புக்கொண்டான். இச் சிறுவன் இரண்டாம் நந்திவர்ம பல்லவன் என்ற பெயரில் அரசுகட்டில் ஏறினான் (கி. பி. 730 - 795). வைகுண்டப் பெருமாள் கோயில் கல்வெட்டு ஒன்று இச் செய்தியைத் தெரிவிக்கின்றது.

பல்லவ சளுக்க பாண்டியரின் கல்வெட்டுகளிலிருந்து நந்தி வர்மனின் ஆட்சியைப்பற்றிப் பல அரிய செய்திகளை அறிந்து கொள்ளுகின்றோம். அரிய வாய்ப்பு ஒன்று பழுத்துத் தன் மடியில் விழக்கண்ட சளுக்க மன்னன் இரண்டாம் விக்கிரமாதித்தன் காஞ்சிபுரத்தின்மேல் படையெடுத்து வந்து (கி.பி. 740) அதை எளிதில் கைப்பற்றிக்கொண்டான். நந்திவர்மன் காஞ்சியைக் கைவிட்டுத் தோற்றோடிவிட்டான். விக்கிரமாதித்தன் நகரத்தையும் கோயில்களையும் அழிக்கவில்லை. கோயில்களின் சிற்ப அழகுகளில் சொக்கி அவற்றுக்குப் பொன்னையும் பொருளையும் வாரி வழங்கினான். முந்திய தாக்குதலில் அவற்றினிடமிருந்து சளுக்கர்கள் கைப்பற்றிச் சென்றிருந்த விலையுயர்ந்த அணிகலன்களை அவற்றுக்கே திருப்பி அளித்துவிட்டான். அஃதுடன் அமையாமல் தமிழகத்துக் கைதேர்ந்த சிற்பிகளைத் தன் நாட்டுக்குக் கூட்டிச் சென்று பட்டடக்கல் முதலிய இடங்களில் தமிழகத்துச் சிற்ப அழகுகள் ததும்பும் வகையில் பல கோயில்களையும் எழுப்பினான்.

நந்திவர்மன் சிறந்த போர்த்திறம் படைத்தவன். நந்தி போத்தரசன், நந்தி விக்கிரமவர்மன், விசயநந்தி விக்கிரமவர்மன் என்று பல பெயர்கள் இவனுக்கு உண்டு. நந்திக் கலம்பகத்தில் தெள்ளாறெறிந்த நந்திவர்மன் எனப் பாராட்டப்படுபவன் இவனே யாவான். தெள்ளாற்றில் மட்டுமன்றி, வெள்ளாறு. கடம்பூர், வெறியலூர், தொண்டி, பழையாறு ஆகிய இடங்களில் தன் பகைவரைப் பொருது வெற்றிகண்டான் இவன் என நந்திக் கலம்பகம் கூறுகின்றது. கொங்கு நாடும், சோழ நாடும் இவனுக்குத் தோற்று அடிபணிந்தனவாகையால் இவனுக்குக் "கொங்கன்' என்றும் 'சோணாடன்'

என்றும் விருதுகள் எய்தின. மூன்றாம் நந்திவர்மன் கி.பி. 862 ஆம் ஆண்டளவில் இரண்டாம் வரகுண பாண்டியனுக்குத் துணையாக இலங்கை மன்னன்மேல் போர் தொடுத்தான். இவனுக்குப் பக்கபலமாக நின்று அப் போரை நடத்திக் கொடுத்தவன் இளவரசன் நிருபதுங்கன் ஆவான். மூன்றாம் நந்திவர்மன் நந்திக் கலம்பகத்தில் அவனி நாராயணன் என்றும், ஆட்குலாம் கடற்படை அவனி நாரணன் என்றும், நுரை வெண்திரை நாற்கடற்கு ஒரு நாயகன் என்றும் பாரட்டப் பெறுகின்றான். மல்லையிலும் மயிலையிலும் துறைமுகங்கள் அமைந்திருந்தன. இப் பல்லவ மன்னன் கடல் கடந்து சென்று அயல்நாடுகளுடன் தொடர்பு கொண்டிருந்தான் என்பது விளக்கமாகின்றது.

மூன்றாம் நந்திவர்மனையடுத்து அவன் மூத்த மகன் திருபதுங்கன் முடிசூட்டிக்கொண்டான். இவனுடன் பிறந்த தம்பியின் பெயர் கம்பவர்மன் என்பது. இவனுடைய மாற்றாந் தாய் வயிற்றுப் பிறந்த அபராஜிதன் நிருபதுங்கன்மேல் அரசுரிமைப் போர் தொடுத்து அவன்மேல் திருப்புறம்பயம் என்ற இடத்தில் வெற்றி கண்டான்(சு. கி. பி. 895). இப் போரில் இவனுக்குக் கங்கரும் சோழரும் துணை நின்றனர். இப் போர் முடிவுற்ற பிறகு இருபத்தாறு ஆண்டுகள் வரையில் நிருபதுங்கனைப் பற்றிய செய்தியே கிடைக்கவில்லை. அவன் தன் நாற்பத்தொன்பதாம் ஆட்சியாண்டில் நாட்டிய கல்வெட்டு ஒன்று திருத்தணிகைக்கு அண்மையிலுள்ள மடவளம் என்னும் ஊரில் காணப்படுகின்றது.

## பல்லவர்களின் நிருவாக முறை

உலகம் வியக்கும் வண்ணம் சிறந்த ஆட்சி முறையினைப் பெற்றிருந்த பாரம்பரியத்தை உடையது தமிழ்நாடு. எவ்வாறு எனில் சங்க காலத்தில் தமிழகத்தில் சிறந்ததொரு நிருவாக முறை இருந்ததாக ஆராய்ச்சியாளர் கூறுவர். அப்போது தமிழகம் சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு என முப்பெரும் பிரிவுகளாகப் பிரிந்து காணப்பட்டது. இருப்பினும் அம்மூன்று நாடுகளிலும் நல்லதொரு ஆட்சி நடைபெற்று வந்தது. மன்னர்கள் அறம் தவறாமல் நாட்டு மக்களை வழிநடத்திச் சென்றனர். இவ்வாறான பல்லவர் ஆட்சி பிற்காலச் சோழர்கள் நல்லதொரு நிருவாக முறையை அவர்கள் நாட்டில் ஏற்படுத்துவதற்குத் துணை நின்றது எனலாம்.

## மத்திய அரசாங்கம்

மத்திய அரசாங்கம் என்று கூறும்போது மன்னன், அமைச்சர்கள், அதிகாரிகள் போன்றோர் ஆட்சிப் பொறுப்பை ஏற்று வந்தனர்.

### மன்னன்

பேரரசின் தலைவனாக மன்னன் விளங்கினான். அரச பதவி பரம்பரை பரம்பரையாகச் சென்றது. குறிப்பாக மூத்த மகன் அரச பதவியை ஏற்றான். அரசனுக்கு வாரிசு இல்லையென்றால் உறவினர் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் வழக்கம் நிலவியது. சில சமயங்களில் மக்களே மன்னனைத் தேர்ந்தெடுத்தனர். இதனை இரண்டாம் பரமேசுவரவர்மன் மகன் சித்திரமாயன் மன்னன் ஆவதற்குத் தகுதியற்றவன் எனக் கருதப்பட்டு, வாரிசு உரிமைப் போர் தொடங்கி முடிவில் இரண்டாம் நந்திவர்மன் மன்னன் ஆன நிகழ்ச்சி காட்டுகிறது. துவக்கத்தில் வாரிசு உரிமைப் போர் எதுவும் ஏற்படாவிட்டாலும், பிற்காலத்தில் வாரிசு உரிமைப் போர் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டது. மன்னன் இறைவனுக்குச் சமமாகக் கருதப்பட்டான். இருப்பினும் மன்னன் மரபுகளுக்கும் நெறிமுறைகளுக்கும் கட்டுப்பட்டவன் ஆனான்; நிருவாகம், இராணுவம் போன்றவைகளுக்குத் தலைவனாக விளங்கினான்; மேலும் நீதியின் இருப்பிடமாகத் திகழ்ந்தான். இருப்பினும் ஒரு சில அரசர்கள் ஆட்சியின்போது நெறிமுறை தவறி வாழ்ந்தது உண்டு.

### அமைச்சர்கள்

அரசனுக்கு ஆலோசனை வழங்குவது அமைச்சர்களது கடமையாகும். அவர்கள் அரசியலில் அரசனுக்குத் துணை புரிந்து வந்தனர். அரசனின் ஆணையை அமைச்சர்கள் செயல்படுத்திக் கொண்டிருந்தனர். மேலும் அயல்நாட்டுக் கொள்கையை வகுப்பது அவர்களின் முக்கியமான கடமைகளில் ஒன்றாக விளங்கியது. ஆமாத்தியர் என்ற அமைச்சர் குழு மன்னனுக்கு இருந்தது. இரண்டாம் நந்திவர்மனது தலைமை அமைச்சர் பிரம்மஸ்ரீ ராஜன், மூன்றாம் நந்திவர்மனது அமைச்சர்கள் நண்பன் இறையூர் உடையன், தமிழ்ப் பேரரரையன் ஆகியோர் பெயர்களைக் கல்வெட்டுகளில் நாம் காணமுடிகிறது. தகுதியுடைய பிராமணப் பெருமக்களும், வேறு பெருமக்களும் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர் என்பதும் தெரியவருகிறது.

## அதிகாரிகள்

பல்லவர் ஆட்சியல் பல நிருவாகத் துறைகள் காணப்பட்டன. அதுபோன்ற துறைகளுக்கு அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். ரகசியகர்த்தா என்ற உயர் அதிகாரி பல்லவ அரசருக்கு அந்தரங்கச் செயலாளராக விளங்கினான். வருவாய், நிலவரித்திட்டம், நில அளவை போன்ற துறைகளுக்கு அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். இவர்களுக்கு உதவுவதற்குக் கிராம அதிகாரி, கால்நடை அதிகாரி, வன அதிகாரி, படை அதிகாரி போன்றோர் செயலாற்றினர். சாசனங்களைச் செப்பேடுகளில் பொறிக்கும் பொறுப்பை மேற்கொண்டிருந்த அலுவலர் தபதி எனப்பட்டான். தானங்களையும், நிவந்தங்களையும் ஆவண வடிவத்தில் எழுதுபவன் காரணத்தான் அல்லது காரணிகன் எனப்பட்டான். இன்று கிராமங்களில் கர்ணம் எனக் கூறுப்படுபவன் காரணிகனே ஆவான்.

## நாட்டுப் பிரிவுகள்

பல்லவர் ஆட்சியில் நிருவாக நலன் கருதிப் பல நிலப் பிரிவுகளாகப் பேரரசு பிரிக்கப்பட்டிருந்தது. பேரரசு மண்டலங்களாகவும், மண்டலங்கள் கோட்டங்களாகவும், கோட்டங்கள் நாடுகளாகவும், நாடுகள் ஊர்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. மண்டல நிருவாகம் ஆளுநர்களின் தலைமையின் கீழ் இருந்தது. நாளடைவில் இவ்வாளுநர்கள் வழிவழியாக அம்மண்டலங்களை வழிநடத்திச் செல்லலாயினர். ஒரு காலகட்டத்தில் பல்லவப் பேரரசின் வடக்கிலும் தெற்கிலும் பகைவர்கள் அதிகமாக நெருங்கிக் கொண்டிருந்த காரணத்தால் இந்த ஆளுநர்களுக்குப் பல்லவப் பேரரசர்கள் அதிக அதிகாரம் வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

## உள்ளாட்சி முறை

சோழர்கள் காலத்தில் கனிந்த ஊராட்சி முறை சங்க காலத்தில் முளைத்துப் பின் பல்லவர், பாண்டியர் ஆட்சிக் காலங்களில் வளர்ந்து கொண்டிருந்தது எனலாம். பல்லவர் காலத்தில் நாடுகளிலும், ஊர்களிலும் சபைகள் அல்லது அவைகள் காணப்பட்டன. ஒவ்வொரு சபையிலும் மக்கள் பிரதிநிதிகள் ஆகிய உறுப்பினர்கள் இருந்தனர். அவர்கள் ஆள்வார் அல்லது பெருமக்கள் என அழைக்கப்பட்டனர். கல்வி அறிவு உடையவர்கள் அதுபோன்ற பொறுப்பில் இருந்தனர். ஊர் அவையில் பல பிரிவுகள் இருந்தன. ஒவ்வொரு பிரிவும் வாரியம் எனப்பட்டது. அவ்வகையான

வாரியங்களுள் ஏரிவாரியம், கோயில் வாரியம் முதலியன முக்கியமானவைகளாக இருந்தன. அவ்வாரியங்கள் தனித்தனி நிருவாகப் பொறுப்பினை ஏற்றிருந்தன. பொதுவாகப் பெருமக்கள் என்று அழைக்கப்படும் ஆள்வார் ஊரின் உழவுத் தொழிலுக்கான பாசனம், கோயில் பணி, அறங்கூறல் முதலிய பல்வேறு பணிகளைக் கவனித்து வந்தனர்.

## வரி

நாட்டினை நல்ல முறையில் நடத்திச் செல்ல வேண்டும் என்றால் அந்நாட்டிற்கு வருவாய் தேவை. இந்த வருவாய் இன்றியமையாதது என்பதை உணர்ந்த பல்லவப் பேரரசர்கள் பதினெட்டு வகையான வரிகளை நாட்டு மக்களிடம் இருந்து வசூலித்தனர். இதற்கான சான்றுகளை நாம் அவர்களது பட்டயங்களைக் கொண்டு அறிந்து கொள்ளலாம். தென்னை, பனை, பாக்கு ஆகிய மரங்களைப் பயிரிடும் உரிமை பெற அரசாங்க வரி விதிக்கப்பட்டது. கள் இறக்கவும், சாறு இறக்கவும், பனம்பாகு காய்ச்சவும், கடைகளில் பாக்கு விற்கவும் வரி விதிக்கப்பட்டது. நூல் நூற்போர், வலைஞர், ஆடை நெய்வோர், கால்நடை வைத்துத் தொழில் செய்வோர் வரி செலுத்தி வந்தனர். நிலங்கள் அளந்து திட்டமிடப்பட்டன. நிலங்களை அளப்பதற்குத் தனி அதிகாரிகள் இருந்தனர். அரசின் வருவாயில் நிலவரியே முக்கிய இடத்தை வகித்தது. கோயில்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட நிலங்களுக்குத் தேவதான நிலம் என்று பெயர். இதுபோன்ற நிலங்களுக்கு வரிவிலக்கு இருந்தது.

## நில அளவைகள்

பல்லவர் காலத்தில் விளங்கிய நில அளவைகள் குழி, வேலி என்பன. குறிப்பிட்ட நிலத்தை அளந்து, கள்ளி, கல் போன்றவற்றை நட்டு அதன் எல்லைகளை வகுத்தனர். மேலும் கலப்பை, நிவர்த்தனம், பட்டிகா, பாடகம் என்பனவும் நில அளவைகளாக வழங்கின. நிவர்த்தனம் என்பது 100 அல்லது 125 முழம் அளவுள்ள ஒரு கோல், இது நிலத்தை அளப்பதற்காக அக்காலத்தில் பயன்படுத்தப்பட்டது.

### முகத்தல் அளவைகள்

முகத்தல் அளவைகளாகக் கருநாழி, நால்வாநாழி, மாநாய நாழி, பிழையா நாழி, நாராய நாழி, உழக்கு மற்றும் சிறிய அளவைகளான பிடி, சோடு, மரக்கால், பதக்கு, குறுணி, காடி, கலம் என்பனவும் பயன்பட்டன.

### நிறுத்தல் அளவைகள்

பொன் நிறுக்கும் அளவைகளாகக் கழஞ்சு, மஞ்சாடி என்பன இருந்தன.

### நாணயங்கள்

பல்லவர் காலத்து நாணயங்கள் பொன்னாலும், வெள்ளியாலும், செம்பாலும் செய்யப்பட்டிருந்தன.

### நீதித்துறை

பல்லவப் பேரரசில் நீதித்துறையின் தலைமையிடத்தை மன்னரே வகித்தார். கோட்டங்களிலும், கிராமங்களிலும் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டிருந்தன. காஞ்சி போன்ற பெரு நகரங்களில் இருந்த நீதிமன்றங்கள் அதிகரணங்கள் எனப் பெயர் பெற்றன. அவற்றின் தலைவர்கள் அதிகரண போசகர் எனப்பட்டனர். சிற்றூரில் இருந்த நீதிமன்றங்கள் கரணங்கள் எனப்பட்டன. அதன் தலைவர்கள் கரண அதிகாரிகள் எனப்பட்டனர். சிற்றூரில் இருந்த மன்றங்களில் வழக்குகளை ஆட்சி (Traditional evidence), ஆவணம் (Document evidence), அயலார் காட்சி (Eye witness) ஆகிய சான்றுகளின் அடிப்படையில் விசாரித்துத் தீர்ப்புக் கூறினர்.

### படை

கதம்பர், சாளுக்கியர், பாண்டியர் ஆகியோர் பல்லவப் பேரரசினைச் சிதைவுறச் செய்வதற்கு முயன்று கொண்டிருந்த காலம் அது. இதன் காரணமாகப் பல்லவ மன்னர்கள் சிறந்த படை ஒன்றினைப் பெற்றிருந்தனர். அதில் காலாட்படை, யானைப்படை, குதிரைப்படை, மிக வலிமை வாய்ந்த கப்பல்படை ஆகிய நால்வகைப் படைகளும் இருந்தன. படைக்கு மன்னர் தலைமை வகித்தார். அவரோடு வீரமும், போர் ஆற்றலும் மிக்க சேனைத் தளபதிகளும் இருந்தனர். சிம்மவர்மன் காலத்தில் விஷ்ணுவர்மன், முதலாம் நரசிம்மவர்மன் காலத்தில் வாதாபி கொண்ட பரஞ்சோதி (சிறுத்தொண்ட நாயனார்), இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் உதய சந்திரன், மூன்றாம் நந்திவர்மன் காலத்தில் பூதி விக்கிரமகேசரி என்னும் கொடும்பாளூர்ச் சிற்றரசன் ஆகியோர் சிறந்த படைத்தலைவர்களாக விளங்கிப் பல்லவ நாட்டைக் காத்தனர். மகாபலிபுரம் வழியாகக் குதிரைகள் அயல்நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. மகாபலிபுரம், காவிரிப் பூம்பட்டினம், நாகப்பட்டினம் ஆகிய

துறைமுகங்கள் கப்பல் படையை இயக்குவதற்கு உதவின. மாமல்லனான நரசிம்மவர்மன் இலங்கை நாட்டு மானவன்மனுக்கு அரசுரிமை கிடைக்க ஈழத்தின் மீது படையெடுத்தான். போர்க் காலங்களில் பல்லவப் பேரரசின் பேராண்மையை ஏற்றுக் கொண்ட சிற்றரசர்கள் பேரரசருக்குப் படை உதவி அளித்தனர். சிறந்த அமைச்சர்களையும், அதிகாரிகளையும் நல்ல முறையில் அமர்த்திப் பல்லவ பேரரசர்கள் நாட்டில் அமைதி காத்து வந்தனர்.

## 3.3 கலைகளின் வளர்ச்சி

### சிற்பக்கலை

மாமல்லபுரத்துச் சிற்பங்கள் யாவும், வராகக்குகையின் சில பகுதிகளிலும் மாமண்டூர்க் குகையில் காணுவதுபோல் ஓவியமாகவே தீட்டியிருக்கலாம். ஆனால் நடுவில் காணும் ஆதிவராகச் சிலையிலுள்ள சாயப்பூச்சு இக்காலத்தைச் சார்ந்ததென்று மிகப் பலரும் கருதுகின்றனர். மாமல்லபுரத்து மிகச் சிறப்பு வாய்ந்த சிலர் பகீரதன் தவம் (அருச்சுனன் தவம்) எனப்படுவதும் வேறு சில புடைப்புச் சிற்பங்களும் ஓவியப் படைப்பாக ஆதியிலேயே அமைக்கப் பெற்றதெனச் சிலர் கருதினர். ஆனால், தற்போதைய ஆராய்ச்சியாளருள் பெரும்பாலாரும் அதை ஒப்புக் கொள்ளவில்லை. ஆதியிலேயே இன்றிருப்பது போல்தான் தோன்றியிருக்க வேண்டும் என்பது அவர்கள் கருத்து.

பாறைகளைக் குடைந்து கற்றளிகள் அமைத்தது பல்லவ மன்னர்கள் கையாண்ட புதுமைகளுள் ஒன்றாகும். முதலாம் நரசிம்மவர்மன் மாமல்லபுரத்தில் முழுப் பாறைகளைச் செதுக்கிக் கற்கோயில்களை எழுப்பினான். உலகப் புகழ்பெற்ற மாமல்ல புரத்துச் சிற்பங்கள் அனைத்தும் ஒரே காலத்தில் எழுப்பப்பட்டன அல்ல. பல சிற்பங்களுக்கு வடிவு கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால், அவற்றில் புனைவும் மெருகும் காணப்படவில்லை. முதலாம் மகேந்திரனின் உருவமும், அவனுடைய இரு அரசியரின் உருவங்களும் மாமல்லபுரத்தில் புடைப்போவியங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. ஆகையால் மாமல்லபுரத்துச் சிற்பங்கள் செதுக்கும் பணி இவன் காலத்திலேயே தொடங்கினபோலும். ஒற்றைக் கற்களில் செதுக்கப்பட்டு இப்போது இரதங்கள் என்று அழைக்கப்படும் கோயில்கள் முதலாம் நரசிம்மவர்ம பல்லவன் காலத்தில் தோன்றியவையாம். இரண்டாம் மகேந்திரன் சில கோயில்களைக் குடை வித்தான்.

இந்த இரதங்கள் பஞ்சபாண்டவர் பேராலும், திரௌபதியின் பேராலும் வழங்குகின்றன. சோழர் பாண்டியர் காலத்துச் சிற்பிகள் படைத்த சிற்பங்கள் சிலவற்றுக்கு வடிவ அமைப்பு முறைகளைக் காட்டி உதவிய பெருமை மாமல்லபுரத்துச் சிற்பங்களைச் சாரும்.

இராசசிம்மனின் மிகச் சிறந்த சிற்பப் படைப்புக் காஞ்சிபுரத்துக் கைலாசநாதர் கோயிலாகும். இக் கோயில் இம் மன்னனுக்கு மட்டுமன்றி அவனுடைய பல்லவப் பரம்பரைக்கும், தமிழகத்துக்கும் என்றென்றும் அழியாத புகழைத் தேடித் தந்துள்ளது. இக் கோயிலை அமைப்பதற்கு இவனுக்கு இவனுடைய பட்டத்தரசியும் மகனும் பலவகையில் துணைபுரிந்தனர். கண்களுக்கு விருந்தாக அமைந்துள்ள சிற்பக்கோலங்கள் பலவற்றை இக்கோயிலில் காணலாம். இக் கோயிலின் கருவறையைச் சுற்றி ஐம்பத்தெட்டுச் சிறு கோயில்கள் அமைந்துள்ளன. கருவறைக்கு முன்பு எழுப்பப்பட்டுள்ள மண்டபத்தின் சுவர்களின் மேல் மிக அழகிய வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. அவை இப்போது மங்கி மறைந்து வருகின்றன.

மாமல்லபுரத்துக் கடற்கரைக் கோயிலானது சுருண்டு பொங்கி வரும் அலைகள் தன்னைக் கழுவிக் கழுவிச் சென்றும் காலத்தை வென்று நிமிர்ந்து நிற்கின்றது. அதனிடம் காணப்படும் சிற்பங்களின் மென்மையும், நுண்மையும், எழிலும் கடலுக்கே தனி ஒரு சோபையைக் கொடுத்து வருகின்றன. காஞ்சி உலகளந்த பெருமாள் கோயிலையும் அதனுள் நின்று நிமிர்ந்திருக்கும் ஓங்கி உலகளந்த உத்தமனான பெருமாளின் நெடுந்தோற்றத்தையும் காணும்போது இக்கோயிலை எழுப்பிய இரண்டாம் நந்திவர்ம பல்லவனின் உள்ளத்தின் உயர்ச்சியையும் விரிவையும் எண்ணி எண்ணி வியப்பில் ஆழ்கின்றோம்.

பனைமலையிலுள்ள கோயில் பல்லவருடைய மற்றொரு புகழ் பெற்ற படைப்பாகும். இக் கோயில் ஓவியச் சிறப்பு வாய்ந்ததாகும். அங்குத் தீட்டப்பட்டுள்ள சிவபெருமான், பவானியம்மன் திருவுருவ ஓவியங்கள் கண்கவரும் எழிலின. ஆனால், சிதைவுற்றுள்ள அவற்றை நோக்கி அவற்றின் அவலநிலைக்குக் கண் கலங்கவேண்டியுள்ளது. இந்தியாவிலேயே மிகச் சிறந்தவை எனப் பாராட்டப்பெறும் பனைமலை ஓவியங்கள் இன்று அழிந்து விட்டன. அவற்றின் மங்கிய தோற்றத்தில்

அஜந்தாவின் சாயலையும் பல்லவ ஓவியர்களின் கைவண்ணத்தையும் கண்டு கண்டு களிப்புறுகின்றோம்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் பெரிய வெண்மணி என்னும் கிராமத்தில் பல்லவர் காலத்திய சிற்பம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அச் சிற்பம் புடைப்புச் சிற்ப வகையைச் சேர்ந்தது. அச் சிற்பம் துர்க்கையின் பல தோற்றங்களுள் ஒன்றை எடுத்துக் காட்டுகின்றது. சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் பெண்கள் பலர் கூடி ஓர் இளம் பெண்ணுக்குத் துர்க்கையின் வேடம் புனைந்து வேட்டுவ வரிப் பாடல்களைப் பாடி வழிபட்டனரெனக் கூறுகின்றார். அப்போது துர்க்கையின் கோலத்தை விளக்கும்போது அவள் முறுக்குண்ட கொம்புகளையுடைய கலைமான் ஊர்தியின்மேல் அமர்ந்திருந்தாள்: அவள் கையில் சூலமேந்தியிருந்தாள்; அவளுடைய சீறடிகளில் சிலம்பும் கழலும் புலம்பின; அவள் இரண்டு வேறு உருவில் திரண்ட தோள் அவுணன் (மகிடாசுரன்) தலைமிசை நின்ற தையலாவாள் என்று குறிப்பிடுகின்றார்.

## ஓவியக்கலை

பல்லவர் காலத்து ஓவியங்கள் சில சித்தன்னவாசலில் காணப்படுகின்றன. இங்குள்ள குகை முழுவதும் ஆதியில் சாயமடிக்கப்பட்டிருந்ததாகத் தோன்றுகிறது. ஆனால் தற்போது குகையின் உபரிப்பகுதியிலும், மேல்தளத்திலும், தூண்களிலும் தாம் ஓவியப் படைப்பின் அடையாளங்கள் காணப்படுகின்றன. எஞ்சியுள்ளவற்றில் மிக்க கவர்ச்சியளிக்கும் ஓவியம் அங்குச் சித்திரிக்கப்பட்டிருக்கும் ஒரு குளமே. அதில் தாமரை மலர், மீன்கள், எருமைகள், யானைகள் முதலியவையும், மூன்று மனித உருக்களும் சித்திரிக்கப்பட்டுள்ளன. அம் மூன்று மனிதர்களையும் சமணர்களெனக் கருதலாம். தூண்களில் பெண்கள் சிலர் நடனமாடுவதைக் காட்டியிருக்கிறார்கள்.

சித்தன்னவாசல் குகை ஆதியில் சமணதீர்த்தங்கரர்களுக்கு அர்ப்பணம் செய்யப்பட்டிருந்தது. அங்குக் காணும் ஓவியப் படைப்புகள் முதலாம் மகேந்திரவர்மன் காலத்தைச் சார்ந்தவை எனப் பலரும் முன்னாளில் கருதினர். ஆனால், தற்போதைய ஆராய்ச்சியாளர் மிகப்பலரும் அவை ஒன்பதாவது நூற் றாண்டைச் சார்ந்த பாண்டியர் காலத்தவை என எண்ணு கின்றனர். வடஆர்க்காட்டு அர்மாமலையில் ஒரு குன்றின்மேல் தோன்றும் குகையில் முன்பு சிவன்கோயில் ஒன்று இருந்தது. அங்கே

பாறைமீது செடிகொடி, தாமரை ஆகியவற்றின் ஓவியச் சின்னங்கள் காணப்படுகின்றன.

**மகேந்திர வர்மன் கால ஓவியம்**

பல்லவ மன்னன் மகேந்திரவர்மனுக்குச் சிறப்புப் பெயர்கள் பல உண்டு. இவன் சித்திரக் கலையில் மிகவும் தேர்ச்சி பெற்றவனாக இருந்தான். எனவே இவனுக்குச் "சித்திரகாரப் புலி" என்ற சிறப்புப் பெயர் வழங்கிற்று. மகேந்திர வர்மன் பல கோயில்களில் ஓவியங்களை வரையச் செய்துள்ளான். 'தட்சிண சித்திரம்' என்னும் ஓவிய நூலுக்கு இவன் உரை எழுதியதாக இவனது மாமண்டூர்க் குடைவரைக் கோயிலில் இடம் பெறும் கல்வெட்டின் மூலம் அறியலாம். இக்கோயிலில் எஞ்சியுள்ள வண்ணங்களைக் கொண்டு இங்கு மகேந்திர வர்மன் காலத்தில் ஓவியங்கள் இடம் பெற்றிருந்தன என்பதையும் அவை மறைந்து போயின என்பதையும் உணரலாம். பல்லவர் காலத்தைச் சேர்ந்த ஓவியங்கள் சில மட்டுமே கிடைத்துள்ளன.

**இராச சிம்மன் கால ஓவியம்**

மகேந்திரவர்மனுக்கு அடுத்ததாக இராசசிம்மனது கால ஓவியங்களே நமக்குக் கிடைக்கின்றன. அவை காஞ்சி கைலாச நாதர் கோயில், பனைமலை தாலகிரீசுவரர் கோயில் ஆகிய இடங்களில் உள்ளன. காஞ்சிபுரம் கைலாச நாதர் கோயிலில் இராச சிம்மன்காலத்தைச் சேர்ந்த ஓவியங்கள் இடம் பெற்றுள்ளன. அவ்வோவியங்களுக்கு மேல் கி.பி பன்னிரண்டாம் நூற்றாண்டில் சோழர் காலத்தில் ஓவியம் தீட்டப்பட்டுள்ளது. அதனை அடுத்தாற்போல் கி.பி பதினான்காம் நூற்றாண்டில் விசயநகர அரசனான குமார கம்பணன் காலத்தில் மீண்டும் அவ்வோவியத்தின் மேல் ஓவியம் தீட்டப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. தொல்லியல் துறையினரால் இரசாயன முறையில் மேலே உள்ள வண்ணங்கள் நீக்கப்பட்டு இராச சிம்மன் காலத்தில் தீட்டப்பட்ட ஓவியம் கண்டு பிடிக்கப்பட்டது. இந்த ஓவியம் அளவில் மிகப் பெரியதாக இல்லை. இருப்பினும் அஜந்தா ஓவியங்களோடு ஒப்பிடும் அளவிற்கு உருவங்களின் 'பா'வம், வண்ணங்கள், கோடுகளின் தன்மை ஆகியன அமைந்துள்ளன.

**சோமாஸ்கந்தர் ஓவியம்**

இராச சிம்மன் காலத்துக் கோயில் கருவறைகளின் பின் சுவரில் புடைப்புச் சிற்பமாகக் காணப்படும் சோமாஸ்கந்தர் சிற்பம்தான் இங்கு ஓவியமாகத்

தீட்டப்பட்டுள்ளது. இதில் சிவபெருமானுடைய உருவம் பெரிதும் அழிந்துவிட்டது. சிவபெருமான் காலடியில் ஒரு பூதமும், பார்வதிக்கு அருகே அழகான பணிப்பெண்ணின் உருவமும் அமைந்துள்ளன. சிவபெருமானின் கரங்கள் இரண்டு தெரிகின்றன. அவற்றில் ஆபரணங்கள் மற்றும் கேயூரம், இடையில் உதர பந்தம், மார்பின் ஒரு பகுதியில் முப்புரி நூல் ஆகியன காணப்படுகின்றன. இடக்காலை மடக்கியும் வலக்காலைத் தொங்கவிட்டும் அமர்ந்திருக்கும் அவரது ஆடை மடிப்பு அழகுற அமைந்துள்ளது. முருகப் பெருமானது தலையில் கீரீடமும் அவரது ஒருபுறக் கண்ணும் தெளிவுறத் தெரிகின்றன. உமையின் ஒரு கரம் முருகனைத் தட்டிக் கொடுப்பது போல் அமைந்துள்ளது. கோயிலின் பின்புறத்தில் உள்ள ஒரு சிறு கோயிலினுள் நான்முகனது உருவம் காணப்படுகிறது. பிரம்மனது முகங்கள் மிகவும் கம்பீரமாகத் தீட்டப்பட்டுள்ளன. அவ்வோவியத்திற்கு எதிர்ச்சுவரில் சிவபெருமான் யோகப் பட்டை தரித்து யோகாசனத்தில் அமர்ந்த நிலையில் காணப்படுகிறார். இச்சிவபெருமான் ஓவியத்தின் ஒரு பகுதியே எஞ்சியுள்ளது. கோயிலின் வடக்கேயுள்ள சிறு ஆலயங்கள் சிலவற்றில் ஓவியங்கள் உள்ளன. இவற்றில் கின்னர உருவங்கள் இடம் பெற்றுள்ளன. பல்லவர் காலத்தைச் சேர்ந்த ஓவியங்களில் காஞ்சி கைலாசநாதர் கோயிலில் கிடைத்துள்ள ஓவியங்கள் சிறப்பான இடத்தைப் பெறுகின்றன.

**பனைமலை தாலகிரீஸ்வரர் கோயில் ஓவியம்**

தாலகிரீஸ்வரர் கோயிலில் அழிந்தது போக எஞ்சியுள்ள ஒரே ஓர் ஓவியம். பார்வதி தேவியின் ஓவியம் ஆகும். தேவியின் தலையில் மகுடமும் தலைக்கு மேலே ஒரு குடையும் காணப்படுகின்றன. இவர் இடக் காலை மடக்கிச் சுவரில் வைத்தும் வலக்காலைத் தரையில் ஊன்றியும் நிற்கும் காட்சி அழகுறத் தீட்டப்பட்டுள்ளது. கண்கள் பாதி மூடியும் பாதி திறந்தும் யோக நிலையில் உள்ளது போல் அமைந்திருக்கின்றன. கழுத்தில் உள்ள மணிமாலையும், பூவேலைப்பாட்டுடன் ஓரத்தில் கட்டங்களுடன் காணப்படும் மலோடையும் கண்ணைக் கவருவனவாய் அமைந்துள்ளன. முகம் மஞ்சள் வண்ணத்திலும், உடல் இளஞ்சிவப்பு நிறத்திலும், மணிமகுடத்தின் ஓரங்கள் கறுப்பு வண்ணத்திலும் காட்டப்பட்டுள்ளன. மென்மையான கோடுகளால் வரையப்பட்டுள்ளதால் உமையின் உருவம் மிகவும்

அழகுபெற்று விளங்குகிறது. அருகில் சிவபெருமானின் நடனக் காட்சி இருந்தமைக்கான சுவடு தெரிகிறது.

வட ஆர்க்காடு மாவட்டம் ஆம்பூருக்கு அருகில் மலையாம்பட்டு என்னும் ஊர் உள்ளது. அதனருகில் ஒன்றரைக் கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது ஆர்மா மலை. இம்மலையில் குகைத் தளம் உள்ளது. இதில் சில ஓவியங்கள் இடம் பெற்றுள்ளன. கைலாச நாதர் கோயிலிலும் பனைமலை தாலகிரீசுவரர் கோயிலிலும் இருக்கும் ஓவியங்கள் இந்து சமயப் புராணத்தை அடிப்படையாகக் கொண்டு வரையப்பட்டவை. ஆனால் ஆர்மா மலைக் குகையில் சமண சமயத்தை சார்ந்த ஓவியமும், இந்து சமயத்தைச் சார்ந்த ஓவியமும் இடம் பெற்றுள்ளன. இவை இராச சிம்மன் காலத்துக்குப் பிந்தியவை (கி.பி. 9-ஆம் நூற்றாண்டு) ஆகும்.

குகைத் தளத்தின் மேல் விதானத்தில் சுதை பூசி வண்ணம் தீட்டியுள்ளனர். இதில் ஒரு பகுதியில் வளைந்து செல்லும் கொடிகளும் இலை, தளிர்களும் காணப்படுகின்றன. அன்னங்கள் இறக்கையை விரித்துத் தலையைத் திருப்பி உயிர்த் துடிப்பு உள்ளவையாக உள்ளன. சதுரமான எட்டுக் கட்டங்களில் சில உருவங்கள் வரையப்பட்டுள்ளன. பெரும்பகுதி அழிந்து விட்டது. இரண்டு கட்டங்களில் உள்ள உருவங்கள் மட்டும் எஞ்சியுள்ளன. அக்னி தேவன் நீண்டதாடி, தீப்பிழம்பு போன்ற சடை முடி, மார்பில் பூணூல் ஆகியவற்றுடன் தமது வாகனமாகிய வெள்ளாட்டில் தமது தேவியுடன் அமர்ந்த கோலத்தில் காணப்படுகிறார். மற்றொரு கட்டத்தில் எருமைக் கிடா ஒன்று இடம் பெற்றுள்ளது. இதன் தலைப்பகுதி அழிந்து விட்டது. இது எமனின் வாகனமாகும். இது எமனுக்குரிய தெற்குத் திசையில் அமைந்துள்ளது. இவற்றை வைத்துப் பார்க்கின்றபோது கட்டங்களில் இருந்தவை. திசைக்காவலர் எண்மரின் ஓவியங்கள் என்பதை உணரலாம். இக்கட்டங்களை அடுத்துத் தடாகம் ஒன்று அமைந்துள்ளது. அதில் இலைகளும் மலர்களும் காணப்படுகின்றன.

## கடற்கரைக் கோயில்கள்

### குடைவரைக் கோயில்கள்

தமிழகத்தில் தெய்வ வழிபாட்டுமுறை, காலத்தின் கட்டாயத் தேவையாயிற்று. பல்லவர் காலத்திற்கு முன்பே கட்டப்பட்ட கோயில்களனைத்தும் செங்கல், மரம், மண், சுண்ணாம்பு முதலியவற்றைக் கொண்டு கட்டப்பட்டிருந்தன. எனவே, சங்க

காலத்திலும் சங்கம் மருவிய காலத்திலும் கட்டடப்பட்ட சிறப்புமிக்க வீடுகளும், ஆலயங்களும் காலத்தை எதிர்த்து நிற்க முடியாமல் சிதைந்து போயின. இதனைப் புரிந்து கொண்ட பல்லவர்கள், சிறப்பாக மகேந்திரவர்மன் செங்கல் முதலியவற்றைப் பயன்படுத்தாமல், மலைப்பாறைகளைக் குடைந்து குடைவரைக் கோயில்களைக் கட்டினான். இந்தச் சாதனையை அவன் கட்டிய மண்டகப்பட்டுக் கோயிலின் கல்வெட்டிலே குறித்துள்ளான்.

கடல் மல்லை என்ற வைணவத் தலம் பூதத்தாழ்வாரால் குறிப்பிடப் பெற்றுள்ளது ; எனவே, அது மிகவும் தொன்மையானது. பல்லவர்கள் காலத்தில் குடைவரைக் கோயில்கள் பல எழுந்தன. பல்லவர்களை முன்னோடிகளாகக் கொண்டு, பாண்டியர்கள், முத்தரையர்கள், அதியமான்கள், சேரமன்னர்கள், கீழைச் சாளுக்கிய மன்னர்கள் தத்தம் நாடுகளில் பல்வேறு குடைவரைக் கோயில்கள் அல்லது குகைக் கோயில்கள் என்ற நோக்கில், தமிழ்நாட்டில் பல்லாவரம், திருச்சி, சித்தன்னவாசல், திருமெய்யம் போன்ற ஊர்களில் உள்ள குகைக் கோயில்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை.

மகேந்திரவர்மனால் அமைக்கப்பட்ட மண்டகப் பட்டுக்கோயில் பிரமன், சிவன், விஷ்ணு ஆகிய மும்மூர்த்திகளுக்கும் அற்புதமாக அமைக்கப் பட்டதாகும். அந்தக் குடைவரை கோயில் திருக்கழுக்குன்றத்திலுள்ள வேதகிரி மலையின் உச்சிக்கோயிலிலிருந்து கீழே இறங்கி வரும் வழியிலே மலைநடுவில் கிழக்குத் திசைநோக்கியதாக உள்ளது; அக்கோயிலில் மும்மூர்த்திகளுக்கு அமைக்கப்பட்ட மூன்று கருவறைகளையும் துவார (வாயில்காக்கும்) பாலகர்களால் அலங்கரிக்கப்பட்ட அர்த்த மண்டபத்தையும் காணலாம்.

திருச்சிக்கு வட மேற்கிலுள்ள நாமக்கல் பகுதியை ஆண்ட குறுநில மன்னர்களாகிய அதியர் இரண்டு குடைவரைக் கோயில்களைத் திருமாலுக்கு எனக் கட்டினர். புதுக்கோட்டைப் பகுதியில் பல குடைவரைக் கோயில்களை முத்தரையர், இருக்குவேளிர் போன்றவர்கள் குடைவித்தனர். இவற்றுள் சித்தன்னவாசல் சமணப் பள்ளியாக ஆயிற்று. மற்றவை சைவ, வைணவ, சக்தி சமயச் சார்புடையவையாகும்.

புதுக்கோட்டையிலிருந்து மதுரை செல்லும் வழியிலுள்ள குன்னக்குடி (மூன்று குகைகள்), மிகச் சிறப்பான ‘பிள்ளையார்பட்டி, அரிட்டாபட்டி, திருமலை போன்ற

இடங்களிலும், மதுரைக்கு அருகில் மாங்குடி, ஆனைமலை (இரண்டு குகைகள்), திருப்பரங்குன்றம், மலையடிக்குறிச்சி, வீரசிகாமணி, ஆனையூர், திருமலைபுரம், சொக்கம்பட்டி, திருச்செந்தூர் ஆகிய குடைவரைக் கோயில்கள் கண்டு வியக்கத்தக்கவை, கழுகுமலைக் கோயில் மிகச் சிறப்பு வாய்ந்தது. குமரி மாவட்டத்தில் திருநந்திக் கரை, துவரங்காடு, சிவகிரி, அழகிய பாண்டியபுரம், பூதப்பாண்டி போன்ற இடங்களில் காணப்படும் குடைவரைகள் ஆய்வேளிர் மரபினரால் அமைக்கப்பட்டவை ; எனினும் பாண்டியர் பாணியில் அமைந்தவை.

**தேர்க் கோயில்கள்**

கோயில் கட்டட அமைப்பில் முன்னோடிகளாகப் பல புதுமைகளைப் புகுத்திச் சிறந்த வரலாறு படைத்தவர்கள் பல்லவ அரசர்கள். கி.பி. ஏழாம் நூற்றாண்டில் மாமல்லபுரத்திலே தனிப்பெரும் கற்பாறைகளைக் குடைந்தும், புராணச் சிறப்புடன் சிற்பங்களைச் செதுக்கியும், ஒற்றைக் கல் கோயில்களாக்கியும் பல்லவர்கள் தமிழகத்திற்குப் பெருமை சேர்த்துள்ளனர். ஒற்றைக் கல்கோயில்களைப் பஞ்ச பாண்டவர் ரதங்கள் என்று மக்கள் வழங்கினாலும், பஞ்சபாண்டவர்களுக்கும் இந்தத் தேர்க் கோயில்களுக்கும் தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை.

தருமராசர் தேர் எனப்படும் கோயில் மூன்று அடுக்குகள் கொண்ட விமானத்தை உடையது. இரண்டாம் அடுக்கின் நடுவில் மாடப்புரை போல உள்ளிடம் வெட்டப்பட்டுள்ளது. அதனடியில் சோமாஸ்கந்தர் சிற்பம் செதுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். பீமசேனன் தேர் எனப்படும் கோயில் நீண்ட சதுர அமைப்பில் காணப்படுகிறது. அதன் விமானத்தைச் சுற்றி வழிவிடப் பட்டிருத்தலைக் காணலாம். 45 அடி நீளம், 35 அடி அகலம், 26 அடி உயரம் கொண்ட இக் கோயிலில் தூண்களின் அடிப்பாகம் அமர்ந்த சிங்க உருவத்துடன் உள்ளது. தூண் அமைப்பினைக் கொண்டே நரசிம்மவர்மனின் கலைப்பாணியைப் புரிந்து கொள்ளும் வகையில் உருவாக்கப் பெற்றுள்ளது.

அருச்சுனன் தேர் எனப்படும் கோயிலின் விமானம் நான்கு நிலைகளைக் கொண்டது. 11 சதுர அடி அமைப்புடையது. திரௌபதி தேர்எனப்படும் கோயில், தமிழ்நாட்டில் சிற்றூர்ப் புறத் தேவதைகளுக்கு அமைத்திருக்கும் சிறுகோயில் போல் உள்ளது. இதன் அடித்தளம் 11 சதுர அடி, உயரம் 10 அடி. பல்லவர் காலத்துச் சிற்பத்

திறனையும் கலைக் கற்பனையையும் புலப்படுத்தும் வகையில் இத்தேரிலுள்ள துர்க்கையின் சிலை உள்ளது.

சகாதேவன் தேர் எனப்படும் கோயில் தன் பின் புறத்தில் யானையின் முதுகைப் போன்ற அமைப்பினையுடையது. பண்டைக் காலத்துப் பௌத்தர்களின் பள்ளிகளைப் போன்ற அமைப்புடையது. ஒவ்வொரு பாறைக் கல்லிலும் அமைந்த இந்தத் தேர்க் கோயில்களை முன் மாதிரியாக வைத்துக் கொண்டு, பிற்காலத்தில் பல தேர்வடிவ ஆலயக் கட்டடங்கள் அமைக்க முற்பட்டனர் என்பது மனம் கொள்ளத்தக்கது.

**கட்டுமானக் கற்கோயில்கள்**

பல்லவர் காலத்துக் கட்டடக் கோயில்களுள் தொன்மைச் சிறப்புடையது காஞ்சிபுரத்திற்கு அருகில், 'கூரம்' என்ற ஊரில் முதலாம் பரமேசுவரவர்மன் காலத்தில் எடுக்கப்பட்ட 'வித்யா விநீத பல்லவ பரமேசுவர கிருகம்' என்ற சிவாலயம் ஆகும். இது தூங்கானை மாட வடிவில் அமைந்துள்ளது. இக்காலத்தில் இதன் அடிப்பகுதி மட்டுமே எஞ்சியுள்ளது.

பரமேசுவரனுக்கு மகனான இராசசிம்மன் காலத்தில் மாமல்லபுரம், காஞ்சிபுரம், பனைமலை, திருப்பத்தூர் ஆகிய இடங்களில் கட்டுமானக் கோயில்கள் தோன்றின. மாமல்லபுரம் கடற்கரைக் கோயிலின் விமானம் ஓரளவு உயர்ந்து பலநிலைகளுடன் காணப்படுகிறது. கருவறையைச் சுற்றிலும் திருச்சுற்றும் ஒரு மண்டபமும் உள்ளன. மாமல்லபுரத்தில் மற்றொரு கட்டுமானக் கோயில், மகிஷாசுர மர்த்தினி குகையின் மேலே உள்ளது; இதன் மேல் பகுதி சிதைந்துள்ளது.

காஞ்சிக் கயிலாசநாதர்கோயில், திருக்கயிலையை நினைவுபடுத்தும் நோக்கத்தில் கட்டப்பட்டது. இராச சிம்மனால் கட்டப்பட்டதால் அதனை 'இராச சிம்மேசுவரம்' என்பர். பெரிய திருக்கற்றளியாகிய இதற்குப் பெரிய விமானமும், சிறு சிறு ஆலயங்களைக் கொணட திருச்சுற்றும் உள்ளன. சுற்றுச் சுவர் முழுவதும் சிவபெருமான், பார்வதி, திருமுருகன், திருமால் போன்ற திருவுருவங்களைக் காணலாம். இக் கோயிலில் பரிவார தெய்வங்களும் அவற்றுக்குரிய சிற்றாலயங்களும் உள்ளன. திருச்சிக்கு அருகிலுள்ள திருப்பத்தூரில் காணப்படும் கோயிலும் இராசசிம்மனால் கட்டப்பட்டதாகவே கருதப்படுகிறது; காஞ்சிக் கோயில்கள் போலவே

காணப்படும் இக்கோயிலிலுள்ள இறைவன் பெயர் கயிலாசநாதர் என்பது சிந்திக்கத்தக்கது.

கி.பி. எட்டாம் நூற்றாண்டில் நந்திவர்ம பல்லவனால் கட்டப்பட்டதாகக் கருதப்படும் காஞ்சி வைகுண்ட நாதர் கோயிலைப் 'பரமேசுவர விண்ணகரம்' என்பர். (விஷ்ணுகிருகம், விண்ணகரம் ஆயிற்று). ஒன்றற்கு மேல் ஒன்றாக மூன்று கருவறைகள் காணப்படும் இக்கோயில் விமானம் பெரியதாகவும் அழகுடையதாகவும் காணப்படுகிறது. அழகிய கட்டுமானத்துடன் கூடிய இக்கோயிலின் உட்புறச்சுவரில் - பிராகாரத்தில் - பல்லவ மன்னர்களுடைய வரலாறு தெரிந்து கொள்ளும் வகையில் திருவுருவச் சிற்பவரிசை உள்ளது.

உத்தரமேரூரில், நந்திவர்மன் காலத்ததாகக் கருதப்படும் சுந்தரவரதர் கோயிலும் உள்ளது.

பல்லவர் காலத்துக் கோயில்களெல்லாம் கருங்கல்லால் கட்டப்பட்டவை என்று பிழைபட எண்ணக் கூடாது. பெரும்பாலானவை மணற் கல்லால் கட்டப்பட்டவையும் உண்டு. இவற்றில் விமானங்கள் தான் மிகவும் உயர்ந்து நிற்கும். ஆயினும் அவை 35 அல்லது 40 அடிக்கு மேல் இருப்பதில்லை.

## 3.5. புடைப்புச் சிற்பங்கள்

மாமல்லபுரம் வரலாற்றுச் சிறப்புள்ள சிற்பங்களுக்குப் பெயர் பெற்றது. தமிழ் நாட்டைப் பொறுத்தவரை சிற்பக்கலைகளின் திருப்பு முனையாக அமைந்த பல்லவர் காலச் சிற்பங்களின் கருவூலமாகத் திகழ்வது மாமல்லபுரம் எனலாம். சிற்பம் எனும் போது அதனுள் கட்டிடங்கள், அவற்றின் கூறுகள், அலங்கார வடிவங்கள், உருவச் சிற்பங்கள் போன்ற பலவற்றையும் உள்ளடக்குவது இந்திய மரபில் பொதுவாகக் காணப்படுவது. எனினும் மாமல்லபுரம் புடைப்புச் சிற்பங்கள் என்னும் இக்கட்டுரை புடைப்புச் சிற்ப வகையில் அமைந்த உருவச் சிற்பங்கள் அவற்றை உள்ளடக்கிய நிகழ்வுகள் கதைகள் ஆகியவற்றை வெளிப்படுத்தும் சிற்பங்கள் ஆகியவை பற்றியே எடுத்துக்கூறுகின்றது.

**துறைமுக நகரம்**

பல்லவர் காலத்திலும் அதற்குப் பின்னரும் புகழ் பெற்ற துறைமுக நகரமாக விளங்கிய மாமல்லபுரத்தில் திராவிடக் கட்டிடக்கலைப் பாணிக்குரிய கட்டிடங்களும்

அமைப்புக்களும் பெருமளவில் காணப்படுகின்றன. கல்லிலே கட்டிடங்கள் அமைக்கத் தொடங்கிய காலத்தைச் சேர்ந்த கட்டிட வகைகளான குடைவரைகள், ஒற்றைக்கல் தளிகள் என்பனவும் ஆரம்பகாலத்தைச் சேர்ந்த கட்டுமானக் கோயில்களும் இங்கே உள்ளன. இவை வெறும் கட்டிடங்களாக மட்டுமன்றி ஏராளமான சிற்பங்களையும் தம்மகத்தேக் கொண்டு விளங்குகின்றன.

**கல்லில் செதுக்கப்பட்டவை**

மாமல்லபுரத்தில் காணப்படும் சிற்பங்கள் கல்லில் செதுக்கப்பட்டவை. இவை கடவுளரின் உருவங்கள், புராணக் கதை நிகழ்வுகள் என்பவற்றுடன் இயற்கை வனப்புகளையும், அக்காலத்துச் சமூக நிகழ்வுகளையும் கூடப் படம்பிடித்துக் காட்டுகின்றன எனலாம். இங்கே காணப்படும் சிற்பங்கள் பெரும்பாலும் புடைப்புச் சிற்பங்களாகவே காணப்படுகின்றன. புடைப்புச் சிற்பங்கள் நாற்புறத்திலிருந்தும் பார்க்கக்கூடிய முப்பரிமாண அமைப்பிலுள்ள சிற்பங்களாகவன்றி, சுவரோடு ஒட்டியபடி சுவரிலிருந்து வெளித்தள்ளிக் கொண்டிருப்பது போல் அமைந்தனவாகும்.

**பகீரத தபசு**

பகீரத தபசு எனப் பொதுவாக அழைக்கப்படும் பெரிய புடைப்புச் சிற்பத் தொகுதி மாமல்லபுரத்தில் தலசயனப் பெருமாள் கோயிலுக்கு பின்புறத்தில் அமைந்துள்ள பெரிய பாறையில் செதுக்கப்பட்டுள்ளது. விண்ணவர், மனிதர், விலங்குகள், பறவைகள் மற்றும் இயற்கை அம்சங்கள் எனப் பல வகையானவற்றையும் சித்தரிக்கின்ற இச் சிற்பம் ஏதோ ஒரு புராணக் கதை நிகழ்வை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப் பட்டது என்பதில் கருத்து வேறுபாடு கிடையாது. எனினும் இது குறிக்கின்ற நிகழ்வு எது என அடையாளம் காண்பதில் ஆய்வாளரிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன.

சுமார் முப்பது மீட்டர் வரை உயரமும், அதன் இரண்டு மடங்கு வரையிலான நீளமும் கொண்ட இப்பாறை இயற்கையிலேயே நடுவில் பிளவு பட்டிருப்பது போன்ற தோற்றத்துடன் காணப்படுகின்றது. இதை ஒரு குறைபாடாக எடுத்துக்கொள்ளாது, இப்பிளவையும் சிற்பத் தொகுதியின் கருத்துருவுக்கு அமையத் திறமையாகச் சிற்பி பயன்படுத்திக் கொண்டிருப்பதைக் காண முடிகின்றது. இது ஒரு ஆறு அல்லது நீரோட்டமாக உருவகப் படுத்தப்பட்டுள்ளது. நிலைக்குத்துத் திசையில் சிற்பத்தொகுதி

நான்கு படைகள் (layers) அல்லது நிலைகளாகக் கருதி வடிவமைக்கப்பட்டுள்ளது தெரிகிறது. மேலிருந்து பார்க்கும்போது முதல் நிலை விண்ணுலகையும், இரண்டாவது விண்ணுலகுக்கும் மண்ணுலகுக்கும் இடைப்பட்ட நிலையையும், மூன்றாவது மண்ணுலகையும், அடியில் உள்ளது பாதாள உலகத்தையும் குறித்து நிற்பதாகக் கூறப்படுகின்றது.

இச்சிற்பத்தில் ஒற்றைக்காலில் நின்றபடி தவமிருக்கும் ஒரு மனித உருவமும், அவனுக்கு அருகில், சூலாயுதத்தை ஏந்தியபடி, பூதகணங்கள் புடைசூழ நின்று வரமளிக்கும் சிவனும் செதுக்கப்பட்டுள்ளது. இது பாசுபத அஸ்திரம் பெறுவதற்காக அருச்சுனன் சிவனை நோக்கித் தவமிருந்த கதையைக் குறிப்பதாகக் கருதிச் சிலர் இதனை அருச்சுனன் தபசு என அழைக்கின்றனர். வேறு சிலர் இது பகீரதன் தவம் என்கின்றனர். தனது முன்னோருக்கு இறுதிக்கிரியைகள் செய்ய விரும்பிய பகீரதன், ஆகாயத்திலிருந்து கங்கையைக் கொண்டுவர விரும்பினானாம். ஆனால், கங்கை வேகமாகப் பூமியில் விழுந்தால் உலக அழிவு ஏற்படும் என அஞ்சிய அவன் அதனைத் தடுப்பதற்காகச் சிவனை நோக்கித் தவமிருந்தானாம். சிவன் கங்கையைத் தன் தலையில் ஏந்தி மெதுவாகப் பூமியில் விழச் செய்தார் என்பது புராணக்கதை. இதுவே இச்சிற்பத்தின் கருப்பொருள் என்பது அவர்கள் கருத்து. இச்சிற்பத்தில் தவம் செய்பர் மேற்குறிப்பிட்டவாறு பகீரதனோ, அருச்சுனனோ அல்ல அது சகர மாமன்னரையே குறிக்கும் என்று அச்சிற்பங்களை விரிவாக விளக்கி மகாபலிபுரத்து ஜைன சிற்பம் என்ற தனி நூலை மயிலை சீனி. வேங்கடசாமி எழுதியுள்ளார்.

**பக்தி இயக்கங்கள் உருவாதல்**

சங்கம் கலைந்து களப்பிரர் ஆட்சியின் போதும், பிறகும் மூன்று சமயங்கள் தமிழகத்தில் வளர்ந்து வந்தன. வைதிக சமபரும்டி. சமணம், பௌத்தம் என்பன அவை. இம் மூன்றும் ஒன்றோ டொன்று கூடும் போட்டியில் இறங்கின. போட்டியில் கிடைக்கும் வெற்றியே அவற்றின் நிலைப்புக்கும், வளர்ச்சிக்கும் அடிப்படை என்னும் அளவுக்கு அச் சமயங்களின் போக்கானது அமைக்கப் படலாயிற்று. இம் மூன்று சமயங்களுக்குமிடையே ஏற்பட்ட போட்டியில் தொடக்கத்தில் சமணத்துக்கும், பௌத்தத்துக்கும் செல்வாக்கானது ஏற்றம் பெற்றுவந்தது. ஆனால், நாயன்மார் களும், வைணவ ஆழ்வார்களும் தோன்றிச் சைவத்துக்கும், வைணவத்துக்கும் ஆற்றிய

பெருந்தொண்டின் காரணமாக அச் சமயங்கட்கு ஏற்பட்டிருந்த செல்வாக்குப் படிப்படியாகக் குறைந்து வரலாயிற்று. இறுதியாகப் பௌத்த சமயம் தேய்ந்து மறைந்தே போயிற்று. புத்தரும் திருமாலின் அவதாரங்கள் பத்தினுள் ஒன்றாகச் சேர்க்கப்பட்டார். சமணமும் நாட்டின் மூலைமுடுக்குகளில் ஒதுங்கி ஒடுங்கி இயங்க வேண்டிய நிலையை அடைந்தது. வேந்தன் எச் சமயத்தில் ஈடுபாடு கொண்டானோ அச் சமயத்துக்கே உயர்வு உண்டாயிற்று. ஆகவே, மன்னனின் கருத்தையும், ஈடுபாட்டையும், சார்பையும் தம்பால் கவர்ந்து கொள்ளுவதற்குச் சமயங்கள் ஒன்றையொன்று முந்திக்கொள்ள முனைந்தன. போட்டியில் எச் சமயம் வெற்றிகண்டதோ அச் சமயத்தையே மன்னனும் மக்களும் பின்பற்றுவது வழக்கமாயிற்று.

**சமயம்**

சங்கம் கலைந்து களப்பிரர் ஆட்சியின்போதும், பிறகும் மூன்று சமயங்கள் தமிழகத்தில் வளர்ந்து வந்தன. வைதிக சமயம், சமணம், பௌத்தம் என்பன அவை. இம் மூன்றும் ஒன்றோடொன்று கடும் போட்டியில் இறங்கின. போட்டியில் கிடைக்கும் வெற்றியே அவற்றின் நிலைப்புக்கும், வளர்ச்சிக்கும் அடிப்படை என்னும் அளவுக்கு அச் சமயங்களின் போக்கானது அமைக்கப் படலாயிற்று. இம் மூன்று சமயங்களுக்குமிடையே ஏற்பட்ட போட்டியில் தொடக்கத்தில் சமணத்துக்கும், பௌத்தத்துக்கும் செல்வாக்கானது ஏற்றம் பெற்றுவந்தது. ஆனால், நாயன்மார்களும், வைணவ ஆழ்வார்களும் தோன்றிச் சைவத்துக்கும், வைணவத்துக்கும் ஆற்றிய பெருந்தொண்டின் காரணமாக அச் சமயங்கட்கு ஏற்பட்டிருந்த செல்வாக்குப் படிப்படியாகக் குறைந்து வரலாயிற்று. இறுதியாகப் பௌத்த சமயம் தேய்ந்து மறைந்தே போயிற்று. புத்தரும் திருமாலின் அவதாரங்கள் பத்தினுள் ஒன்றாகச் சேர்க்கப்பட்டார். சமணமும் நாட்டின் மூலைமுடுக்குகளில் ஒதுங்கி ஒடுங்கி இயங்க வேண்டிய நிலையை அடைந்தது. வேந்தன் எச் சமயத்தில் ஈடுபாடு கொண்டானோ அச் சமயத்துக்கே உயர்வு உண்டாயிற்று. ஆகவே, மன்னனின் கருத்தையும், ஈடுபாட்டையும், சார்பையும் தம்பால் கவர்ந்து கொள்ளுவதற்குச் சமயங்கள் ஒன்றையொன்று முந்திக்கொள்ள முனைந்தன. போட்டியில் எச் சமயம்

வெற்றிகண்டதோ அச் சமயத்தையே மன்னனும் மக்களும் பின்பற்றுவது வழக்கமாயிற்று.

## சைவமும் வைணவமும்

சைவமும் வைணவமும் இந்து சமயத்தின் இரு கண்கள் எனலாம். சைவ நாயன்மார்களும், வைணவ ஆழ்வார்களும் வைதிக சமயத்துக்குப் புத்துயிர் அளிப்பதற்காகவே பிறவியெடுத்தவர்கள்; தாம் மேற்கொண்ட பணியைத் திறம்படப் புரிந்து தாம் எடுத்த பிறவியின் நோக்கம் நிறைவுற்றதைக் கண்ணால் கண்டவர்கள். வைதிக சமயம் மீண்டும் ஒருமுறை தன் ஒளி குன்றி ஆக்கத்தில் சரியாதபடி திடமான அடிப்படையின்மேல் அதை நிறுவினார்கள். தமிழகத்தில் சமண சமய நூல்கள் பெருகின. ஒழுக்கத்தை வற்புறுத்தும் நூல்களும், இலக்கியமும் இலக்கணமும் தோன்றின. பதினெண்கீழ்க் கணக்கில் தொகுக்கப்பட்டுள்ள சிறுபஞ்சமூலம், ஏலாதி, திணை மாலை நூற்றைம்பது, ஐந்திணை எழுபது, நாலடியார், ஆசாரக்கோவை ஆகியவை சமணர் படைத்த இலக்கியங்கள். சைவசமய குரவர்களும், ஆழ்வார்களும் பெருக்கிவிட்ட பக்தி வெள்ளத்தில் சமணர்கள் செயலற்று மூழ்கிப்போயினர். எனினும், சமண சமயம் தனக்குற்ற இன்னல்களையும் இடையூறுகளையும் கடந்தேறி மன்னர் ஆதரவையும் மக்களின் பாராட்டையும் ஈடுபாட்டையும் ஓரளவு தொடர்ந்து பெற்று வரலாயிற்று.

நாயன்மார்களும் ஆழ்வார்களும் அளவையால் கட்டுண்டு கிடக்கும் தத்துவங்களையோ, உயிர்ப்பை ஒடுக்கும் யோக நெறியையோ, கடவுள் முன்னிலையில் தன்னையே அழித்துக் கொள்ளத் தூண்டும் உணர்ச்சி வெறியையோ பாராட்டிலர். கடவுளிடத்து அயராத அன்பு ஒன்றையே அவர்கள் மக்களுக்குப் போதித்து வந்தனர். 'காதலாகிக் கசிந்து, கண்ணீர் மல்கி ஓதுவார்தமை நன்னெறிக்கு உய்ப்பது. நாதனாமம் நமச்சிவாயவே' என்று திருஞானசம்பந்தர் பாடினார். நாயன்மார்கள், வைணவ ஆழ்வார்கள் ஆகியவர்களுள் ஒருவரேனும் துறவு பூண்டு காட்டிலும் மலையிலும் ஒடுங்கி வாழ்ந்தவர்கள் அல்லர், அவர்கள் மக்களிடையே வாழ்ந்து வந்தார்கள்; தம்முள் எழுந்த இறையன்பை எளிய, இனிய சொற்களால் இசையுடன் விளக்கியவர்கள்.

திருநாவுக்கரசு நாயனார், திருஞானசம்பந்தர், திருமங்கை யாழ்வார் ஆகிய இம்மூவரும் பல்லவர் காலத்து வாழ்ந்தவர்கள். திருஞானசம்பந்தரால் அன்புடன் 'அப்பரே' என்று அழைக்கப்பட்ட திருநாவுக்கரசர் வேளாள குலத்தைச் சார்ந்தவர். தென்னார்க்காட்டு மாவட்டத்தில் திருவாமூர் என்னும் சிற்றூரில் தோன்றியவர். இவர் எண்பத்தொரு வயதுவரையில் உலக வாழ்க்கையில் இருந்தார். சைவக்குடியில் பிறந்த இவர் சமண ராக மாறி நெடுங்காலம் துறவு பூண்டிருந்தார். பிறகு தம் தமக்கையாரின் அன்பு ஈர்ப்புக்கு உடன்பட்டு மீண்டும் சைவரானார். வாழ்க்கையில் ஏற்படும் பல திருப்பங்களைக் காணவும், பல இன்னல்களைக் கடந்தேறி வாழ்க்கைப்பயனை எய்தவும் இவருடைய முதுமை இவருக்குப் பெரிதும் துணை புரிந்தது. முதலில் சமணனாக இருந்த மகேந்திரவர்ம பல்லவனும் சமண சமயத்தைக் கைவிட்ட அப்பருக்குப் பல இன்னல்கள் இழைத்தான் என்று பெரியபுராண வரலாறு கூறுகின்றது.

திருநாவுக்கரசர் பாடிய பதிகங்கள் மொத்தம் முந்நூற்றுப் பத்தாகும். அவர் தனித்தும் திருஞான சம்பந்தருடன் பல சிவன் கோயில்களுக்குச் சென்றும் பாடல்கள் பாடினார். ஏழை எளியவர், பிணியோர் அனைவரும் அவருடைய அன்புக்கு ஆட்பட்டிருந்தனர். அப்பூதியடிகள் என்ற அந்தணர் ஒருவர் திருநாவுக்கரசரைத் தம் வழிபாட்டுத் தெய்வமாகவே கொண்டிருந்தார்.

திருநாவுக்கரசரின் தமிழ், படிப்போர் உள்ளத்தைத் தொடக் கூடியது. எவ்வுயிரினும் சிவத்தையும் சக்தியையும் இணைத்துக் காணவேண்டும் என்ற தத்துவம் இவரிடம் விளக்கம் பெற்றுள்ளது. கடவுளை 'இப்படியன், இந் நிறத்தன், இவ் வண்ணத்தன் இவன் இறைவன் என்று எழுதிக் காட்டொணாது' என்ற இயர்ந்த தத்துவத்தை இவர் வாக்கில் முதன்முதல் காண்கின்றோம். திருநாவுக்கரசர் அகத்துறைப் பாடல்கள் பல உள்ளன. தாண்டகம் என்னும் செய்யுள் இலக்கணத்தைக் கையாண்டு இவர் பாடல்கள் பாடியுள்ளார். ஆதலால் இவருக்குத் தாண்டக வேந்தர் எனவும் பெயருண்டு. அவை இசையிலும், சொல்வன்மையிலும், பொருட் செறிவிலும் சிறந்தோங்கி விளங்குகின்றன. தொண்டு செய்தே மெய்யுணர்வுப் பாதையில் நடக்கவேண்டும் என்பது இவரது துணிபு. 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று இவர் பாடினார். கோயில்களில் புல் பூண்டுகளைச் செதுக்கியும், அலகினால்

பெருக்கியும், சாணத்தால் மெழுகியும் தூய்மைப்படுத்தும் திருப்பணியை இவர் செய்து வந்தார். அதற்காக இவர் எப்போதும் தம் கையில் புல் செதுக்கும் உழவாரப்படையொன்றைத் தாங்கிக்கொண்டேயிருந்தார். 'நான்' என்னும் முனைப்பை அறவே ஒழித்த மெய்ஞ்ஞானி இவர். தம் வாணாளின் இறுதியில் 'புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்' எனக் கூறிச் 'சிவானந்த வடிவமாகித் திருப்புகலூரில் சிவபெருமான் திருவடிக் கீழ் அமர்ந்திருந்தார்' என்று பெரிய புராணம் கூறும்.

மகேந்திரவர்மன் தான் சைவனான பிறகு இப்போது திருப்பாதிரிப்புலியூர் என வழங்கும் பாடலிபுத்திரத்திலிருந்த சமணப் பள்ளிகளை இடித்துத் திருவதிகையில் தன் பெயரிலேயே 'குணபதீச்சுரம்' என்ற கோயிலை எழுப்பினான் என்று பெரிய புராணம் கூறும். 'குணபரன்' என்பது மகேந்திரவர்மனைக் குறிக்கும் சிறப்புப் பெயர்களுள் ஒன்றாகும். இச் செய்தியைத் திருச்சிராப்பள்ளிக் கல்வெட்டு ஒன்று உறுதிப்படுத்துகின்றது. 'இலிங்கத்தை வழிபடும் குணபரன் என்னும் பெயர் கொண்ட அரசன் இந்த இலிங்கத்தினால் புறச்சமயத்திலிருந்து திரும்பிய அவனது ஞானம் நெடுங்காலம் நிலைப்பதாகுக' என்பதுதான் அச் செய்தி. குணபரன் என்றும் அழைக்கப்பட்ட மகேந்திரவர்மன் சமணத்தைக் கைவிட்டுச் சைவ சமயத்தைத் தழுவித் திருச்சிராப்பள்ளி மலைக்கோயிலைக் கட்டினான் என்று இக் கல்வெட்டுச் செய்தியினால் புலனாகின்றது.

திருநாவுக்கரசர் மொத்தம் 49,000 பாடல்கள் பாடினார் என்றும், அவற்றுள் மறைந்தவை போக இப்போது எஞ்சி நிற்பவை 310 பதிகங்களே என்றும் திருமுறை கண்ட புராணம் பகர்கின்றது. திருநாவுக்கரசருடன் இணைந்திருந்து சைவநெறியைத் தழைத்தோங்கச் செய்தவர் திருஞானசம்பந்தர். இவர் சீர்காழியில் பிறந்தவர், மூன்றாமாண்டிலேயே இவர் மெய்ஞ்ஞானம் கைவரப் பெற்றார் என்பர். சிவன் கோயில்கள் பலவற்றுக்கும் சென்று தேவாரப் பாடல்கள் பாடினார். இவர் மொத்தம் 16,000 பதிகங்கள் பாடினார் என்றும், இப்போது 384 பதிகங்களே கிடைத்துள்ளன என்றும் திருமுறை கண்ட புராணம் கூறுகின்றது. திருநீலகண்டப் பெரும்பாணரும் அவர் மனைவி மதங்க சூளாமணியும் சம்பந்தர் பாடல்களுக்கு இசை வகுத்தார்கள்.

சம்பந்தரின் பாடல்கள் பெரும்பாலனவற்றுள் ஒவ்வொன்றிலும் முதற்பாதியில் இயற்கை எழில் வண்ணங்களைக் காணலாம். செறிந்த காடும், உயர்ந்து மஞ்சு சூழ்ந்த

மலைகளும், சந்தனமும், அகிலும், சாதித் தேக்கமரமும், கரும்பும், தேன்கட்டியும், மலைச் சரிவுகளில் துள்ளி ஓடும் ஆமான்களும், பலவின் கனிகளைப் பிளந்துண்ணும் குரங்குகளும், சிறையாரும் மடக்கிளிகளும், புன்னைப் பறவைகளும், அன்னங்களும், நாரைகளும் காட்சியளிப்பதைக் காணலாம். திருஞானசம்பந்தர் சித்திர கவிகளும், யமக கவிகளும், யாழ்முரியும் பாடவல்லவர். தம் பாடல்கள் எல்லாவற்றிலும் சமணரையும் பௌத்தரையும் மிகவும் கடுமையாகத் தாக்கியிருக்கின்றார். சமணம் தமிழ்நாட்டில் செல்வாக்குக் குன்றி, ஒளிமங்கி வந்ததற்குக் காரணம் திருஞானசம்பந்தரின் முயற்சியேயாகும்.

பாண்டிய மன்னன் அரிகேசரி பராங்குசன் சமணத்தைத்தழுவி வாழ்ந்தவன். அவனைச் சைவத்துக்கு மீட்டுக்கொள்ளவேண்டும் என்று விரும்பிய அவன் மனைவி மங்கையர்க்கரசியாரும், அமைச்சர் குலச்சிறையாரும் திருஞானசம்பந்தரை நாடினர். அவர் சமணருடன் வாதிட்டு அவர்களை வென்றார். மன்னனும் சைவனானான். திருத்தொண்டத் தொகையில் சேர்க்கப்பட்டுள்ள நின்றசீர் நெடுமாறநாயனார் என்பவர் இம் மன்னன்றான்.

திருஞானசம்பந்தருக்குப் பதினாறாம் ஆண்டில் திருமணம் ஏற்பாடாயிற்று. நல்லூர்ப் பெருமணம் என்ற ஊரில் திருமணம் நடந்துகொண்டிருந்தபோது தெய்விகப் பேரொளி ஒன்று தோன்றிற்று என்றும், அதில் திருஞானசம்பந்தரும் மணமகளும் பத்தலில் கூடியிருந்த சுற்றத்தார் அனைவரும் கலந்து மறைந்து விட்டனர் என்றும் புராண வரலாறு கூறுகின்றது. அவ்வாறு அவர் மறைவதற்கு முன்பு அவர் இறுதியாகப் பாடிய பதிகம் ஒன்றில் ஐந்தெழுத்தின் சிறப்பை வியந்து ஓதினார். 'வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது நாதன் நாமம் நமச்சிவாயவே' என்றும், அதை ஓதுபவர்கள் 'பந்தபாசம் அறுக்க வல்லார்கள்' என்றும் அவர் அப் பதிகத்தில் உணர்த்துகின்றார்.

பெரிய புராணத்தில் சேர்க்கப்பட்டுள்ள நாயன்மார்கள் அறுபத்து மூவருள் சிலர் திருஞானசம்பந்தர் காலத்தவர். அவர்களுள் தலையாயவர் சிறுத்தொண்ட நாயனார் என்பவர். இவர் முதலாம் நரசிம்மவர்மனின் படைத் தலைவராகப் பணியாற்றி வாதாபியை முற்றுகையிட்டு இரண்டாம் புலிகேசியின்மேல் மாபெரும் வெற்றி கொண்டார் எனப் பலர் கருதினர். ஆனால், இவர் உண்மையில் முதலாம் பரமேசுவர வர்மனின் படைத் தலைவராவார். அப்போது அவருடைய பெயர் பரஞ்சோதி

என்பதாகும். பிறகு அம்மன்னனுடைய வேண்டுகோளின்படி தம் பிறந்த ஊராகிய திருச்செங்காட்டங்குடியை அடைந்து. தம் மனைவி வெண்காட்டு நங்கையுடன் மனையறம் நடத்தி வந்தார். இவர் காலத்தில் காபாலிகர், காளாமுகர், பாசுபதர் என்னும் சமயத்தைச் சேர்ந்த வைராகிகள் தமிழகத்திலும் உலவி வந்தனர் என அறிகின்றோம். 'விரிசடை விரதிகள் அந்தணர் சைவர் பாசுபதர் காபாலிகள் தெருவினிற் பொலியும் திருவாரூர் அம்மானே' என்று திருநாவுக்கரசர் பாடியுள்ளார். அவர்கள் சக்தி வழிபாடு செய்பவர்கள்; தேவிக்கு நரபலி கொடுக்கவும் தம் உயிரையே அவளுடைய திருவடிகளில் சேர்ப்பிக்கவும் அஞ்சாதவர்கள். அத்தகைய வைராகி ஒருவர் சிறுத்தொண்டரை அண்மித் தமக்குப் பிள்ளைக்கறி சமைத்துப் போடவேண்டுமென்று கேட்டுக் கொண்டாராம். சிவவேடந் தரித்தவர்கள் யார் எதை விரும்பினாலும் மறுக்காது வழங்கும் வள்ளன்மை பொருந்திய சிறுத் தொண்டர் தம் குழந்தை சீராளனையே அரிந்து கறி சமைத்து வைராகிக்குப் படைத்ததாகவும். அவருடைய பரிவுக்கும், செயற்கரிய செயலுக்கும் இணை காணமுடியாத வைராகி மறைந்து விட்டதாகவும், வைராகியாக வந்தவர் சிவபெருமானே என்று கண்ட சிறுத்தொண்டரும் அவர் மனைவியாரும் அளவற்ற மகிழ்ச்சி கொண்டனரெனவும், சிவபெருமான் சீராளனை உயிர்ப் பித்துத் தந்ததுமன்றிச் சிறுத்தொண்டருக்கும் அவர் மனைவிக்கும் வீடுபேறு அளித்தனர் எனவும் பெரிய புராணம் கூறும்.

சமணர், பௌத்தர் ஆகிய இரு சமயத்தாருமே எல்லா உயிர்களையும் பொதுப்பட நோக்கி அவற்றினிடம் அன்பையும், அருளையும் காட்டுவதையே தம் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். தரையின் மேல் நடந்துபோகும்போது ஈ, எறும்புக்கும் எவ்வித ஊறும் நேரிடாதவாறு சமணர்கள் மயிற்பீலியால் தரையைத் தடவிக்கொண்டே நடப்பர். இரவில் விளக்கேற்றி வைத்தால் விளக்கில் விட்டில்கள் விழுந்து இறந்துபோம் என்று அஞ்சி மாலையில் விளக்கு ஏற்றும் முன்பே அவர்கள் உணவு உண்ணுவது வழக்கம். சமணர், இன்றும் இவ் வழக்கத்தை நெகிழவிடாமல் கடைப்பிடித்து வருவதைக் காணலாம். கொல்லாமையாகிய நோன்பைச் சமணர் வழுவாமல் நோற்றுவந்ததுடன் மக்களுக்கும் விரித்துரைத்தனர். தமிழ் மக்கள் அவர்களை விரும்பி ஏற்று அவர்களுடைய நல்லுரைகட்குச் செவிசாய்த்து வந்தனர். ஆனால், சமணர்கள் தம் சமயத்துக்கு ஏற்றமளித்ததுமன்றி வைதிக சமயத்தினரை

வாதுக்கிழுத்தனர். உயிரைவிட நேர்ந்தாலும் தம் கொள்கைகளை வாதில் விட்டுக்கொடுக்காத வன்னெஞ்சர்களாக அவர்கள் மாறி வந்தனர். சமணத்துக்கு முன்பே தமிழகத்தில் நுழைந்து இடம் பெற்றுவிட்டிருந்த வேத நெறியைப் பழித்தும், தூற்றியும், மக்களுடைய நம்பிக்கைகளைச் சிதைத்தும், மந்திர தந்திரங்களைக் கையாண்டும் தம் சமயத்துக்கு ஆக்கம் தேடிவந்தனர். சமணரைப் போலவே பௌத்தரும் வைதிக சமயத்தை இகழ்ந்து பேசிவந்தனர் என்பது திருஞானசம்பந்தரின் தேவாரப் பாடல்களால் தெரிகின்றது. கொல்லாமை நோன்பில் இவர்களுக்கும் ஈடுபாடு உண்டு. ஆனால், தானே ஒரு விலங்கைக் கொல்லாமல், அதனுடைய ஊனைப் பிறர் கொடுத்தால் அதை வாங்கி உண்ணலாம் என்ற கொள்கையுடையவர்களாக இருந்தனர்.

தேவாரப் பாடல்கள் பாடிச் சைவசமயத்தை வளர்த்த சமய குரவர் மூவருள் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருநாவுக்கரசருக்கும் சம்பந்தருக்கும் காலத்தால் பிந்தியவர். திருஞான சம்பந்தர் சிவபெருமானிடம் மகன் அன்பையும், திருநாவுக்கரசர் ஒரு தொண்டனின் அன்பையும், சுந்தரர் தோழனின் அன்பையும் கொண்டிருந்தவர்கள் எனக் கூறுவதுண்டு. தாம் வழிபட்ட இறைவனிடம் நட்புமுறையில் நடந்துகொண்டவர் ஆகையால் தம் திருப்பதிகங்களில் தாம் விரும்பியதைக் கேட்டுப் பாடும் உரிமையைச் சுந்தரர் பெற்றிருந்தார். தாம் பரவை, சங்கிலி என்னும் இரு மனைவியரை மணந்து கொண்டபோதும் சிவபெருமானின் துணையைப் பெரிய புராணம் கூறும். வேண்டிப் பெற்றார் என்று சேக்கிழார் பாடிய பெரிய புராணம் முதலிலிருந்து இறுதிவரையில் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வரலாற்றைக் கூறுவது போலவே அமைந்துள்ளது. எனவே, பெரிய புராணத்துக்குப் பாட்டுடைத் தலைவர் சுந்தரர்தாம்.

சுந்தரர் தென்னார்க்காடு மாவட்டத்தில் திருநாவலூர் என்னும் சிற்றூர் ஒன்றில் பிறந்தவர்; ஆதி சைவ குலத்தினர். இவர் தந்தையின் பெயர் சடையனார்; தாயாரின் பெயர் ஞானியார். சுந்தரருக்கு ஆரூரன் என்றும் ஒரு பெயர் உண்டு. திருமுனைப்பாடியின் மன்னர் நரசிங்க முனையரையர் என்பவர் திருநாவலூரைத் தம் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்தார். இக் குறுநில மன்னர்தாம் சுந்தரரை இளமையில் எடுத்து வளர்த்தவர். சுந்தரருக்குத் திருமணம் செய்விக்க ஏற்பாடுகள்

ஆயின. திருமண நாளன்று வயது முதிர்ந்த அந்தணர் ஒருவர் தோன்றிச் சுந்தரருக்கும் தமக்கும் பெருவழக்கு ஒன்று உண்டு என்றும், அவ்வழக்குத் தீர்ந்த பிறகுதான் மணவினைகள் நடைபெறவேண்டும் என்றும் வாதாடினார். சுந்தரரின் பாட்டன் தம்மையும் தம் வழிவழி வருபவரையும் இம் முதியோருக்கு அடிமைப்படுத்திக் கொண்டதாக ஆளோலை ஒன்று எழுதிக் கொடுத்துள்ளார் என்றும், அதனுடைய மூலப்படி திருவெண்ணெய் நல்லூரில் இருப்பதாகவும் கூறிச் சுந்தரரையும் ஏனைய அந்தணரையும் அழைத்துக்கொண்டு அவ்வூரிலுள்ள 'அருட்டுறை' என்னும் கோயிலுக்குள் சென்று மறைந்து விட்டார். வந்த முதியவர் தம்மை ஆட்கொள்ளவந்த சிவ பெருமானே எனத் தெளிவுற்றவராய்ச் சுந்தரர் இறைவன் மீது அன்பு கனிந்து 'பித்தா, பிறைசூடி ' என்று தொடங்கும் படுகத்தைப் பாடினார். சிவபெருமானால் தடுத்தாட் கொள்ளப்பட்டவராகையால் சுந்தரருக்கு வன்றொண்டர் எனவும் ஒரு பெயர் ஏற்பட்டது. இவர் பாடிய பதிகங்கங்களின் தொகை மொத்தம் 33,000 எனத் திருமறை கண்ட புராணம் கூறும், ஆனால், இப்போது கிடைத்துள்ளவை 200 பதிகங்களேயாம். தொண்டர்களின் பெயர்களைச் சைவ நாயன்மாற்குத் தொண்டத் தொகையை' சுந்தரர் பாடியுள்ளார். இப் பாட்டை அடிப்படையாகக் கொண்டு, பின்னர்த் தோன்றிய நம்பியாண்டார் நம்பிகள் 'திருத் தொண்டர் திருவந்தாதி' என்னும் நூல் ஒன்றை இயற்றினார். இவ் வந்தாதியை அடிப்படையாகக் கொண்டுதான் சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணத்தை இயற்றினார்.

திருவாரூரில் கோயில் தொண்டு செய்தும் ஆடியும் பாடியும் தியாகேசனை வழிபட்டுவந்த பதியிலாரானவரும் உருத்திர கணிகையர் குலத்துத் தோன்றியவருமான பரவையார் என்பவரைச் சுந்தரர் மணந்தார். திருவொற்றியூரில் வேளாளர் குலத்துப் பிறந்த சங்கிலியார் என்ற மற்றொரு பெண்ணையும் பின்னர் அவர் மணம் புரிந்தார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் சேரநாட்டு வேந்தரான சேரமான் பெருமாள் என்பவருடைய நட்பைப் பெற்றவராய் அவர்பால் மிகவும் ஈடுபாடுடையவரானார். அவருடைய அழைப்புக்கு இணங்கி அவர் சேரநாட்டுக்குச் சென்றுவந்தார். கொங்கு நாட்டில் திருமுருகன்பூண்டிக்கு அண்மையில் 'வடுகர் என்ற வழிப்பறி கள்வர்கள் சுந்தரருடைய பொருள்களைக் கவர்ந்தனர் என்று அவருடைய தேவாரப் பதிகம் ஒன்றினால் அறிகின்றோம். அவிநாசியில் பல ஆண்டுகட்கு முன்பு முதலையுண்ட

பார்ப்பனச் சிறுவன் ஒருவனைச் சுந்தரர் மீண்டும் அழைத்துக் கொடுத்தார் என்று பெரிய புராணம் கூறும். இவர் பாடிய அவிநாசிப் பதிகத்தில் 'புரைக்காடு சோலைப் புக்கொளியூர் அவிநாசியே கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச் சொல்லு காலனையே' என்று வரும் சொற்களை அந் நிகழ்ச்சிக்குச் சான்றாக எடுத்துக்காட்டுவர்.

சுந்தரர் பதினெட்டு ஆண்டுகள் இவ்வுலக வாழ்வில் தங்கினார். இறுதியில் சேரமான் பெருமாளுடன் தம் பூத உடம்புடன் கயிலைக்குச் சென்று சிவபெருமானின் திருத்தொண்டில் அமர்ந்தார் என்று சேக்கிழார் கூறுகின்றார். திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் முத்திபெற்ற பிறகு சில ஆண்டுகளில் சுந்தரர் பிறந்தார் என்று கொள்ளுவதற்குச் சான்றுகள் உள. இவர் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் இறுதி யிலும் எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்தவர் எனச் சிலர் கருதுவர். சுந்தரர் தம் திருத்தொண்டத் தொகையில் 'கடல் சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான் காடவர் கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்' என்று தாம் வாழ்ந்த காலத்து ஆட்சி புரிந்துவந்த பல்லவ மன்னனைக் குறிப்பிடுகின்றார். கழற்சிங்கன் என்னும் பெயரில் 'கழல் என்பது கழலையணிந்தவன் என்று பொருள் விரியும். சிங்கன் என்பவன் கழலையணிந்த மன்னவன். பல்லவர் பரம்பரையில் இரண்டு சிங்கர்கள் அதாவது சிம்மர்கள் அரசாண்டு வந்தனர். ஒருவன் முதலாம் நரசிம்மவர்மன். இவனே வாதாபி கொண்டவன். அடுத்தவன் இராசசிம்மன் என்று வழங்கும் இரண்டாம் நரசிம்மனாவான். இவ்விரு மன்னருள் முதலாம் நரசிம்மவர்மன் திருஞானசம்பந்தர், அப்பர் காலத்தவன். எனவே, இவ்விரு சமய குரவர்களுக்கும் பிந்தியவரான சுந்தரர் இவன் காலத்தராக இருக்க முடியாது. ஆகவே, இவரை இரண்டாம் நரசிம்ம வர்மன் காலத்தவராகக் கொள்ளுதலே பொருத்தமானதாகக் காணப்படுகின்றது. சில ஆய்வாளர் இவரை ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதுகின்றனர்.

இந்த இரண்டாம் நரசிம்மன் சிவசூடாமணி என்று புகழ்ந்து பாராட்டப்பட்டவன். காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயிலை எழுப்பியவன்; இரண்டாம் நரசிம்மவர்மன் காலம் கி.பி. 690-728. சுந்தரரை எடுத்து வளர்த்த நரசிங்கமுனையரையர் பல்லவருக்குத் திறை செலுத்தி வந்தவர். சுந்தரர் காலத்தில் பல்லவரும், சேரரும், சோழரும், பாண்டியரும் ஒன்றுபட்டு வாழ்ந்த காலம் என்று கருதலாம். சேரமான் பெருமாள் சுந்தரருடன் மதுரைக்குச் சென்றதும் அங்கு

இவ்விருவரையும் பாண்டிய மன்னனும் அப்போது அவனுடன் இருந்த சோழன் ஒருவனும் வரவேற்றார்கள் என்பதே இதற்குச் சான்றாம்.

தேவாரப் பாடல்கள் யாவும் அக்காலத்தில் தமிழ்ப் பண்கள் இசையுடன் பாடவேண்டியவை பயிலப்பட்டு வந்தன. தமிழ்ப் பண்களுள் பகலில் பாட வேண்டியவை என்றும், இரவில் பாட வேண்டியவை என்றும் பாகுபாடு உண்டு. தேவார ஆசிரியர் காலத்தில் பயின்று வந்த பண்களின் தொகை நூற்று மூன்றாகும். 'ஏழிசையாய், இசைப்பயனாய்' என்று சுந்தரர் இறைவனைப் பாராட்டிப் பாடுவதிலிருந்து அவருடைய நாள்களில் இசைக்கு அளிக்கப்பட்டிருந்த பெருஞ் சிறப்பானது தெளிவாகின்றது. இசையை வளர்ப்பதற்கென்றே பாணர்கள் என்பவர்கள் தமிழகத்தில் பண்டைய காலந்தொட்டு ஒரு தனிக் குலமாக வாழ்ந்து வந்துள்ளனர் என்பது முன்னரே கூறப்பட்டுள்ளது.

## ஆழ்வார்கள்

பல்லவர்கள் காலத்தில் வைணவமும் கிளர்ச்சியுற்று எழுந்தது. இரண்டாம் நந்திவர்மன் காஞ்சிபுரத்தில் வைகுண்டப் பெருமாள் கோயில், பரமேசுர விண்ணகரத்துக் கோயில், மதங்கேசுரர் கோயில் ஆகியவற்றை எழுப்பினான். அவனுடைய பட்டத்தரசி முத்தீசுரர் கோயிலைக் கட்டினாள். இந் நந்திவர்மன் காலத்தில் வாழ்ந்தவர் திருமங்கையாழ்வார். இவருடைய பாசுரங்கள் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் பெரிய திருமொழி' என்னும் பெயரில் இரண்டாம் ஆயிர மாகத் தொகுக்கப்பட்டுள்ளன. திருமங்கையாழ்வாரின் பாசுரங்கள் முழுமைக்கும் பண்களும் தாளங்களும் வகுக்கப்பட்டிருந்தன என்பது அவற்றுக்குப் பேருரைகள் வழங்கியவர்களின் வாக்கினால் தெரிந்துகொள்ளலாம். இவருடைய பாடல்களில் எட்டாம் பத்து, ஏழாம் திருமொழியின் இறுதிப்பாட்டில் 'தமிழ்இவை விழுமிய இசை'யினோடு ஒலிசொலும் அடியவர் உறுதுயர் இலரே' என்னும் குறிப்பு இவ்வுண்மையை எடுத்துக் காட்டுகின்றது. வைணவ சமயத்தில் நெஞ்சை அள்ளும் பாடல்களைப் பாடித் தமிழகத்தில் பக்தி வெள்ளம் பெருக்குவித்தவர்கள் ஆழ்வார்கள். அவர்களுள் சிலர் சைவக் குரவரின் உடன் காலத்தவர் ஆவார்கள். ஆழ்வார்கள் பன்னிருவர். அவர்களுள் ஒருவர் ஆண்டாள் என்பவர். தமிழகத்தின் பல இடங்களிலும் தோன்றியவர்கள் ஆழ்வார்கள். நால்வர் பல்லவ நாட்டைச்

சார்ந்தவர்கள்; சோழ நாட்டினர் மூவர்; சேரநாட்டினர் ஒருவர்; பாண்டிய நாட்டைச் சார்ந்தவர் நால்வர். அவர்கள் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், மதுரகவி யாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள் நாச்சியார், குலசேகராழ்வார். தொண்டரடிப் பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார் என்னும் திருநாமம் சூடியவர்கள். இப் பன்னிருவரும் தமிழகத்தில் கி.பி. 500 ஆம் ஆண்டு முதல் கி.பி. 800 ஆம் ஆண்டு வரையிலான ஒரு கால அளவில் வாழ்த்தவர்கள் என ஆய்வாளர் சிலர் கருதுவர். வைணவ சமயம் பல்லவ நாட்டில் தோன்றிச் சோழ நாட்டில் வளர்ந்து பாண்டி நாட்டில் மலர்ச்சியுற்றது. ஆழ்வார்களுள் பெரிதும் போற்றப்படுபவரான நம்மாழ்வார் தென்பாண்டி நாட்டில் தோன்றியவர். ஆழ்வார்கள் பல குலத்தைச் சார்ந்தவர்கள். நம்மாழ்வார் வேளாளர்; பெரியாழ்வார் ஸ்ரீவைணவ அந்தணர்; திருமங்கையாழ்வார் கள்ளர் மரபைச் சார்ந்தவர்; திருப்பாணாழ்வார் தீண்டாதார் என்று அக்காலத்தில் கருதப்பட்ட பாணர் குலத்தில் வந்தவர்.

இப்பன்னிரு ஆழ்வார்களும் பாடிய பாசுரங்களும் சேர்ந்துள்ள தொகை நூலுக்கு நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் என்று பெயர் வழங்குகின்றது. முதலாயிரத்தில் பெரியாழ்வார், ஆண்டாள் நாச்சியார், குலசேகரப் பெருமாள், திருமழிசையாழ்வார். தொண்டரடிப் பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், மதுர கவியாழ்வார் ஆகியவர்களின் பாடல்கள் அடங்கியுள்ளன. இந்த ஆயிரத்துக்குத் 'திருமொழி' என்று பெயர். இரண்டாம் ஆயிரத்தில் திருமங்கை யாழ்வாரின் பாசுரங்கள் மட்டும் தொகுக்கப்பட்டுள்ளன. இந்த ஆயிரத்துக்குப் பெரிய திருமொழி' என்று பெயர். மூன்றாம் ஆயிரத்தில் பொய்கை யாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகியவர்களின் பாடல்களுடன் திருமழிசையாழ்வார், நம்மாழ்வார். திருமங்கையாழ்வார் ஆகியவர்களுடைய பாடல்கள் சிலவும் சேர்ந்துள்ளன; இவ்வாயிரத்துக்கு 'இயற்பா' என்று பெயர். நான்காம் ஆயிரத்தில் சேர்க்கப்பட்டுள்ள பாசுரங்கள் யாவும் நம்மாழ்வார் அருளியவை. இவ் வாயிரத்துக்குத் 'திருவாய் மொழி' என்று பெயர்.

தேவார ஆசிரியர்களால் பதிகங்கள் பாடப்பெற்ற கோயில்களுக்குப் 'பாடல் பெற்ற தலங்கள்' என்று பெயர் வழங்குகின்றது. அக் கோயில்கள் இன்றும் மங்காத

புகழுடன் விளங்கி வருகின்றன. அதைப் போலவே, ஆழ்வார்கள் 'மங்களா சாஸனம்' செய்த திருப்பதிகள் புகழொளி குன்றாமல் இன்றளவும் சிறப்புற்றுக் காணப்படுகின்றன.

ஆழ்வார்கள் இறைவனிடத்தில் அயராத ஈடுபாடும், ஆன்மீக உறவும் பெற்றிருந்தார்கள். எனினும், மக்களிடையே வாழ்ந்திருந்து மக்கள் ஒழுக்கத்தை வளர்த்தும், திருமாலிடம் அன்பைப் பெருக்கியும் பெரும்பணியாற்றி வைணவத்தை வளர்த்தார்கள். சைவ சமய குரவர்களைப் போன்றே ஆழ்வார்களும் சமணத்தையும் பௌத்தத்தையும் வன்மையாகக் கண்டித்து வந்தனர். 'புலையறமாகி நின்ற புத்தொடு சமணம்' என்றும். 'தர்க்க சமணர்' என்றும், 'சாக்கியப் பேய்கள்' என்றும் ஆழ்வார்கள் பாடியுள்ளனர். அவர்கள் பல இடங்களில் சூனிய வாதிகளையும் வெறுத்துப் பாடியுள்ளனர். திருமாலின் அவதாரமானவரான கண்ணனைக் குழந்தையாகக் கொண்டு பெரியாழ்வார் பாடிய பாசுரங்கள் தமிழ் இலக்கியத்தில் ஒப்புவமை இல்லாதவையாம். ஆண்டாள் நாச்சியார் கண்ணன்மேல் பாடிய அகத்துறைப் பாடல்கள் தெவிட்டாத இனிமையும், பேரின்பப் பெருக்கும்கொண்டு திகழ்கின்றன. திருமங்கையாழ்வார் பெண் ஒருத்தி மடலூரத் துணிந்தாளெனப் பாடியுள்ளார். அவருடைய வாக்கில் அகப்பொருள் இலக்கணமே புரட்சி பெறுகின்றது. பெண்கள் மடலூரும் மரபு தமிழ் இலக்கணத்தில் காணமுடியாத தொன்றாகும். பல்லவன் மல்லையர் கோன் அபிமானதுங்கன், பருப்பதத்துக் கயல்பொறித்த பாண்டியர் குலபதி, தொண்டையர்கோன், சுச்சி வயிராமலு று. பரமேச்சுரப் பல்லவன், தில்லைச் சித்திரகூடத்துக்குப் பொன்னும் நாங்கூர் மன்னன், கோச்செங்கணான், மலையரையன், குணபரன் என்ற மன்னர்களின் பெயர்கள் பிரபந்தப் பாடல்களில் இடம் பெற்றுள்ளன.

நம்மாழ்வாருடைய பாசுரங்கள் வைணவர்களுடைய ஈடுபாட்டை மிகவும் பெற்றுள்ளன. உபநிடதங்களின் கருத்துகள் யாவும் நம்மாழ்வாரின் திருவாய்மொழியில் அடங்கியிருப்பதாக வைணவர்கள் போற்றிப் பரவுகின்றனர். நம்மாழ்வார் வேளாளராயினும் அவருக்கு மதுரகவி என்பார் தலைசிறந்த சீடராசு அமர்ந்தார். மதுரகவியாழ்வார் ஓர் அந்தணர். பன்னிரு ஆழ்வார்களுள் இவரும் ஒருவர்.

ஆண்டாள் நாச்சியார் இளம் வயதிலேயே திருவரங்கத்துக் கண்ணன் மேல் ஆராத காதல் கொண்டு பல அகத்துறைப் பாடல்கள் பாடியுள்ளார். அக் காதல் முதிர்ந்து திருவரங்கம் கோயில் கருவறைக்குள் மணப்பெண் கோலத்துடன் நுழைந்து கண்ணபெருமானுடன் கலந்துவிட்டனள் எனக் கூறுவர். இவர் பாடிய 'வாரணமாயிரம்' என்னும் பாசுரம் தரும் குறிப்புகளிலிருந்து இவர் காலத்திய மணவினை நடைமுறைகளையறிந்து கொள்ளலாம். ஆண்டாள் நாச்சியார் ஸ்ரீவில்லிபுத்தூரில் பெரியாழ்வாரின் வளர்ப்பு மகளாக வளர்ந்து கோதை என்னும் பெயர் பூண்டு, தம்மை முற்காலத்திய கோபிகைப் பெண்களுள் ஒருத்தியாகவே கருதிக் கண்ணனையடைய நோன்பு நோற்றவர். ஆயர்பாடி இளம் கன்னிப் பெண்கள் மார்கழி மாதம் விடியற் காலையில் ஒருத்தியையொருத்தி எழுப்பிப் பாவை நோன்பு நோற்றுக் கண்ணனையடைந்த பேரின்பத்தைத் திருப்பாவைப் பாடல்களில் இவர் பாடியுள்ளார். முப்பது பாடல்கள் கொண்டது இத் திருப்பாவை. வைணவர்கள் இப் பாடல்களை மார்கழி மாதங்களில் நாடோறும் வைகறையில் பாராயணம் செய்து வருகின்றனர்.

### மாணிக்கவாசகர்

சைவ சமய குரவருள் நான்காமவராக வைத்துப் போற்றப் படுபவர் மாணிக்கவாசகர். இவர் பாடிய பாடல்களுக்குத் 'திருவாசகம்' என்பது பெயர். திருக்கோவையார் என்னும் அகத்துறை நூல் ஒன்று சிதம்பரம் நடராசரின்மேல் பாடியுள்ள திருவாசகமும் திருக்கோவையாரும் பன்னிரண்டுள் எட்டாம் திருமுறையாகத் தொகுக்கப்பெற்றுள்ளன. மாணிக்கவாசகரின் பிள்ளைப் பெயர் திருவாதவூரர் என்பது. அவருடைய பாடல்களைக் கேட்டுமகிழ்ந்த சிவபெமான் அவருக்கு மாணிக்கவாசகர் என்று பெயர் சூட்டினார். எனப் புராணங்கள் கூறுகின்றன. பெரும்பற்றப்புலியூர் நம்பி (கி.பி. 13ஆம் நூற்றாண்டு) இயற்றிய திருவிளையாடற் புராணத்திலும், பரஞ்சோதி முனிவர் (கி.பி. 17ஆம் நூற்றாண்டு) பாடிய திருவிளையாடற் புராணத்திலும், இவருக்குப் பிந்திய காலத்தவரான கடவுள் மாமுனிவர் இயற்றிய திருவாதவூரர் புராணத்திலும், இப்பால் எழுந்த திருவுத்தரகோசமங்கைப் புராணம், திருப்பெருந்துறைப் புராணம் ஆகிய தலபுராணங்களிலும் மாணிக்கவாசகரின் வரலாறு விரிக்கப்படுகின்றது.

மதுரையை அரசாண்டுவந்த பாண்டிய மன்னனிடம் இவர் அமைச்சராகப் பணியாற்றி வந்தார். அவனுக்காக இவர் குதிரைகள் வாங்கச் சென்றதும், சிவபெருமானின் திருவருள் நோக்கத்தைப் பெற்றதும், குதிரை வாங்க மன்னன் இவரிடம் ஒப்படைத்த பொருளைக் கொண்டு இவர் திருப்பெருந்துறையில் கோயில் ஒன்றை எழுப்பியதும், அதற்காகப் பாண்டியன் இவரை ஒறுத்ததும், சிவபெருமான் இவரை ஆட்கொண்டதும் இப் புராணங்களில் விளக்கமாக அறியலாம். மாணிக்கவாசகர் தம் அமைச்சுப் பதவியைத் துறந்து சிவ வழிபாட்டில் ஆழ்ந்து திருவாசகப் பாடல்களையும், திருக்கோவையாரையும் பாடினார். சிதம்பரத்தில் திருச்சிற்றம்பலத்தில் நடம்புரியும் மெய்ப்பொருளே தம் பாடல்களின் உட்பொருள் என்று கூறித் திருச்சிற்றம்பலத்துக்குள் கலந்துவிட்டார் என்பது செவிவழிச் செய்தி. திருவாசகப் பாடல்கள் மிகவும் இனிமையானவை; கன்னெஞ்சையும் கரைத்து நெகிழ்த்து உருக்கக்கூடிய தன்மை வாய்ந்தவை 'திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்' என்று தொன்றுதொட்டுவரும் கூற்று ஒன்று உண்டு. 'திருவாசகம் இங்கு ஒருகால் ஓதின் கருங்கல் மனமும் கரைந்து உருகக் கண்கள் தொடுமணல் கேணியில் சுரந்து நீர் பாய, மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிப்பு எய்தி, அன்பர் ஆகுநர் அன்றி மன்பதை உலகில் மற்றையர் இலரே' என்று துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளும், 'வான்கலந்த மாணிக்க வாசக நின்! வாசகத்தை நான் கலந்து பாடுங்கால், நற் கருப்பஞ் சாற்றினிலே, தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து என் ஊன் கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே' என்று இராமலிங்க அடிகளாரும் வியந்து பாடியுள்ளார்.

இலங்கையிலிருந்து வந்த பௌத்தர்களை வாதில் வென்று சைவத்துக்கு வெற்றி தேடிக்கொடுத்தார் மாணிக்கவாசகர் என்று புராணங்கள் கூறுகின்றன. சிவபெருமானின் திருப்புகழைப் பாடிக்கொண்டே பெண்கள் உந்தீ பறத்தல், தோணோக்கம் ஆடுதல், பூவல்லி கொய்தல், பொன்னூசல் ஆடுதல், அம்மானை விளையாடுதல் போன்ற விளையாட்டுகளை ஆடுவதைப்போல் பல இனிய பாடல்களை இவர் பாடியுள்ளார்.

திருவாசகத் தொகுப்பில் முதலிடம் பெற்றுள்ள 'சிவபுராணம்' என்னும் பாடலானது 'நமச்சிவாய' என்று தொடங்குகின்றது. இறுதியாக வைக்கப்பட்டுள்ள

'முத்திநெறி யறியாத' என்று தொடங்கும் பதிகத்தில் மாணிக்கவாசகர் 'சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட அத்தன் எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே!' என்று வியந்து கூறுகின்றார். அவர் தாமே சிவம் ஆனதாக உள்ளது அவர் கூற்று. ஆன்மா சிவமாக மாறுவது என்னும் தத்துவம் சமய குரவர் ஏனைய மூவர் வாக்குகளில் காணப்படவில்லை.

ஆதிசங்கரர் தாம் பாடிய சௌந்தரியலகரியில் ஞானசம்பந்தரைக் குறிப்பிட்டுள்ளார். எனவே, இவருடைய காலம் எட்டாம் நூற்றாண்டிற்கு முற்பட்டதாகும். சங்கரரின் 'மிண்டிய மாயாவாதம்' என்ற தத்துவத்தைக் குறிப்பிட்ட மாணிக்கவாசகர், காலத்தால் சங்கரருக்குப் பிற்பட்டவர் எனக் கொள்ளல் பொருத்தமுடைத்து. தேவார ஆசிரியர்கள் பாடாத கோயில்கள் பல திருவாசகத்தில் இடம் பெற்றுள்ளன. எனவே, மாணிக்கவாசகர் இரண்டாம் வரகுணபாண்டியன் (கி.பி. 862-880) காலத்தில் வாழ்ந்தவர் எனக் கொள்ளுதலே சாலவும் ஏற்புடைத் தாகும்.

சைவத் திருமுறைகளில் பத்தாம் திருமுறையாகத் தொகுக்கப் பட்டிருப்பது 'திருமந்திரம்' என்னும் நூலாகும். இதன் ஆசிரியர் திருமூலர் ஆவார். இவர் திருத்தொண்டத் தொகையில் நாயன் திருமந்திரம் மூவாயிரம் செய்யுள்கள் கொண்டுள்ளது. இந்நூல் ஆதியில் எண்ணாயிரம் பாடல்களைக் கொண்டிருந்ததென்றும் சிலர் கருதுகின்றனர். சுந்தரரின் திருத்தொண்டத் தொகையில் இடம்பெற்றுள்ளதால் திருமூலர் 8ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவராதல் வேண்டும். 'சித்தாந்தம்' என்னும் சொல்லையும், 'சமரச சன்மார்க்கம்' என்னும் சொற்றொடரையும் முதன் முதல் ஆண்டவர் திருமூலர் ஆவார். சித்தாந்தம் என்னும் சொல் பிறகு சைவ சித்தாந்த நூல்களுள் சேர்ந்துவிட்டது.

'சமரச சன்மார்க்கம்' என்னும் மேலாம் நிலையைப் பிற்காலத்தவர்களான தாயுமானவரும் இராமலிங்க அடிகளும் விரித்து விளக்கியுள்ளனர். சைவ ஆகம முடிபுகளும், தந்திரங்களும், மந்திரங்களும், சக்தி வழிபாடும் திருமந்திரத்தில் மிகுதியாய் இடம் பெற்றுள்ளன. யோக நிலைகளை விளக்கும் நூலாகவும் திருமந்திரம் விளங்குகின்றது. சமயத்திலும் தத்துவங்களிலும் எழுந்த மிக அரிய கருத்துகளும், மெய்யறிவு கைவந்தவர்களின் அனுபவ நிலைகளும், மக்கள் வாழவேண்டிய நிலைகளும் திருமந்திரத்தில் திருமூலரால் விளக்கப்பட்டுள்ளன. அவருடைய பாடல்கள்

பல. பொருள் விளக்கம் எளிதில் காணவியலாதவாறு சொல்லமைப்புக் கொண்டுள்ளன. இந்நூல், அடிக்கு நான்கு சீர்கள் கொண்ட கலிவிருத்தம் என்னும் செய்யுள்களால் ஆனது. 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற ஆன்ற கொள்கையைத் திருமூலர் வலியுறுத்துகின்றார். இறைவனுக்குச் செய்யும் வழிபாடுகளால் வருந்தும் உயிர்களுக்கு ஒரு பயனும் கிடைக்காது எனவும், ஆனால் வருந்தும் உயிர்கட்குச் செய்யும் நலம் இறைவனுக்குச் செய்யும் வழிபாடாக மலரும் என்றும் கூறி அவர் திருநாவுக்கரசரைப் போலவே தொண்டு செய்வதன் பயனை வலியுறுத்துகின்றார்.

பதினோராம் சைவத்திருமுறையில் காரைக்கால் அம்மையார் நூல்கள் நான்கு இடம் பெற்றுள்ளன. இவ்வம்மையாரைச் சுந்தரர் தம் திருத்தொண்டத் தொகையில் அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவராகச் சேர்த்துப் பாடியுள்ளார். இவ்வம்மையார் காரைக்காலில் பிறந்து, வாழ்க்கைப்பட்டு, பிறகு உலகை வெறுத்துச் சிவபெருமானை வேண்டிப் பேயுருவம் பெற்றுத் திருவாலங்காட்டில் நடராசப் பெருமானின் எடுத்த திருவடியின் கீழ் என்றும் இருந்தார் என்று சேக்கிழார் கூறுகின்றார். இவருடைய பாட்டுகளில் வடமொழிச் சொற்கள் நிரம்ப உள்ளன. எனவே, வடமொழிச் சொற்கள் தமிழில் பரவி இடம் பெற்ற ஒரு காலத்தில் இவ்வம்மையார் வாழ்ந்தவராதல் வேண்டும். இவர் வீடு பெற்ற பெருமையையும், தூய்மையையும் திருவாலங்காடு வாய்க்கப் பெற்றிருந்ததனால் அதன்மேல் அடியெடுத்துவைக்க அஞ்சித் திருஞான சம்பந்தர் நகர்ப்புறத்தே ஒதுங்கித் தங்கியிருந்தார் என்று சேக்கிழார் கூறுவார்.

## தொகுப்புரை

- பல்லவர் ஆட்சி காலத்தில் கலைகள் அதிகளவில் வளர்ச்சி அடைந்தன.
- சிற்பக்கலை, ஓவியக்கலை, கட்டடக் கலை ஆகியவற்றில் பெயர் சொல்லும் அளவிற்குத் தலை சிறந்து விளங்கினர்.
- கடற்கரை கோயில் கட்டடக் கலையிலும், கற்சிற்பம் செதுக்கும் கலையிலும் பல்லவர்கள் தனித்துவம் மிக்கவர்களாகத் திகழ்ந்தனர்.
- புடைப்புச் சிற்பங்கள் உருவாக்கத்தில் இவர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.
- பக்தி இலக்கியங்கள் அதிகளவில் இவர்களின் காலத்தில்தான் உருவாகியது.
- சைவ, வைணவ இலக்கியங்கள் தமிழுக்குத் தொண்டு செய்யும் விதமாக அதிக இலக்கியங்களைப் படைத்தது இவர்களின் காலத்திலாகும்.

## மாதிரி வினாக்கள்

### ஒரு மதிப்பெண் வினாக்கள்

1. விசித்திரசித்தன் என்னும் பெரினை உடையவன்?

அ) சிம்ம விஷ்ணு ஆ) சிவாஸ் கந்தமன்

**இ) முதலாம் மகேந்திர வர்மன்** ஈ) நரசிம்மவர்மன்

2. மிகப் பெரிய கடற்படையை வைத்திருந்த பல்லவ மன்னன்?

அ) முதலாம் மகேந்திர வர்மன் ஆ) இரண்டாம் மகேந்திர வர்மன்

இ) சிவாஸ் கந்தமன் **ஈ) முதலாம் நரசிம்மவர்மன்**

3. சாசனங்களைச் செப்பேடுகளில் பொறிக்கும் பொறுப்பை மேற்கொண்டிருந்த அலுவலர் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?

அ) அதிகாரி **ஆ) தபதி** இ) எட்டி ஈ) காவிதி

4. கழஞ்சு, மஞ்சாடி என்பவை ____________

**அ) பொன் நிறுக்கும் அளவை** ஆ) நில அளவை

இ) காலத்தைக் கணக்கிடும் அளவை ஈ) தானியம் அளக்கும் அளவை

5. காஞ்சி கைலாசநாதர் கோயிலைக் கட்டியவர்?

அ) முதலாம் மகேந்திர வர்மன் ஆ) இரண்டாம் மகேந்திர வர்மன்

இ) சிவாஸ் கந்தமன் **ஈ) ராஜசிம்மன்**

### ஐந்து மதிப்பெண் வினாக்கள்

1. பல்லவர்களின் ஆட்சி சிறப்பு குறித்து எழுதுக.

2. பல்லவர்கள் கால கடற்கரை கோயில் குறித்து எழுதுக.

3. புடைப்புச் சிற்பங்கள் குறித்து எழுதுக.

4. பல்லவர் கால ஓவியம் குறித்து எழுதுக.

### பத்து மதிப்பெண் வினாக்கள்

1. பக்தி இயக்க காலம் குறித்துக் கட்டுரை வரைக.

2. பல்லவர்கால சிற்பக் கலை, ஓவியக்கலை குறித்து எழுதுக

3. பல்லவர் கால ஆட்சி சிறப்பினை விவரி.

## மாதிரி வினாக்களுக்கான விடைகள்

**ஒரு மதிப்பெண் வினாக்கள்**

1. இ) முதலாம் மகேந்திர வர்மன்
2. ஈ) முதலாம் நரசிம்மவர்மன்
3. ஆ) தபதி
4. அ) பொன் நிறுக்கும் அளவை
5. ஈ) ராஜசிம்மன்

…………………..

# அலகு – 4

**சோழர்கள் காலம், பிற்காலப் பாண்டியர் காலம், நாயக்கர் காலம் (கி.பி 9 முதல் 18 ஆம் நூற்றாண்டு வரை) சோழர்களின் எழுச்சி, இராஜராஜ சோழன்- இராஜேந்திர சோழன்- அயல் நாட்டில் தமிழர் ஆட்சி – தஞ்சை பெரிய கோயில் – கட்டடக் கலை வளர்ச்சி- உரையாசிரியர்கள் – காப்பியங்கள் வளர்ச்சி – நாயக்கர்கள் வருகை - பாளையப்பட்டுக்கள் – கோயில் கோபுரங்கள் – சிற்றிலக்கிய வளர்ச்சி.**

## முன்னுரை

விசயாலய சோழன் (கி.பி. 850- '71) தஞ்சையைக் கைப்பற்றித் தன் வெற்றியின் சின்னமாக நிசும்பசூதினி என்ற கோயிலை எழுப்பினான். இவ் வெற்றிக்கு முன்பு தஞ்சாவூர்ப் பகுதி முழுவதும் முத்தரையரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. முத்தரையர்கள் செந்தலை அல்லது நியமம் என்ற இடத்திலிருந்து தஞ்சையை ஆண்டு வந்தனர். தமிழ்நாட்டு வரலாற்றிலேயே ஈடிணையற்ற பெரும் புகழை ஈட்டிக்கொண்ட சோழப் பேரரசர் பரம்பரையொன்றை விசயாலய சோழன் தொடங்கி வைத்தான். அடுத்து அவன் மகன் ஆதித்த சோழன் முடிசூட்டிக்கொண்டான். பாண்டியருக்கும் பல்லவருக்கும் திருப்புறம்பயம் என்னும் இடத்தில் பெரும் போர் ஒன்று நிகழ்ந்தது. இப் போரில் ஆதித்த சோழன் பல்லவருடன் இணைந்தான். போரில் அபராசிதன் வெற்றி கண்டான். அவனுடைய துணைவன் பிருதிவிகங்கள் போர்க்களத்தில் புண்பட்டு மாண்டான்; வரகுணன் தோல்வியுற்றான். அபராசிதன், ஆதித்தன் தனக்குப் புரிந்த பேருதவியைப் பாராட்டினான். விசயாலயன் முத்தரையரிடமிருந்து கைப் பற்றித் தந்த நாட்டுடன் தானும் ஆதித்தனுக்குச் சில ஊர்களைப் பரிசாக வழங்கினான். இவர்களில் உதித்த சோழர் வரலாறு குறித்து இவ்வியலில் விவாகக் காணலாம்.

## 4.1 சோழர்கள் காலம்

விசயாலய சோழன் மறைவிற்குப் பின் அவரது மகன் முதலாம் ஆதித்தன் (கி.பி. 871-907) ஆட்சியமைத்தான். இவன் அரசியல் ஆற்றல் மிக்கவன்; போர்த்திறன் வாய்ந்தவன். சோழநாட்டுக்கு விரிவு தேடவேண்டும் என்ற சீரிய நோக்கம்

கொண்டவன். தன் தந்தை தனக்கு மீட்டுக் கொடுத்த சோழ நாட்டாட்சியை வலுவான அடிப்படையின்மேல் நிலைநாட்ட முயன்றான். அன்பில் செப்பேடுகளில் இவனைப்பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன. கொங்கு நாட்டில் ஆதித்தனின் கல்வெட்டுகள் கிடைக்கின்றன. இவன் தழைக்காடு என்ற ஊரைக் கைப்பற்றினான் என்று 'கொங்கு தேச இராசாக்கள்' என்னும் நூல் குறிப்பிடுகின்றது. ஆதித்தன் சேர மன்னன் தாணுரவியுடன் நல்ல நட்புறவு கொண்டிருந்தான். விக்கியண்ணன் என்ற படைத் தலைவன் ஒருவனுக்கு இவ்விரு அரசரும் 'தவிசு, சாமரை, சிவிகை, கோயில், போனகம், காளம், ஆண் யானை' ஆகிய விருதுகளையும் 'செம்பியன் தமிழவேள்' என்ற பட்டப்பெயரையும் வழங்கியுள்ளனர். இவ் வீரன் தாணுரவியின் படைத் தலைவனாக அமர்ந்திருந்து சோழனுடைய கொங்குநாட்டுப் போர்களில் அம் மன்னனுக்குப் படைத்துணை வழங்கியுள்ளான்.

ஆதித்தனையடுத்து அவன் மகன் முதலாம் பராந்தகன் அரியணை ஏறினான். அப்போது சோழ நாட்டின் வடவெல்லை காளத்தி வரையிலும், தெற்கில் காவிரி வரையிலும் விரிவடைந்திருந்தது. மைசூர்ப் பீடபூமியும், கேரளக் கடற்கரையும் சோழ அரசுக்குப் புறம்பாக நின்றன. பராந்தகனின் ஆட்சி நாற்பத்தெட்டு ஆண்டுக் காலம் நீடித்தது. பராந்தகன் பாண்டியரைத் தனக்குப் பணிய வைத்துத் தன் ஆட்சியைத் தெற்கில் கன்னியாகுமரி வரையில் விரிவுறச் செய்தான். தன்னுடைய மூன்றாம் ஆட்சியாண்டுக்குள் பராந்தகன் பாண்டி நாட்டின்மேல் படையெடுப்பு ஒன்றை மேற்கொண்டான். அவனை எதிர்த்து நிற்கும் வலியிழந்து இப் பாண்டியன் தன் நாட்டைக் கைவிட்டு முதலில் இலங்கைக்கு ஓடினான்.

பராந்தகனின் மக்களுள் ஒருவனான அருள் கேசரி என்பான் கொடும்பாளூர்ப் பரம்பரையைச் சார்ந்த தென்னவன் இளங்கோ வேளான் என்பவனின் மகள் பூபதி ஆதிச்ச பிடாரியை மணம் புரிந்துகொண்டான். கங்க மன்னன் இரண்டாம் பிருதிவிபதிக்குப் பராந்தகன், 'வாணாதிராசன்' என்ற பட்டமொன்றை வழங்கிப் பாராட்டினான். வைதும்பரை வென்று சோழ மன்னன் வெற்றிவாகை சூடினான். பராந்தகனை அரியணையினின்றும் இறக்கித் தன் மகள் வயிற்றுப் பிறந்த கன்னரதேவனைச் சோழ நாட்டு மன்னனாக முடிசூட்டுவிக்கும் சூழ்ச்சி ஒன்றில் இராஷ்டிரகூடன் இரண்டாம் கிருஷ்ணன் ஈடுபடலானான். தனக்குத் திறை

செலுத்தியவர்களான வாணகோவரையரின் துணைகொண்டு அவன் சோழ நாட்டின்மீது போர் தொடுத்தான். கங்க மன்னன் இரண்டாம் பிருதிவிபதியின் துணையைப் பெற்றுப் பராந்தகன் தன் படை வலிமையைப் பெருக்கிக்கொண்டான். பராந்தகனுக்குக் கங்க மன்னன் இரண்டாம் பிருதிவிபதி படைத்துணை நல்கினான். சோழரின் படைகளும் இராஷ்டிரகூடரின் படைகளும் திருவல்லத் தில் மோதிக்கொண்டன (கி.பி. 910-11). கிருஷ்ணனும் அவனுடைய போர்த் துணைவரும் படுதோல்வியடைந்தனர். பராந்தகன் வீரவெற்றி கண்டான்; 'வீரசோழன்' என்ற விருது ஒன்றையும் ஏற்றுக்கொண்டான்.

பராந்தக சோழனின் பேரரசு வெகுவிரைவில் வளர்ந்து வந்து ஐம்பது ஆண்டுக்கால அளவில் மிகவும் விரிடைந்து விட்டது. அது வெகு துரிதமாக வளர்ந்து வந்ததால் நாடு முழுவதிலும் வலிமையானதோர் அடிப்படையில் ஆங்காங்கு அரசாங்கத்தை நிறுவுவதற்குப் பராந்தகனுக்குக் காலமும் வாய்ப்பும் போதவில்லை, அவனுடைய வெம்போர்த் தாக்குதல்களைத் தாங்கவியலாதவராகி நாடு கடந்தோடிய மன்னர்கள் அவன்மீது பழிவாங்கக் காலங்கருதி வந்தனர். பராந்தகனின் போர் வெற்றியானது இராஷ்டிரகூடர்கள், கீழைச் சளுக்கியர்கள் ஆகியவர்களுடைய வஞ்சத்தையும் மூட்டிவிட்டது. நெஞ்சில் அச்சத்தையும் அடிய ஓடி ஒளித்து வாழ்ந்து வந்ததையும், அதனால் ஏற்படக் கூடிய விளைவுகளையும் பராந்தகன் நன்கு அறிந்திருந்தான். வட ஆர்க்காடு மாவட்டத்தில் நிகழ்ந்த கங்க மன்னனின் பசுக் கவரும் படையெடுப்பு ஒன்றின்போது சோழ மறவன் ஒருவன் அவனை எதிர்த்துப் போராடிப் போர்க்களத்தில் புண்பட்டிருந்தான். அவனுடைய தொண்டின் சிறப்பையும், வீரத்தையும் பாராட்டிய பராந்தகன் அவனுக்கு வீரக்கல் ஒன்று எடுப்பித்தான். தக்கோலம் என்னும் ஊர் வட ஆர்க்காடு மாவட்டத்தில் அரக்கோணத்துக்குச் சுமார் பத்துக் கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. தக்கோலத்துக்குத் 'திருவூறல்' என்றொரு பழம் பெயர் உண்டு. இவ்வூர் உமாபதி ஈசுவரர் கோயிலின் நந்திச் சிலையொன்றின் வாயிலிருந்து எப்பொழுதும் தண்ணீர் வடிந்துகொண்டே இருக்கும். மிக அண்மையிற்றான் இவ்வூற்று வறண்டுவிட்டது. எப்போதும் தண்ணீர் ஊறிக்கொண்டே இருந்ததால் இவ்வூர் திருவூறல் என்னும் பெயரெய்திற்று.

பராந்தகனுக்குப் பிறகு முப்பது ஆண்டுகள் வரை, அதாவது முதலாம் இராசராசன் அரசுகட்டில் ஏறியவரையிலும் சோழ அரசில் ஒரு பெரும் குழப்பம் ஏற்பட்டது. இக் காலத்தில் நாட்டப்பெற்ற கல்வெட்டுகள் பலவும், பொறிக்கப்பட்ட அன்பில் செப்பேடுகளும் வரலாற்று நிகழ்ச்சிகளை இணைத்துச் சோழ மன்னரின் ஆட்சி வரிசையை அறுதியிடத் துணைசெய்கின்றன. பராந்தகனையடுத்துக் கண்டராதித்தன் பட்டத்துக்கு வந்தான். தமிழகத்து வரலாற்றில் புகழொளி வீசி விளங்கும் செம்பியன் மாதேவியே இவன் பட்டத்தரசியாவள். இவள் கட்டிய கோயில்கள் பல. இவளும் இவள் கணவனும் சேர்ந்து சைவ சமய வளர்ச்சிக்காகப் பல அரிய தொண்டுகள் புரிந்துள்ளனர். கண்டராதித்தன் பாடிய தோத்திரப் பாடல்கள் சில சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் ஒன்பதாம் திருமுறையில் வைக்கப்பட்டுள்ளன. இச் சோழ மன்னனின் வாணாள் இறுதியில் (கி.பி.957) சோழப்பேரரசானது மிகவும் சிறியதொரு நாடாகச் சுருங்கி வந்துவிட்டது. அப்போது தொண்டை மண்டலம் முழுவதும் இராஷ்டிரகூடன் மூன்றாம் கிருஷ்ணனுக்கு உட்பட்டிருந்தது.

இரண்டாம் ஆதித்தனேயன்றிப் பார்த்திவேந்திரவர்மன் என்ற பெயருள்ள சோழ மன்னன் ஒருவனும் வீரபாண்டியனை வென்று முடிகொண்டதாகத் தொண்டைமண்டலத்துக் கல்வெட்டுகள் சில தெரிவிக்கின்றன. இவனுக்குப் 'பரகேசரி' என்றும், 'கோவிந்தராசமாராயர்' என்றும் விருதுகள் வழங்கியதாகக் கல்வெட்டுச் செய்திகள் கிடைத்துள்ளன. இவனுடைய அரசியருக்கு 'உடையார் தேவியார் வில்லவன் மகாதேவியார்,' பெருமானடிகள் தேவியார்' லோக்கிய என்ற பட்டப் பெயர்கள் வழங்கி வந்ததாகத் தெரிகின்றன .

சுந்தர சோழனின் ஆட்சி பலவகையிலும் சிறப்புற்றிருந்தது. அவன் இராஷ்டிரகூடரிடமிருந்து சோழ நாட்டின் வடபகுதிகளை மீட்டுக் கொள்ளுவதிலேயே நோக்கமாக இருந்து இறுதியில் அவர்களுடன் போரிட்டுத் தொண்டை மண்டலத்தைத் தன் குடைக்கீழ் இணைத்துக்கொண்டான்.

## மாமன்னன் முதலாம் இராசராசன் (கி.பி. 985 - 1014)

உத்தம சோழனுக்குப் பிறகு இராசராசன் அரியணை ஏறினான். இவன் பல்லாண்டுகள் இளவரசனாக அமர்ந்திருந்து, ஆட்சிப் பொறுப்புகள் பலவற்றை ஏற்று நடத்தி அரசியலில் ஆழ்ந்த அனுபவமும், ஆற்றலும், நுண்ணறிவும் வாய்க்கப்

பெற்றிருந்தான். சோழப் பரம்பரையின் பேரையும் புகழையும் பன்மடங்கு உயர்த்திவிட்டவன் இராசராசன்தான். இவன் காலத்திலும், இவன் மகன் இராசேந்திரன் காலத்திலும் தமிழரின் மறமும் பண்பாடுகளும் கடல் கடந்து சென்று மக்கள் கருத்தைக் கவர்ந்தன. இராட்டிரகூடரின் படையெடுப்புகளினால் திறனிழந்து வளமிழந்து சுருங்கிவிட்ட சோழ நாட்டை மீண்டும் விரிவுற்று மிகப் பெரியதொரு பேரரசாக வரலாற்றில் திகழ வைத்த பெருமை முதலாம் இராசராசனையே சாரும்.

இராசராசன் தன் குடும்பத்தைப் போற்றிப் புரந்தான். இவனுக்குப் பதினைந்து மனைவியர் இருந்தனர். எனினும், தந்திசக்தி விடங்கி என்பவளே பட்டத்தரசியாகத் திகழ்ந்தாள். இவளுக்கு உலகமகாதேவி யென்றும் ஒரு பெயர் உண்டு. இராசராசனின் தமக்கையார் குந்தவை என்னும் ஆழ்வார் பராந்தகன் குந்தவை பிராட்டியார் ஆவாள். இவள் வல்லவரையர் வந்தியதேவனின் மனைவி. குந்தவைமேல் இராசராசன் குடும்பத்தில் அளவிறந்த அன்பும் நன்மதிப்பும் சொரியப்பட்டன. தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் இராசராசன் வழங்கிய நிவந்தங்களையடுத்து இவளுடைய நிவந்தங்கள் தாம் இடம் பெறுகின்றன. இராசராசனின் பெண்மக்கள் மூவருள் சளுக்க விமலாதித்தனின் மனைவியான குந்தவை ஒருத்தி; மற்றொருத்தி மாதேவடிகள். மகள் குந்தவை மீதும், உத்தம சோழனின் அன்னையாரான செம்பியன் மாதேவியிடத்தும் இராசராசன் பேரன்பைப் பொழிந்து வந்தான்.

தான் சோழநாட்டின் அரியணை ஏறியவுடனே 'இராச கேசரி அருண்மொழி' என்றும்,'மும்மடிச்சோழன்' என்றும் சில விருதுகளைத் தன் பேருடன் இணைத்துக் கொண்டான். மும்மடி என்றால் மும்முறை சோழன் என்று பொருள். இராசராச சோழனின் அரசியலைப் பற்றிய செய்திகள் பலவற்றைத் தெரிந்துகொள்ளுவதற்கு இம் மெய்க்கீர்த்திகள் பெரிதும் துணைபுரிகின்றன.

முதன்முதல் அவன் மேற்கொண்ட திக்குவிசயமானது தென்பாண்டி நாட்டுப் போருடன் தொடங்கப் பெற்றதென்று திருவாலங்காட்டுச் செப்பேடுகள் கூறுகின்றன. பாண்டியரும், சேரரும், சிங்களரும் என்றுமே சோழரை எதிர்த்துப் போரிடுவதென்று ஒரு உடன்படிக்கை செய்து கொண்டிருந்தார்கள். பிறகு காந்தளூர்ச்சாலை என்ற இடத்தைத் தாக்கி வென்று அங்கு அணிவகுத்து நின்ற மரக்கலங்களையெல்லாம் அழித்தான். சாலை என்னும் இடம் இப்போது திருவனந்தபுரத்தின் ஒரு பகுதியாக

உள்ளது என்று சிலர் கருதுவர், ஆனால், அது உண்மையில் அந் நகருக்குத் தெற்கில் பதினாறு கிலோமீட்டர் தொலைவில் உள்ள ஓர் இடமாகும். காந்தளூர்த் துறைமுகத்தில் மன்னன் கலங்களை(கப்பல்) அழித்தான் என்று கொள்ளுவதையே ஆய்வாளர் பலரும் ஏற்றுக்கொண்டார்கள்; 'காந்தளூர் அறச் சாலையில் சோறு அடுவதை மன்னன் நிறுத்திவிட்டான்' என்ற கருத்தும், 'அரசன் காந்தளூர்ச் சோற்றுச் சாலையில் உணவு வழங்க வேண்டிய முறையை நிருணயித்துத் திட்டஞ் செய்தான்' என்ற கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையின் கருத்தும் ஏலாவென ஒதுக்கப்பட்டன. காந்தளூர்ச் சாலையில் கலமலறுத்தருளிய விருதை முதலாம் இராசராசனே யன்றி, அவனுக்குப் பின் முதலாம் இராசேந்திரன், முதலாம் இராசாதிராசன், முதலாம் குலோத்துங்கன்"ஆகிய மன்னரும், சடாவர்மன் பராந்தக பாண்டியனும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

## முதலாம் இராஜேந்திரசோழன் (கி.பி.1012-1044)

பூர்வதேசமும் கங்கையும் கடாரமும் கொண்ட கோப்பரகேசரிவர்மன் என்று கல்வெட்டுகளால் புகழப்படும் முதலாம் இராசராசசோழனின் மறைவுக்கு ஈராண்டுகள் முன்பு கி.பி.1012இல் இளவரசாகப் பட்டம் புனைந்து, பின்பு மாமன்னனின் மறைவுக்குப் பிறகு 1014இல் சோழ சாம்ராஜ்யத்தின் சக்ரவர்த்தியாக இராஜேந்திரன் முடிசூடிக்கொண்டான். இவனது ஆட்சியின் முதற்பத்தாண்டுகள் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டிருந்தது. கொள்ளிடத்திற்கு வடபால் கங்கைகொண்ட சோழபுரம் எனும் பெயரில் ஒரு புதிய தலைநகரை இப்பேரரசன் உருவாக்கினான். பின்பு ஏறத்தாழ 1024இல் தஞ்சையை விடுத்து, கங்கை கொண்டசோழபுரத்தையே நிரந்தரத் தலைநகரமாக்கினான். மாபெரும் வீரனாகத் திகழ்ந்த இப்பேரரசன் தன் படை பலத்தால் வங்காள தேசம் வரை படை எடுத்து வெற்றிக்கொடி நாட்டினான். கங்கையிலிருந்து கொணர்ந்த நீரினைத் தன் தலைநகரத்தில் வெட்டுவித்த 'சோழகங்கம்' எனும் ஏரியில் நிரப்பி வெற்றிவிழா எடுத்தான். சிறந்ததொரு கடற்படையின் துணைகொண்டு கீழ்த்திசை நாடுகளுள் ஒன்றான கடாரத்து அரசனாகிய சங்கிராமவிசயோத் துங்கவர்மனைப் போரில் வெற்றி கண்டு, அவனது பட்டத்து யானையையும், பெரும் பொருளையும் வித்யாதர தோரணத்தையும் கவர்ந்ததோடு, ஸ்ரீவிசயம் (சுமத்ரா தீவிலுள்ள பாலம்பாங்பகுதி),

பண்ணை (சுமத்ரா தீவிலுள்ள பனை), மலையூர் (சுமத்திராவின் மற்றொரு பகுதி), மாயிருடிங்கம் (மலேசியாவிலுள்ள ஜிலோடிங்), இலங்காசோகம் (மலேயாவிலுள்ள கெடா பகுதி), பப்பாளம் (கிரா பகுதியிலுள்ள இஸ்துமஸ்), இலம்பகம், வளைப்பந்தூர், தக்கோலம் (தகோபா), தாமலிங்கம் (மலேயா நாட்டிலுள்ள தெமிலிங்), இலாமுரிதேசம் (சுமத்திராவின் வடபகுதி), நக்கவாரம் (நிக்கோபார் தீவுகள்) ஆகிய நாடுகளை வெற்றிகொண்டதாக இராஜேந்திரசோழனின் கல்வெட்டுகள் கூறுகின்றன. பிற்காலச் சோழ அரசர்களுள் இராஜேந்திரசோழன் காலத்தில்தான் சோழசாம்ராஜ்யம் மிகவும் விரிவடைந்திருந்தது.

தான் புதிதாகத் தோற்றுவித்த கங்கைகொண்ட சோழபுரம் எனும் தலைநகரில் கங்கைகொண்ட சோழேச்சரம் எனும் மிகப்பெரிய சிவாலயத்தைக் கட்டி, சைவ சமயத்திற்கும் கலைத்துறைக்கும் மிகுந்த சேவை புரிந்தான். புறச்சமயத்தவரிடம் அன்பு காட்டினான் என்பதை அவனது கல்வெட்டுச் சாசனங்கள் எடுத்துக்கூறுகின்றன. இவனது மகன்களான இராஜாதிராஜன், இரண்டாம் இராசேந்திரன், வீரராசேந்திரன் ஆகிய மூவரும் தம் தந்தையின் வெற்றிகளுக்குக் காரணமாகத் திகழ்ந்ததோடு, இப்பேரரசனின் மறைவுக்குப் பின்பு ஒருவர்பின் ஒருவராக ஆட்சிப்பொறுப்பை ஏற்றுச் சோழர் மரபிற்குப் புகழ் சேர்த்தனர்.

## அயல் நாட்டில் சோழர்களின் ஆட்சி

இராசேந்திர சோழன் சோழர்களின் புகழ்பெற்ற மன்னர்களுள் ஒருவரும் தஞ்சை பெரிய கோவிலை கட்டியவருமான இராசராச சோழனின் மகனும், தென்னிந்தியாவின் புகழ்பெற்ற மன்னர்களுள் ஒருவருமாவார். விசயாலய சோழன் காலத்தில் தொடங்கிய சோழப் பேரரசு இராசேந்திரன் காலத்தில் அதன் பொற்காலத்தை அடைந்தது. சோழ மன்னர்களில் இராசேந்திரனுக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை என்ற பெருமை வாய்ந்தவர். தன்னுடைய ஆட்சிக் காலத்தில் இராசேந்திர சோழன் ஏற்கனவே பரந்து விரிந்திருந்த சோழப் பேரரசின் பரப்பை மேலும் விரிவுபடுத்தினார். இவர் ஆட்சி செய்த பகுதிகள் தென் இந்தியா பகுதிகள் ஆன தற்போதைய தமிழ்நாடு, ஆந்திர பிரதேசம், கருநாடகா, கேரளம், தெலுங்கானா, சத்தீசுகர், ஒரிசா, மேற்கு வங்காளம் ஆகிய பகுதிகளும், தென் கிழக்கு ஆசியா நாடுகள் அனைத்தும் இவர் ஆட்சி காலத்தில் இருந்தது.

இராசேந்திரன் ஆட்சிக்காலத்தில் சோழநாடு; இந்தியா இலங்கை, மாலத்தீவு, கடாரம், சிரீவிசயம், மலேயா (சிங்கப்பூர் - மலேசியா), சுமத்ரா, கம்போடியா, இந்தோனேசியா, மியான்மர், வங்கதேசம் ஆகியவற்றை உள்ளடக்கிய மிகப்பெரிய நிலப்பரப்பாக இருந்தது. இராசேந்திர சோழனே முதன் முதலில் அயல்நாட்டிற்குப் பெரும் படை எடுத்துச் சென்ற முதல் தமிழ் மன்னன் ஆவார். மகிபாலனை வென்று வங்காள தேசத்தைச் சோழநாட்டுடன் இணைத்தவர்; அதன் வெற்றியைச் சிறப்பிக்கவே கங்கை கொண்ட சோழபுரம் என்னும் புதிய தலைநகரத்தை உருவாக்கித் தன்னுடைய ஆட்சியை அங்கிருந்து நிர்வகித்தார். அங்கே சிவபெருமானுக்காக இராசேந்திரன் கட்டிய கற்கோயில் சோழர் காலக் கட்டிடக்கலைக்கு ஒரு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக இன்றளவும் விளங்கி வருகிறது. இந்தியாவில் வாயு கடவுளுக்கு கட்டப்பட்ட ஒரே கோயிலான, ஆந்திராவின் சித்தூர் மாவட்டத்தில் அமைந்துள்ள காளகத்தி கோயில் இராசேந்திர சோழனால் கட்டப்பட்டது.

தற்போதைய சென்னை, ஆந்திரம் பகுதிகளுடன், மைசூரின் ஒரு பகுதியையும் ஈழத்தையும் உள்ளிட்ட ஒரு பரந்த நாட்டை இராசராசன், இராசேந்திரனுக்கு விட்டுச் சென்றான். அரசாங்க நிர்வாகம் மிகுந்த கவனத்துடன் நிறுவப்பட்டதுடன், பெரு நிலப்பிரபுக்கள், சிறு விவசாயிகள், தொழிற் குழுக்கள் ஆகியோரது உரிமைகளைப் பாதுகாக்கவும், அதே சமயம் மன்னனது அமைதியையும் சமூக உரிமைகளையும் பாதுகாக்கும் வகையில் வலிமைமிக்க ஒரு அதிகாரவர்க்கமும் உருவாக்கப்பட்டது. நன்கு பயிற்சியளிக்கப்பட்ட வீரர்களைக் கொண்ட படை ஒன்று நாட்டின் விரிந்த எல்லையைக் காக்கும் திறன் பெற்றிருந்ததோடு புதிதாகக் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் எழும் எதிர்ப்புகளை அழிக்கவும், வெளிநாடுகளைக் கைப்பற்றவும் உதவிபுரிந்தது. ஈழம், மாலத்தீவுகள் போன்ற கடல் கடந்த நாடுகளைக் கைப்பற்றியபின் அவற்றைத் தம் அதிகாரத்திற்குள் நீடித்திருக்குமாறும் செய்ய இராசேந்திரன் ஒரு சிறந்த கடற்படையையும் வைத்திருந்தான்.

இக்கடற்படையின் உதவியுடன் கிழக்கிந்தியத் தீவுகளுடனும், சீனத்துடனும் ஏற்பட்ட வணிகத்தையும் பாதுகாக்க முடிந்தது. இவற்றைப் பயன்படுத்தி தான் ஆட்சி செய்த முப்பத்து மூன்று ஆண்டுகளில் இராசேந்திரன் தன் நாட்டை தமிழ் அரசர்கள் ஆண்ட நாடுகளிலேயே தலைசிறந்த ஒன்றாகவும், மலேயாத் தீபகற்பத்தையும், கீழைக்

கடற்கரைப் பகுதிகளையும் உள்ளிட்ட மிகப் பரந்த நாடாகவும் மாற்றி அமைத்தான். ஆட்சியின் முற்பகுதிகளில், இராசேந்திரன் மேற்கொண்ட எண்ணற்ற போர்களைப் பற்றியும், கைப்பற்றிய நாடுகளைப் பற்றியும் தன் தந்தை போன்றே இராசேந்திரனும் எண்ணற்ற கல்வெட்டுக்களை விட்டுச் சென்றுள்ளதால் அறிய முடிகிறது. இராசேந்திரனுடைய இராணுவச் சாதனைகள், வெளிநாடுகளில் பெற்ற வெற்றிகள் ஆகியவை பற்றித் திருவாலங்காடு, கரந்தைச்(தஞ்சை) செப்பேடுகள் ஆதாரத்துடன் தெரிவிக்கின்றன.

சோழ தேசத்துக்கான இராசேந்திர சோழனின் பங்களிப்பு, இராசராச சோழனின் படையில் பட்டத்து இளவரசனாகக் பொ.ஊ. 1012-இல் பங்கேற்றதில் இருந்தே தொடங்கியது. இதில் மிகவும் முக்கியமானவை இராட்டிரகூடர்களுக்கு எதிரான இராசராசனின் போரும் மற்றும் சாளுக்கிய அரசன் சத்யாச்சிரயனுக்கு எதிரான போரும் ஆகும். இதில் சாளுக்கிய அரசனுக்கு எதிரான போரில் இராசேந்திரன் துங்கபத்திரை ஆற்றைக் கடந்து சாளுக்கிய நாட்டின் தலைநகர் வரை படையெடுத்துச் சென்று வெற்றிபெற்றான்.

## ஈழத்தின் மீதான படையெடுப்பு

முதலாம் இராசராச சோழன் தொடங்கி வைத்த ஈழத்தின் மீதான படையெடுப்பை நிறைவு செய்யும் விதமாகவும், பராந்தக சோழன் காலத்திலேயே தேடப்பட்டுக் கண்டறியமுடியாமல் போன, பாண்டிய அரசர்களால் சிங்கள அரசர்களிடம் கொடுத்து வைக்கப்பட்டதாகச் சொல்லப்படும் இந்திரன் பாண்டியர்களுக்கு அளித்ததாகக் கருதப்படும் இரத்தினக் கற்கள் பொறித்த வாளையும் முத்து மாலையையும் கண்டறியும் விதமாகவும் ஈழ மண்டலத்தின் தென் கிழக்கிலுள்ள ரோகண நாட்டின் மீது பொ.ஊ. 1018-இல் இந்தப் படையெடுப்பு நடத்தப்பட்டது. படையெடுப்பில் பெரும் வெற்றி பெற்று இராசேந்திரன் ஈழத்தின் முக்கிய இடங்களை கைப்பற்றி சிங்கள பட்டத்து அரசன், அரசி, இளவரசி ஆகியோரைச் சிறைப்படுத்திச் சோழநாட்டிற்குக் கொண்டுவந்தான். சிங்கள அரசன் ஐந்தாம் மகிந்தா பன்னிரண்டு ஆண்டுக்காலச் சிறைவாசத்துக்குப் பிறகு சிறையிலேயே இறந்து போனான். இதைப்பற்றி சிங்கள சுயசரிதைக்கு ஒப்பான "மகா வம்சமும்" கூறுகிறது.

## தஞ்சை பெரிய கோயிலின் கட்டடக்கலை

தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள் என்பது பல வகைகளில் தனித்தன்மை மற்றும் சிறப்பு பெற்றவை. கோவிலின் முதல் கல்வெட்டே இதற்கு சான்று. "நாம் கொடுத்தனவும், நம் அக்கன் கொடுத்தனவும், நம் பெண்டுகள் கொடுத்தனவும், கொடுப்பார் கொடுத்தனவும் இந்த கல்லிலே வெட்டி அருள்க...." பேரரசரான இராஜராஜ சோழர், தன்னுடைய பங்களிப்பு மட்டுமன்றி மற்ற எல்லோரின் பங்களிப்பையும் ஆவணப் படுத்தியதே வியத்தகு ஒன்று.

### கட்டமைப்பு

இக்கோயிலின் தலைமைச் சிற்பி குஞ்சர மல்லன் இராசராசப்பெருந்தச்சன் எனக் கோயிலின் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. கோயிலின் அடிப்பாகம் 5 மீட்டர் (16 அடி) உயரம் கொண்டுள்ளது. ஒரே கல்லில் அமைக்கப்பட்டுள்ள நந்தி 20 டன் எடையும், இரண்டு மீட்டர் உயரம், ஆறு மீட்டர் நீளம், இரண்டரை மீட்டர் அகலமும் கொண்டதாகவும், இலேபட்சி கோயில் நந்திக்கு அடுத்தபடியாக, இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய நந்தியுமாகவும் உள்ளது. முதன்மைக் கடவுளான இலிங்கம் 3.7 மீட்டர் உயரமானது. வெளிப் பிரகாரம் 240 மீ. x 125 மீ. அளவிலானது. 108 பரத நாட்டிய முத்திரைகளைக் காட்டும் நடனச் சிற்பங்கள் வெளிச்சுவற்றின் மேற்பகுதியில் வடிக்கப்பட்டுள்ளன. பிற்காலத்தில் பாண்டியர்களால் 13ஆம் நூற்றாண்டில் அம்மன் சன்னிதியும் விசயநகர அரசர்களால் முருகர் சன்னிதியும் கட்டப்பட்டு, மராத்திய அரசர்களால் விநாயகர் சன்னிதி புதுப்பிக்கப்பட்டது. தஞ்சை நாயக்கர்களாலும் இக்கோயில் மேம்படுத்தப்பட்டுள்ளது.

### கோயில் அமைப்பு

முக்கியமான கட்டடம் 150 அடி நீளம் இருக்கிறது. மிகப் பிரம்மாண்டமான விமானம் எகிப்தியப் பிரமிடுகளைப் போல கூர்நுனிக் கோபுரமாக அமைந்து கர்ப்பக்கிரகத்திலிருந்து 190 அடி உயரத்திற்கு ஓங்கி வளர்ந்திருக்கிறது. அக்காலத்தில் புவனேசுவரத்தில் கட்டப்பட்ட இலிங்கராசர் கோயிலின் உயரம் 160 அடியாகும். இராசராசேச்சரம் அதையும் மிஞ்சி விட்டமை குறிப்பிடத்தக்கது. இந்தக் கோயிலில் பிற்காலத்தில் கட்டப்பட்டவை - முன் தாழ்வாரம், நந்தி மண்டபம், கருவூர்த் தேவர் கோயில், அம்மன் கோயில், சுப்பிரமணியர் கோயில் ஆகியன.

இவை தவிர இந்த மாபெரும் கோயிலின் ஏனைய பகுதிகள் யாவும் ஒரே காலத்தவை. இவற்றினுடைய பெருமிதத் தோற்றத்தையும் ஒருங்கிணைந்த திட்டத்தின் எளிமையான இயல்பையும் பாராட்டாமல் இருக்கமுடியாது. துணைச் சார்ந்த (Axial) மண்டபங்களும், விமானமும் அர்த்த மண்டபமும் மகாமண்டபமும் பெரிய நந்தியும் அவற்றிற்கேற்ற பொருத்தமான அளவுகளையுடைய ஒரு சுற்றுச் சுவருக்குள் அடங்கியிருக்கின்றன. இச்சுவரில் கிழக்கே ஒரு கோபுரம் இருக்கிறது. மதிலை ஒட்டி உள்பக்கமாக பல தூண்களுள்ள ஒரு நீண்ட மண்டபம் செல்லுகிறது. இது 35 உட்கோயில்களை இணைக்கிறது. நான்கு திக்குகளிலும் பல இடைவெளிகளுக்கு நடுவே கேந்திரமான இடங்களில் இந்த உட்கோயில்கள் கட்டப் பெற்றிருக்கின்றன. இரண்டாவது வெளிப் பிரகாரத்தின் வாயிலாக இருந்த இடத்தில் முன் பக்கத்தில் இரண்டாவது கோபுரம் இருக்கிறது.

### வடிவமைப்பு

எகிப்திய பிரமிடுகளின் கட்டுமான முறைக்கும் தஞ்சை மற்றும் கங்கைகொண்ட சோழபுர கோவில்களின் கட்டுமான முறைக்கும் ஒற்றுமை இருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இரண்டிலுமே தேர்ந்தெடுக்கப்பட்ட கற்கள் அடுக்கியும் கோர்த்தும் வைத்து கட்டப்பட்டுள்ளது. இரண்டிலுமே கோள்களின் கதிர்வீச்சுக்கள் அதன் மையப் பகுதியில் குவியுமாறு வடிவமைக்கப்படுள்ளது. புவி அதிர்வுகளினால் பாதிப்புகள் ஏற்படுவதில்லை. கதிர்வீச்சுக்களின் குவியலில் பாதுகாக்கப்பட்ட அரசர்களின் உடல் கெடுவதில்லை. அதுபோல, சோழ கோவில்களில் நிலை நிறுத்தப்பட்டுள்ள ஆவுடை-லிங்கங்கள் தொடர்ந்து சக்தியுள்ள மையமாக புகழுடைய கோவில்களாக சிறந்து விளங்குகின்றன.

எல்லோரா குகைகள் (பொ.ஊ. 700) எப்படி ஒரு பெரிய மலையை குடைந்து கட்டப்பட்டதோ; அது போல் தஞ்சை பெரிய கோவில் விமானமும் (பொ.ஊ. 1000) ஒரு பெரிய மலையை அந்த கோபுர வடிவத்திற்கு வெட்டப்பட்டபின், நுட்பமாக சிற்பங்கள் அந்த விமானத்தில்மேல் செதுக்கப்பட்டு வடிவமைக்கப்பட்டு உள்ளது.

### விமானம்

முக்கிய விமானம் உத்தம வகையைச் சார்ந்தது; ஆதலால் இது மிகச் சிறந்தது. இதை, தமிழில் மாடக்கோயில் என்றும் சொல்வார்கள். இவ்வகைக்கு முதலாவது

உதாரணம் தட்சிணமேரு-கோரங்கநாதர். இது பக்கவாட்டில் 99 அடி உள்ள சதுர அடித்தளத்தில் மீது அமைந்தது. படுக்கையான பகுதி, நீண்டு துருத்திக் கொண்டிருக்கும். ஐந்து பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. நடுவேயுள்ள பகுதி மற்ற பகுதிகளை விடப் பெரியது. தரை மட்டத்துக்குக் கீழே இருக்கும் தளத்திலிருந்து சிகரம் வரை குடாவும் மாடமும் மாறி மாறிக் காணப்படுகின்றன. சுவரில் பதித்த தூண்கள், பீடத்தை அழகுபடுத்துகின்றன. யாளி உருவத்தால் அழுத்தப்பட்ட கபோதம் உடைய பீடத்தின் மீது, இதைவிடச் சிறிய பரப்பில் 63அடி சதுரத்தில் ஒரு உபபீடம் எழுப்பப்பட்டிருக்கிறது.

மேலேயும் கீழேயும் பத்ம தளங்கள் உடையதும் அரை வட்ட வடிவத்தில் பிரம்மாண்டமானதாய் அமைந்ததுமான குமுதத்தை ஏற்றுக்கொள்ள பத்ம தளமாக, கல்வெட்டுக்களுடன் கூடிய உபானம் விளங்குகிறது. குமுதம், கிழக்கு மூலையில் குறுக்காகத் திரும்பும் போது, விளிம்பில் எண்கோணமாக வெட்டப்படுகிறது. கண்டமும் கபோதமும் நெருங்கிக் காட்டப்பட்டுள்ளன. குமுதத்திற்கு நேர் உயரத்தில் வரி விமானம் காணப்படுகிறது. வரிசையாகப் பல சிங்கங்கள், அவற்றின் மீது சிங்கங்களை ஓட்டுபவர் மூலைகளில் சிங்கங்களுக்குப் பதிலாக, மகரங்களும் போர் வீரர்களும் வாயைப் பிளந்து கொண்டிருக்கும் குதிரைகளும் அவற்றின் மீதேறிச் சவாரி செய்பவர்களின் உருவங்களும் உள்ளன. உள்ளுறையின் செங்குத்தான சுவர்கள் தள அமைப்பைப் பின்பற்றிய 50அடி உயரத்துக்கு எழுப்பப்பட்டுள்ள, பிரம்மாண்டமான வளைந்த பிதுக்கம் அந்தச் சுவர்களை இரண்டு மாடிகளாகப் பிரிக்கிறது.

## இடைச்சிக் கல்

தஞ்சைப் பெருவுடையார் கோவில் கட்டுமான பணி நடந்து கொண்டிருந்தது. அழகி என்னும் இடையர் குல மூதாட்டி சிவத்தொண்டு செய்ய விரும்பினார். ஏழை மூதாட்டி தன்னால் இயன்ற தொண்டாக கோவில் கட்டி முடிக்கும் வரை கோவில் கட்டும் சிற்பிகளின் தாகத்தை போக்கும் பொருட்டு தினமும் அவர்களுக்கு தயிர், மோர் வழங்கி வந்தார். இதனை அறிந்த மன்னர் அருண்மொழிவர்மன் இடையர் குல மூதாட்டியின் சிவத்தொண்டை அனைவரும் அறியும் வண்ணம் 80டன் எடை கொண்ட கல்லில் அழகி என்று பெயர் பொறித்து, அதனை இராசகோபுரத்தின் உச்சியில் இடம்

பெற செய்தார். அந்த கல் இடைச்சிக் கல் என்று அழைக்கப்படுகிறது. அந்த கல்லின் நிழலே இறைவன் பெருவுடையார் மேல் விழுகிறது.

### நந்தி மண்டபம்

தஞ்சைப் பெரியகோவிலில் உள்ள பெரிய நந்தி ஒரே கல்லால் செய்யப்பட்டது. இதன் உயரம் 14 மீ, நீளம் 7 மீ, அகலம் 3 மீ ஆகும். நந்தி மண்டபம் தஞ்சை நாயக்க மன்னர் செவ்வப்ப நாயக்கரால் கட்டப்பட்டது. நந்திமண்டபத்திற்கு தெற்கே உள்ள திருச்சுற்று மாளிகையில் வடதிசையை நோக்கியபடி உள்ள நந்தியே இராசராசனால் பெருவுடையாருக்கு எதிரே அமைக்கப்பட்டதாகும். பின் தஞ்சை நாயக்கர்கள் சிவலிங்கத்துக்கு இணையான பெரிய நந்தியை நிறுவினர். முதலில் அமைக்கப்பட்ட நந்தி கேரளாந்தகன், இராசராசன் வாயில்களுக்கு இடைப்பட்ட பகுதிக்கும் பின்னர் திருச்சுற்று மாளிகைக்கும் மாற்றப்பட்டது.

### சந்நிதிகள்

சிவலிங்கம் பிரதிட்டை செய்யப்பட்டுள்ள, முக்கியமான கோயிலையும், அதனோடு கூடிய மண்டபங்களையும் தவிர, சண்டிகேசுவரர், அம்மன், நடராசர், வராகி, முருகர், விநாயகர் மற்றும் கருவூர்த் தேவர் கோயில்களும், இவ் வளாகத்துள் அமைந்துள்ளன. பெருவுடையார் சந்நிதி - பெருவுடையார் என்று அழைக்கப்படும் மூலவர் சிவபெருமான் லிங்க வடிவில் உள்ளார். இந்த மூலவரை இராசராச சோழன் இராசராசீச்சரமுடையார் என்ற பெயரில் வழிபட்டுள்ளார். இம்மூலவருக்கு பீடம் இல்லை.

பெரியநாயகி அம்மன் சந்நிதி - இக்கோவிலின் அம்மன் பெரியநாயகியாவார்.
கருவூர் சித்தர் சந்நிதி - இக்கோவிலில் கருவூர் சித்தருக்கென தனி சந்நிதி அமைந்துள்ளது.

வராகி அம்மன் சந்நிதி - இது சோழர் கால கட்டுமானமாக இருக்க வேண்டும் என்றே கருதப்படுகிறது. வேறெங்கிலும் இல்லாத வகையில் இந்த திருவுருவிற்கு இரண்டு கரங்கள் மட்டுமே இருப்பது வியக்கத்தக்கது.

கோவிலைப் பற்றிய அநேக தகவல்களைக் கல்வெட்டில் காண்பது என்பது இந்தக் கோயிலின் சிறப்பு. இத்தகு கல்வெட்டுகளின் மூலம் ஓர் ஒழுங்கான ஆவணத்தை அழியாத வகையில் நமக்கு விட்டுச் சென்றிருக்கிறார் இராஜராஜ

சோழன் என்றே சொல்ல வேண்டும். கோவிலின் அமைப்பு, அதன் கட்டுமானப் பணி விபரங்கள், கட்டி முடிக்கப்பட்டுக் குடமுழுக்கு நடத்தப்பட்ட நாள், கோவிலைக் கட்டும் பணியில் ஈடுபட்டவர்கள், கோவிலுக்கு என்று நியமிக்கப்பட்ட அதிகாரிகள், பணியாளர்கள், அவர் தம் பணிகள், ஒரு அதிகாரியோ, பணியாளரோ விடுப்பு எடுத்தால் செய்யப்பட வேண்டிய மாற்று ஏற்பாடுகள், அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதிய விவரங்கள் என்று பல்வேறு செய்திகள் இந்தக் கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்டுள்ளன.

கோவிலின் தினப்படி பூசனைகள், வழிபாட்டு முறைகள், சிறப்பு வழிபாடுகள் அவை எப்போது செய்யப்பட வேண்டும் என்னும் விபரங்கள், மாதம் தோறும் மற்றும் ஆண்டு தோறும் கொண்டாடப்பட வேண்டிய விழாக்கள், அந்த விழாக்களின் போது பின்பற்ற வேண்டிய முறைமைகள் என்று அனைத்தும் கல்வெட்டுகளில் உள்ளன. கிரக நிலைகளைக் கணித்து அதற்கேற்றார் போல எந்த விழவுகளை எப்போது கொண்டாட வேண்டும் என்பதைத் தெரிவிக்க பெருங்காணி என்பவர் நியமிக்கப்பட்டார். இவற்றை ஆவணங்களாக அல்லது செப்பு பட்டயங்களாக உருவாக்கியிருந்தால் அவை அழிந்து போக வாய்ப்பு உண்டு. ஆனால் கல்வெட்டுகளாக பொறித்ததன் மூலம் ஆயிரம் ஆண்டுகள் தாண்டியும் அவை நமக்கு கிடைப்பது சிறப்பு. இராஜராஜ சோழனின் 19 ஆம் ஆட்சியாண்டில் கோவிலின் கட்டுமானப் பணி தொடங்கப்பட்டதும், அவருடைய 25 ஆம் ஆட்சியாண்டின் 275 ஆம் நாள் கோவிலின் குடமுழுக்கு நடத்தப்பட்டது போன்ற தகவல்களும் கல்வெட்டுகளில் உள்ளன. இந்த நாளில் பேரரசர் ஒரு செப்பு குடத்தை, இராஜராஜ தேவரின் விமானத்தின் மீது பொருத்துவதற்காகக் கொடுத்தார் என்கிறது கல்வெட்டு. இதன் மூலம் இது நடந்தது 1010 ஆம் ஆண்டு என்று கொள்ளலாம்.

கோவிலுக்குப் பலரும் அளித்த செப்பு திருமேனிகளின் பட்டியல், திருமேனிகளின் அளவுகள், அவய அடையாளங்கள், நகைகள் அவற்றில் பதித்து இருந்த விலை உயர்ந்த கற்கள், முத்து, பவளங்களின் விபரங்கள் எல்லாமும் கல்வெட்டுகளில் உள்ளன. கோவிலுக்கு நிவந்தமாக அளிக்கப்பட்ட தங்கம் மற்றும் வெள்ளி பாத்திரங்களின் பட்டியலும் உள்ளது. அவற்றின் எடை, வடிவம் முதற்கொண்டு குறிப்பிடப்பட்டுள்ளன. நெய் எடுப்பதற்காகப் பயன்படுத்தப்படும் நெய்

முட்டை என்னும் சிறிய கரண்டியின் விபரம் வரை அத்தனையும் விடுபடாமல் பட்டியலில் உள்ளன. சளுக்கிய மன்னனான சத்யாஸ்ரயனை வெற்றி கொண்டது இராஜராஜ சோழரின் ஒரு முக்கியமான போர் வெற்றி. அதன் பின்னர், அவர் இராஜராஜீஸ்வரமுடையாருக்கு பொன்னால் ஆன மலர்களை பூஜைக்காக கொடுத்துள்ளார். இந்த செய்தியும் கல்வெட்டாக பதிவாகியுள்ளது.

## சோழர் காலத்தில் உரையாசிரியர்கள்

ஒரு காலத்துத் தோன்றிய நூலைப் பிற்காலத்து மக்கள் புரிந்துகொள்ளும் வண்ணம் தக்க எடுத்துக்காட்டுகளுடன் உரை எழுதியவர்கள் உரையாசிரியர்கள். இலக்கியங்கட்கும் இலக்கணங்கட்கும் உரை எழுதியவர்கள் பெயர்களைத் தமிழ் இலக்கிய உலகில் விரிவாகக் காணுகிறோம். உரையாசிரியர்கள் உரைகளே தனி நூல்கள் போல் சிறப்புடன் விளங்குகின்றன.

### சேனாவரையர்

தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு உரை எழுதியவர் சேனாவரையர். ‘வடநூல் கடலை நிலைகண்டு உணர்ந்தவர்’ என்றும், ‘ஆனாமரபின் சேனாவரையர்’ என்றும் புகழப்பட்டவர். ‘புவனேக சுந்தரநல்லூர் அரையன் ஆண்டானான சேனாவரையன்’ எனக் கல்வெட்டில் அவர் பெயரைக் காணுகின்றோம். இக்கல்வெட்டு கி.பி. 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

### நச்சினார்க்கினியர்

நச்சினார்க்கினியர், தொல்காப்பியத்தில் உள்ள எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று அதிகாரங்களுக்கும் உரை எழுதியவர். ‘கண்டியதேவரான நச்சினார்க்கினியன்’ என்ற கல்வெட்டுத் தொடரைக் காணுகின்றோம். கோவை மாவட்டம் அன்னூரில் உள்ள இக்கல்வெட்டு கி.பி. 14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

### தெய்வச்சிலையார்

தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய மற்றொரு ஆசிரியர் தெய்வச்சிலையார். அவரும் சேனாவரையர்போல, சொல் அதிகாரத்திற்கு மட்டும் உரை எழுதியுள்ளார். கல்வெட்டுக்களில் ‘தெய்வச்சிலை பட்டன்’, ‘அரையன் தெய்வச்சிலையான் எடுத்தகை அழகியான்’ என்பன போன்ற தொடர்கள் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுகள் 13, 14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை.

### பரிமேலழகர்

திருக்குறளுக்குப் பலர் உரை எழுதியிருப்பினும் பரிமேலழகர் உரையே மிகச் சிறந்தது என்பர். காஞ்சிபுரம் வரதராசப்பெருமாள் என வழங்கும் அருளாளப் பெருமாள் கோயில் கல்வெட்டில் 'வண்டுவரைப் பெருமாளான பரிமேலழகிய பெருமாள் தாதன்' என்ற பெயர் காணப்படுகிறது. இக் கல்வெட்டு கி.பி. 14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

### சாமுண்டிதேவர்

புறப்பொருள் வெண்பாமாலை என்னும் நூலை இயற்றியவர் ஐயன் ஆரிதனார் என்பவர். அதற்கு உரை எழுதியவர் மாகறல் சாமுண்டிதேவர் என்பவர். சீவைகுண்டம் பெருமாள் கோயில் கல்வெட்டில் 'மாகறல் திருமேற்கோயில் பெருமாளுக்கு இவ்வூர் ஊரங்கிழான் சாமுண்டிதேவன் திருவேகம்பம் உடையான் விளக்கு ஏற்ற ஒரு கழஞ்சு பொன்' கொடுத்த செய்தி கூறப்பட்டுள்ளது.

## சோழர் கால காப்பியங்களின் வளர்ச்சி

சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகியவை சோழர்கள் காலத்தில் எழுந்த பெருங்காப்பிய நூல்கள். நீலகேசி, யசோதர காவியம், நாககுமார காவியம், உதயணகுமார காவியம், சூளாமணி ஆகியன சோழர்கள் காலத்தில் எழுந்த சிறுகாப்பிய நூல்கள்.

### நீலகேசி

நீலகேசி என்பது ஐஞ்சிறு காப்பியங்கள் எனப்படும் ஐந்து தமிழ் இலக்கிய நூல்களுள் ஒன்று. சமண சமய நூலான நீலகேசி ஒரு கதைப் பின்னணியில் சமணக் கொள்கைகளை விளக்குகின்றது. தமிழில் எழுதப்பட்ட முதலாவது தருக்க நூல் இதுவெனக் கூறப்படுகின்றது. பௌத்த சமயத்தின் பெருமை கூற எழுந்த காப்பியமான குண்டலகேசி எனும் நூலுக்கு மறுப்பாகவே நீலகேசி எழுதப்பட்டுள்ளது. இதனை எழுதியவர் யார் எனத் தெரியவில்லை. இதன் வேறுபெயர் 'நீலகேசித் தெருட்டு'. இது 10 சருக்கங்களையும் 894 பாடல்களையும் கொண்டது.

### யசோதர காவியம்

தமிழில் எழுந்த ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்றான யசோதர காவியம், ஒரு சமண சமயம் சார்ந்த நூலாகும். இந்நூல் ஐந்து சருக்கங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 320 பாடல்களைக் கொண்டது. இந்து சமயத்தில் ஒரு காலத்தில் தெய்வங்களுக்கு

உயிர்ப்பலி கொடுப்பது வழக்கமாக இருந்து வந்தது. எனினும் பிற்காலத்தில் இதில் சில சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. இதன்படி உயிர்களுக்குப் பதிலாக மாவினால் செய்த அவற்றின் உருவங்களை வைத்துப் பலி கொடுப்பது போல் பாவனை செய்யும் வழக்கம் ஏற்பட்டது. உயிர்ப்பலியைத் தீவிரமாக எதிர்த்த சமண சமயம், இப் பாவனை செய்யும் முறையும் கொலையைப் போன்றதே எனவும், இதிலும் கொலை செய்யும் எண்ணம் இருப்பதால் கொலை செய்வதால் ஏற்படும் கர்ம வினைப் பயன்கள் பாவனைக் கொலையிலும் ஏற்படும் என்றும் வலியுறுத்தியது.

## நாககுமார காவியம்

நாககுமார காவியம் அல்லது நாகபஞ்சமி கதை எனப்படும் இந்நூல், தமிழில் தோன்றிய சிறு காப்பியங்களில் ஒன்றாகும். இதை எழுதியவர் யார் என்ற தகவல்கள் கிடைக்கவில்லை. சிரோணிக நாட்டு மன்னனின் வேண்டுகோளுக்கு இணங்கிக் கௌதமர் என்பார் அவனுக்குக் கதை கூறும் பாங்கில் இந்நூல் அமைக்கப்பட்டுள்ளது. 170 விருத்தப்பாக்களால் ஆக்கப்பட்ட இந்நூல் ஐந்து சருக்கங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இளமைக் காலத்தில் இன்பம் துய்ப்பதிலேயே தனது காலத்தைக் கழித்த நாககுமாரன், தனது இறுதிக் காலத்தில் வாழ்வின் நிலையாமையை உணர்ந்து துறவு மேற்கொள்வதே இக்கதையின் சாரம்.

## உதயணகுமார காவியம்

உதயணகுமார காவியம் தமிழில் உள்ள சிறு காப்பியங்களுள் ஒன்றாகும். இது குணாட்டியர் என்பவர் எழுதிய பெருங்கதை என்னும் நூலில் வரும் உதயணன் என்பவனின் கதையைத் தழுவி எழுதப்பட்டது. உதயணகுமார காவியம் உதயணனின் கதையை மிகச் சுருக்கமாக 367 விருத்தப்பாக்களில் தருகிறது. இந்நூலில் ஆறு காண்டங்கள் உள்ளன. இது சமண சமயத்தைச் சார்ந்த ஒரு நூல். பல்வேறு தமிழ் நூல்களைப் பதிப்பித்தவரான உ. வே. சாமிநாத ஐயர் இந்நூலை 1935 ஆம் ஆண்டில் பதிப்பித்து வெளியிட்டார்.

## சூளாமணி

ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்றான சூளாமணி, ஒரு சமண சமயம் சார்ந்த நூலாகும். ஜினசேனர் என்பவர் வடமொழியில் எழுதிய மகாபுராணம் என்னும் நூலைத் தழுவித் தமிழில் ஆக்கப்பட்டதே இந்நூல். இதன் ஆசிரியர்

தோலாமொழித்தேவர். 12 சருக்கங்களாகப் பிரிக்கப்பட்ட 2131 பாடல்கள் இந்நூலில் உள்ளன. சுரமை நாட்டின் இளவரசனான திவிட்டன் என்பவன், வித்தியாதர நாட்டு இளவரசி ஒருத்தியை மணந்து கொண்டதனால் ஏற்பட்ட சிக்கல்களையும் அதனால் திவிட்டன் நிகழ்த்திய வீரச் செயல்களையும் கூறுகிறது. இக்கதைப் பின்னணியில் சமண சமயத் தத்துவங்களை விளக்குகிறார் இதன் ஆசிரியர்.

## கம்ப இராமாயணம்

வடமொழியில் வால்மீகி எழுதிய நூலைத் தழுவித் தமிழில் எழுதப்பட்டதே கம்பராமாயணம். கம்பர் இதை எழுதிய காரணத்தால் கம்ப இராமாயணம் என்று அழைக்கப்படுகிறது. இந்நூல் பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என 6 காண்டங்களாகவும் 113 படலங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. ஏறக்குறைய10500 பாடல்கள் உள்ளன. இந்நூலை எழுதிய கம்பர் தஞ்சை மாவட்டம் திருவழுந்தூரில் பிறந்தவர். காளி கோயில் கம்பத்தினருகே பிறந்ததால் இவர் கம்பர் என்றழைக்கப்படுகிறார் என்றும் தேவாரப் பதிகங்களில் கம்பன் என்ற பெயர் உள்ளதால் கம்பர் என்றழைக்கப்படுகிறார் என்றும் சொல்லப்படுகிறது. மூன்றாம் குலோத்துங்கன் வாழ்ந்த காலமான 12 ஆம் நூற்றாண்டே இவரின் காலம். ஏர் எழுபது, திருக்கை வழக்கம், சரசுவதி அந்தாதி, சடகோபர் அந்தாதி என மேலும் பல நூல்களைக் கம்பர் எழுதியுள்ளார்.

## பெரிய புராணம்

பெரியபுராணத்தை எழுதியவர் சேக்கிழார் (அருண்மொழித் தேவர்).சைவ சமயத்தைச் சார்ந்த சிவனடியார்களின் பெருமையையும் அவர்களின் வரலாற்றையும் எடுத்துக்கூறும் நூல். திருத்தொண்டர் திருவந்தாதி(நம்பியாண்டர் நம்பி), திருத்தொண்டத் தொகை (சுந்தரர்), நேரில் திரட்டிய தகவல்களைக் கொண்டு பெரிய புராணத்தை சேக்கிழார் எழுதினார். இந்நூலின் காலம் 12 நூற்றாண்டு. பெரிய புராணத்தைத் திருத்தொண்டர் புராணம் என்றும் கூறுவர் இந்நூல் இரண்டு காண்டங்களாகவும் 13 சருக்கங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது.

## பெருங்கதை

பெருங்கதை அல்லது உதயணன் கதை என்பது பிரகத்து கதையின் தமிழ்வடிவம். இது ஒரு முக்கியமான நூல், கொங்கு நாட்டைச் சேர்ந்த சிற்றரசரனான கொங்கு வேளிர் என்ற புலவர் இதை எழுதியிருக்கிறார். பாண்டிய-பல்லவர் காலத்தின் இறுதியில் இது உருவாகியிருக்கலாம். கொங்கு வேளிரின் வாழ்க்கையைப் பற்றிய விவரமான செய்திகள் அவ்வளவாகத் தெரியவில்லை. இரண்டாம் சங்க காலத்தில் பல நூல்களைப் படித்து 'உதயணன் கதை' எழுதப்பட்டதாக சிலப்பதிகாரத்திற்குச் சிறந்ததொரு உரை எழுதியுள்ள அடியார்க்கு நல்லார் குறிப்பிட்டிருக்கிறார். இந்த நூல் பொ.ஊ. 3ம் நூற்றாண்டிலோ அதற்கு முன்னரோ எழுதப்பட்டிருக்கலாமென்று முடிவு செய்திருக்கிறார்கள். ஆனால், இது முடிந்த முடிவு அல்ல. அடியார்க்கு நல்லார் வாழ்ந்த பொ.ஊ. 12-ம் நூற்றாண்டில், 'உதயணன் கதை'யைப் பற்றிய இந்த நம்பிக்கை நிலவியது என்று சொல்லலாம். இந்த நூலில் எஞ்சியுள்ள பகுதிகளுக்கு மிகச் சிறந்த பதிப்பைத் தந்துள்ளார் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர். வருணனைக் கவிதைகளுக்கு ஏற்றதான அகவற்பாவில் இந்த நூல் ஆக்கப்பட்டிருக்கிறது. ஆசிரியருடைய நடை கூர்மையாயும் (திட்பமாயும்) தெளிவாயும் இருக்கிறது. தமிழ் இலக்கிய உலகம், இந்த நூலை சிறந்ததொரு காப்பியமாக மதித்து வருகிறது.

## சிந்தாமணி

திருத்தக்க தேவர் என்ற சமணப் புலவர் இயற்றியுள்ள 'சீவக சிந்தாமணி', தமிழ் இலக்கியத்திலுள்ள மகாகாவியங்களுள் - ஐம்பெரும் காப்பியங்களுள் தலை சிறந்ததாக மதிக்கப்படுகிறது. இது வாதீபசிம்மனின் சத்திர சூடாமணியைப் பின்பற்றியது, அந்த மூல நூலோ, பொ.ஊ. 898-ல் குணபத்திரன் எழுதிய உத்தரபுராணத்தை அடிப்படையாகக் கொண்டது. எனவே சீவக சிந்தாமணி பத்தாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டிருக்க வேண்டும். சிந்தாமணியைத் தந்த ஆசிரியர் சோழ வம்சத்தில் பிறந்தவர் என்று நச்சினார்க்கினியர் சொல்கிறார். சமண புராணங்களில் தொன்று தொட்டு நிலவிவரும் கதைகளை சனரஞ்சகமாகவும் இனக்கவர்ச்சியுடனும் கற்பனையுடனும் தமிழில் எழுத திருத்தக்க தேவர் விரும்பினார்; அம்முயற்சியில் அவர் வெற்றிகண்டார் என்பதும் உண்மை. நமக்கு இப்போது கிடைத்திருக்கும் சீவக

சிந்தாமணி செய்யுள்கள் ஒவ்வொன்றும் நான்கு வரிகள் கொண்ட 3,141 செய்யுட்கள் உடையது. ஆசிரியர் 2,700 செய்யுட்களையே செய்தார் என்று அறியப்படுகிறது. ஏனைய 445 செய்யுட்களில் சில அவருடைய குருவாலும் வேறு சில வேறு யாரோ ஒருவராலும் எழுதப்பட்டவை. இரண்டு செய்யுட்களை, இவை குருவால் எழுதப்பட்டவை என்று உரையாசிரியர் சுட்டிக்காட்டியிருக்கிறார். ஏனைய செய்யுட்களை யார் எழுதியது என்ற விவரம் இல்லை. பெரிய புராணம் எழுத சீவக சிந்தாமணி நேரடியாகக் காரணமாக இல்லை; ஆனாலும், சீவக சிந்தாமணி அதற்கு தூண்டுகோலாக இருந்திருக்கும் என்று அறியப்படுகிறது.

### வளையாபதியும் குண்டலகேசியும்

ஐம்பெரும் காப்பியங்கள் என்பவற்றுள் வளையாபதியும், குண்டலகேசியும் அடங்கும். இவை முழுமையாகக் கிடைக்கவில்லை. வேறு சில நூல்களில், இவற்றின் சிற்சில பகுதிகள் மட்டுமே காணப்படுகின்றன. இவையும் ஏறத்தாழ சீவக சிந்தாமணியின் காலத்தில் செய்யப்பட்டவையே. பௌத்த மதத்தார்த் தமிழுக்கு வழங்கியுள்ள இலக்கியச் செல்வங்கள் மிகக்குறைவு. அவற்றுள் ஒன்று குண்டலகேசி. புகழ்பெற்ற மணிமேகலை என்னும் நூலும் பௌத்தர்களால் படைக்கப்பட்டதே.

## பிற்காலப் பாண்டியர்கள் காலம்

பிற்காலப் பாண்டியப் பேரரசை முதலாம் சடையவர்மன் குலசேகரபாண்டியன், முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன், இரண்டாம் சடையவர்மன் குலசேகரபாண்டியன், இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன், முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன், முதலாம் மாறவர்மன் குலசேகரபாண்டியன் ஆகிய அறுவர் ஒருவர்பின் ஒருவராக ஆண்டு வந்தவர்கள் ஆவர். இனி இப்பாண்டிய மன்னர்களைப் பற்றி விரிவாகப் பார்ப்போம்.

## முதலாம் சடையவர்மன் குலேசேகரபாண்டியன் (கி.பி. 1190-1218)

இவன், மூன்றாம் குலோத்துங்க சோழன் உதவியால் பாண்டிய நாட்டு அரியணை ஏறி ஆட்சி செய்த மாறவர்மன் விக்கிரமபாண்டியன் என்பவனுடைய மகன் ஆவான். மாறவர்மன் விக்கிரமபாண்டியன் கி.பி. 1190இல் மறைந்தான். அதே ஆண்டில் சடையவர்மன் குலசேகரபாண்டியன் பாண்டிய நாட்டு மன்னனாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டான். இவன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் மூன்றாம்

குலோத்துங்கன் தன் தந்தைக்குச் செய்த உதவியை மறந்து அவனோடு பகைமை கொண்டான். அவனுக்கு ஆண்டுதோறும் கொடுத்துவந்த திறையையும் செலுத்த மறுத்துவிட்டான். இதனால் சினமுற்ற மூன்றாம் குலோத்துங்கன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்துச் சென்றான். சடையவர்மன் குலசேகரபாண்டியனும் பெரும்படையுடன் சென்று மூன்றாம் குலோத்துங்கனை எதிர்த்தான். கி.பி. 1202 இல் மட்டியூர், கழிக்கோட்டை என்னும் ஊர்களில் பெரும்போர்கள் நடைபெற்றன. (இவ்வூர்கள் தற்போதைய சிவகங்கை மாவட்டத்தில் உள்ள திருப்பத்தூர் வட்டத்தில் முன்பு இருந்தவை) இப்போர்களில் பாண்டியப் படைகள் பேரழிவிற்கு உள்ளாகிப் புறங்காட்டி ஓடின. தோல்வியுற்ற பாண்டியன் மதுரையை விட்டு வேறிடம் சென்று ஒளிந்துகொண்டான். வெற்றி பெற்ற மூன்றாம் குலோத்துங்கன் தன் படைகளுடன் மதுரை நகருக்குள் புகுந்தான். அங்குள்ள அரண்மனை மண்டபங்களை இடித்துத் தரை மட்டமாக்கினான். பின்பு மதுரை நகரில் சோழ பாண்டியன் என்ற பட்டப்பெயர் சூட்டிக் கொண்டு வீராபிடேகம் செய்து கொண்டான்.

மூன்றாம் குலோத்துங்கன் தான் வென்று கைப்பற்றிய பாண்டிய நாட்டை, ஒரு சில ஆண்டுகள் கழித்துக் குலசேகரபாண்டியனுக்கே மீண்டும் அளித்து, அவனைத் தனக்கு அடங்கித் திறை செலுத்தி ஆளும்படி ஆணையிட்டான். அதன்பின்பு சடையவர்மன் குலசேகரபாண்டியன் கி.பி. 1218 வரை மூன்றாம் குலோத்துங்கனுக்குத் திறை செலுத்தி ஒரு சிற்றரசன் போலப் பாண்டிய நாட்டை ஆண்டு வந்தான். இவன் தன் ஆட்சியின் இறுதிக் காலத்தில் (கி.பி. 1216இல்) தனது தம்பியான முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் என்பவனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டி அவன் ஆட்சித் துறையில் பயிற்சி பெற வழி செய்தான்.

## முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. 1216-1238)

முதலாம் சடையவர்மன் குலசேகர பாண்டியன் கி.பி. 1218இல் மறைந்தான். உடனே முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் பாண்டிய நாட்டு ஆட்சிப் பொறுப்பு முழுவதையும் ஏற்றுக் கொண்டான். இவன் தனது முன்னோர் சோழர்களுக்கு அடங்கித் திறை செலுத்தித் தம் வாழ்நாளைக் கழித்து வந்த இழிநிலையை எண்ணி மனம் வெதும்பினான். மேலும் தனது இளம்வயதில் மூன்றாம் குலோத்துங்கன் படையெடுத்து வந்து மதுரையில் உள்ள அரண்மனை மண்டபங்களைத் தரை

மட்டமாக்கியதை எல்லாம் நேரில் கண்டிருந்தான். எனவே சோழ நாட்டை வென்று பழிக்குப் பழிவாங்க வேண்டும் என்று எண்ணியிருந்தான். இந்நிலையில் மூன்றாம் குலோத்துங்கன் இறந்தான். அவன் மகன் மூன்றாம் இராசராசன் சோழ நாட்டு அரியணை ஏறி ஆட்சி செய்துவந்தான்.

மாறவர்மன் சுந்தரபாண்டியன் சோழர்களின் இரண்டாம் தலைநகராகிய பழையாறை சென்று அங்குள்ள அரண்மனையில் வீராபிடேகம் செய்து கொண்டான். பின்னர்ப் பாண்டிய நாடு திரும்பிச் செல்லும் வழியில், பொன்னமராவதியில் உள்ள தனது அரண்மனையில் தங்கினான். நாட்டை இழந்த மூன்றாம் இராசராசனை அழைத்துவரச் செய்து அவனுக்குச் சோழ நாட்டைத் திரும்ப அளித்து அவனைத் தனக்குத் திறை செலுத்தி ஆட்சி செய்து வருமாறு பணித்தான். சில ஆண்டுகளுக்குப் பின்பு மூன்றாம் இராசராசன் திறை செலுத்த மறுத்துவிட்டான். இதனால் சினங்கொண்ட மாறவர்மன் சுந்தரபாண்டியன் சோழ நாட்டின் மீது மீண்டும் ஒரு போர் தொடங்கினான். இப்போரில் தோல்வியுற்ற மூன்றாம் இராசராசன் சோழ நாட்டை விட்டு வடபுலம் நோக்கிச் சென்றான். செல்லும் வழியில் பல்லவ நாட்டின் ஒரு பகுதியை ஆண்டு கொண்டிருந்த கோப்பெருஞ்சிங்கன் என்பவன் தெள்ளாறு என்னும் இடத்தில் மூன்றாம் இராசராசனைக் கைது செய்து, தனது தலைநகராகிய சேந்தமங்கலம் என்ற ஊரில் உள்ள கோட்டையில் சிறைவைத்தான்.

இதே காலத்தில் போசளநாட்டை வீரநரசிம்மன் (1220-1230) என்பவன் ஆண்டு வந்தான். இவன் தன் மகளை மூன்றாம் இராசராசனுக்குத் திருமணம் செய்து கொடுத்திருந்தான். கோப்பெருஞ்சிங்கன் மூன்றாம் இராசராசனைச் சிறை வைத்ததை அறிந்து மனம் கொதித்த வீரநரசிம்மன் பெரும்படையுடன் சென்றான். கோப்பெருஞ்சிங்கனைப் போரில் தோற்கடித்தான்.

## இரண்டாம் சடையவர்மன் குலசேகரபாண்டியன் (கி.பி. 1238)

முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனுக்குப் பின்னர் இரண்டாம் சடையவர்மன் குலசேகரபாண்டியன் ஆட்சிக்கு வந்தான். இவன் ஒரு சில மாதங்கள் மட்டுமே ஆட்சி புரிந்து இறந்துபோனான். முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனுக்குப் பின்பு இவன் அரசாண்ட செய்தி திருத்தங்கால் என்னும் ஊரில்

(சிவகாசிக்கு அருகில் உள்ளது) உள்ள ஒரு கல்வெட்டால் அறியப்படுகிறது. அதில் இவனைப் பற்றிய செய்திகள் போதுமான அளவுக்கு இடம் பெறவில்லை.

## இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. 1239-1251)

இரண்டாம் சடையவர்மன் குலசேகரபாண்டியன் மறைவுக்குப் பின்னர், இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் கி.பி. 1239இல் பாண்டிய நாட்டு மன்னனாக அரியணை ஏறினான். இவனுக்குப் போசள மன்னனாகிய வீரசோமேசுவரன் மாமன் ஆவான்; (வீர சோமேசுவரன், வீரநரசிம்மனின் மகனாவான்) கொங்குச் சோழனாகிய விக்கிரமசோழன் மைத்துனன் ஆவான். இவர்களுடைய உறவும் நட்பும் இவனது ஆட்சிக்குப் பெருந்துணையாய் இருந்தன.

இவனது ஆட்சிக் காலத்தில் சோழ நாட்டை ஆண்டு வந்தவன் மூன்றாம் இராசேந்திர சோழன் ஆவான். அவன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்துச் சென்று இப்பாண்டியனைப் போரில் வென்று இவனுடைய பாண்டிய நாட்டையும் கைப்பற்றிக் கொண்டான். போசள மன்னன் வீரசோமேசுவரன் மூன்றாம் இராசேந்திர சோழனுடன் போர் புரிந்து, அவனை வென்று, பாண்டிய நாட்டு ஆட்சியை இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனிடம் ஒப்படைத்தான். இவ்வுண்மையை, அப்போசள மன்னன் தன்னைப் பாண்டியகுல சம்ரட்சகன் எனவும், இராசேந்திரனைப் போரில் வென்றவன் எனவும் தன் கல்வெட்டுகளில் கூறிக் கொள்வதால் அறியலாம்.

## முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. 1251-1268)

இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் இறந்த பிறகு, கி.பி. 1251இல் பாண்டிய நாட்டு மன்னனாக முடி சூடிக் கொண்டவன் முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் ஆவான். பிற்காலப் பாண்டிய மன்னருள் புகழில் மிகவும் ஓங்கியவன் இவனே ஆவான். வலிமையும் புகழும் இழந்து கிடந்த பாண்டியப் பேரரசை மேலோங்கச் செய்தவன் இவனே என்றால் மிகையாகாது. இவன் அண்டை நாடுகளுடன் போரிட்டு அந்நாடுகளை எல்லாம் வென்று பாண்டியப் பேரரசின் எல்லைகளை விரிவுபடுத்தினான். இவனது ஆட்சிக் காலத்தில் பாண்டியப் பேரரசு தமிழகத்தில் உள்ள சோழ நாடு, சேர நாடு, கொங்கு நாடு, பல்லவ நாடு ஆகிய நாடுகளை உள்ளடக்கி, வடக்கே ஆந்திராவில் உள்ள நெல்லூர் வரை பரந்து நின்றது. முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் செய்த போர்களும், அடைந்த வெற்றிகளும்,

கைப்பற்றிய நாடுகளும் பலவாகும். தோல்வியைக் கண்டறியாத சடையவர்மன் சுந்தரபாண்டியன் மகத நாட்டின் மீதும், கொங்கு மன்னர்களின் கொங்கு நாட்டின் மீதும் படையெடுத்துச் சென்று அந்நாடுகளை வென்று பாண்டிய நாட்டுடன் இணைத்துக் கொண்டான். (மகத நாடு என்பது தற்போது உள்ள சேலம் மாவட்டத்தின் கிழக்குப் பகுதியையும், விழுப்புரம் மாவட்டத்தின் மேற்குப் பகுதியையும் முற்காலத்தில் தன்னகத்தே கொண்டிருந்தது.)

சடையவர்மன் சுந்தரபாண்டியன் கப்பற்படையுடன் இலங்கை சென்று, அங்கு ஆண்டு கொண்டிருந்த அரசனை வென்றான். அவனிடமிருந்து யானைகளையும், பலவகை மணிகளையும் திறைப் பொருளாகப் பெற்று நாடு திரும்பினான். சடையவர்மன் சுந்தரபாண்டியனது அடுக்கடுக்கான வெற்றிகளைக் கண்டு அஞ்சிய பல்லவ அரசன் கோப்பெருஞ்சிங்கன் அவனுக்குத் திறைப்பொருளை அனுப்பி வைத்தான். சுந்தரபாண்டியன் அதை ஏற்றுக் கொள்ளாமல், கோப்பெருஞ்சிங்கன் மீது படையெடுத்துச் சென்று, அவனுடைய தலைநகராகிய சேந்தமங்கலத்தை முற்றுகையிட்டுப் போர் செய்தான். அப்போரில் கோப்பெருஞ்சிங்கனை வென்று சேந்தமங்கலத்தைக் கைப்பற்றிக் கொண்டான். மேலும் அவனுடைய யானைகளையும், குதிரைகளையும், பிற செல்வங்களையும் கவர்ந்து கொண்டான். சடையவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் காஞ்சிபுரத்தைத் தெலுங்குச் சோழனாகிய விசயகண்ட கோபாலன் என்பவன் ஆண்டு வந்தான். சடையவர்மன் சுந்தரபாண்டியன் அவன் மீது படையெடுத்துச் சென்று, போரில் அவனைக் கொன்று, காஞ்சிபுரத்தைக் கைப்பற்றினான். பின்பு விசயகண்ட கோபாலனுடைய தம்பியர் வந்து, தன்னடி பணிந்து வணங்கவே அவர்களுக்குக் காஞ்சிபுரத்தை அளித்து, அவர்களை ஆண்டுதோறும் தனக்குத் திறை செலுத்திக் கொண்டு ஆட்சி செய்து வருமாறு பணித்தான்.

சடையவர்மன் சுந்தரபாண்டியன் இறுதியாகத் தமிழகத்தின் வடக்கே படையெடுத்துச் சென்றான். அங்கே காகதீய நாட்டை ஆண்டு வந்த கணபதிதேவன் என்பவனைப் போரில் வென்று, அவனுக்கு உரிய நெல்லூரைக் கைப்பற்றி, அந்நகரில் வீராபிடேகம் செய்து கொண்டான்.

## முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் (கி.பி. 1268-1310)

முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியனை அடுத்து, முதலாம் மாறவர்மன் குலசேகரபாண்டியன் கி.பி. 1268இல் பாண்டியநாட்டு அரியணை ஏறினான். இவனது ஆட்சிக் காலத்தில் பாண்டிய நாடு உயர்நிலையில் இருந்தது. வெனிஸ் நாட்டு வழிப்போக்கனான மார்க்கோ போலோ (Marco Polo) என்பவனும், பெர்சிய நாட்டைச் சார்ந்த இசுலாமிய வரலாற்றாசிரியர் வாசாப் (Wassaf) என்பவரும் இவனுடைய காலத்தில் பாண்டிய நாட்டிற்கு வருகை புரிந்தனர். இப்பாண்டியன் கி.பி. 1284இல் ஆரியச் சக்கரவர்த்தி என்பவன் தலைமையில் பெரும்படை ஒன்றை இலங்கைக்கு அனுப்பிவைத்தான். அப்படைத்தலைவன் ஈழத்தின் பல பகுதிகளைப் பேரழிவிற்கு உள்ளாக்கி, நகரங்களைக் கொள்ளையிட்டுச் சுபகிரி என்னும் நகரில் இருந்த பெருங்கோட்டையைக் கைப்பற்றினான். இறுதியில் அந்நாட்டில் உள்ள பெருஞ்செல்வங்களையும், புத்தரது பல்லையும் கைப்பற்றிக் கொண்டு வெற்றியுடன் பாண்டிய நாட்டிற்குத் திரும்பினான். புத்தரின் பல்லை ஈழ நாட்டார் புனிதப் பொருளாகக் கருதி வந்தனர். பாண்டியரோடு போர் புரிந்து அப்பல்லைப் பெறுவதற்கு இயலாத நிலையில் இருந்த ஈழநாட்டு மன்னன் மூன்றாம் பராக்கிரமபாகு என்பவன் பாண்டிய நாடு வந்தான். மாறவர்மன் குலசேகரபாண்டியனைப் பணிந்து நட்புரிமை கொண்டு புத்தரின் பல்லைப் பெற்றுச் சென்றான்.

## மதுரை நாயக்கர்கள்

நாயக்கர் என்னும் சொல் வடசொல்லிலிருந்து வந்தது எனக் கண்டோம். ஆனால் நாயக்கர் என்னும் சொல் இந்நாளில் தெலுங்கர்களைக் குறிக்கின்றது. அதுவும் ஒரு இனத்தைக் குறிக்கும் சொல்லாகவே அமைந்துள்ளது. இந்த நாயக்கர்கள் மதுரை, தஞ்சை, செஞ்சி, வேலூர், இக்கேரி, மைசூர் போன்ற இடங்களில் ஆட்சி நடத்தி வந்தனர்.

மதுரை நாயக்கர்கள் ஆட்சி கி.பி. 1529இல் விசுவநாத நாயக்கர் என்பவரால் தொடங்கப்பட்டுக் கி.பி. 1736இல் மீனாட்சி அரசியுடன் முடிவடைந்துள்ளது. இந்த மதுரை நாயக்கர் பரம்பரை மதுரை நாட்டில் 207 ஆண்டுகள் ஆட்சி புரிந்தது. மீனாட்சி அரசியின் ஆட்சியோடு விசுவநாத நாயக்கர் பரம்பரை மட்டும் முடியவில்லை, விசயநகரப் பேரரசே முடிந்துவிட்டது.

## விசுவநாத நாயக்கர் (கி.பி. 1529 – 1564)

விசயநகரப் பேரரசின் பெருமைக்குரிய மன்னர் கிருஷ்ணதேவராயர் ஆவார். இவரது ஆட்சியில் தமிழ்நாட்டைக் கண்காணிக்கும் பொறுப்பை மேற்கொண்டிருந்தவர் நாகம நாயக்கர் என்பவர் ஆவார். இவருக்கு வாரிசு இல்லாததால் காசிக்குச் சென்று அங்கு எழுந்தருளியுள்ள விசுவநாதப் பெருமானை வணங்கி மகப்பேறு அருளுமாறு வேண்டினார். காசி விசுவநாதப் பெருமான் திருவருளால் கி.பி.1495இல் நாகம நாயக்கருக்கு ஒரு மகன் பிறந்தான். அம்மகனே விசுவநாத நாயக்கர் ஆவார்.

### சீர்த்திருத்தங்கள்

விசுவநாதர் திருச்சிராப்பள்ளியில் தெப்பக் குளத்தை வெட்டினார். தாயுமானவர் கோயிலைச் செப்பனிட்டார். காவிரி ஆற்றின் இருமருங்கிலும் கள்ளர்களின் உறைவிடமாயிருந்த காடுகளை அழித்துச் சாலைகளை அமைத்துக் கள்ளர் தொல்லைகளை ஒழித்தார். திருவரங்கப் பெருங்கோயிலைச் சீர்திருத்தி அக்கோயிலைச் சுற்றித் தெருக்களை அமைத்து, வீடுகளைக் கட்டி அங்கு மக்களை குடியேற்றினார். இவ்வாறு பல சீர்திருத்தங்களைச் செய்தார். இச்சீர்திருத்தங்களால் மதுரை நாட்டின் வடபகுதியாகிய திருச்சிராப்பள்ளியில் ஒழுங்கும் அமைதியும் நிலவலாயின.

## பாளையப்பட்டு முறை

தற்காலத்தில் உள்ள மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, கரூர், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், புதுக்கோட்டை, நாமக்கல், சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, கோயம்புத்தூர் மாவட்டங்களும், கேரளாவில் உள்ள திருவாங்கூரின் ஒரு பகுதியும் விசுவநாதர் ஆட்சிக்கு உட்பட்டு இருந்த மதுரை நாடாகும். இப்பரந்த நாட்டில் செம்மையான ஆட்சி முறையை நிறுவ, கி.பி.1533இல் 72 பாளையப்பட்டு முறையை விசுவநாதர் ஏற்படுத்தினார். இந்தப் பாளையப்பட்டு முறை ஒரு வகையில் ஆங்கில நாட்டின் நிலமானிய முறையைச் (Feudal System) சார்ந்ததாகும். நாட்டில் அமைதியை நிலைநாட்ட வேண்டும், நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டும், பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்ற காரணங்களுக்காக மதுரை நாட்டைப்

பல பகுதிகளாகப் (பாளையங்களாக) பிரித்து, ஒவ்வொரு பகுதிக்கும் ஓர் ஆட்சியாளரை நியமித்தனர். அவரைப் பாளையக்காரர் என அழைத்தனர். இந்த 72 பாளையக்காரர்களில் சிலர் கன்னடர், சிலர் தெலுங்கர் ஆவர். மேலும் பாண்டியர் பரம்பரையைச் சேர்ந்தவர்களும் சிற்றரசர்களாய் இருந்தவர்களும் பாளையக்காரர்களாக இருந்தார்கள். பாளையக்காரர்கள் தாங்கள் ஆளும் பாளையங்களிலிருந்து கிடைக்கும் வருவாயில் மூன்றில் ஒரு பகுதியை மதுரை நாயக்கருக்குக் கொடுக்க வேண்டும். மற்றொரு பகுதியைப் படைவீரர்களுக்குச் செலவிட வேண்டும். இன்னொரு பகுதியைச் சொந்தச் செலவுக்கு எடுத்துக் கொள்ளவேண்டும். இவர்கள் தங்கள் பகுதியைப் பாதுகாக்க வேண்டும். போர்க்காலங்களில் மதுரை நாயக்கர்களுக்குப் படைத்துணை புரிய வேண்டும். இவர்களே தங்கள் பகுதியில் ஏற்படக்கூடிய வழக்குகளை எல்லாம் விசாரித்து நீதியும் வழங்க வேண்டும்.

விசுவநாத நாயக்கர், விசயநகரப் பேரரசர்களாயிருந்த அச்சுதராயருக்கும், சதாசிவராயருக்கும், அமைச்சர் இராமராயருக்கும் கீழ்ப்படிந்து, நேர்மை குறையாமல், உண்மை ஊழியராய் இருந்து செங்கோல் ஆட்சி நடத்தி வந்தார். இதனை இவர் காலத்துச் சாசனங்கள் உறுதிப்படுத்துகின்றன. இவர் சுமார் 35 ஆண்டுகள் மாட்சியுடன் ஆட்சி செய்தார். தமது 69ஆம் வயதில் கி.பி.1564இல் மறைந்தார்.

இவரின் மறைவுக்குப் பின் முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர் (கி.பி.1564-1572), வீரப்ப நாயக்கர் (கி.பி.1572-1595), இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர் (கி.பி.1595 – 1601), முத்துக் கிருஷ்ணப்ப நாயக்கர் (கி.பி. 1601 – 1609), முதலாம் முத்துவீரப்ப நாயக்கர் (கி.பி.1609-1623) ஆகியோர் மதுரையை ஆட்சி புரிந்து வந்தனர்.

## திருமலை நாயக்கர் (கி.பி.1623-1659)

மதுரை நாயக்க மன்னர்களில் மிகவும் புகழ்பெற்றவர் திருமலை நாயக்கர் ஆவார். இவர் முத்துக் கிருஷ்ணப்பருக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தார். திருமலை நாயக்கர் முதலில் தம்முடைய அண்ணனான முதலாம் முத்து வீரப்ப நாயக்கர் ஆட்சியில் சில ஆண்டுகள் சின்ன துரையாக இருந்து ஆட்சி புரிந்து வந்தார். முதலாம் முத்து வீரப்ப நாயக்கர் சந்ததியின்றி கி.பி.1623இல் மறைந்தார். வாரிசு ஏதும்

இல்லாததால் அவரது உடன்பிறந்தவரான திருமலை நாயக்கர் ஆட்சியை ஏற்றார். திருமலை நாயக்கர் ஆட்சியை ஏற்றபோது அவருக்கு வயது 39 இருக்கும் என்பர்.

திருமலை நாயக்கரின் காலத்தில் மதுரைப் பெருநாடு, திண்டுக்கல், மதுரை, திருநெல்வேலி, திருவனந்தபுரத்தில் ஒரு பகுதி, இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய பகுதிகளைக் கொண்ட பெரும் பரப்புடைய நாடாய் இருந்தது. அடிக்கடி மதுரையில் காய்ச்சல் பரவிக் கொண்டிருந்தது. இக் காரணங்களால் தலைநகரைத் திருச்சிராப்பள்ளிக்கு மாற்றினார்.

### திருமலை நாயக்கரின் போர்கள்

முதலாவதாக, முந்திய பகைமையாலும், செந்தமிழ் மதுரை நாட்டின் செழிப்பாலும் மைசூர் மன்னர் மதுரை மீது படையெடுத்தார். திருமலை நாயக்கர் அவரை எதிர்த்துப் போராட வேண்டியவரானார். இரண்டாவது, திருவாங்கூர் மன்னர் கேரளவர்மா என்பவர் கட்ட வேண்டிய கப்பத்தைக் கட்டாததனால் அவர் மீது படையெடுத்துச் சென்று போர் புரியலானார். மூன்றாவது, விசயநகரப் பேரரசின் பிடியிலிருந்து விடுபட்டு, முழுவுரிமை மன்னராக விரும்பி, விசயநகரப் பேரரசை எதிர்க்க வேண்டிப் போர் தொடுத்தார். நான்காவது, இராமநாதபுரத்தில் அரசுரிமைக் கலகங்கள் ஏற்பட்ட காலத்தில் அவற்றை அடக்கி அமைதியை நிலைநிறுத்த இராமநாதபுரத்தை ஆண்டு வந்த சேதுபதியுடன் போர் செய்தார். ஐந்தாவதாக மைசூர் மன்னர் படைகள் மதுரை நாட்டைத் தாக்கி மதுரைக் குடிமக்களின் மூக்குகளை அறுத்து அவமானப்படுத்தியதால், இரண்டாம் முறை பழிக்குப் பழி வாங்க மைசூரின் மீது மூக்கறுப்புப் போரை நடத்தினார். திருமலை நாயக்கரின் படைவீரர்கள் மைசூர் நாட்டு எல்லைக்குள் புகுந்து, அங்குள்ள மக்களின் மூக்குகளை அறுத்து மூட்டையாகக் கட்டி மதுரைக்குக் கொண்டுவந்தனர்.

### கலைப் பணிகள்

திருமலை நாயக்கர் ஒரு தலைசிறந்த கலைப்பிரியர் ஆவார். மதுரையில் அவர் எழுப்பியுள்ள கட்டடங்கள் இன்றும் நின்று அவரை நினைவூட்டிக் கொண்டிருக்கின்றன. திருமலை நாயக்கர் மகால் இவர் கட்டிய கட்டடங்களுள் புகழ்பெற்றதும், பெரியதுமாகும். ஷாஜகான் பெயர் சொல்லும் தாஜ்மகாலைப் போல,

திருமலை நாயக்கரின் பெயர் சொல்லும் வகையில் மகால் அமைந்துள்ளது. இம்மகாலில் உள்ள அற்புதமான வேலைப்பாடு அமைந்த வளைவுகள், வட்டவடிவான மேற்கூரைகள், விரிந்து அகன்ற கூடங்கள், மிகப் பெரிய தூண்கள் காண்போர் கண்ணைப் பறிப்பனவாகும். ஒவ்வொரு தூணும் 40 அடி உயரமும், மூவர் அல்லது நால்வர் சேர்ந்தணைத்தாலும் அணைக்க முடியாத அளவு பருமனும் கொண்டு விளங்குவதை, மகாலின் முற்றத்தில் இன்றும் காணலாம்.

திருமலை நாயக்கர் மீனாட்சியம்மன் கோயிலின் கிழக்கே உள்ள பெரிய கோபுரத்தின் எதிரே கட்டிய புதுமண்டபம், இராய கோபுரம் மற்றும் மதுரைக்குக் கிழக்கே உள்ள வண்டியூரில் அழகிய மையமண்டபத்துடன் உருவாக்கிய தெப்பக்குளம் ஆகியன அவருடைய புகழை இன்றும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. இராய கோபுரம் முற்றுப்பெறாத நிலையில் நின்றுவிட்டது. இதைத் திருமலை நாயக்கர் கட்டி முடித்திருப்பாரே என்றால், அதுவே மதுரைக் கோபுரங்களில் மிகவும் உயரமாக அமைந்திருக்கும் என்பர்.

## சொக்கநாத நாயக்கர் (கி.பி.1659-1682)

திருமலை நாயக்கர் இறந்தவுடன் அவரது மகன் இரண்டாம் முத்துவீரப்ப நாயக்கர் (கி.பி.1659) ஆட்சிக்கு வந்தார். இவர் சுமார் நான்கு மாதங்களே ஆட்சி புரிந்து உயிர் நீத்தார். அவருக்குப் பின் அவருடைய மகன் சொக்கநாத நாயக்கர் ஆட்சிக்கு வந்தார்.

### பஞ்சமும் துன்பமும்

சொக்கநாதரும் அவர் தந்தையார் முத்துவீரப்பரும் இசுலாமியப் படையெடுப்புகளை இடைவிடாது தடுத்து நிறுத்தினாலும் மதுரைப் பெருநாட்டு மக்களைப் படையெடுப்புகளிலிருந்து பாதுகாத்திருந்தாலும், அந்த இசுலாமியப் படையெடுப்புகளால் நாட்டு மக்களுக்கு மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்கு எல்லையற்ற தொல்லைகள் உண்டாயின. இத்தொல்லைகளோடு பஞ்சம் வேறு வந்துவிட்டது. மக்கள் தங்களின் சொந்த ஊர்களை விட்டுவிட்டு, பற்பல ஊர்களுக்குச் சென்று குடியேறினார்கள். உதாரணமாக, திருச்சியில் இருந்தவர்கள் மதுரையில் குடிபுகுந்தார்கள். கிறிஸ்தவர்களுள் சிலர் நெடுந்தொலைவிலுள்ள சென்னை மயிலாப்பூரில் தஞ்சம் புகுந்தனர். தென்னகத்து நெற்களஞ்சியமான தஞ்சையிலும்,

திருச்சியிலுமே இப்பஞ்சம் மிகுதியாய் இருந்தது. பஞ்சத்தால் நாட்டு மக்கள் உணவின்றி வாடிக் கொண்டிருக்கும்போது டச்சு வணிகர்கள் வறுமையில் வாடும் மக்களுக்கு உணவு, உடை இவைகளைக் கொடுத்து மகிழ்ச்சியூட்டி அவர்களை ஐரோப்பிய நாடுகளுக்கு அடிமைகளாக விற்றனர். ஒரு சமயம் வனமியான் என்பவன் தஞ்சையின் உதவியுடன் திருச்சிக்குப் படையெடுத்து வந்தான். இவ்வனமியான் பீஜப்பூர் சுல்தான் அடில்ஷாவிடம் படைத்தலைவனாக இருந்தான். இவன் திருச்சியின் மீது படையெடுத்து வந்தபோது அங்குள்ள பயிர்களை எரித்தான். மக்களைத் துன்புறுத்தினான். மக்கள் சொல்லொணாத் துயருக்கு உள்ளானார்கள். மன்னர் சொக்கநாதரிடம் பெரும்படையிருந்தாலும் தன் குடிமக்களுக்குத் தொல்லை நேராமல் இருக்கும் பொருட்டு, வனமியான் நாட்டை விட்டு அகலுவதற்காக அவனுக்குப் பெரும்பொருளைக் கொடுத்து அனுப்பினார்.

### சேதுபதியுடன் போர்

சொக்கநாதர் வல்லத்தைக் கைப்பற்றித் தஞ்சை மன்னரைப் பழிவாங்கியதோடு விடாமல், தம் படை வீரர்களின் போர் ஆர்வம் குறைந்து போவதற்குள், வனமியான் படையெடுப்பில் திருமலைச் சேதுபதி தமக்குப் படையுதவி செய்யாமல் இருந்ததற்காக அவர்மீது போர் தொடுத்தார். முதலில் சொக்கநாத நாயக்கர் சேதுபதி ஆண்டு வந்த மறவர் சீமையில் புகுந்து திருப்பத்தூர், புதுக்கோட்டை, மானாமதுரை, காளையார் கோயில் போன்ற இடங்களைக் கைப்பற்றினார். அச்சமயத்தில் மதுரைத் தலைநகரில் சமயச் சார்பான விழாவை முன்னிருந்து நடத்த வேண்டிய பொறுப்பு இருந்ததால் சொக்கநாத நாயக்கர் மறவர் நாட்டுப் போர்ப் பொறுப்பைத் தம் படைத் தலைவரிடம் ஒப்படைத்துவிட்டு மதுரைக்குத் திரும்பினார்.

## மங்கம்மாள் (கி.பி. 1689-1706)

இவள் சொக்கநாத நாயக்கரின் மனைவி ஆவாள். சொக்கநாத நாயக்கருக்கும் மங்கம்மாளுக்கும் பிறந்த மகன் மூன்றாம் முத்துவீரப்ப நாயக்கர் ஆவார். இவர் தன் தந்தை சொக்கநாத நாயக்கரின் மறைவுக்குப் பின் பட்டத்திற்கு வந்து ஏழு ஆண்டுகள் (கி.பி. 1682-1689) ஆட்சி புரிந்தார். இவர் தமது ஆட்சிக் காலத்தில், தம் தந்தையார் இழந்த மதுரை நாட்டின் பகுதிகளை மீட்டார். இவருடைய மகன் விசயரங்க சொக்கநாதன் ஆவார். இவர் பிறந்தபோது இவரது தந்தையார் உயிருடன் இல்லை.

எனவே மூன்றாம் திங்களிலேயே குழந்தை விசயரங்க சொக்கநாதனுக்குப் பட்டம் சூட்டி, பாட்டியாகிய மங்கம்மாள் அக்குழந்தையின் சார்பாக ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்தலானாள். கி.பி.1689இலிருந்து 1706வரையில் மங்கம்மாளின் சார்பாட்சி மதுரைப் பெருநாட்டில் மாண்புற நடைபெற்றது.

## மங்கம்மாளின் ஆட்சி

ஔரங்கசீபு என்னும் மொகலாய அரசன் இந்தியாவின் பெரும்பகுதியை ஆண்டு வந்தான். தென்னகத்திலிருந்து அம்மன்னனை எதிர்த்துக் கொண்டிருந்த சிவாஜி என்ற மன்னர் மறைந்து விட்டார். இவரது மறைவின் காரணமாகத் தென்னகத்தில் ஔரங்கசீபின் ஆட்சி ஏற்படலாம் என எண்ணிப் பல அரசர்கள் அவனுடன் உடன்படிக்கை செய்து கொண்டனர். மைசூர் மன்னன் சிக்கதேவராயன் ஔரங்கசீபுடன் உடன்படிக்கை செய்து கொண்டான். தஞ்சையை ஆண்டு வந்த மராட்டிய வேந்தன் ஷாஜி என்பவனும் ஔரங்கசீப்புக்குத் தலைவணங்கித் திறை செலுத்த முற்பட்டு விட்டான். இவற்றையெல்லாம் அறிந்து கொண்ட மங்கம்மாளும் காலநிலை, மாற்றான் வலிமை அறிந்து ஔரங்கசீப்புக்குத் திறைப் பணம் செலுத்தி மதுரையைத் தக்கவைத்துக் கொண்டாள்.

மங்கம்மாள் ஔரங்கசீப்புக்குத் திறை செலுத்தி வந்தாலும் அவர்களுடன் நட்புக் கொண்டு அவர்கள் உதவியால் பகைவர்கள் கைப்பற்றிக் கொண்டிருந்த மதுரை நாட்டுப் பகுதிகளை எளிதாக மீட்டுக் கொண்டாள். தஞ்சை மன்னன் மதுரை நாட்டுப் பகுதிகள் சிலவற்றை முன்பே கைப்பற்றி ஆண்டு கொண்டிருந்தான். இருப்பினும் இந்தத் தஞ்சை மன்னன் ஷாஜி ஔரங்கசீப்புக்குத் திறை செலுத்தி வந்த காரணத்தால் அவனோடு போர் புரிய முடியவில்லை. இருந்தபோதிலும் மொகலாயப் படைத்தலைவன் சுல்பிர்கான் கி.பி. 1697இல் தெற்கே வந்தபோது, மங்கம்மாள் அவனுக்கு விலையுயர்ந்த பொருள்களை அன்பளிப்பாகக் கொடுத்து அவனுடைய உதவியால் தஞ்சை மன்னன் பிடித்து வைத்திருந்த அப்பகுதிகளை மீட்டுக் கொண்டாள்.

## மங்கம்மாள் செய்த அறச் செயல்கள்

மங்கம்மாள் நாட்டு மக்களுக்குச் செய்து கொடுத்த வசதிகளும், சமய வேறுபாடு இல்லாமல் எல்லாச் சமயத்தார்க்கும் செய்த அறங்களும் இன்றும் மதுரைவாழ்

மக்களால் பாராட்டப்படுகின்றன. மங்கம்மாள் கோயிலைக் கட்டி, குளங்களை வெட்டிக் கால்வாய்களைச் செப்பனிட்டுச் சாலைகளையும், சோலைகளையும் அமைத்து, சத்திரங்களையும் சாவடிகளையும் கட்டி, வழிப்போக்கர்களுக்குத் தண்ணீர்ப் பந்தல்களையும் ஏற்படுத்தினாள். கி.பி.1701ஆம் ஆண்டுச் சாசனம் ஒன்று, மங்கம்மாள் அன்ன சத்திரங்களுக்கு நிலங்களைக் கொடுத்ததைக் கூறுகிறது. மதுரையில் புகைவண்டி சந்திப்பிற்கு எதிரே உள்ள மங்கம்மாள் சத்திரம் மங்கம்மாள் கட்டியதாகச் சொல்லப்படுகிறது.

## மீனாட்சி அரசி (கி.பி. 1732-1736)

மங்கம்மாளுக்குப் பிறகு அவருடைய பேரன் விசயரங்க சொக்கநாத நாயக்கர் ஆட்சிக்கு வந்தார். இவர் கி.பி.1706 முதல் 1732 வரை ஆட்சியை நடத்தி வந்தார். இவருடைய மனைவி மீனாட்சி அரசி ஆவாள். இவர்களுக்குக் குழந்தைப் பேறு இல்லை. மீனாட்சி அரசி மங்கம்மாளைப் போல நாடாளும் ஆசை கொண்டாள். எனவே தன் கணவர் இறந்ததும் திருமலை நாயக்கரின் தம்பி குமாரமுத்துவின் வழிவந்த பங்காரு திருமலையின் மகனாகிய விசயகுமாரன் என்பவனை மகன்மை செய்துகொண்டு (சுவிகாரம் எடுத்துக்கொண்டு), கி.பி. 1732இல் மதுரை நாட்டின் ஆட்சியை மேற்கொண்டாள்.

## தமிழக கோயில் கோபுரங்களின் அமைப்பு

காஞ்சியில் உள்ள பௌத்த கட்டிடக்கலைக் கூறான தாது கோபுரம் ஒன்றைச் சூழவுள்ள கல் வேலியின் நுழைவாயிலில் அமைந்துள்ள அமைப்பு. வேதகால நுழைவாயில்களின் நேரடி வாரிசாகக் கருதப்படுகிறது. வேலியிடப்பட்ட இடங்களின் வாயில்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துக் கட்டிட அமைப்புக்களை அமைக்கும் வழக்கம் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே உலகின் பல பகுதிகளிலும் இருந்து வந்துள்ளது. கி.மு 1500 ஆண்டுகளுக்கு முன்பே பண்டைய எகிப்தில் வாயிற் கட்டிட அமைப்புக்களுடன் கூடிய கோயில்கள் இருந்துள்ளன. இன்றுள்ள அமைப்பில் இந்துக் கோயில் கோபுரங்கள் கி.பி 6 ஆம் நூற்றாண்டுகளுக்குப் பிற்பட்டவையே எனலாம். எனினும் இவற்றுக்கான கருத்துரு இந்தியாவில் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிலிருந்தே இருந்து வருகிறது. வேத கால ஊர்களிலே கோபுரங்களின் கருத்துருவுக்கான அடிப்படைகளை ஆய்வாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர்.

இவ்வாறு வீடுகளிலும், ஊர்களிலும் காணப்பட்ட, மூங்கில் முதலிய இயற்கைப் பொருட்களாலான எளிமையான வாயிற்கட்டிட அமைப்புக்கள், காலப்போக்கில் நீடித்துழைக்கும் கட்டிடப் பொருட்களினால் அளவில் பெரியனவாக உருவாக்கப்பட்டு முக்கியத்துவம் வாய்ந்த கட்டிடத் தொகுதிகளின் வாயில் அமைப்புக்களாக வளர்ச்சியடைந்தன. இவை தோரண வாயில்கள் எனப்பட்டன. இந்தியாவின் சாஞ்சியில் உள்ளது போன்ற பௌத்த கோயில்களில் இவ்வாறான தோரண வாயில்களைக் காண முடியும். தமிழ் நாட்டிலும் சில இந்துக் கோயில்களில் முற்காலத்தில் இவ்வாறான தோரண வாயில்கள் இருந்ததற்கான இலக்கியச் சான்றுகள் உள்ளன. கோபுரம் என்ற சொல்லின் தோற்றமும், வாயில் கட்டிட அமைப்புக்களுக்கான பழைய எடுத்துக் காட்டுகளும் தமிழ் நாட்டுக்கு வெளியிலேயே காணப்பட்டாலும், இன்றைய வடிவத்தில் கோபுரக் கட்டிடக் கலையின் வளர்ச்சிக்குக் களமாக அமைந்தது தமிழ் நாடே.

## தமிழ் நாட்டின் தொடக்க காலக் கோபுரங்கள்

காஞ்சி கைலாசநாதர் கோயில் கோபுரம். தற்காலக் கோபுரத்தின் மிக எளிமையான வடிவம். தமிழ் நாட்டில் காணப்படும் காலத்தால் முந்திய கோபுரம், பல்லவர் காலத்தைச் சேர்ந்த காஞ்சிபுரம், கைலாசநாதர் கோயிலில் உள்ள கோபுரம் ஆகும். அக்காலக் கோயில்களில் கோபுரம் ஒரு முதன்மையான கூறு அல்ல. முக்கியத்துவத்திலும் அளவிலும் முதன்மையாக இருந்தது கருவறைக்கு மேல் அமைந்த விமானமே. எனவே கைலாசநாதர் கோயிலிலும் கோபுரம் மிகவும் சிறிதாகவே காணப்படுகிறது. கோயில் கட்டிடக்கலை வளர்ச்சியடைந்து சோழர் காலத்தில் மிகப் பெரிய கோயில்கள் அமைக்கப்பட்டபோதும், விமானமே நெடிதுயர்ந்து காணப்பட்டது. கோபுரங்கள் ஒப்பீட்டளவில் சிறிதாகவே இருந்தன. ஒரு கோயிலில் இறைவன் உருவம் வைக்கப்பட்டுள்ள கருவறையே முக்கியத்துவம் வாய்ந்த இடமாக இருப்பதால் அதனை அமைப்பு அடிப்படையிலும் முதன்மை பெறச் செய்தது புரிந்துகொள்ளத் தக்கதே. இதன் காரணமாகவே சிற்பிகளும் தமது திறமைகளை விமானத்தை உருவாக்குவதிலேயே பெரும்பாலும் காட்டினர்.

## நாயக்கர் காலத்தில் சிற்றிலக்கிய வளர்ச்சி

நாயக்கர் காலத்தைச் சிற்றிலக்கியக் காலம் என்று கூறலாம். நெஞ்சு விடு தூது, அழகர் கிள்ளைவிடு தூது, தமிழ் விடு தூது போன்ற தூது நூல்கள் நாயக்கர் காலத்தில் தோன்றின. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் போன்ற சிறந்த பிள்ளைத்தமிழ் நூல்களும் அக்காலக் கட்டத்தில் வெளிவந்தவை. நந்திக் கலம்பகம் நாயக்கர் காலத்தின் தொடக்கக் காலத்தில் தோன்றியது. கி.பி. 18ஆம் நூற்றாண்டில் தோன்றிய திருக்குற்றாலக் குறவஞ்சி (திருநெல்வேலி வட்டாரக் கிளைமொழி வழக்கு மற்றும் குறவர் சமூக வழக்குக் கூறுகளைக் கொண்ட நூல்), முக்கூடற்பள்ளு, சீர்காழிப் பள்ளு போன்ற பள்ளு நூல்களும் சிற்றிலக்கிய வகைகளுள் நாயக்கர் கால மொழி மாற்றங்களை அறிந்து கொள்ள உதவுகின்றன.

புகழேந்தியாரின் நளவெண்பாவும், பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற்புராணமும், வில்லிபுத்தூராரின் வில்லிபாரதமும், அருணகிரியாரின் திருப்புகழும், தாயுமானவரின் தனிப்பாடல்கள் பலவும் நாயக்கர் கால மொழிநிலையை அறியப் பேருதவி புரிகின்றன.

## சிற்றிலக்கியம் – விளக்கம்

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு வகை உறுதிப்பொருட்களுள் எவையேனும் ஒன்றைப் பற்றியோ, இரண்டைப் பற்றி மட்டுமோ பாடப்படுபவை சிற்றிலக்கியங்கள் எனப்படுகின்றன. இவை ஒரு சில துறைகளை மட்டும் பாடுகின்றன. சுருங்கிய அளவில் எளிதில் படித்து முடிக்கக் கூடியனவாக இருக்கின்றன. இறைவன், மன்னன், வள்ளல், குரு ஆகியோரின் சிறப்புகளை எடுத்துரைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன. இவ்விலக்கியங்கள் அகம் பற்றியனவாகவும், புறம் பற்றியனவாகவும், அகம் புறம் இரண்டும் பற்றியனவாகவும் வகை பிரிக்கப்படுகின்றன.

சிற்றிலக்கிய வகைகள் 96 என்பர். வீரமாமுனிவர் இயற்றிய சதுரகராதி 96 நூல்களைப் பட்டியலிடுகின்றது. அவற்றுள் மக்கள் செல்வாக்குப் பெற்ற சிற்றிலக்கியங்கள் சிலவேயாகும். அவை, கலம்பகம், தூது, உலா, பிள்ளைத் தமிழ், குறவஞ்சி, பள்ளு, பரணி ஆகியனவாகும். இவ்விலக்கியங்கள் குறித்துப் பின்வருமாறு காணலாம்.

## கலம்பகம்

பல பூக்களைக் கலந்து மாலையாகத் தொடுப்பது போல பல வகையான செய்யுள் உறுப்புகளைக் கொண்டு, அகம் புறப் பொருட்களைக் கலந்து பாடப்படும் இலக்கியம் கலம்பகம் ஆகும். தெய்வங்கள், மன்னர்கள், மக்களுள் சிறந்து விளங்குபவர்கள் இவ்விலக்கியத்தின் பாட்டுடைத் தலைவர்களாவர்.

## கலம்பக உறுப்புகளும் அமைப்பும்

கலம்பக இலக்கியம் 18 உறுப்புகளைக் கொண்டது. அவை, புயவகுப்பு, அம்மானை, தவம், வண்டு, வாண், மதங்கு, கைக்கிளை, சித்து, ஊசல், களி, மடக்கு, ஊர், மறம், காலம், தழை, இரங்கல், சம்பிரதம், கார், தூது, குறம், பிச்சியார், கொற்றியார் ஆகியனவாகும். இவ்விலக்கியம் அந்தாதித் தொடையால் 100 பாடல்கள் வரை பாடப்படும். கடவுளுக்கு 100, முனிவர்க்கு 95, அரசர்க்கு 90, அமைச்சர்க்கு 70, வணிகர்க்கு 50, வேளாளர்க்கு 30 என்னும் பாடல் எண்ணிக்கை அமைப்பைப் பெற்று பாடப்படுகின்றது. திருவரங்கக் கலம்பகம், நந்திக் கலம்பகம், தில்லைக் கலம்பகம் என்பவை குறிப்பிடத்தக்க கலம்பக நூல்களாகும்.

## நந்திக்கலம்பகம்

இந்நூல் மூன்றாம் நந்திவர்மனைப் பற்றிப் பாடியுள்ளது. கலம்பக நூல்களுள் காலத்தால் முற்பட்டது. இதன் காலம் கி.பி.9ஆம் நூற்றாண்டு. இந்நூலின் ஆசிரியர் யார் என்பது தெரியவில்லை. 144 பாடல்களைக் கொண்டுள்ளது. 44 பாடல்கள் பிற்காலத்தில் எழுதிச் சேர்க்கப்பட்டிருக்கலாம் என்பர். நந்திவர்மனின் மாற்றாந்தாய் மக்கள் இவனை வீரத்திலும் அறிவிலும் கொல்ல முடியாமல் தவித்து, இறுதியாக அறம் வைத்துப் பாடல் பாட முடிவு செய்கின்றனர். அறம் வைத்துப் பாடப்பட்ட பாடலின் சொற்சுவையில் மயங்கிய நந்திவர்மன் பாடல் முழுவதையும் கேட்க விரும்பினான். நூல் முழுவதையும் கேட்டால் மன்னன் உடல் எரிந்து இறப்பான் என்பதை அறிந்தும், தமிழின் மீதுள்ள தணியா காதலால் தன் உயிரையும் பொருட்படுத்தாது, எரியும் பந்தலின் கீழ் அமர்ந்து பாடல் கேட்டு உயிர் துறந்தான் என்று கூறப்படுகின்றது. “நந்திக் கலம்பகத்தால் மாண்டகதை நாடறியும்” என்னும் சோமேசர் முதுமொழி வெண்பா வரி இக்கருத்திற்குச் சான்றுரைக்கின்றது.

### தூது

தன் கருத்தைப் பிறிதொருவருக்குத் தெரிவிக்குமாறு இடையில் ஒருவரைத் தன் சார்பாக அனுப்புவதே தூது எனப்படும். இத்தூது அகத்தூது, புறத்தூது என இரண்டு வகைப்படும். அகத்தூது – தலைவன் மேல் காதல் கொண்ட தலைவி, தனது காதல் துன்பத்தைத் தலைவனுக்குக் கூறி, தூது உரைத்துவா என்றும், மாலை வாங்கி வா என்றும், உயர்திணைப் பொருள்களையோ, அஃறிணைப் பொருள்களையோ தூதாக அனுப்புவது அகத்தூது ஆகும்.

### தூது விடுக்கும் பொருட்கள்

அன்னம், மயில், கிளி, மேகம், பூவை, தோழி, குயில், நெஞ்சு, தென்றல், வண்டு ஆகிய பத்துப் பொருட்கள் தூதுக்குரியவை எனக் கூறப்பட்டன. தற்காலத்தில் பணம், தமிழ், புகையிலை, செருப்பு, மான், நெல் ஆகிய எவையும் தூதுக்குரிய பொருள்களாகக் கொண்டு இலக்கியம் படைக்கின்றனர்.

### புறத்தூது

போர் காரணமாக மன்னனுக்காக ஒரு புலவரோ, அமைச்சரோ அல்லது வேறு யாரேனுமோ தூது செல்வது புறத்தூது ஆகும். அதியமானுக்காகத் தொண்டைமானிடம் ஔவையார் தூது சென்றமையைப் புறத்தூதிற்குச் சான்றுரைக்கலாம். சில தூது நூல்கள் – தமிழ்விடுதூது, நெஞ்சு விடுதூது, அழகர் கிள்ளை விடுதூது.

### தமிழ்விடு தூது

இந்நூலின் ஆசிரியர் யார் என்பது தெரியவில்லை. நூலின் கருத்தினைக் கொண்டு இதன் ஆசிரியர் தமிழ்ப்பற்று மிக்கவர் என்பது, சைவ சமயத்தைச் சார்ந்தவர் என்பதும் அறியப்படுகின்றது. மதுரையில் குடி கொண்டிருக்கும் சொக்கநாதர் மேல் காதல் கொண்ட தலைவி, தன் காதல் துன்பத்தை எடுத்துக் கூற, தமிழைத் தூதாக அனுப்புவதே தமிழ்விடு தூது ஆகும்.

### உலா

அனைத்துப் பண்புகளில் சிறந்து விளங்கும் ஆண்மகனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு, அவனுடைய குலம், குடிப்பிறப்பு, பெருமை ஆகியனவற்றை விளங்கக்கூறி, அவன் உலா வரும்போது பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை,

அரிவை, தெரிவை, பேரிளம்பெண் உள்ளிட்ட ஏழு பருவத்துப் பெண்களும் காதல் கொள்வதாகப் பாடப்படுவது உலா இலக்கியம் ஆகும். திருக்கையிலாய ஞான உலா, மூவருலா போன்றவை குறிப்பிடத்தக்க உலா நூல்களாகும்.

### பிள்ளைத் தமிழ்

இவ்விலக்கியம் பிள்ளைப் பாட்டு என்றும், பிள்ளைக் கவி என்றும் கூறப்படும். புலவர்கள் தாம் விரும்பும் மன்னனையோ, தலைவனையோ, வள்ளலையோ குழந்தையாகப் பாவித்துப் பாடப்படுவது பிள்ளைத் தமிழ் எனப்படும். குழந்தையின் மூன்றாம் மாதம் ல் 21ஆம் மாதம் வரை ஒவ்வொரு பருவத்திற்கும் பத்துப் பாடல்கள் வீதம் பத்துப் பருவங்கள் வகுத்துப் பாடப்படுகின்றது. ஆண்பாற் பிள்ளைத் தமிழ், பெண்பாற் பிள்ளைத் தமிழ் என இரண்டு வகைப்படும்.

### ஆண்பாற் பிள்ளைத்தமிழ்

காப்பு, தால், செங்கீரை, சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில் சிதைத்தல், சிறுபறை கொட்டல், சிறு தேர் உருட்டல் ஆகிய பருவங்கள் ஆண்பாற்பிள்ளைத் தமிழுக்குரியன.

### பெண்பாற் பிள்ளைத்தமிழ்

காப்பு, தால், செங்கீரை, சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, நீராடல், அம்மானை, ஊசல் ஆகிய பருவங்கள் பெண்பாற்பிள்ளைத் தமிழுக்குரியன.

சில பிள்ளைத் தமிழ் நூல்கள் – முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ், சேக்கிழார் பிள்ளைத்தமிழ்.

### பள்ளு

பள்ளர்களின் வாழ்க்கையைச் சித்தரிப்பது பள்ளு இலக்கியமாகும். இதனை உழத்திப்பாட்டு என்றும் கூறுவர். பள்ளன் ஒருவன் இரு மனைவியரை மணந்து கொள்ள, அவ்விரு மனைவியரிடையே ஏற்படும் பூசல், அதனால் பள்ளனுக்கு ஏற்படும் துன்பம் ஆகியவற்றைப் பற்றி இந்நூல் விவரிக்கின்றது. திருமலை முருகன் பள்ளு, சீர்காழிப்பள்ளு, முக்கூடற்பள்ளு என்பவை குறிப்பிடத்தக்க பள்ளு நூல்களாகும்.

### குறவஞ்சி

இந்நூல் அரசனையோ, தெய்வத்தையோ தலைவனாகக் கொண்டு பாடப்படுகின்றது. தலைவன் உலா வரல், தலைவி காதல் கொள்ளல், குறத்தி குறி

கூறல், தலைவி குறத்திக்குப் பரிசளித்தல், குறவன் குறத்தியைத் தேடி வருதல், குறத்தியின் அணிகலன் கண்டு குறவன் ஐயம் கொள்ளுதல், குறத்தி அவனுடைய ஐயத்தைத் தெளிவித்தல் ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாகக் குறவஞ்சி நூல் அமைகின்றது. சில குறவஞ்சி நூல்கள் – குற்றாலக் குறவஞ்சி, சரபேந்திர பூபாலக் குறவஞ்சி.

### பரணி

போர்க்களத்தில் ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றி பெற்ற வீரரைச் சிறப்பித்துப் பாடும் இலக்கியம் பரணி ஆகும். கடவுள் வாழ்த்து, கடை திறப்பு, காளி வழிபாடு உள்ளிட்ட அமைப்புகளுடன் பாடப்படும். சில பரணி நூல்கள் – கலிங்கத்துப் பரணி, தக்கயாகப் பரணி, பாசவதைப் பரணி.

### அந்தாதி

ஒரு பாடலின் இறுதியில் உள்ள எழுத்து, அசை, சொல், சீர் அடி ஆகியவற்றில் ஏதேனும் ஒன்று அடுத்த பாடலின் மதலில் வருவதாக அமைத்துப் பாடுவது அந்தாதி எனப்படும். "அந்தம் முதலாகத் தொடுப்பது அந்தாதி" என்று யாப்பருங்கலக்காரிகை அந்தாதிக்கு இலக்கணம் கூறுகின்றது. அந்தாதியைத் தனி ஒரு இலக்கியமாக உருவாக்கிய பெருமை காரைக்காலம்மையாரையே சாரும். அவருடைய அற்புதத் திருவந்தாதி என்னும் நூலே முதல் அந்தாதி நூலாகப் போற்றப்படுகின்றது. சில அந்தாதி நூல்கள் - அபிராமி அந்தாதி, திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி, சடகோபர் அந்தாதி.

## இலக்கணங்கள்

மேலைநாட்டினரான வீரமாமுனிவர் (1680-1746) எழுதிய இலக்கண நூல்களான செந்தமிழ் இலக்கணமும், கொடுந்தமிழ் இலக்கணமும் மிகவும் குறிப்பிடத்தக்கன. அவற்றை முறையே செய்யுளுக்குரிய இலக்கணம் என்றும், பேச்சு வழக்கிற்குரிய இலக்கணம் என்றும் கூறலாம். மேலும், அவர் எழுதிய சதுரகராதி பிற்கால அகராதி நூல்களுக்கு முன்னோடியாக விளங்குகிறது. பெயர், பொருள், தொகை, தொடை என்ற நான்கின் அடிப்படையில் தமிழ்ச்சொற்களுக்கு விளக்கம் தருவதாக அமைந்துள்ளது இந்நூல்.

வீரமாமுனிவர் எழுதிய போர்த்துக்கீசியம் - தமிழ் - இலத்தீன் அகராதியும் மக்கள் பேசும் பேச்சு வழக்குக் கூறுகளைக் கொண்டுள்ளது. சீகன்பால்கு ஐயர் 1709இல் தரங்கம்பாடிக்கு வந்தவர். கிறித்துவ வேதமான பைபிளைத் தமிழ்ப்படுத்தியவர். தமிழ்-இலத்தீன் ஆகிய இரு மொழிகளுக்கும் பொதுவாக வழங்கும் பல சொற்களை எடுத்துக்காட்டியுள்ளார். இவ்வாறு மேலைநாட்டினர் சிலர், இலக்கண நூல்களையும் மொழி ஆய்வு நூல்களையும் எழுதினர். அவை நாயக்கர் கால இறுதியில் தமிழ்மொழிக் கூறுகள் சிலவற்றை அறிவதற்குச் சிறந்த ஆதாரங்களாகவும் விளங்குகின்றன.

தமிழிலக்கிய வரலாற்றில் நாயக்கர் காலத்தில் சிற்றிலக்கியங்கள் தோன்றியதாகக் கூறுவர். இக்காலத்தில் தொடர்நிலைச் செய்யுட்களான காப்பியங்கள், புராணங்கள் போன்ற இலக்கியங்கள் எழவில்லை. மாறாக, பள்ளு, குறவஞ்சி, உலா உள்ளிட்ட சிறு சிறு இலக்கியங்கள் தோன்றின. இவ்வகை இலக்கியங்கள் பிரபந்தங்கள் என்ற பெயரால் அழைக்கப்பட்டன. பிரபந்தங்கள் 96 வகைப்படும் என்றும், பாட்டியல் நூல்கள் அவ்விலக்கியங்களுக்கு இலக்கணம் கூறுகின்றன என்றும் தமிழிலக்கிய வரலாறு குறிப்பிடுகின்றது. இப்பிரபந்த நூல்களே சிற்றிலக்கியங்கள் என்ற பெயரால் வழங்கப்படுகின்றன.

## தொகுப்புரை

- சோழர்கள் ஆட்சி காலத்தில் தமிழகத்தில் நிருவாகம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அரசியலில் அடுத்தடுத்து திறமையான அரசர்கள் அரியணை எறியதால் வலுவான பேரரசாகச் சோழப் பேரரசு விளங்கியது.
- ஈழத்தின் மீதும் கடாரம் மீதும் போர் தொடுத்துக் கடல் கடந்து சென்று தங்கள் எல்லையைச் சோழர்கள் விரிவுபடுத்தியுள்ளனர்.
- கட்டடக் கலையில் சோழர்கள் சிறந்து விளங்கினர்.
- காப்பியங்களின் வளர்ச்சி சோழர்காலத்தில் சிறப்புற்றிருந்தது.
- மதுரை நாயக்கர் காலத்தில் சிற்றிலக்கியம் நன்கு வளர்ச்சி பெற்றது.
- பாளையப்பட்டு முறை நாயக்கர் ஆட்சி காலத்தில் நடைமுறையில் இருந்தது.
- கோயில் மண்டபங்களைக் கட்டுவதில் நாயக்கர்கள் பெரிதும் ஆர்வம் காட்டினர்.

## மாதிரி வினாக்கள்

**ஒரு மதிப்பெண் வினாக்கள்**

1. எந்த அரசனுக்கு மெய்க்கீர்த்திகள் அதிகம் பாடப்பட்டுள்ளன?

அ) பராந்தகன் ஆ) முதலாம் இராஜேந்திர சோழன்

**இ) இராஜராஜன்** ஈ) விசயாலயன்

2. கங்கை கொண்ட சோழபுரம் என்னும் பெயரில் புதிய தலைநகரை உருவாக்கியவன்?

அ) இராஜராஜ சோழன் **ஆ) முதலாம் ராஜேந்திர சோழன்**

இ) இரண்டாம் ராஜேந்திர சோழன் ஈ) முதலாம் குலோத்துங்கச் சோழன்

3. தஞ்சை பெரிய கோயிலிலுள்ள நந்தி மண்டபம் யாரால் கட்டப்பட்டது?

அ) இராஜராஜ சோழன் ஆ) முதலாம் ராஜேந்திர சோழன்

**இ) செவ்வப்ப நாயக்கர்** ஈ) முத்து வீரப்ப நாயக்கர்

4. 'வடநூற் கடலை நிலைகண்டு உணர்ந்தவர்' என்று அழைக்கப்பட்ட உரையாசிரியர்?

அ) நச்சினாக்கினியர் **ஆ) சேனாவரையர்** இ) கல்லாடனார் ஈ) தெய்வச்சிலையார்

5. அருண்மொழித் தேவர் என்று அழைக்கப்படுபவர்?

அ) கம்பர் **ஆ) சேக்கிழார்** இ) தோலா மொழித் தேவர் ஈ) நம்பியாண்டார் நம்பி

## ஐந்து மதிப்பெண் வினாக்கள்

1. இராஜராஜசோழன் செய்த ஆட்சி சிறப்பு குறித்து எழுதுக.
2. இராஜேந்திர சோழனின் அயல் நாட்டு வெற்றி குறித்து எழுதுக.
3. தஞ்சை பெரிய கோயில் குறித்து எழுதுக.
4. பாயையப்பட்டுக்கள் என்றால் என்ன? விளக்குக.
5. பாளையப்பட்டுக்கள் குறித்து எழுதுக.

## பத்து மதிப்பெண் வினாக்கள்

1. சோழர்களின் எழுச்சி குறித்து கட்டுரை வடிவில் எழுதுக.
2. அயல் நாடுகளில் தமிழர் ஆட்சி குறித்துக் கட்டுரை வரைக.
3. சோழர்களின் கட்டடக் கலை குறித்து எழுதுக.
4. சிற்றிலக்கிய காலம் குறித்து கட்டுரை வரைக.

5. கோயில் கோபுரங்கள் குறித்து தொகுத்துரைக்க.

## மாதிரி வினாக்களின் விடைகள்

### ஒரு மதிப்பெண் வினாக்கள்

1. இ) இராஜராஜன்
2. ஆ) முதலாம் ராஜேந்திர சோழன்
3. இ) செவ்வப்ப நாயக்கர்
4. ஆ) சேனாவரையர்
5. ஆ) சேக்கிழார்

…………………..

# அலகு – 5

சமூக எழுச்சிக்காலம் (19-20 ஆம் நூற்றாண்டு)

அச்சு நூல்கள் பதிப்பு – தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி- உ.வே.சா,

சி.வை. தா பங்களிப்பு

தென்னிந்திய நல உரிமை சங்கத்தின் காலம் – திராவிட இயக்க காலம் - தமிழர்களின் சமூக எழுச்சி

## முன்னுரை

தமிழ் அச்சிடல் அறிமுகமும் வளர்ச்சியும் திருத்தூதுப் பணிக்காக இந்தியா வந்திருந்த சமயப் பரப்புரையாளர்களாலும் பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியின் முயற்சிகளாலும் நிகழ்ந்தது. இந்தத் தொடக்க கட்ட வளர்ச்சிக்கு முதன்மையாளர்களாக இயேசு சபை இறைப்பணியாளர்களும் பின்னர் சீர்திருத்தத் திருச்சபையின் போதகர்களும் இந்து அறிஞர்களும் குறிப்பிடப்படுகிறார்கள். புதிதாகக் குடிபுகுந்தவர்கள் உள்ளூர் மொழியின் முக்கியத்துவத்தினை உணர்ந்தவர்களாகத் தங்கள் சமய போதனைகளை உள்ளூர் மொழிகளில் பரப்ப எடுத்த முயற்சிகள் தென்னிந்தியாவில் நாட்டுமொழிகளில் அச்சிடும் பண்பாட்டை அறிமுகப்படுத்தியது. அச்சுக்கூடங்கள் மூலம் நூல்கள் அதிகளவில் அச்சிடப்பட்டன. உரையாசிரியர்கள் தோன்றி, பல அரிய நூல்களுக்கு உரை எழுதி படிப்பதற்கு எளிமைப்படுத்தினர். திராவிட இயக்கங்கள் இக்காலக் கட்டத்தில் உருவாகியது. இவற்றைப் பற்றி இந்த அலகில் விரிவாகக் காணலாம்.

## 5.1 சமூக எழுச்சிக்காலம்

கிழக்கிந்தியக் கம்பனி வைத்திருந்த தடைகள், காலனித்துவ சூழ்நிலைகள், நடைமுறைச் சிக்கல்கள், கல்வி இல்லாமை, சாதிய ஒடுக்குமுறைகள், அக்கறையின்மை எனப் பல்வேறு காரணங்களால் தமிழ் அச்சுக்கலை மந்தமாகவே வளர்ச்சி பெற்றது. இதனால் பெருந்தொகை இலக்கியங்கள் பதிக்கப்படாமலேயே அழிந்து போயின. இன்று கிடைக்கும் தமிழ் இலக்கியங்கள் 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து பதிக்கப்பட்ட ஆக்கங்கள் ஆகும்.

1865 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஆங்கில நூலான "தமிழில் அச்சிடப்பட்ட நூல்களில் வகைப்படுத்தப்பட்ட அட்டவணை" (Classified catalogue of Tamil printed books) 1865 வரை 1755 நூல்கள் தமிழில் அச்சிடப்பட்டதாகக் கூறுகிறது. தமிழ் அச்சுப் பண்பாடு: நிறுவனமயமாதல் நோக்கி (1860–1900) என்ற ஆய்வுக் கட்டுரை "1867 – 1900 ஆண்டுகளில், 8578 புத்தகங்கள் அச்சில் வந்திருப்பதைக் காண்கிறோம். விடுபடுதல்களோடு இணைத்து நாற்பது ஆண்டுகளில் (1860–1900) சுமார் பத்தாயிரம் நூல்கள் தமிழில் அச்சிடப்பட்டிருப்பதை அறிகிறோம்" எனக் கூறுகிறது.

## அச்சிடப்பட்ட முதல் தமிழ் நூல் (1554)

முதல் தமிழ் புத்தகம் 1554ஆம் ஆண்டு பெப்ரவரி 11ஆம் நாள் லிசுபனில் வெளியானது. அதை ஆக்கியோர் வின்சென்ட் தெ நாசரெத், ஹோர்கே கார்வாலோ மற்றும் தோமா த குருசு ஆகியோர் ஆவர். இம்மூவரும் தமிழ் அறிந்த இந்தியர்களே என்றும் அவர்களுடைய கிறித்தவப் பெயர்களே நமக்குத் தெரிந்துள்ளன என்றும் அறிஞர் கருதுகின்றனர். கார்த்தீயா ஏங் லிங்குவா தமுல் எ போர்த்துகேஸ் (Cartilha ē lingoa Tamul e Portugues) தமிழில்: "தமிழ் மொழியிலும் போர்த்துகீசியத்திலும் அமைந்த திருமறைச் சிற்றேடு" என்னும் தலைப்பில் வெளியான அந்நூலில் தமிழ்ச் சொற்கள் இலத்தீன் எழுத்துக்களில் அச்சுக் கோக்கப்பட்டிருந்தன.

இந்த நூல்தான் வரலாற்றிலேயே முதலில் அச்சேற்றப்பட்ட தமிழ் நூல்; ஐரோப்பிய மொழியிலிருந்து முதலில் மொழிபெயர்ப்பான தொடர் பாடம்; இந்திய மொழியொன்றிலிருந்து ஐரோப்பிய மொழிக்கு எழுத்துமாற்றம் செய்யப்பட்ட முதல் நூல் என்று தமிழறிஞர் கமில் சுவலெபில் குறிப்பிடுகிறார்.

மதுரை போன்ற இடங்களில் செப்புப் பட்டயங்களிலும் கற்களிகளிலும் எழுதப்பட்டுவந்த காலகட்டத்திலேயே இந்தத் தமிழ் அச்சு வெளியீடு நிகழ்ந்தது. தமிழில் முதலாவதாக அச்சேறிய இந்தப் புத்தகம் உருசியா (1563), ஆபிரிக்கா (1624) மற்றும் கிரீஸ் (1821) நாட்டு முதல் அச்சிட்ட நூல்களைவிட முந்தையதாக விளங்குகிறது.

குடியேற்றவாத மற்றும் உள்ளூர் அரசியல் காரணங்களுக்காகவும் 1547ஆம் ஆண்டில் சோழமண்டலக் கடற்கரையில் வந்திறங்கிய போர்த்துக்கீசிய யூதர் என்றிக்கே என்றீக்சு (1520–1600) என்னும் இயேசு சபை மறைபரப்பாளரின்

முயற்சியாலும் உரோமானிய வரிவடிவிலும் தமிழ் வரிவடிவிலும் தமிழில் அச்சிடுவது கைகூடியது. தமிழகத்தில் தங்கிப் பணியாற்றிய காலத்தில் ஐந்து வெவ்வேறான தமிழ் நூல்களை இந்திய மேற்கு கடற்கரையின் பல்வேறு இயேசு சபை குடியிருப்புக்களிலிருந்து தமிழ் வரிவடிவில் என்றீக்கசு வெளியிட்டார். மேலும் தமிழின் இலக்கணம் மற்றும் அகரமுதலி ஒன்றையும் தொகுத்திருந்தார். அச்சிடப்படாதபோதும் இந்நூல்கள் துவக்க கால ஐரோப்பியர்களால் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வந்தன. "எந்தவொரு இந்திய மொழியிலும் ஆழ்ந்த புலமை பெற்ற முதல் ஐரோப்பிய அறிஞர்" என என்றீக்கசைப் பற்றிக் கிரகாம் ஷா குறிப்பிடுகிறார்.

1575ஆம் ஆண்டுவாக்கில் தமது கிழக்குக் கடற்கரை திருத்தூதுப் பணிகளிலிருந்து கோவாவிற்கு மாற்றப்பட்டபிறகு, என்றீக்கசு தம் நூல்களைத் தொகுக்க துவங்கினார். இதற்குத் தமிழ் அந்தணராக இருந்து 1562ஆம் ஆண்டு இயேசு சபையில் இணைந்த தந்தை பெரோ லூயிஸ் துணையாயிருந்தார். லூயிசின் துணையுடன் கொல்லத்தில் இருந்த தந்தை யோவான் தஃபாரியாவின் மேற்பார்வையில் கோவாவில் யோவான் கொன்சால்வசு முதல் தமிழ் அச்சுருக்களை வடித்தார்.

1577ஆம் ஆண்டு கோவாவில் என்றீக்கசின் ஐந்து நூல்களில் முதலாவதான டொக்ட்ரினா கிறிஸ்டம் என் லிங்குவா மலபார் தமுல் - தம்பிரான் வணக்கம் (Doctrina Christam en Lingua Malauar Tamul – Tampiran Vanakam) அச்சிடப்பட்டது. "மலபார் தமிழில் கிறித்தவ போதனை" என்பது இதன் பொருள்.

இந்திய வரிவுருவொன்றில் வெளியான முதல் நூல் இதுவே. இதுபற்றிச் சில அறிஞர்கள் ஐயம் எழுப்பியபோதிலும், கிரகாம் ஷா அந்த அச்சிடல் நிகழ்ந்ததென்றே உறுதியாகக் கூறுகிறார். இரண்டாவதாக வெளிவந்த நூல் ("கிரிசித்தியானி வணக்கம்", ஆண்டு: 1578) பதினாறு பக்கங்களே உடையதாக இருந்தது. மூன்றாவது நூல் போர்த்துக்கலில் பரவலாகியிருந்த மார்கோசு என்பவர் உருவாக்கிய "கிறித்தவ சமயப் போதனை" (Catechism) தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு 127 பக்கங்களாக வெளியானது. நவம்பர் 14, 1579ஆம் ஆண்டில் வெளியான இந்நூலுக்கான புதிய அச்சுகள் கொச்சியில் வார்த்தெடுக்கப்பட்டன. மூன்று கிறித்தவ சமயப் போதனை நூல்கள் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு அச்சுருக்களில் அடுத்த

மூன்றாண்டுகளில் வெளியாயின. கொச்சியில் அச்சிடப்பட்ட என்றிக்கசின் மற்ற இரு நூல்கள்: 1. பாவ அறிக்கை நூல் (Confessionario) 1580 (214 பக்கங்கள்) 2. அடியார் வரலாறு (Flos Sanctorum), 1586 (669 பக்கங்கள்)

### பதினேழாவது நூற்றாண்டில் இராபர்ட் தெ நோபிலி

பதினேழாவது நூற்றாண்டில் உரோமையில் உருவாக்கப்பட்ட அச்சுருக்கள் மூலம் அம்பலக்காட்டிலிருந்து தமிழ் நூல்கள் அச்சிடப்பட்டன. தமிழ் அச்சிடலின் இரண்டாம் கட்டமாகக் குறிப்பிடத் தக்க வகையில் அடுத்தடுத்த இரு ஆண்டுகளுக்குள் ஐந்து தொகுதிகள் (இரு நூல்கள் மட்டுமே) வெளியாயின. இதில் முதலாவது "தத்துவ போதகர்" என்று சிறப்புப் பெயர் பெற்ற இராபர்ட் நோபிலியின் கிறித்தவ போதனை நூலாகிய "ஞானோபதேசம்". இது அவரது மறைவிற்குப் பிறகு மூன்று தொகுதிகளாக, முதலாவது 1677இலும் மற்ற இரண்டும் 1678ஆம் ஆண்டிலும் வெளியாயின. இரண்டாம் நூல் 1679ஆம் ஆண்டில் வெளியான அன்டெம் டெ புரோன்சாவின் "தமிழ்- போர்த்துகீசிய அகரமுதலி" ஆகும்.

என்றீக்கசைப் போலன்றி இராபர்ட் தெ நோபிலி போர்த்துகீசியத்திலிருந்து தமிழிற்கு மொழிபெயர்க்காமல் தாமே தமது நூலைப் புதியதாக எழுதினார். புதிய மறையாகிய கிறித்தவத்தில் புதைந்துள்ள உண்மைகளை வெளிக்கொணரும் வண்ணம் தாமே இம்முயற்சியில் இறங்கினார். சென்னையில் அச்சிடலுக்கு வித்திட்டவர் பர்த்தொலொமேயுஸ் சீகன்பால்க் ஆவார். 1578ஆம் ஆண்டிலேயே தென்னிந்தியாவில் அச்சு இயந்திரம் நிறுவப்பட்டபோதும் அடுத்துவந்த இறைப்பணியாளர்களின் அக்கறையின்மையாலும், குறிப்பாக ஆங்கில மற்றும் டச்சு ஆதிக்கம் மேலோங்கியதால் போர்த்துகீசியர் வலுவிழந்ததாலும் போர்த்துகீசியரின் அச்சுக் கூடங்களில் தமிழ் அச்சுப் பணி தொடரவில்லை. 1612ஆம் ஆண்டிற்குப் பிறகு ஏறக்குறைய 50-60 ஆண்டுகளாக எந்தத் தமிழ் நூலும் அச்சாகவில்லை என்று தெரிகிறது. போர்த்துகீசிய அரசு ஆணைப்படி இந்திய மொழிகளில் அச்சிடுவது 1640களில் நிறுத்தப்பட்டது. 1649 முதல் 1660 வரை நோபிலியும் மனுவேல் மார்ட்டினும் எழுதிய பல ஆக்கங்கள் அச்சடிக்கப்படாது இருந்தன. அச்சிடச் சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் அவை தற்காலிகமாகவே இருந்தன. காட்டாகச் சீகன்பால்க் நிறுவிய தரங்கம்பாடி அச்சகத்தில் தமிழறிஞர் வீரமாமுனிவரின்

இலத்தீன்-கொடுந்தமிழ் இலக்கண நூல் 1739இல் அச்சேறியது. கேரளத்தில் அமைந்த அம்பலக்காடு என்னும் இடத்தில் இயேசு சபையினருக்கு உரித்தான அச்சகத்தில் ஒருசில தமிழ் நூல்கள் 1677–1679 அளவில் அச்சாயின.

## தரங்கம்பாடியில் வீரமாமுனிவர்

1715இல் தரங்கம்பாடியில் அச்சிடப்பட்ட விவிலியநூல் தரங்கம்பாடியில் சீர்திருத்தத் திருச்சபையினரின் அச்சக முயற்சிகளைத் தவிர, இயேசு சபை போதகரான கான்ஸ்டண்டைன் பெசுகி (வீரமாமுனிவர், 1680–1747)யின் வளர்ச்சியால் தமிழ் அச்சிடலும் இலக்கியமும் பெரும் மாற்றத்தைக் கண்டது. கிறித்துவ சமயத்தினுள்ளேயே இருந்த பிரிவினரிடையே ஏற்பட்ட பிணக்குகளும் விவாதங்களும் கைகலப்பில் முடிந்து கொலைகளும் நிகழ்ந்த காலகட்டத்தில், அச்சிட்டப் புத்தகங்கள் மற்றும் கையேடுகள் மூலம் லூத்தரன் சபையினர் இந்தப் பிணக்குகளைப் பரப்பிவந்தபோதும், வீரமாமுனிவர் தமது தாக்கமிக்க இலக்கியங்கள்மூலம் எதிர்கொண்டுவந்தார். இயேசு சபையினரே தமிழில் அச்சிடுவதைத் துவக்கி வைத்தாலும் பதினெட்டாம் நூற்றாண்டில் நிலைமை மாறி அச்சகங்கள் பெரும்பாலும் சீர்திருத்தச் சபையினர் கட்டுப்பாட்டில் இருந்தன. லூத்திரன் திருச்சபையினர் பெரும்பான்மையாக இருந்த தஞ்சாவூர், திருவாங்கூர் பகுதிகளில் இயேசு சபையின் வீரமாமுனிவரின் முயற்சிகள் சீர்திருத்தச் சபை பாதிரிமார்களுக்கு அச்சுறுத்தலாக இருந்தன. வீரமாமுனிவரின் வெற்றிக்கு "உரோமானிய வழக்கங்களை உள்ளூர் வழக்கங்களுக்கு" ஏற்ப மாற்றிக்கொண்டது ஆகும் எனப் பிளாக்பர்ன் கருதுகிறார். அவரது தமிழ் வரலாற்றாளர் முத்துசாமிப் பிள்ளையின் நூல்களில் அவர் கிழக்கத்திய அரசரைப் போல அணிகலன்களுடன் நெற்றியில் சந்தனத்துடன் விவரிக்கப்படுகிறார். உள்ளூர் ஆட்சியாளர்களின், முக்கியமாக அவர் திவானாகப் பணியாற்றிய சந்தா சாகிப், ஆதரவால் அவர் தமிழ்மொழியில் சிற்றப்பான கல்வி பெறுவது இயல்பாயிற்று.

இந்த விவரிப்புக்கு மாற்றாக இவர் இலக்கிய திறன்மிக்க, கருத்துக்களை இயம்பிடும் ஆற்றல்மிக்க இந்திய துறவிக் கவிஞராகவும் ஆயப்படுகிறார். இவரது எழுத்துக்கள் தற்காலிக தமிழ் இலக்கியத்தின் அடிக்கல்லாகவும் புதுப்பண்பாட்டுக் கூறாகவும் அமைந்துள்ளன. இருபது நூல்களுக்கும் மேலாக, அகரமுதலிகள், காவியங்கள், உரைநடைத் தொகுப்புகள், இலக்கணம் மற்றும் நாட்டுப்புறக் கதைகள்

என- எழுதியுள்ளார். முதன்மை உரைநடை நூலான "வேத விளக்கம்" 250 பக்கங்களைக் கொண்டதாக விளங்கியது. தமிழின் முதல் இருமொழி இலக்கண நூலை எழுதிய பெருமையும் அவரையேச் சாரும். அவர் பல மொழிமாற்ற அகரமுதலிகள் தொகுத்தார்: "தமிழ் - இலத்தீன்", "இலத்தீன் - தமிழ் - போர்த்துகீசு", "தமிழ் - பிரெஞ்சு" மற்றும் புகழ்பெற்ற நான்குவழி தமிழ்-தமிழ் நிகண்டான "சதுரகராதி" இந்நூல் 1824 வரை அச்சிடப்படாது இருந்தது. எதிர்தரப்பிலிருந்த சீர்திருத்தவாதிகள் இவரது அனைத்து ஆக்கங்களையும் ஏற்றுக்கொள்ளாதபோதும், பிளாக்பெர்ன் கூற்றுப்படி, இவரது இலக்கியத் திறனைப் பாராட்டியதோடன்றி சில இலக்கண நூலையும் வேதியர் உலகம் என்ற நூலையும் அச்சிட்டனர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் இவை அவர்களின் வழமையான புத்தகங்களில் ஒன்றானது. வீரமாமுனிவரின் "பரமார்த்த குருவின் கதை" அல்லது Guru Simpleton தமிழில் முதன்முதலாக அச்சிடப்பட்ட நாட்டுக்கதைத் தொகுப்பாக விளங்கியது.

### பரமார்த்த குருவின் கதை

வீரமாமுனிவரின் பரமார்த்த குருவின் கதை பாரசீக அராபிய இரவுகள் அல்லது வட இந்தியாவின் பஞ்சதந்திரக் கதைகள் போன்று பரவலான ஈர்ப்பைப் பெற்றது. தமிழ் நாட்டுப்புற செவிவழிக்ககதை சொல்லும் பாங்கையும் மேற்கத்திய கதைசொல்லும் பாங்கையும் ஒன்றிணைத்த கற்பனைவளத்துடன் புனையப்பட்ட கதைகளாகும். 1776ஆம் ஆண்டிலேயே இதனை எழுதி முடித்தாலும், 1822ஆம் ஆண்டு இலண்டனில் அச்சிடப்படும்வரை வெளியிடப்படவேயில்லை. தரவுகளின்படி வீரமாமுனிவர் முதலில் தமிழில் எழுதிப் பின்னர் இலத்தீனிற்கு மொழிபெயர்த்தார். இதனை உள்ளூர் மக்களுக்கும் சமய போதகர்களுக்கும் மனமகிழ்வைத் தரவே எழுதியதாக அவர் கூறினாலும் அச்சிட்ட நூல்கள் மிகப்பலரையும் எளிதாகக் கவரும் என்ற உண்மையால் எழுத்துப்பிழையற்ற சமூகத்தை வளர்க்க விரும்பிய வீரமாமுனிவர் தமது அகராதிகளுக்கும் இலக்கண நூலுக்கும் இதனால் ஓர் அறிமுகம் கிடைக்குமென நம்பினார்.

### பாண்டிச்சேரி மிசன் அச்சகம் ஆற்றிய பணி

1841இல் புதுவை மிஷன் அச்சகத்தில் அச்சிடப்பட்ட திருமறைச்சுவடி. இது தந்தை பெர்டிரான்ட், சே.ச. என்பவரால் உரோமை மறைபரப்பு பேராயத்திற்கு

நன்கொடையாக அளிக்கப்பட்டு, இப்போது பிரான்சில் உள்ள அருங்காட்சியகத்தில் உள்ளது. தமிழகத்தில் அச்சுப் பணி புரிந்ததில் பிரான்சு நாட்டவரும் சிறப்பான பங்களித்துள்ளனர். Imprimerie de la Mission என்னும் பெயரில் செயல்பட்ட இந்த அச்சகம் இயேசு சபைத் துறவியரால் 1748ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அங்கிருந்து நூல்கள் வெளிவரும் முன்னே, ஆங்கிலேயர் புதுச்சேரியை (முன்னாள் ”பாண்டிச்சேரி”) முற்றுகையிட்டு, அங்கிருந்த அச்சகத்தையும் 1761இல் அழித்துவிட்டு, அச்சு இயந்திரங்களைச் சென்னைக்குக் கொண்டுசென்றார்கள். இயந்திரங்களோடு, அச்சுக் கோப்பாளராக இருந்த சார்லஸ் டேலோன் (Charles Delon) என்பவரையும் கடத்திச் சென்றார்கள். பின்னர், பாரிசு வெளிநாட்டு மறைபரப்புக் குழு (Missions Etrangers de Paris) என்று அழைக்கப்படுகின்ற அமைப்பைச் சார்ந்த கத்தோலிக்க மறைபரப்பாளர் பாண்டிச்சேரி அச்சகத்தை 1828இல் மீண்டும் தொடங்கி நடத்தினார்கள். அச்சகம் தொடங்குவதற்கு பிரான்சு நாட்டு அரசு உதவியது. மறைத்திரு டுப்புயி என்பவர் அச்சகத்தின் மேலாளராய் இருந்து, 125 நூல்களை அச்சிலேற்றினார். தேம்பாவணி மூன்று பகுதிகளாகவும், அகர முதலிகள், கிறித்தவப் போதனை நூல்கள், "வேதசாட்சியான தேவசகாயம்பிள்ளை" (1858) போன்றவையும் அங்கிருந்து வெளியாயின.

## கிழக்கிந்தியக் கம்பனியின் தமிழர் அச்சகங்களுக்கான தடை

பிரித்தானிய கிழக்கிந்திய கம்பனி தமிழ்நாட்டைக் கைப்பற்றியபோது அவர்கள் ஐரோப்பிய அல்லது தமிழ் கிறித்தவ சமய போதகர்களைத் தவிர பிறர் அச்சகங்களை வைத்திருக்கவோ, நூல் வெளியிடவோ அனுமதிக்கவில்லை. இந்தத் தடை 1835 வரை அமுலில் இருந்தது. இந்தத் தடை எல்லிசு மற்றும் தோமஸ் முன்ரோ உட்பட்டோரின் முயற்சியால் தளர்த்தப்பட்டது. எனினும் தமிழர்களால் நூல்களைப் பதிப்பிப்பதற்கோ, அல்லது அச்சங்களை நடத்துவதற்கோ பல வகைத் தடைகள் தொடர்ந்து இருந்தன. குறிப்பாக 1878 ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட நாட்டு மொழிகள் சட்டம் (Vernacular Press Act) ஊடகங்களில் வெளிவரும் அனைத்தையும் கட்டுப்படுத்த அரசுக்கு (கிழக்கிந்தியக் கம்பனிக்கு) அதிகாரத்தைக் கொடுத்தது. இத்தகைய தடைகளாலும், வேறுபல காரணங்களாலும் அச்சுக்கலை தமிழ்நாட்டுக்கு வந்து சுமார் முன்னூறு ஆண்டுகளுக்கு வளர்ச்சி பெறாமலேயே இருந்தது. இதனால் பெரும்தொகை

தமிழ் ஆக்கங்கள் அழிந்து போயின. மிஞ்சிய தமிழ் ஆக்கங்களே 19 ம் நூற்றாண்டின் நடுவிலிருந்து பதிக்கப்பட்டு இன்று கிடைக்கின்றன.

## எல்லிசும் புனித ஜார்ஜ் கல்லூரி அச்சகமும்

சென்னை மாவட்ட ஆட்சியாளர் பிரான்சிசு வைட் எல்லிசு தமிழ் ஆராய்ச்சி செய்ய 1812ஆம் ஆண்டு சென்னையில் புனித ஜார்ஜ் கல்லூரியைத் தோற்றுவித்தார். இதில் உள்நாட்டுத் தமிழ் அறிஞர்களும் ஆசிரியர்களாகப் பணியாற்றினர். 1813இல் கல்லூரியைச் சேர்ந்த ஒரு அச்சகமும் ஆரம்பிக்கப்பட்டது. எல்லிசு அவ்வச்சகத்துக்கு ஒரு அச்சு எந்திரத்தையும் தமிழ் அச்சு வார்ப்புருக்களையும் வழங்கி உதவினார். எழும்பூரிலிருந்த அரசு அச்சகத்திலிருந்து தெலுங்கு வார்ப்புருக்கள், அச்சு மை, வேலை செய்யத் தொழிலாளர்கள் போன்றவற்றைக் கொடுத்து உதவினர். சென்னை அரசே அச்சுக் காகிதங்களைத் தந்துதவியது. 1813இல் வீரமாமுனிவரின் “கொடுந்தமிழ் இலக்கணம்” இவ்வச்சகத்தின் முதல் புத்தகமாக வெளியானது. 1830கள் வரை சுமார் முப்பது நூல்கள் இவ்வச்சகத்தால் பதிப்பிக்கப்பட்டன. இலக்கண நூல்கள் தவிர எல்லிசின் திருக்குறள் மொழிபெயர்ப்பு, ராமாயண உத்தர காண்டம் போன்ற காப்பியங்கள், பஞ்சதந்திரக் கதைகள் போன்ற நீதி இலக்கியங்கள் ஆகியவையும் இவ்வச்சகத்தால் வெளியிடப்பட்டன. தமிழ் தவிர தெலுங்கு, அரபி, கன்னடம், மலையாளம் ஆகிய மொழி நூல்களும் வெளியாகின.

## செவிவழிக் கதைகள் தமிழில் அச்சிடல்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முன்பகுதியில் இந்தியாவின் அச்சு வரலாற்றில் பல செவிவழி இலக்கியங்கள், முக்கியமாக நாட்டுப்புறக் கதைகள் பதிப்பிக்கப்பட்டன. 1800ஆம் ஆண்டு முதல் 1835 வரை தமிழில் பதிப்பிக்கப்பட்டவற்றில் பெரும்பான்மையாக, அகரமுதலிகளையும் இலக்கணங்களையும் தவிர்த்து, செவிவழிக் கதைகளின் தொகுப்புகள் இருந்தன. புகழ்பெற்ற இலக்கிய நூல்களான திருக்குறள், நாலடியார் போன்றவை பதிப்பிக்கப்பட்டன என்றாலும் இவற்றை விடப் பலமடங்கு செவிவழிக் கதைகளே பிரசுரமாயின. இவற்றில் முதன்மையானதாக விக்கிரமாதித்தன் கதைகள் 1804ஆம் ஆண்டு வெளியானது. 1808ஆம் ஆண்டில் சதமுக ராவணன் கதை"யும் 1812ஆம் ஆண்டில் மரியாதைராமன் கதை மற்றும் தமிழறியும் மடந்தை கதை"யும் 1819ஆம் ஆண்டு "புரூரவ சக்கரவர்த்தி கதை"யும் 1820ஆம் ஆண்டில்

சிறுகதைத் தொகுப்பான கதைமஞ்சரியும் வெளியாயின. 1822ஆம் ஆண்டு இலண்டனிலிருந்து தமிழ்,ஆங்கிலம் இருமொழிகளிலும் "பரமார்த்த குருவின் கதை" (குரு சிம்பிள்டன்) வெளியானது. 1826ஆம் ஆண்டு தமிழில் "பஞ்சதந்திரக் கதை"களும் 1833ஆம் ஆண்டு மற்றொரு செவிவழிக்கதைகளின் தொகுப்பான "கதாசிந்தாமணி"யும் பதிப்பிக்கப்பட்டன. ஆங்கிலம், பிரெஞ்சு மற்றும் ஈசாப் கதைகள் மொழிமாற்றம் செய்யப்பட்டு 1850களில் வெளியிடப்பட்டன.

### மதராஸ் பள்ளிப்புத்தக சமூகம்

1817ஆம் ஆண்டில் கொல்கத்தாவில் பள்ளிப் புத்தக சமூகம் தொடங்கிய சில நாட்களிலேயே சென்னையிலும் அத்தகைய சமூகம் ஒன்று நிறுவப்பட்டது. இருப்பினும் பல ஆண்டுகள் அது இயங்காநிலையிலேயே இருந்தது. 1850ஆம் ஆண்டு அதற்கு உயிரூட்டும் வகையில் பள்ளிகளுக்கான சிறந்தப் புத்தகங்களுக்குப் பரிசுகள் வழங்கத் திட்டமிட்டது. இதன் பயனாகப் பல பிரசுரங்கள் வெளிவரத் துவங்கின. அவற்றில் எச். மோரிசு எழுதிய இந்திய வரலாறு சிறப்பாக அமைந்தது.

### பதிப்புக் குறிப்புகள்

தமிழ்ச் செவ்வியல் நூல்களுள் திருக்குறள், நாலடியார் ஆகிய இரு நூல்களே முதன் முதலாக அச்சு வடிவம் பெற்றன. 1812இல் தஞ்சை நகரைச் சேர்ந்த மலையப்பப் பிள்ளையின் மகனாகிய ஞானப்பிரகாசன் எனும் அறிஞர் திருக்குறள், நாலடியார் தொல்காப்பியத்தின் அச்சுப் பதிப்பு வரலாறு மழைவை மகாலிங்கையர் பதிப்பித்து வெளியிட்ட எழுத்ததிகார நச்சினார்க்கினியர் உரைப் பதிப்பிலிருந்து தொடங்குகிறது. 1847ஆம் ஆண்டு மகாலிங்கையரின் பதிப்பு வெளிவந்தது. நச்சினார்க்கினியர் உரைப் பதிப்பில் தொடங்கிய தொல்காப்பிய அச்சுப் பதிப்பு வரலாறு 1935ஆம் ஆண்டு வ.உ. சிதம்பரம் பிள்ளை பதிப்பித்து வெளியிட்ட தொல்காப்பிய இளம்பூரணர் உரைப் பதிப்போடு முதல் கட்ட பதிப்பு வரலாறு நிறைவுகொண்டிருக்கிறது.

சங்க இலக்கிய நூல்களுள் முதன் முதலாக அச்சு வடிவம் பெற்ற நூல் கலித்தொகை ஆகும். 1887ஆம் ஆண்டு சி.வை. தாமோதரம் பிள்ளை நச்சினார்க்கனியர் உரையுடன் கலித்தொகையைப் பதிப்பித்து வெளியிட்டதன் வழியாகச் சங்க இலக்கியப் பதிப்பு வரலாறு தொடங்குகிறது. கலித்தொகைக்கு முன்னரே பத்துப்பாட்டினுள் ஒன்றாகிய திருமுருகாற்றுப்படைக்குப் பல அச்சுப்

பதிப்புகள் வெளிவந்துள்ளன. அப்பதிப்புகளைப் பத்துப்பாட்டின் முழுமையான பதிப்பாகக் கொள்ளமுடியாத நிலையில், சங்க இலக்கிய நூல்களுள் முதன் முதலாக அச்சுவடிவம் பெற்ற நூலாகக் கலித்தொகை அமைகிறது. 1872ஆம் ஆண்டில் சிலப்பதிகாரமும் 1894ஆம் ஆண்டில் மணிமேகலையும் முதன் முதலாக அச்சுவடிவம் பெற்றன. 1883இல் இறையனார் களவியலுரைக்கும், 1905இல் முத்தொள்ளாயிரத்திற்கும் முதல் அச்சுப் பதிப்பு வெளிவந்துள்ளன.

தொல்காப்பியம், சங்க இலக்கியம், காப்பிய நூல்களுக்கான முதல் அச்சுப் பதிப்புகளைக் கண்டறிவதில் நமக்குச் சிக்கல் ஏதும் ஏற்படவில்லை. கீழ்க்கணக்கு நூல்களுள் திருக்குறள், நாலடியார் நூல்களைத் தவிர்த்து ஏனைய நூல்களின் முதல் அச்சுப் பதிப்புகளைக் கண்டறிவதில் பெருஞ்சிரமம் ஏற்படுகிறது. இதனால் கிடைத்திருக்கிற கீழ்க்கணக்கு நூல்களுக்கான அச்சுப் பதிப்புகளில் மிகவும் காலத்தால் மூத்த பதிப்புகளை முதல் பதிப்பாகக் கருதி இங்குத் தரப்பட்டுள்ளன.

கீழ்க்கணக்கு நூல்களில் இங்குத் தரப்பட்டுள்ள அச்சுப் பதிப்புகளுக்கும் காலத்தால் முன்னரான பதிப்புகள் இருப்பதாகத் தகவல்கள் மட்டும் கிடைக்கின்றன; அச்சுப் பதிப்புகள் எங்கும் கிடைக்கப்பெறவில்லை. அதனால் அதற்கடுத்தடுத்த நிலையில் வெளிவந்த அச்சுப் பதிப்புகள் இங்குத் தரப்பட்டுள்ளன.

ஐந்திணையெழுபது நூல் பழையுரையுள்ள 26 பாடல்களை மட்டும் மு. இராகவையங்கார் 1906இல் செந்தமிழில் வெளியிட்டிருக்கிறார். அவை முழுமையான பதிப்பாகக் கருதமுடியாத நிலையில் அதன் பின்னர் 1926இல் வெளிவந்த சோமசுந்தர தேசிகர் பதிப்பை முதல் பதிப்பாகக் கொண்டு இங்குத் தரப்பட்டுள்ளது.

இனியவை நாற்பது முகவை இராமாநுச கவிராயரால் 1844இல் அச்சிட்டு வெளியிட்டிருப்பதாக ஒரு தகவலுண்டு. அந்த அச்சுப் பதிப்பு எங்கும் கிடைக்கப்பெறாமையால் 1903இல் வெளிவந்த ரா. இராகவையங்கார் பதிப்பு இங்குத் தரப்பட்டுள்ளது.

பழமொழி நானூற்றை 1874இல் சோடசாவதானம் சுப்பராயசெட்டியார் பதிப்பித்து வெளியிட்டதாகத் தகவல் உள்ளது; இப்போது அப்பதிப்பு கிடைக்கப்பெறாமையால் 1917இல் வெளிவந்த தி. செல்வகேசவராயர் பதிப்பும், ஆசாரக்கோவைக்குத் தில்லையம்பூர் சந்திசேகர கவிராஜ பண்டிதர் 1857இல் அச்சுப்

பதிப்பை வெளியிட்டிருக்கிறார் என்ற தகவல் மட்டும் உள்ள நிலையில், 1883இல் வெளிவந்த அச்சுப் பதிப்பும் இங்குத் தரப்பட்டுள்ளன. ஏனைய கீழ்க்கணக்கு நூல்களின் அச்சுப் பதிப்புகள் முதல் பதிப்பாகக் கருதத்தக்கனவாகும்.

இந்த அச்சுப் பதிப்புகளுக்கும் மேலான பழைய அச்சுப் பதிப்புகளை வைத்திருப்பவர்களாயினும், அறிந்திருப்பவர்களாயினும் அவை பற்றிய தகவலைச் செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்திற்குத் தெரிவித்து உதவினால் இப்பதிப்புப் பட்டியலை மேம்படுத்த உதவியாக இருக்கும்.

## தொல்காப்பியம்

### எழுத்ததிகாரம்

**நச்சினார்க்கினியர் உரைப் பதிப்பு**

1. தொல்காப்பியம் எழுத்ததிகார மூலமும் மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் உரையும், சகலகலாசாலைத் தமிழ்த் தலைமைப் புலமை நடாத்திய மழைவை மகாலிங்கையரால் பரிசோதிக்கப்பட்டுக் கல்விக்கடல் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது, பிலவங்க – ஆவணி [1847]

**இளம்பூரணர் உரைப் பதிப்பு**

தொல்காப்பியம் எழுத்ததிகார மூலமும் உரையாசிரியரென்னும் சிறப்புப் பெயரையுடைய இளம்பூரணருரையும், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் மாணக்கருள் ஒருவராகிய திரிசிரபுரம் சோடசாவதானம் சுப்பராய செட்டியாரால் பரிசோதிக்கப்பட்டுச் சென்னை, அத்திநீயம் அண்ட் டேலிநியூஸ் பிரான்ச் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது, விபவ – கார்த்திகை [1868]

**சொல்லதிகாரம் - சேனாவரையர் உரைப் பதிப்பு**

தொல்காப்பியம் சொல்லதிகார மூலமும் சேனாவரையருரையும், மேலைமணம்பேடு ஸ்ரீநிவாஸசடகோப முதலியாரவர்கள் வேண்டுகோளின்படி கோமளபுரம் இராசகோபால பிள்ளையவர்களால் வர்த்தமானதரங்கிணீசாகை அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது, விபவ – கார்த்திகை [1868]

## இளம்பூரணர் உரைப் பதிப்பு

தொல்காப்பியம் சொல்லதிகார மூலமும் இளம்பூரணர் உரையும், காவேரிப்பாக்கம் நமச்சிவாய முதலியாரால் பரிசோதிக்கப்பட்டுச் சென்னை, காக்ஸ்டன் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது, 1927

## நச்சினார்க்கினியர் உரைப் பதிப்பு

தொல்காப்பியம் சொல்லதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், யாழ்ப்பாணம் சி.வை. தாமோதரம் பிள்ளையால் பரிசோதிக்கப்பட்டு, சென்னபட்டணம், விக்டோரியா ஜூபிலி அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டது, நந்தன - புரட்டாசி [1892]

## தெய்வச்சிலையார் உரைப் பதிப்பு

தொல்காப்பியம் சொல்லதிகார மூலமும் தெய்வச்சிலையார் உரையும், அரங்க. வேங்கடாசலம் பிள்ளையால் பரிசோதிக்கப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டது, கரந்தைத் தமிழ்ச்சங்கப் பதிப்பு, சுக்கில – வைகாசி [1929]

## கல்லாடர் உரைப் பதிப்பு

தொல்காப்பியம் சொல்லதிகார மூலமும் கல்லாடனார் விருத்தியுரையும் பழைய உரையும், சைவப் புலவர் சித்தாந்த நன்மணி கு. சுந்தரமூர்த்தி எழுதிய விளக்கவுரையுடன் பதிப்பிக்கப்பட்டது, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, 1964

## பொருளதிகாரம்

## இளம்பூரணர் உரைப் பதிப்பு

தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையியல் புறத்திணையியல் மூலமும் இளம்பூரணார் உரையும், கா. நமச்சிவாய முதலியாரால் பரிசோதிக்கப்பட்டுச் சென்னை காக்ஸ்டன் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது, 1920

தொல்காப்பியம் பொருளதிகாரம் களவியல், கற்பியல், பொருளியல் மூலமும் இளம்பூரணர் உரையும், வ.உ. சிதம்பரம் பிள்ளையால் பரிசோதிக்கப்பட்டு, வாவிள்ள இராமஸ்வாமி சாஸ்த்ருலு அண்ட் ஸன்ஸ் அச்சுக்கூடத்தில் பதிக்கப்பட்டுள்ளது, 1933

தொல்காப்பியம் பொருளதிகாரம் மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல், மரபியல் மூலமும் இளம்பூரணர் உரையும், வ.உ.சிதம்பரம் பிள்ளையால் பரிசோதிக்கப்பட்டு, வாவிள்ள இராமஸ்வாமி சாஸ்த்ருலு அண்ட் ஸன்ஸ் அச்சுக்கூடத்தில் பதிக்கப்பட்டுள்ளது, 1935

## நச்சினார்க்கினியர் உரைப் பதிப்பு

தொல்காப்பியம் பொருளதிகார மூலமும் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் உரையும், யாழ்ப்பாணம் சி.வை. தாமோதரம் பிள்ளையால் பரிசோதிக்கப்பட்டு, சென்னை, ஸ்காட்டிஸ் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது, பார்த்திப – ஆவணி [1885]

தொல்காப்பியம் பொருளதிகாரம் செய்யுளியல் மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், ஸேதுஸமஸ்தான வித்வான், ரா. இராகவையங்காரால் பரிசோதிக்கப்பட்டு, மதுரை, தமிழ்ச்சங்க முத்திராசாலையில் பதிப்பிக்கப்பட்டது, 1917

## பேராசிரியர் உரைப் பதிப்பு

தொல்காப்பியம் பொருளதிகாரம் மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல் மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், ராவ்பஹதூர் ச. பவானந்தம் பிள்ளையால் பரிசோதிக்கப்பட்டு, லாங்மென்ஸ் க்ரீன் அண்ட் கம்பெனியார் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது, 1917

## தொல்காப்பிய மூலம்

தொல்காப்பியம் - நன்னூல் மூலம், வால்ற்றார் ஜாயீஸ் துரையவர்களுதவியைக் கொண்டு இ. சாமுவேல் பிள்ளையினால் சென்னை மாநகரம் கிறிஸ்து மதக்கியான விளக்கச் சங்கத்தார் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது, 1858.

## சங்க இலக்கியம்

### எட்டுத்தொகை

எட்டுத்தொகையுள் இரண்டாவதாகிய குறுந்தொகை மூலமும் திருக்கண்ணபுரத் தலத்தான் திருமாளிகைச் சௌரிப்பெருமாளரங்கன் இயற்றிய உரையும், மேற்படி உரையாசிரியரால் வித்யாரத்னாகர அச்சுக்கூடத்திற் பதிப்பித்து வெளியிடப்பட்டது, 1915. எட்டுத்தொகையுள் மூன்றாவதாகிய ஐங்குறுநூறு மூலமும் பழைய உரையும், கும்பகோணம் காலேஜ் தமிழ்ப் பண்டிதராகிய உத்தமதானபுரம் வே. சாமிநாதையரால்

பல பிரதிரூபங்களைக் கோண்டு பரிசோதித்து சென்னபட்டணம் வைஜயந்தி அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது, சோபகிருது – ஆனி [1903]. எட்டுத்தொகையுள் நான்காவதாகிய பதிற்றுப்பத்து மூலமும் பழைய உரையும், சென்னைப் பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப் பண்டிதராகிய உத்தமதானபுரம் வே. சாமிநாதையரால் பரிசோதித்துச் சென்னபட்டணம் வைஜயந்தி அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

எட்டுத்தொகையுள் ஐந்தாவதாகிய பரிபாடல் மூலமும் ஆசிரியர் பரிமேலழகரியற்றிய உரையும், சென்னை, பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப் பண்டிதராகிய உத்தமதானபுரம் வே. சாமிநாதையரால் பரிசோதித்து, சென்னை, கமர்ஷியல் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது, 1918. நல்லந்துவனார் கலித்தொகை மூலமும் மதுரை பாரத்துவாசி நச்சினார்க்கினியர் உரையும், யாழ்ப்பாணம் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்களால் பரிசோதிக்கப்பட்டு, சென்னை ஸ்காட்டிஷ் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது,1887. எட்டுத்தொகையுள் நெடுந்தொகை ஆகும் அகநானூறு மூலமும் பழைய உரையும், ஸேதுஸமஸ்தான வித்வான் உ. வே. ரா. இராகவையங்கார் ஸ்வாமிகள் பரிசோதித்துத் தந்து சென்னை, கம்பர் விலாஸம் வே. இராஜகோபாலையங்காரால் பதிப்பிக்கட்டது. எட்டுத்தொகையுள் ஒன்றாகிய புறநானூறு மூலமும் உரையும், கும்பகோணம் காலேஜ் தமிழ்ப் பண்டிதராகிய உத்தமதானபுரம் வே. சாமிநாதையரால் பரிசோதித்துச் சென்னை, வெ.நா. ஜூபிலி அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது, 1894

## பத்துப்பாட்டு

பத்துப்பாட்டு மூலமும் மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் உரையும், கும்பகோணம் காலேஜ் தமிழ்ப் பண்டிதராகிய உத்தமதானபுரம் வே. சாமிநாதையரால் பரிசோதித்து, சென்னை, திராவிடரத்நாகர அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது, 1889

## பதினெண்கீழ்க்கணக்கு

தெய்வப்புலமை திருவள்ளுவ நாயனார் அருளிச்செய்த திருக்குறள் மூலபாடம், தொண்டமண்டலம் சென்னைப் பட்டினத்தில் தஞ்சை நகரம் மலையப்ப பிள்ளை குமாரன் ஞானப்பிரகாசனால் மாசத்தினச்சரிதையின் அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டது, 1812. முனிவர்களருளிச் செய்த நாலடியார் மூலபாடம்,

தொண்டமண்டலம் சென்னைப் பட்டினத்தில் தஞ்சை நகரம் மலையப்ப பிள்ளை குமாரன் ஞானப்பிறகாசனால் மாசத்தினச்சரிதையின் அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டது,1812. பூதஞ்சேந்தனார் அருளிச் செய்த இனியது நாற்பது மூலமும் உரையும், சேதுஸம்ஸ்தான வித்வானும் செந்தமிழ்ப் பத்திராசிரியருமான ரா. இராகவையங்காரால் வெளியிடப்பட்டது, மதுரை, தமிழ்ச்சங்க முத்திராசாலைப் பதிப்பு, 1903. சங்கமருவிய சான்றோரிலொருவராகிய பெருவாயின் முள்ளியாரால் அருளிச் செய்யப்பட்ட ஆசாரக்கோவை மூலமும் உரையும், பாளையங்கோட்டை, சிந்தாமணியந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டது, 1883.

நல்லாதனாரால் செய்யப்பட்ட சங்கமருவிய நீதி நூலாகிய திரிகடுகம், திருக்கோட்டியூர் இராமாநுசாசாரியார் செய்த உரையுடன் நல்லூர் சதாசிவப்பிள்ளையால் சென்னபட்டணம் வர்த்தமானதரங்கிணீசாகை யச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. விளம்பிநாகனார் இயற்றிய நான்மணிக்கடிகை மூலமும் உரையும் பி. வாசுதேவ முதலியாரால் பதிப்பித்து வெளியிடப்பட்டது, 1872. முன்றுறையரையனார் இயற்றிய பழமொழி நானூறு மூலமும் உரையும், சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழாசிரியர் தி. செல்வக்கேசவராய முதலியாரால் பரிசோதிக்கப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டது, சென்னை, எஸ்.பி.சி.கே. பிரஸ், 1917. காரியாசான் செய்த சிறுபஞ்சமூலம் மூலமும் உரையும், சண்முகசுந்தர முதலியாரவர்களால் பரிசோதித்து திரிசிரபுரம் புத்தக வியாபாரம் தி. சபாபதிப்பிள்ளையவர்களது மட்டுவார்குழலாம்பாள் அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

பொய்கையாரருளிச்செய்த களவழி நாற்பது மூலமும் உரையும், கொன்றமாநகரம் சண்முகசுந்தரமுதலியாரவர்களால் பரிசோதித்து மட்டுவார்குழலாம்பாள் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. மதுரைக் கண்ணங்கூத்தனார் செய்த கார்நாற்பது மூலமும் உரையும், சண்முகசுந்தர முதலியாரவர்களால் பரிசோதித்து திரிசிரபுரம் புத்தக வியாபாரம் தி. சபாபதிப்பிள்ளையவர்களது மட்டுவார்குழலாம்பாள் அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது. கபிலராற்செய்த இன்னா நாற்பது மூலமும் உரையும், கொன்றைமாநகரம் சண்முகசுந்தர முதலியார் அவர்களாற் பரிசோதித்து, தி.

சபாபதிப்பிள்ளையவர்களது மட்டுவார் குழலாம்பாள் அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

மதுரை சங்கப்புலவருளொருவராகிய கூடலூர் கிழார் இயற்றிய முதுமொழிக் காஞ்சி, உறையூர் மதுரைநாயக முதலியாரல் பார்வையிடப்பட்டுத் திருச்சினாப்பள்ளி வி. பக்கியம் பிள்ளை அண்டு சன்ஸ் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது, 1895. கணிமேதையார் செய்த ஏலாதி மூலமும் உரையும், ஊ. புஷ்பரத செட்டியாரால் தமது கலாரத்நாகர அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது, சென்னை, 1887

மாறன்பொறையனார் அருளிச்செய்த ஐந்திணையைம்பது மூலமும் உரையும், சேதுசம்ஸ்தான வித்துவானும் செந்தமிழ்ப் பத்திராசிரியருமாகிய ரா. இராகவையங்காரால் பரிசோதிக்கப்பட்டது, மதுரை, தமிழ்ச்சங்க முத்திராசாலை பதிப்பு, 1903. கணிமேதாவியார் அருளிச்செய்த திணைமாலை நூற்றைம்பது மூலமும் உரையும், சேதுசம்ஸ்தான வித்வானும் செந்தமிழ்ப் பத்திராசிரியருமான ரா. இராகவையங்காரால் பதிப்பிக்கப்பெற்றது, மதுரை, தமிழ்ச்சங்க முத்திராசாலைப் பதிப்பு, 1904. மூவாதியார் செய்த ஐந்திணை யெழுபது மூலமும் உரையும், இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை சோமசுந்தர தேசிகரால் பரிசோதிக்கப்பட்டு வெளியிடப்பட்டது, வஸந்தா அச்சுக்கூடம், மாயூரம், 1926. சாத்தந்தையார் மகனார் கண்ணன் சேந்தனார் அருளிச் செய்த திணைமொழி ஐம்பது மூலமும் பழைய உரையும், இலக்கண விளக்க பரம்பரை சோமசுந்தர தேசிகரால் பரிசோதிக்கப்பட்டு திருவாரூர்த் தமிழ்ச் சங்கத்தாரால் வெளியிடப்பட்டது, திருவாரூர் விக்டோரியா அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது, 1918

பதினெண் கீழ்க்கணக்கினுள் கைந்நிலை மூலமும் பழைய உரையும், இடையாற்று மங்கலம் வைத்தீச்சுவரையரவர்கள் குமாரர் அனந்தராமையரால் பரிசோதித்துச் சென்னை, நோபில் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பெற்றது, 1931

## காப்பியங்கள்

### சிலப்பதிகாரப் பதிப்பு

சிலப்பதிகாரம் புகார்காண்டம், வேனிற்காதை வரையுள்ள மூலம், தி. ஈ. ஸ்ரீநிவாசராகவாசாரியாரால் பு. ம. சபாபதி முதலியாரது கல்விவிளக்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது, 1872. சிலப்பதிகாரம் முதலாவது புகார்காண்டம்

மூலம், சென்னை பிரெஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப் பண்டிதராகிய ஈ. ஸ்ரீநிவாசராகவாசாரியாரவர்களால், ஊ. புஷ்பரத செட்டியாரவர்களது கலாரத்நாகரம் என்னும் அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டது, 1876. சேரர் குலத்துதித்த இளங்கோவடிகள் இயற்றிய பஞ்சகாவியங்களுள் ஒன்றாகிய சிலப்பதிகாரம் புகார் காண்டம் மூலமும் அடியார்க்குநல்லார் உரையும், தமிழ்ப் புலவர் தி. க. சுப்பராய செட்டியாரால் மிமோரியல் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது, விக்கிரம – சித்திரை [1880]. இளங்கோவடிகளருளிச் செய்த சிலப்பதிகார மூலமும் அடியார்க்கு நல்லார் உரையும் அரும்பதவுரையும், கும்பகோணம் காலேஜ் தமிழ்ப் பண்டிதராகிய உத்தமதானபுரம் வே. சாமிநாதையரால் பரிசோதித்துச் சென்னை வெ.நா. ஜூபிலி அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது, 1892

## மணிமேகலைப் பதிப்பு

மணிமேகலை (மூலம் மட்டும்) மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் பாடியது, புரசை அட்டாவதானம் சபாபதி முதலியார் அவர்கள் மாணாக்கர் திருமயிலை சண்முகம்பிள்ளையால் பார்வையிடப்பட்டுச் சென்னை மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டது, விஜய – தனுர்ரவி [1894]. கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவராகிய மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் அருளிச் செய்த மணிமேகலை மூலமும் கும்பகோணம் கவர்ன்மென்ட் காலேஜ் தமிழ்ப் பண்டிதராகிய உத்தமதானபுரம் வே. சாமிநாதையரெழுதிய அரும்பதவுரையும், உ.வே. சாமிநாதையரால் சென்னை, வெ.நா. ஜூபிலி அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்படது, 1898

## இறையனாரகப்பொருள்

இறையனாரகப்பொருள், மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் கண்டருளிய உரையோடு யாழ்ப்பாணம் சி.வை. தாமோதரம் பிள்ளையால் பரிசோதிக்கப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டது, ஸ்காட்டிஸ் அச்சுக்கூடம், சென்னை, சுபானு - சித்திரை [1883]

### முத்தொள்ளாயிரம்

முத்தொள்ளாயிரச் செய்யுட்கள், ஸேதுஸம்தான வித்துவானும் செந்தமிழ்ப் பத்திராசிரியருமான ரா. இராகவையங்காரால் பரிசோதிக்கப்பெற்றன, மதுரை, தமிழ்ச்சங்க முத்திராசாலைப் பதிப்பு,1905.

### தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி

வெளி ஆக்கிரமிப்புக்களாலும் காலனித்துவ ஆதிக்கத்தாலும் தமிழ் தேங்கி கிடந்த நிலையில் இருந்து மீண்டு தமிழின் தொன்மையையும், தொடர்ச்சியையும், சிறப்பையும் தமிழர்கள் தாம் அறிந்தும் பிறரும் அறியக்கூடியவாறு நிலைநிறுத்த தொடங்கிய காலப்பகுதி தமிழ் மறுமலர்ச்சி காலம் ஆகும். "கி.பி. 1887 முதல் தமிழின் மறுமலர்ச்சி காலம் முதல் தமிழின் மறுமலர்ச்சி காலம் எனலாம். இவ்வாண்டில் இருந்துதான் கல்வெட்டுக்களின் அறிக்கைகள் வெளிவரத்தொடங்கின. தமிழின் தலையெழுத்தும் மாறத் தொடங்கியது. தமிழின் தொன்மை வெளியுலகத்துக்குத் தெரிய ஆரம்பித்தது. பண்டைத் தமிழரின் நாகரிகத்தை உலகம் அறிய முற்பட்டது."

இந்த மறுமலர்ச்சிக்கு மேலைநாடுகளில் இருந்து சமயம் பரப்ப வந்த மேலைநாட்டு அறிஞர்களின் ஆய்வுகளும் உதவியது. குறிப்பாக கால்டுவெல் 1856-இல் எழுதிய 'திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம்' (The Comparative Grammar of the Dravidian Languages) ஆய்வு தமிழின் தனித்துவ பண்பை நிறுவ உதவியது.

19 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் தமிழறிஞர்கள் சங்க ஏடுகளை தேடிப் பெற்று அச்சுப் பதிப்புச் செய்து பொது மக்களுக்கு எடுத்து செல்லும் பணியையும் செய்தனர். இந்த பணியை செய்தவர்களில் உ. வே. சாமிநாதையர், சி. வை. தாமோதரம்பிள்ளை, ஆறுமுக நாவலர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

### உ.வே.சாமிநாத ஐயர் அவர்களின் தமிழ்ப்பணிகள்

உலகின் தொன்மையான மொழிகளில் தமிழும் ஒன்று. எந்த அடைமொழியைக் கொடுத்தாலும் தமிழை சிறப்பிக்க வார்த்தைகள் இல்லை என்பதுதான் உண்மை. பல்வேறு கால மாற்றங்கள் கடந்து இன்று வரை நமது மொழி இளமைக் குன்றாமல் இருப்பதற்கான பல காரணங்களுள் ஒன்று நமது மொழியைக் காப்பாற்றுவதற்காக அரும்பாடுபட்ட தமிழறிஞர்களுள் உ.வே.சாமிநாத ஐயர் குறிப்பிடத்தக்கவர். அவர்தான் "தமிழ் முனிவர்" என்றும், "தமிழ்த்தாத்தா" என்றும் தமிழுலகம்

பெருமையுடன் நினைவில் வைத்திருக்கும் டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர். உ.வே.சா என்று சுருக்கமாக அழைக்கப்படுகிறார்.

சுப்பிரமணிய பாரதியார், ரவீந்திர நாத் தாகூர் ஆகிய இரு மகாகவிகளும் உ.வே.சா. அவர்களை அகத்திய முனிவருக்கு ஒப்பானவர் என்று பாராட்டினார்கள். அதோடு இவரை பாராட்டி கவிதைகளும் புனைந்தனர். சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், புராணங்கள், சிற்றிலக்கியங்கள் எனப் பலவகைப்பட்ட 90-க்கு மேற்பட்ட ஓலைச்சுவடிகளுக்கு நூல் வடிவம் தந்து அவற்றை அழிவிலிருந்து காத்தது மட்டுமின்றி அடுத்த தலைமுறையினர் அறியத் தந்தார், 3000 க்கும் அதிகமான ஏட்டுச்சுவடிகளையும் கையெழுத்தேடுகளையும் சேகரித்திருந்தார். நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரதையும், கண்ணகியின் சிறப்பையும், மணிமேகலையின் துறவறம், அமுத சுரபி எல்லாம், நாமறியாமலேயே, போயிருக்கும். மணிமேகலை எனும் காப்பியதையும் அறிய வைத்தவர். பிற்கால சரித்திரப் புதினங்கள் பல தோன்றவும் காரணமானார்.

இவர் இல்லை என்றால் சீவகசிந்தாமணி எனும் நூலைப் பற்றி நாம் அறியாமலே, இருந்திருப்போம். இன்று அகநானூறு புறநானூறு என்று பிரித்து அறியப்படும், பண்டைய கவிதைகள் யாவும், அவை உருவாகிய நோக்கத்தை அறியாமல், ஒரே வகையில் இருந்திருக்கும். இவர் இல்லை என்றால் சங்க இலக்கியங்கள் என்று இன்று பெருமையாக மேற்கோள் காட்டும் நூல்களெல்லாம், ஓலைச்சுவடிகளில் மண்ணோடு மண்ணாகி இருக்கும். இது போல, ஏராளமான பழந்தமிழ் நூல்களை, தம் உடல் சிரமம் பாராமல், கண் துஞ்சாமல், கொண்ட எண்ணத்தில் உறுதியுடன் இருந்து, தம் சுக துக்கம் மறந்து தமிழ்நாடெங்கும் பயணம் செய்து, கண்டெடுத்து, மீட்டவர் உ.வே.சா. அவர்கள்.

1855-ஆம் ஆண்டு பிப்ரவரி 19-ஆம் நாள் தமிழ்நாட்டின் கும்பகோணத்திற்கு அருகில் உள்ள உத்தமதானபுரம் என்ற கிராமத்தில் பிறந்தார் உ.வே.சா. தந்தை பெயர் வேங்கட சுப்பையர், தாயார் சரஸ்வதி அம்மாள். சிறுவயதில் அவர் திண்ணைப் பள்ளியில் ஏடு எழுத்தாணியும் கொண்டு பயின்றார். தமிழில் புலமைப் பெற்றிருந்த தந்தையிடமிருந்தே ஆரம்பத்தில் தமிழ் கற்றார் உ.வெ.சா. நிகண்டு, சதகம் போன்ற பழமையான நூல்களை உ.வே.சா அவர்களுக்கு கற்பித்தார் தந்தை. உ.வே.சாவின் தந்தை, கல்வி ஒன்றே, என்றும் நிலையானது என்று, இவரை ஓய்வில்லாமல் படிக்கக்

வைத்திருக்கிறார். தன் 17ஆம் வயதில் தஞ்சாவூர் திருவாவடுதுறை சைவ ஆதீனத்தில் தமிழ் கற்பித்துக்கொண்டிருந்த புகழ்பெற்ற மகாவித்துவான் என அழைக்கப்பட்ட தமிழறிஞர் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களிடம் ஆறு ஆண்டு காலம் பயின்று தமிழறிஞர் ஆனார்.

மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் மறைவுக்குப் பிறகு சுப்ரமணிய தேசிகர் என்பவரிடம் மாணவராக சேர்ந்தார். இப்படி பல அறிஞர்களிடம் பாடம் கற்றறிந்ததால் உ.வே.சா ஒரு தலைசிறந்த தமிழறிஞர் ஆனார். திருவாவடுதுறை ஆதீனத்தின மடத்தில் மூலம்தான், மகாவித்வான் அவர்களின் அணுக்கமும், ஆதீனகர்த்தரின் அருகாமையும் கிடைத்தது. அதுவே, குடும்பத்துடன் திருவாவடுதுறையில், குடியேற வைத்தது. மடத்தில் இருந்த காலத்தில்தான், தமிழில் முதல் புதினம் எனும் பெயர்பெற்ற பிரதாப முதலியார் சரித்திரம் என்ற நூலை எழுதிய, மாயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்களின் அறிமுகம் கிடைத்தது. இதுபோல, பல தமிழறிஞர்களுடன் பழகும் வாய்ப்பும், உ.வே.சா அவர்களுக்குக் கிடைத்தது.

திருவாவடுதுறை ஆதீனத்தின் கட்டளைக்கிணங்க, குடந்தை முன்சீபாக வந்திருந்த இராமசாமி அவர்களைச் சந்தித்து, தாம் மீனாட்சிசுந்தரம் அவர்களின் மாணாக்கர் என்றும், தாம் படித்த நூல்களின் பெரும்பட்டியலை வாசித்தபோதும், அவற்றை ஒரு அணு அளவேனும் இலட்சியம் செய்யாது, இவற்றால் ஒன்றும் பயன் இல்லை, இந்த நூல்களின் மூலத்தை அறிந்திருக்கிறீர்களா" சீவக சிந்தாமணியைப் படித்திருக்கிறீர்களா என்று அவர் கேட்க, அவை கிடைக்க வில்லை, என்று இவர் மெல்லக்கூற, முன்சீப் உடனே, இவரிடம் சீவக சிந்தாமணி நூலின் நகலைக் கையில் கொடுத்து, படித்து வாருங்கள் என்று அனுப்ப, அதன் பின்னர் தான் படித்து, அந்த நூலின் பெருமையை, தமிழ் மொழியின் ஆளுமையை, வளத்தை உணர்கிறார்.

சைவ மடத்திற்குத் தொடர்புடைய சைவராக இருந்தாலும், சமண சமயத்தின் நூலான சிந்தாமணியில், சமயங்கள் தலையிட அவர் அனுமதித்ததில்லை, சமயங்களைக் கடந்த, தமிழ் மொழியின் சுவையை நூலில் அனுபவிக்கும் போது, அதற்குத் தடை எதற்கு என்றவர், உ.வே.சா. அவர்கள். 25-ஆவது வயதில் உ.வே.சா அவர்களுக்கு கும்பகோணம் அரசு கல்லூரியில் தமிழாசிரியர் பணி கிடைத்தது. அவர் கற்பித்த முறை மாணவர்களை வெகுவாக கவர்ந்தது. அதனால் பல மாணவர்கள்

தமிழை நேசிக்கத் தொடங்கினர். 1903-ஆம் ஆண்டில் சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இணைந்தார். அவர் சேர்வதற்கு முன் மாணவர்களால் மதிக்கப்படாத இருந்த தமிழ்த் துறைக்கு உ.வே.சா சேர்ந்த பிறகு புது மரியாதை கிடைத்தது. பற்றோடும், பாசத்தோடும் பாடம் கற்பித்த அவரது அணுகுமுறையால் மாணவர்கள் தமிழை மருந்தாகப் பார்க்காமல் விருந்தாக பார்க்கத் தொடங்கினர். 16 ஆண்டுகள் சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ் கற்பித்து பணியிலிருந்து ஓய்வு பெற்றார் உ.வே.சா.

அப்போதெல்லாம் படிப்பதற்குப் புத்தகங்கள் இல்லை. பழமையான ஓலைச் சுவடிகள்தான் இருந்தன. அவை அச்சடிக்கப்படாமல் கைகளால் எழுதப்பட்டவை என்பதால் அவற்றைப் படித்து உணர்வதற்கே தனித் திறமை தேவைப்பட்டது. அதை படிப்பதோடு மட்டுமல்லாமல் ஆசிரியர் சொல்லும் புதிய பாடல்களைப் பிழையில்லாமல் எழுத்தாணி கொண்டு ஓலைகளில் எழுதுவார்கள்.

அக்காலத்தில் பல தமிழ் இலக்கியங்கள் ஓலைச்சுவடி வடிவில்தான் இருந்தன. அவற்றைப் படியெடுப்பது சிரமம் என்பதால் ஒவ்வொரு இலக்கியத்திலும் ஒரு படிதான் இருக்கும். பல ஓலைச் சுவடிகள் செல்லரித்துப் போயிருந்தன. அவற்றையெல்லாம் தேடிக் கண்டுபிடித்து அச்சாக வெளியிட்டாலொழிய அவற்றைத் தமிழுலகம் இழந்து விடும் என்று கலங்கினார் உ.வே.சா. தமிழ்நாட்டின் பல பகுதிகளில் சிதறிக் கிடந்த பழங்கால இலக்கண, இலக்கிய நூல்களைத் தேடிக் கண்டுபிடித்து அவற்றை முறைப்படுத்தி பதிப்பிக்கும் அரிய பணியை தம் தலையாய பணியாக அவர் மேற்கொண்டார். கிடைத்தற்கரிய ஏடுகளின் அருமை தெரியாமல் அவை எப்படியெல்லாம் அழிக்கப்பட்டு வந்தன என்பதை "என் சரித்திரம்" என்ற புத்தகத்தில் அவர் ஆதங்கத்தோடு விவரிக்கிறார். வரகுண பாண்டியர் வைத்திருந்த சில ஏடுகள் கரிவலம் வந்த நல்லூர் ஆலயத்தில் இருப்பதாக கேள்விப்பட்டு அங்கு சென்று அவற்றைப் பற்றி விசாரித்தார் உ.வே.சா. குப்பை கூளங்களாக கிடந்த சுவடிகளை என்ன செய்வதென்று தெரியாததால் ஆகம சாத்திரத்தில் சொல்லியிருந்தபடி செய்துவிட்டோம் என்று கூறினார் அறங்காவலர் ஒருவர். திருத்தக்க தேவர் இயற்றிய சீவக சிந்தாமணி என்ற நூலை 1887-ஆம் ஆண்டில் ஓலைச் சுவடியிலிருந்து ஒரு

புத்தகமாக தொகுத்து வெளியிட்டார். ஒரு நல்ல சிறந்த இலக்கியத்தை அழிவிலிருந்து காப்பாற்றிவிட்டோம் என்று அகமகிழ்ந்தார்.

அதன் பிறகு பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், புறநானூறு, மணிமேகலை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், குறுந்தொகை என பல அரிய நூல்களையும், ஓலைச்சுவடியிலிருந்து மீட்டுப் புத்தகங்களாகப் பதிப்பித்தார். குடந்தை கல்லூரி, சென்னை மாநிலக் கல்லூரி, சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் தமிழாசிரியராக தமிழ்ப் பயிற்றுவித்தார். உ.வே.சா. மதிப்புமிக்கப் பதவிகளையும் இவர் அலங்கரித்துள்ளார். ராஜா அண்ணாமலை செட்டியார் சிதம்பரத்தில் தாம் தொடங்கிய மீனாட்சி தமிழ்க் கல்லூரியின் (இன்றைய அண்ணாமலைப் பல்கலைக்கழகம்) முதல்வராகப் பொறுப்பேற்க உ. வே. சா. வை அணுகினார். சென்னை மாநிலக் கல்லூரியின் ஆசிரியராகப் பணியாற்றி பணிவோய்வு பெற்றிருந்த உ. வே. சா. அவர்கள், அண்ணாமலை செட்டியாரின் அழைப்பினை ஏற்று மீனாட்சி தமிழ்க் கல்லூரியின் முதல்வராக 1924-ஆம் ஆண்டு ஜூலை மாதம் பொறுப்பேற்றார். சென்னை, அண்ணாமலைநகர், மைசூர், ஆந்திரா, காசி, திருவனந்தபுரம் ஆகிய இடங்களிலுள்ள பல்கலைத் தமிழ்க் குழுக்களில் உறுப்பினராயிருந்த உ.வே.சா. அவர்கள் சென்னைப் பல்கலைக்கழகப் புலவர் தேர்வுக்குழுத் தலைவர் பதவியிலும் பலஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.

மதுரையில் தமிழ்ச்சங்கத்தை உருவாக்கியதுடன் ‘செந்தமிழ்’ என்ற இலக்கியப் பத்திரிகை, பல நூல்கள் வெளியீடு ஆகியவற்றின் மூலம் தமிழ்ப்பணி செய்தவர் இராமநாதபுரம் பொ. பாண்டித்துரைத் தேவர். இவர் உ.வே.சா அவர்கள் மணிமேகலை, புறப்பொருள் வெண்பா மாலை ஆகியவற்றைப் பதிப்பிப்பதிலும் உதவி செய்தவர். தஞ்சை மாநகரில் 1903-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தேதி அன்று ஏழாவது எட்வர்டு மன்னர் முடிசூட்டு நிகழ்வு தொடர்பாக நடந்த விழாவில் உ. வே. சா, வின் தமிழ்த் தொண்டைப் பாராட்டி துணையாட்சியர் ஒரு பாராட்டுச் சான்றிதழ் வழங்கினார்.

அன்றைய அரசு உ.வே.சா விற்கு 1906-ஆம் ஆண்டு ஜனவரி முதல் தேதியன்று மகாமகோபாத்தியாயப் பட்டம் வழங்கி அவர் பணியைச் சிறப்பித்தது. உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாக இருந்த மணி ஐயர் அரசுக்கு உ.வே.சா. வின்

தமிழ்ப்பணிகள் குறித்து கடிதம் எழுதி மகாமகோபாத்தியாயப் பட்டம் பெற உ.வே.சா. விற்கு இருக்கும் தகுதிகளை சுட்டிக்காட்டியிருந்தார். தமிழறிஞர் ஒருவர் மகாமகோபாத்தியாயப் பட்டம் (பெரும் பேராசான்) பெற்றது அதுவே முதல்முறை என்பதும், வடமொழி அறிஞர்களுக்கு மட்டுமே அப்பட்டம் அதுவரை வழங்கப்பட்டு வந்திருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் கல்வித்துறை ரூ. 1000 பணமுடிப்பும் வழங்கியது. 'தமிழ்த் தாத்தா' என்ற பட்டம் 'உத்தமதானபுரம் வே. சாமிநாத ஐயர்' அவர்களுக்கு கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி கொடுத்த பட்டம். இவர் பெற்ற அனைத்துப் பட்டங்களுடன் இவரது முழுப்பெயரும் "பிரம்மஸ்ரீ மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி திராவிட வித்யாபூஷணம் மகாவித்வான் டாக்டர் உத்தமதானபுரம் வே. சாமிநாதையரவர்கள் என்று குறிப்பிடப்படுவதையும் நூல்களில் காணலாம். 1932-ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகம் அவருக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கி சிறப்பித்தது.

சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், புராணங்கள், சிற்றிலக்கியங்கள் எனப் பலவகைப்பட்ட 90 க்கும் மேற்பட்ட ஓலைச்சுவடிகளை அச்சுப்பதிப்பில் தமிழர் கையில் கிடைக்க காரணமானவர். இவர் தமிழ் இலக்கியப் பதிப்புத்துறையின் முன்னோடிகளில் ஒருவர். தமிழின் செம்மொழித் தரத்திற்கு உ.வே.சா. பதிப்பித்த சங்கத்தமிழ் நூல்களே தக்க சான்றுகள் வழங்கின. தம் வாழ்நாள் முழுவதும் தமிழையே சுவாசித்த தமிழ்த்தாத்தாவின் உயிர் மூச்சு 1942-ஆம் ஆண்டு ஏப்ரல் 28-ஆம் தேதி அவரது 87-ஆவது அகவையில் நின்றது.

உ.வே.சாமிநாதையர் தனது வரலாற்றை 'என் சரித்திரம்' என்று ஆனந்த விகடன் வார இதழில் 1940 முதல் 1942 வரை தொடராக எழுதி வந்தார். இது 1950ஆம் ஆண்டில் தனிப் புத்தக வடிவம் பெற்றது. இன்றுவரை விற்பனை ஆகி வருகிறது. டாக்டர் உ. வே. சா. பதிப்பித்த நூல்கள்

### காவியங்கள்

1987 – சீவகசிந்தாமணி, 1892 – சிலப்பதிகாரம், 1898 – மணிமேகலை, 1924 – பெருங்கதை,1935 - உதய குமாரகாவியம்

### சங்க இலக்கியம்

1889 - பத்துப் பாட்டு, 1894 - புற நானூறு, 1903 - ஐங்குறு நூறு, 1904 - பதிற்றுப் பத்து, 1918 – பரிபாடல், 1937 - குறுந்தொகை

### இலக்கணம்

1895 - புறப்பொருள் வெண்பாமாலை, 1925 - நன்னூல் - மயிலைநாதர் உரை, 1928 - நன்னூல் - சங்கர நமசிவாயர் உரை, 1937 - தமிழ் நெறி விளக்கம்

### பிரபந்தங்கள்

1910 - மீனாட்சிசுந்தரம் பிள்ளை பிரபந்தத் திரட்டு, 1932 - சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தத் திரட்டு, 1939 - குமர குருபரர் பிரபந்தக் திரட்டு

### சி.வை. தாமோதரம்பிள்ளை

சி.வை. தாமோதரம் பிள்ளை, யாழ்ப்பாணம் புத்தூர் அருகே சிறுப்பிட்டி என்ற கிராமத்தில் செப்டம்பர் 12,1832-ல் பிறந்தார். இவரது இயற்பெயர் சிறுப்பிட்டி வைரவநாதபிள்ளை தாமோதரம்பிள்ளை. இவர் தந்தையின் முழுப்பெயர் சிறுபிட்டி கிங்ஸ்பரி வைரவநாதன். தாயின் பெயர் மேரி டேட்டன் பெருந்தேவி. சிறுபிட்டி குருநாத பிள்ளையின் மகன் கிங்ஸ்பரி வைரவநாதன். மேரி டேட்டன் பெருந்தேவி ஏழாலை ஊரைச் சேர்ந்தவர். சி.வை. தாமோதரம் பிள்ளை ஆரம்பக்காலத்தில் கிராமப் பாடசாலைமுறையான நிலாப்பள்ளியில் தந்தையிடம் படித்தார். சுன்னாகம் முத்துக்குமார நாவலரிடம் இலக்கணம் படித்தார். பின்னர் அமெரிக்க மிஷனரிகள் தொடங்கிய வட்டுக்கோட்டை குருமடம் அமைப்பில் 1844 அக்டோபர் 12-ம் தேதி சேர்ந்து 1850 வரை பயின்றார். தெல்லிப்பழை (தெல்லியம்பதி) அமெரிக்க இலங்கை மிஷன் கல்லூரியிலும் படித்தார் (1850-52). தமிழ்ப்புலவர் படிப்பில் சான்றிதழ் பெற்றார். ஆங்கில மொழி அறிவும் ஆசிரியர் பயிற்சிப் படிப்பும் பெற்றார். வட்டுக்கோட்டை குருமடத்துக்கு உரிமையான கோப்பாய் ஆசிரியர் கல்லூரியில் 1852 செப்டெம்பர் முதல் ஆசிரியராக பணியாற்றினார். அப்போது மாணவர்களுக்காக குமரகுருபரரின் நீதிநெறிவிளக்கம் என்னும் நூலை உரை எழுதி வெளியிட்டார் என்று ஆய்வாளர் கூறுகின்றனர்.

1855-ல் வட்டுக்கோட்டை குருமடம் மூடப்பட்டது. 1855-ல் சென்னையில் பீட்டர் பெர்சிவல் நடத்தி வந்த தினவர்த்தமானி வாரப்பத்திரிகையில்

சி.வை.தாமோதரம்பிள்ளை உதவியாசிரியராகச் சேர்ந்தார். பத்திரிகைப் பணியுடன் பர்னல் பண்டிதர், வால்டர் எலியட், லூஷிங்டன் ஆகியோருக்குத் தமிழ் கற்பிக்கும் பணியையும் செய்தார். சென்னையில் மிரன் வின்ஸ்லோ நடத்தி வந்த அமெரிக்க மதராஸ் மிஷன் அமைப்பின் அகராதிப்பணிகளுடன் தொடர்புகொண்டிருந்தார்

சி.வை.தாமோதரம்பிள்ளை கள்ளிக்கோட்டை (கோழிக்கோடு) அரசு உயர்நிலைப்பள்ளியில் ஆங்கில ஆசிரியராகச் சிலகாலம் பணியாற்றிவிட்டு சென்னைக்குத் திரும்பி வந்தார். சென்னை ராஜதானி கல்லூரியில் தமிழ்ப்பண்டிதராக பணியமர்ந்தார். 1857-ல் சென்னைப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட போது சி.வை. தாமோதரம் பிள்ளை மாணவராகச் சேர்ந்தார். 1858-ல் அப்பல்கலைகழகத்தின் முதல் இரு பட்டதாரிகளில் ஒருவராக பி.ஏ. படிப்பை முடித்தார். அப்போது சி.வை. தாமோதரம் பிள்ளைக்கு வயது 25. இவருடன் பட்டம் பெற்றவர் கரோல் விசுவநாதபிள்ளை. சி.வை.தாமோதரம் பிள்ளை அரசு தனக்குக் கொடுத்த ஓய்வூதியம் முழுவதையும் ஆய்வுப்பணிக்கே செலவழித்தார். நூல்களைப் பதிப்பிக்க வசதியான இடமாகவும் வக்கீல் தொழில் செய்ய ஏதுவாகவும் இருந்ததால் ஓய்வுபெற்ற பின்பு சி.வை. தாமோதரம் பிள்ளை கும்பகோணத்தில் தங்கினார்.

## இலக்கியப் பணி

சி.வை. தாமோதரம் பிள்ளை பதிப்பித்த நூல்களின் முகவுரைகள் ஆய்வுமுக்கியத்துவம் உடையவை. தொடக்ககால பதிப்பியக்கத்தின் ஆவணப்பதிவுகள் அவை. அவை ப.சரவணனால் தாமோதரம் என்னும் நூலாக தொகுக்கப்பட்டுள்ளன. சி.வை.தாமோதரம்பிள்ளை பதிப்பாளராகவும், உரை நடையாளராகவும் இருந்தார். உதயதாரகை பத்திரிகையில் சி.வை.தாமோதரம் பிள்ளை ஆசிரியராக இருந்தபோது சைவசமயம் குறித்த பல உரைநடைக் கட்டுரைகளை எழுதியிருக்கிறார். சி.வை.தாமோதரம் பிள்ளை. தமிழ், தெலுங்கு, வடமொழி, ஆங்கிலம் என நான்கு மொழிகளை அறிந்தவர். அரசுப் பேரகராதித் தொகுப்புக் குழு உறுப்பினர், கொழும்பு பல்கலைக்கழகத் தமிழ் ஆராய்ச்சித் துறை உறுப்பினர் எனப் பல பதவிகளில் இருந்தார். 'கட்டளைக் கலித்துறை', 'சைவ மகத்துவம்', 'சூளாமணி வசனம்', 'நட்சத்திர மாலை' ஆகிய நூல்களை

இயற்றியிருக்கிறார். ‘காந்தமலர் அல்லது கற்பின் மாட்சி’ என்னும் நாவலையும் எழுதியிருக்கிறார்.

## பிற பணிகள்

சி.வை. தாமோதரம் பிள்ளை யாழ்ப்பாண ஏழாலை சைவப்பிரகாச சபையை நிறுவியவர். சி.வை.தாமோதரம் பிள்ளை யாழ்ப்பாணம் மிஷன் வித்தியாசாலையில் உபாத்தியராக இருந்தபோது மானிப்பாய் அமெரிக்கன் மிஷன் அச்சுக்கூடத்தில் 'நீதிநெறி விளக்க'த்தைப் பதிப்பித்தார் (1854). அப்போது அவருக்கு இருபது வயது. இதுவே அவருடைய முதல் பதிப்பு முயற்சி எனப்படுகிறது. இந்நூல் கிடைக்கப்பெறவில்லை. இது சி.வை.தாமோதரம் பிள்ளை கிறிஸ்தவராக இருந்தபோது வெளியானதாகையால் சி. டபிள்யூ. கிங்ஸ்பரி என்னும் பெயரில் வெளியாகியது.

## தொல்காப்பியம்

தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியர் உரையுடன் 1847-ல் மழவை மகாலிங்கையரால் பதிப்பிக்கப்பட்டது. 1858ல் சாமுவேல் பிள்ளை என்பவர் தொல்காப்பியம் மூலத்தை மட்டும் முழுமையாக வெளியிட்டார். ஆனால் தொல்காப்பியம் சொல்லதிகாரம் போன்றவற்றைச் சரியாகப் பொருள்கொள்ள இயலவில்லை. ஏனென்றால் தொல்காப்பியர் காலத்து மொழி எழுத்திலும் சொல்லிலும் பெரும்பாலும் மாற்றமடைந்துவிட்டிருந்தது. உ.வே.சாமிநாதையர் சேமிப்பில் தொல்காப்பியச் சுவடிகள் பல இருந்தபோதிலும்கூட அவர் அதைப் பதிப்பிக்க முற்படவில்லை. தொல்காப்பியத்தின் மூலத்தையும் உரைகளையும் புரிந்துகொள்வது அறிஞர்களால் இயல்வதாக இருக்கவில்லை. அச்சூழலில்தான் தெளிவான உரைவிளக்கம், பிழைதிருத்தத்துடன் சி.வை.தாமோதரம் பிள்ளையின் தொல்காப்பிய உரைகள் வெளிவந்தன. அவை தொல்காப்பியத்தின் வடிவத்தை இறுதி செய்தன. 1868-ல் சி.வை.தாமோதரம் பிள்ளை தொல்காப்பியம் சொல்லதிகாரத்தை சேனாவரையர் உரையுடன் வெளியிட்டார். 1855 முதல் அதன் பணிகளை தொடங்கியிருந்தார். ஆறுமுக நாவலர் அதற்கு மெய்ப்பு நோக்கியதாகச் சொல்லப்படுகிறது. 1885-ல் தொல்காப்பியம் பொருளதிகாரத்தை வெளியிடும் நோக்குடன் கும்பகோணம் கருப்பூரில் சென்று தங்கியிருந்தார். அங்கே

திருவாவடுதுறை ஆதீனம் சுப்ரமணிய தேசிகர் அவர்கள் தொல்காப்பியச் சுவடிகளை அளித்து உதவினார். யாழ்ப்பாணம் சதாசிவம் பிள்ளை, திருநெல்வேலி கணிதசங்கம் சின்னத்தம்பியா பிள்ளை ஆகியோரும் சுவடிகளை அளித்தார்கள். திருத்தணிகை சரவணப்பெருமாள் ஐயர் பேரர் துரைசாமி ஐயர், புரசை சாமுவேல் பிள்ளை அளித்த ஏட்டுப்பிரதி ஆகியவை உட்பட மொத்தம் 12 பிரதிகளை சி.வை.தாமோதரம் பிள்ளை பரிசோதனை செய்தார். இந்த நூலைப் பதிப்பிக்க சி.வை.தா முன்உதவித் திட்ட அறிவிப்பை வெளியிட வேண்டி வந்தது. இருந்தும் கைப்பொருள் இழக்க நேர்ந்ததாக தி ஹிந்து ஆங்கில நாளிதழில் எழுதிய குறிப்பில் சி.வை.தாமோதரம் பிள்ளை கூறுகிறார். சி.வை.தாமோதரம் பிள்ளை நூல் வெளிவந்த இரண்டு மாதத்திற்குப் பின் இராஜகோபாலப் பிள்ளை தொல்காப்பியம் சொல்லதிகாரத்தை சேனாவரையர் உரையுடன் பதிப்பித்தார்.

சி.வை.தாமோதரம் பிள்ளை 1885ல் தொல்காப்பியம் பொருளதிகாரம் ஒன்பது இயல்களையும் பதிப்பித்தார். 1891ல் தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியர் உரையையும் 1892-ல் தொல்காப்பியம் சொல்லதிகாரம் நச்சினார்க்கினியர் உரையையும் வெளியிட்டார். தொல்காப்பியம் நச்சினார்க்கினியர் உரையே அவர் வெளியிட்ட இறுதி நூல்.

‘தமிழ் நாடனைத்திலுமுள்ள தொல்காப்பியப் பிரதிகள் மிகச் சிலவே. அவை யாவும், நான் தேடிகண்ட வரை ஈனஸ்திதி அடைந்திருப்பதால், இன்னும் சில வருடங்களுக்குள் அழிந்துவிடுமென அஞ்சியே, உலோகோபகாரமாக அச்சிடலானேன்’ என தொல்காப்பியச் சேனாவரையர் உரைப் பதிப்பின் முன்னுரையில் சி.வை.தாமோதரம் பிள்ளை கூறுகிறார்.

### புராணங்கள், இலக்கணங்கள்

சி.வை.தாமோதரம் பிள்ளை 1881ல் 'வீரசோழியம் மூலமும் பெருந்தேவனார் உரையும்’ நூலை வெளியிட்டார். பின்னர் 1883 -ல் இறையனார் அகப்பொருள் மூலம், நக்கீரர் உரையுடன் வெளியிட்டார். இறையனார் உரை வெளியான பிறகு தமிழ்மொழியை அகத்தியருடன் இணைத்துப் பேசும் வழக்கம் உருவகியது. அகத்தியருடன் தமிழை இணைப்பதை சி.வை. தாமோதரம் பிள்ளை கண்டித்திருக்கிறார். 1883-ல் திருத்தணிகை புராணத்தைப் பதிப்பித்து வெளியிட்டார்.

## சூளாமணி

சி.வை. தாமோதரம் பிள்ளை 1899-ல் சூளாமணியைப் பதிப்பிக்கத் திருவாவடுதுறைப் பிரதியைப் பயன்படுத்தினார். (1891ல் வெளிவந்தது என்னும் கருத்தும் உள்ளது)

## சங்க இலக்கியம்

சி.வை. தாமோதரம் பிள்ளை 1887-ல் கலித்தொகையைப் பதிப்பித்தார். சி.வை.தாமோதரம் பிள்ளை இந்நூலைப் பதிப்பிக்க ஆறுக்கும் மேற்பட்ட பிரதிகளைப் பரிசோதித்திருக்கிறார். அவற்றில் திருவாவடுதுறை பிரதியே நல்லபிரதி என்பதைக் கடைசியில் கண்டுபிடித்தார் என பதிவு செய்திருக்கிறார். கலித்தொகை பதிப்பித்தபோது அரசுமுறை மன்ற நடுவராய் இருந்தார். அதனால் புதுக்கோட்டை முகவரியில் இந்நூல் வெளிவந்தது. இந்நூலில் நச்சினார்க்கினியர் உரை மற்றும் கலித்தொகை பற்றி சி.வை.தாமோதரம் பிள்ளை எழுதிய 30 பக்க முன்னுரை அவருடைய முதன்மையான ஆய்வுக்கட்டுரைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இறுதியாக 1890-ல் சி.வை. தாமோதரம் பிள்ளை அகநாநூறைப் பதிப்பிக்க எண்ணினார். அகநாநூற்றில் 300 பாடல்களை மட்டுமே அவர் பரிசோதிக்க முடிந்தது. அப்பணி முடியுமுன்பே அவர் இறந்துவிட்டார்.

## பிறநூல்கள்

1889ல் இலக்கண விளக்கம் நூலை வெளியிட்டார். சூளாமணி வசனநூல், ஏசுவரலாறு, இராமன் கதை, சைவ சமயம் தொடர்பான சில உரைநடைகள் போன்றவற்றையும் 6, 7 -ம் வகுப்பு பாடநூல்கள் சிலவற்றையும் சி.வை. தாமோதரம் பிள்ளை வெளியிட்டுள்ளார்.

## பதிப்புச் சிக்கல்கள்

சி.வை.தாமோதரம் பிள்ளை பெரும்பாலும் கைப்பொருள் இழந்தே நூல்களைப் பதிப்பித்திருக்கிறார். சி.வை. தாமோதரம் பிள்ளை தமிழ் ஏட்டுப் பிரதிகளைத் தேடி அலைந்த அனுபவத்தை விரிவாக எழுதவில்லை என்றாலும் பதிப்புகளின் முகவுரையில் கோடிட்டுக் காட்டுகிறார். ஏடுகளில் உள்ள தவறு, அதைத் தாளில் பெயர்த்தெழுதும்போது ஏற்பட்ட சிரமம் பற்றி குறிப்பிடுகிறார். பலரிடம் ஏடு தேடி அலைந்த ஏமாற்றத்தையும் எழுதியிருக்கிறார்.

சி.வை. தாமோதரம் பிள்ளை தான் சேகரித்த ஏட்டுப் பிரதிகளை முதலில் பிரதி செய்துவிட்டுத் தகுதியான அறிஞர்களின் உதவியுடன் பாடபேதங்களைக் குறித்துக்கொண்டு திருத்திய பிரதியையே அச்சுக்குக் கொடுப்பார். சி.வை.தாமோதரம் பிள்ளை அவருடைய சமகாலத்தவரால் பதிப்பியக்கத்தில் முதன்மையிடம் கொண்டவராக கருதப்பட்டார்.

உ.வே.சாமிநாதையர் "தாமோதரம் பிள்ளை கும்பகோணத்தில் வந்து வசிக்கப்போகிறார் என்பது தெரிந்து எனக்கு ஆறுதல் உண்டாயிற்று. சேலம் ராமசாமி முதலியார் கூறியபடி பழைய தமிழ் நூல்களை ஆராய்வாரும் படிப்பாரும் இல்லாமல் பிற்கால நூல்களையே படிப்பவர்கள் மலிந்த தமிழ் நாட்டில் எனக்குத் துணைசெய்வார் ஒருவரும் இல்லை. நானோ அந்த ஆராய்ச்சியில் நூதனமாகப் புகுந்தவன். ஆனாலும் எப்படியாவது விஷயத்தைத் தெரிந்துகொள்ளவேண்டும் என்ற ஆவல் மாத்திரம் எஞ்சியது. இந்த நிலையில் பழங்காலத்துத் தமிழ் நூல்களை அச்சிடும் விஷயத்தில் ஊக்கமுள்ள ஒருவர் கும்பகோணத்துக்கு வரப்போகிறார் என்று அறிந்தவுடன் எனக்கு மகிழ்ச்சி உண்டாயிற்று" என்று குறிப்பிடுகிறார்.

## பதிப்பு முன்னோடிகள்

தாமோதரம் பிள்ளையின் பதிப்பு முன்னோடிகளாகப் புதுவை நயனப்ப முதலியார், திருவேங்கடாசல முதலியார், களத்தூர் வேதகிரி முதலியார் (1795-1852), ஆறுமுக நாவலர் (1822-1879), வில்லிவாக்கம் தாண்டவராய முதலியார் எனச் சிலரைச் சொல்லலாம். இவர்கள் எல்லோரும் பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுக்குப் பிற்பட்ட இலக்கியங்களில் கவனம் செலுத்தியவர்கள். சி.வை. தாமோதரம் பிள்ளை இவர்களிடமிருந்து வேறுபட்டு, சங்க இலக்கியங்களைப் பதிப்பிப்பதில் கவனம் செலுத்தினார்.

## பதிப்பித்த நூல்கள்

நீதி நெறி விளக்கம் – 1854, தொல்காப்பியம் சேனாவரையர் – 1854, வீரசோழியம் மூலம் – 1881, பெருந்தேவனார் உரை – 1881, திருத்தணிகை புராணம் – 1883, இறையனார் அகப்பொருள் மூலம் – 1883, நக்கீரர் உரை – 1883, தொல்காப்பியம், பொருளதிகாரம் – 1885, கலித்தொகை – 1885, இலக்கண விளக்கம்

– 1889, சூளாமணி – 1889, தொல்காப்பியம் நச்சினார்க்கினியர் உரை – 1890,91, அகநானூறு – 189.

**எழுதியவை**

கட்டளைக் கலித்துறை, சைவ மகத்துவம், வசன சூளாமணி, நட்சத்திர மாலை, ஆறாம், வாசகப் புத்தகம், ஏழாம் வாசகப் புத்தகம், ஆதியாகம கீர்த்தனம், விவிலிய விரோதம் காந்தமலர் அல்லது கற்பின் மாட்சி (நாவல்)

## தென்னிந்திய நல உரிமை சங்கத்தின் காலம்

பரவலாக நீதிக் கட்சி (Justice Party, ஜஸ்டிஸ் கட்சி) என்று அறியப்பட்ட தென்னிந்திய நல உரிமைச் சங்கம் (South Indian Liberal Federation, சவுத் இந்தியன் லிபரல் பெடரேசன்) சென்னை மாகாணத்தில் செயல்பட்ட ஒரு அரசியல் கட்சி. இது 1916ஆம் ஆண்டு மருத்துவர் சி. நடேசனால், டி. எம். நாயர் மற்றும் தியாகராய செட்டி ஆகியோருடன் இணைந்து நிறுவப்பட்டது. சென்னை மாகாணத்தில் தொடர்ச்சியாக நிகழ்ந்த பிராமணரல்லாதோர் மாநாடுகளின் விளைவாக இக்கட்சி உருவாக்கப்பட்டது. மான்டேகு-செம்ஸ்போர்டு திட்டத்தின் கீழ் இரட்டை ஆட்சி என்ற ஒன்று அமுல்படுத்தப்பட்டது. இந்த இரட்டை ஆட்சித் திட்டம் சில இடங்களில் சரிவர இயங்கவில்லை. ஆனால் சென்னையில் இந்த ஆட்சி முறைக்கு வெற்றி கிடைத்தது எனலாம். ஏனென்றால் வேறு எந்த மாகாணத்திலும் காணப்படாத ஒரு சமூகநிலை சென்னை மாகாணத்தில் காணப்பட்டது. இங்கு அரசாங்க அலுவல்களிலும், வேறு பல பொதுப் பணிகளிலும் உயர்மட்டத்தில் பிராமணரே இடம் பிடித்திருந்தனர். மொத்த மக்கள் தொகையில் பிராமணர்கள் நூற்றுக்கு மூன்று பேர்களே இருந்தனர். ஏனையோர் 97 பேர்களாக இருந்தும் அவர்களுக்குப் போதிய அளவு அரசாங்கப் பணிகளில் இடம் கொடுக்கப்படவில்லை. அவர்களுடைய படிப்பும் குன்றியிருந்தது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாட்டில் இருந்த வழக்கறிஞர்கள், டாக்டர்கள், எஞ்சினீயர்கள் ஆகியோரில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் பிராமணர்களாகவே இருந்தனர். இத்தகைய நிலையில் ஆங்கிலேயரிடம் இருந்து சுதந்திரம் பெற்றால் பிராமணர்களின் ஆதிக்கமே பெருகும் எனப் பிராமணர்கள் அல்லாதவர்கள் எண்ணினர்.

சோழர் காலத்திலும், விசயநகரத்துப் பேரரசர் காலத்திலும், நாயக்கர் காலத்திலும் ஆட்சியிலும், சமயத் தலைமையிலும் அமர்த்தப்பட்டிருந்த பிராமண சமூகம் ஆங்கிலேயர் ஆட்சியிலும் அந்த இடங்களைப் பிறருக்கு விட்டுக் கொடுக்கவில்லை. ஆரிய வழக்கின்படி மக்கள் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்று நான்கு வருணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தாலும், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் பிராமணர் என்றும், பிராமணர் அல்லாத ஏனையோர் அனைவரும் சூத்திரர் என்றும் இருவிதப் பிரிவினராக மட்டுமே பிரிக்கப்பட்டனர்.

பொதுவாகப் பிராமணர் அல்லாதோர் சமுதாயத்தில் தாழ்வாக மதிக்கப்பட்டனர். இதன் காரணமாகச் சென்னையில் 1916 நவம்பர் 20ஆம் நாள் பிராமணர் அல்லாதார் மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. இதில் தென்னிந்தியநல உரிமைச் சங்கம் என்று ஓர் இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது. அதன் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சர்.பி.தியாகராசச் செட்டியார் அறிக்கை ஒன்று வெளியிட்டார். அவ்வறிக்கையில் பிராமணர் எல்லாத் துறைகளிலும் ஏற்றம் பெற்றுள்ளனர். அதுபோல் எல்லா வகுப்பினரும் சமநிலை பெற்ற பின் சுதந்திரம் பெறவேண்டும். அப்போதுதான் எல்லாருக்கும் நலம் பயக்கும் எனக் கூறியிருந்தார். இதுவே தென்னிந்திய நல உரிமைச் சங்கம் ஆகும்.

தென்னிந்திய வரலாற்றில், இருபதாம் நூற்றாண்டின் முதல் இருபதுகளில் நீதிக் கட்சியின் தோற்றம் குறிப்பிடத்தக்க நிகழ்வாக அமைந்தது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், 3 சதவீத மக்கள் தொகை கொண்ட பார்ப்பனர்கள் மொத்த சமுதாயத்தின் அரசியல், பொருளாதாரக் களங்களில் ஆதிக்கம் பெற்றிருந்தனர். பார்ப்பனர், பார்ப்பனரல்லாதவரிடையே பெரும் இடைவெளி இருந்தது. நீதிக்கட்சி அந்த இடைவெளியைக் குறைக்க வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கேட்டது. அக்கட்சியின் கோட்பாடுகள், திட்டங்களைத் தெளிவாக ஆய்வு செய்தால், அதனுடைய வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்பது சமூக நீதிக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது என விளங்கும்.

இத்தகு சூழலில், பார்ப்பனரல்லாத சமூகத்தைச் சார்ந்த தலைவர்களின் எழுத்துக்கள் வாயிலாகவும், ஆங்கிலேயக் கல்வியாளர்கள் வாயிலாகவும், பார்ப்பனரல்லாதவர்கள் எல்லாம் இனவழியே திராவிடர்கள் என்ற உணர்வும்

வெளியாயிற்று. பார்ப்பனரல்லாத பிரிவினர் தம் நலன்களைப் பாதுகாக்க ஓர் இயக்கத்தை உருவாக்கினர்.

1916 ஆம் ஆண்டு பார்ப்பனரல்லாச் சமூகத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த தலைவர்களில் சிலர், சென்னை மையப் புகைவண்டி நிலையத்தின் அருகில் அமைந்துள்ள விக்டோரியா அரங்கில் தென்னிந்திய நல உரிமைக் கழகம் என்பதனைத் தொடங்கினர். அவர்களில் முதன்மையானவர் டாக்டர் நடேச முதலியார் ஆவார். மற்ற இருவர் டி.எம்.நாயர் என அழைக்கப்பட்ட தாராவத் மாதவன் நாயரும், சர். பிட்டி தியாகராய செட்டியும் ஆவர். பார்ப்பனரல்லாத சாதி இந்துக்களிடம் அரசியல் உணர்வை ஊட்டுவதே இச்சங்கத்தின் முதன்மை நோக்கமாக இருந்தது. இந்த அமைப்பு ஆங்கிலத்தில் 'நீதி' என்ற செய்தித்தாளையும், தமிழில் 'திராவிடன்' என்ற செய்தித்தாளையும் வெளியிட்டது. அதனால் இவ்வமைப்பினர் 'நீதிக் கட்சியினர்' என அழைக்கப்படலாயினர்.

சமூகத்தின் அனைத்துத் துறைகளிலும் ஆளுமை படைத்திருந்த பார்ப்பன இனத்தவருக்கு, அதிலும் கல்வித் துறையிலும், அரசுப் பணிகளிலும் பார்ப்பனர்களின் ஆதிக்கத்திற்கு அறைகூவலாக இக்கட்சி இருந்தது. எனவே, நீதிக் கட்சியினர் போதுமான எண்ணிக்கைக்கேற்ற பிரதி நிதித்துவம் வேண்டுமென வேண்டினர், போராடினர். நீதிக்கட்சியின் தலைவர்கள் விபரமறிந்தவர்களாகவும், மெத்தப் படித்தவர்களாகவும் தங்களது முயற்சி, இலக்கு, தாம் செல்லும் திசை குறித்துத் தெளிந்த உணர்வு கொண்டவர்களாகவும் விளங்கினர். அவர்கள் வெறும் இலட்சிய வாதிகளாக மட்டுமல்லாமல் நடைமுறை அரசியல்வாதிகளாகவும் திகழ்ந்தனர்.

1917 ஆம் ஆண்டு பார்ப்பனரல்லாதார் பேரறிக்கை ஒன்றை இக்கட்சி வெளியிட்டது. டி.எம்.நாயர், தியாகராய செட்டியின் தலைமையில் கட்சி மிக வேகமாக வளர்ந்தது. 1917 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள், கோவையில் நீதிக் கட்சியின் மாநில முதல் நாடு நடைபெற்றது. அதன் பிறகு ஆண்டுதோறும் சென்னை மாநிலத்தில் தமிழ், தெலுங்குப் பகுதிகளில் தொடர்ந்து மாநாடுகள் நடைபெற்றன. சட்டசபையில் வகுப்புவாரி பிரதிநிதித்துவ அடிப்படையில் பார்ப்பனரல்லாத இனத்தினரின் பிரதிநிதித்துவத்தை வென்றடைவது ஒரு முதன்மை குறிக்கோளாக இருந்தது. உண்மையில் நீதிக்கட்சி பார்ப்பனரல்லாதவரிடம் ஓர் எழுச்சியை ஏற்படுத்தியது.

## மாண்டேகு - செம்சுபோர்டு சீர்திருத்தம்

1919இல் அறிமுகப்படுத்தப்பட்ட மாண்டேகு-செம்சு போர்டு சீர்திருத்தம் இந்திய மாநிலங்களின் சட்ட மன்றங்களின் இயல்பினை மாற்றுவதாக அமைந்திருந்தது. மாநில ஆட்சியின் நிர்வாகத் துறைகள், ஒதுக்கப்பட்ட துறைகள், மாற்றப்பட்ட துறைகள் எனப் பகிர்வு செய்யப்பட்டன. ஒதுக்கப்பட்ட துறைகளை ஆளுநரும், அவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவினரும் நிர்வகித்தனர். மாற்றப்பட்ட துறையானது பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்தினரின் பொறுப்பின் கீழ் வந்தது. 1919 ஆம் ஆண்டு மாண்டேகு-செம்சுபோர்டு சட்டப்படி அமையப் பெற்ற சட்டமன்றத்திற்கான முதல் பொதுத் தேர்தல் 1920 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30 ஆம் நாளும், டிசம்பர் 1, 2 நாள்களிலும் தேர்தல் நடைபெற்றது. தேர்தலைப் புறக்கணிக்குமாறு தீவிரப் பிரச்சாரத்தைக் காங்கிரஸ் மேற்கொண்டது. காங்கிரஸ், நீதிக் கட்சியை எதிர்த்தது. நீதிக்கட்சி மாண்டேகு - செம்சு போர்டு சீர்திருத்தங்களை ஏற்க முடிவு செய்தது. தேர்தல் பிரச்சாரத்தை மிகுந்த ஆவலுடன் எதிர்கொண்டு பெருவாரியான வெற்றியும் பெற்றது. 98 இடங்களில் 63 இடங்களைக் கைப்பற்றியது. நியமன உறுப்பினர்களில் இக்கட்சியின் ஆதரவாளர்கள் 18 பேர் இடம் பெற்றனர். 127 பேர் அடங்கிய அவையில் நீதிக்கட்சியின் வலிமை 81 ஆக இருந்தது. பார்ப்பனரல்லாத இந்துக்களுக்கு இடங்கள் ஒதுக்கியதால் சட்ட மன்றத்தில் போதிய பிரதிநிதித்துவம் பெற ஒதுக்கீடு வாய்ப்பாக அமைந்தது.

நீதிக் கட்சியின் அமைச்சரவை 1923 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 ஆம் நாள் சட்டமன்றத்தின் காலம் முடிவுற்றதால் கலைக்கப்பட்டது. 1923 அக்டோபர் 31 ஆம் நாள் சென்னை மாநில சட்ட மன்றத்துக்கு இரண்டாவது பொதுத் தேர்தல் நடைபெற்றது. இத் தேர்தலில் பல்வேறு காரணங்களினால் நீதிக்கட்சி வலுவிழந்தது. டாக்டர் சி.நடேச முதலியார், ஓ. தணிகாசலம் செட்டி ஆகிய திராவிட இயக்க முன்னோடித் தலைவர்கள் அதிருப்தியுற்று எதிர்முகாம் சென்றனர். இந்தக் கசப்புணர்வு நம்பிக்கையில்லாதத் தீர்மானம் வரை சென்றது. அதுவும் தோற்கடிக்கப்பட்டது. பி. தியாகராய செட்டி 1925 ஆம் ஆண்டு ஏப்ரல் 28 ஆம் நாள்

மறைந்தார். அவரது மறைவுக்குப் பின் பனகல் அரசர் கட்சிப் பொறுப்பேற்றுக் கட்சிக்குப் புத்துயிர் ஊட்ட முயன்றார்.

## முத்துலெட்சுமி அம்மையார்

1927இன் ஆரம்பத்தில் டாக்டர் முத்து லெட்சுமி ரெட்டியைச் சட்டமன்றத் திற்கு ஆளுநர் நியமனம் செய்தார். இந்கிழ்ச்சியை இந்தியப் பெண்களின் விடியல் எனலாம். டாக்டர் முத்து லெட்சுமி அம்மையார் அனைவரும் நன்கு அறிந்த பெண்மணி ஆவார். இவர் தேவதாசி முறை ஒழிப்பு, பெண் கல்வி, பெண்கள் மேம்பாடு ஆகியவற்றுக்குப் பெரிதும் உழைத்தவர் ஆவார். இந்திய சட்டமன்றங்களில், அதிலும் முதலாவதாக சென்னை சட்டமன்றத்தின் உறுப்பினரான முதல் இந்தியப் பெண்மணி இவராவார்.

கள்ளர்கள் குடியேற்றம் முதலியவையும் அவர்களது மேம்பாட்டுக்கான பள்ளிகள், விடுதிகள், தொழிற் பள்ளிகள் தொடங்குதல் முதலியவையும் நீதிக்கட்சியினரின் சாதனைகளாகும். குற்றப் பரம்பரையினர் நிலையிலிருந்த கள்ளர்கள், ஒரு நிலையான குடியேற்றம் செய்யப்பட்டதன் விளைவாக, குற்றப் பரம்பரையினர் சட்டமே இரத்தானது. இவ்வாறாக சமூகக் களங்கம் களைந்தெறியப்பட்டது. தாழ்த்தப்பட்ட இனத்தவரின் நல்வாழ்வுக்காக நீதிக் கட்சி அரசு, அவ்வின மக்கள் கல்வியை ஊக்கமுடன் பெறுவதற்குத் தொழிலாளர் ஆணையரை நியமித்தது. வட்டிக் கடைக்காரர்கள், நிலக்கிழார் ஆகியோரின் கொடும் பிடியிலிருந்த அவர்களை மீட்கக் கூட்டுறவு இயக்கங்களைத் தொடங்கியது. கல்வி நிலையங்களில் தாழ்த்தப்பட்ட மாணவரின் எண்ணிக்கைப் பெருகியது. டாக்டர் சுப்பராயன் அமைச்சரவை தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கான விடுதிகளைத் தொடங்கியது. மேலும், நில மேம்பாட்டுக் கடன் சட்டம், வேளாண்மைக் கடன் சட்டம் முதலியவற்றையும் நிறைவேற்றியது. காவிரி பாசனப் பகுதியின் நீர்ப்பாசன வசதிக்காக 1924-ல் மைசூர் அரசாங்கத்துடன் ஓர் ஒப்பந்தமும் கையெழுத்தானது.

## பிற சீர்திருத்தங்கள்

பெண்களின் திருமண வயதினை உயர்த்தியது. தொழிலாளர் ஈட்டுறுதிச் சட்டம், தொழிற்சங்கச் சட்டம் ஆகியனவும் நிறைவேறின. மக்கள் நல்வாழ்வுத் துறை உருவாகியது. தூத்துக்குடி துறைமுகக் கழகச் சட்டம், சென்னை தொழிற்துறை உதவிச் சட்டம் நிறைவேறின. இந்திய மருத்துவ முறை உரிய ஆக்கம் பெற்றது.

நீதிக் கட்சியினர் தேவதாசி முறையை ஒழித்தனர். சென்னை பல்கலைக் கழகச் செயல் முறையைத் திருத்தி அமைத்தனர். அக்டோபர் 1928-ல் நிறைவேறிய அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்டம் குறிப்பிடத்தக்கதாகும். நீதிக் கட்சியினர் ஆட்சியில் தான் 1926-ல் ஆந்திரப் பல்கலைக் கழகமும், 1929-ல் அண்ணாமலை பல்கலைக் கழகமும் உருவாயின.

## தமிழர்களின் சமூக எழுச்சி

### திராவிட இயக்க காலம்

திராவிட இயக்கம் என்பது கி.பி 19 ஆம் நூற்றாண்டின் இறுதி மற்றும் 20-ஆம் நூற்றாண்டுகளில் தமிழ்ச் சமுதாயத்தில் உருவாகிய ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சமூக மற்றும் அரசியல் இயக்கமாகும். இக் காலகட்டத்தில் சாதாரண மக்களுக்குக் கிடைத்த கல்வி வாய்ப்புக்கள் அவர்களிடையே சமூக உணர்வுகளைத் தட்டி எழுப்பியிருந்தன. இவ்வாறானவர்களிற் சிலர் சாதாரண மக்களில் உரிமைகளுக்காக வாதிட்டதுடன், அக்காலத்தில் இருந்த பிராமண ஆதிக்கத்தையும் எதிர்த்து வந்தனர். நாட்டுக்கு விடுதலை வரும்போது, அது பிராமண ஆதிக்கத்தின் கீழ் வருமே ஒழிய அதன் பயன்கள் மக்களுக்குக் கிட்டாது என அவர்கள் நம்பினர். இவ்வாறான கருத்துக்களை முன்வைத்துப் போராடியோரில் அயோத்தி தாசர், இரட்டைமலை சீனிவாசன் போன்றோர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் முன்னணியில் இருந்தனர். இருபதாம் நூற்றாண்டில் டி. எம். நாயர், தியாகராசச் செட்டியார், கேசவப் பிள்ளை, நடேச முதலியார் போன்றோர் முன்னணியில் இருந்தனர்.

## திராவிட இயக்கத்தின் தோற்றம்

திராவிட மகாஜன சபை என்பது திராவிட இயக்கத்தை தோற்றுவித்தவரான அயோத்திதாசர் என்பவரால் கி.பி. 1891 தொடங்கப்பட்டது. அயோத்தி தாசர் 1885 ஆண்டிலேயே திராவிட பாண்டியன் என்னும் இதழைத் தொடங்கினார். அவர் கி.பி. 1886ஆம் ஆண்டில் இந்துக்களில் தீண்டத்தகாதவர்கள் எனப்பட்டவர்கள் இந்துக்கள் அல்லாதவர்கள் என்றார். அவர்கள் யாரும் சாதியற்ற திராவிடர்கள் என்னும் கருத்தையும் முன்வைத்தார். இதனால் இவர் திராவிட கருத்தியலின் முன்னோடி என அறியப்பட்டார். திராவிட மகாஜன சபையை நிறுவி திராவிட அரசியலைத் தொடங்கி வைத்ததால் திராவிட அரசியலின் முன்னோடி எனவும் கூறப்படுகிறார்.

1912 ஆம் ஆண்டில் திராவிடர் நலனை முன்வத்து இயக்கம் ஒன்று சென்னையில் தொடங்கப்பட்டது. 1916 ஆம் ஆண்டில் இதன் பெயர் தென்னிந்திய நல உரிமைக் கழகம் என மாற்றப்பட்டது. பொதுவாகவே வைதீக எதிர்ப்பாளர்கள், தமிழர் மத்தியில் நிலவிய சாதிக் கொடுமை முதலியவற்றுக்கு, வைதீகத்தையும், பிராமணரையுமே குற்றஞ்சாட்டினர்.

## பெரியாரும், திராவிட இயக்கமும்

தொடக்கத்தில் இந்திய தேசிய காங்கிரசில் ஈடுபாடு காட்டிய பெரியார், அடிமட்ட மக்கள் நலன், சாதிப்பாகுபாட்டு ஒழிப்பு முதலிய விடயங்களில் காங்கிரஸ் காட்டிய மெத்தனப் போக்கை எதிர்த்து வெளியேறினார். தன்மான இயக்கத்தைத் தொடங்கித் திராவிடர் மத்தியில் சமூகச் சீர்கேடுகள், அறியாமை, மூடநம்பிக்கை என்பவற்றை எதிர்த்துப் போராடினார். 1935 ஆம் ஆண்டில் சி. இராஜகோபாலாச்சாரியார் (இராஜாஜி) தலைமையில் அமைந்த காங்கிரஸ் அரசின் இந்தித் திணிப்புக் கொள்கைகளை எதிர்த்துப் போராடிய ஈ. வெ. ரா. சிறை சென்றார். இவர் சிறையில் இருந்தபோதே நீதிக் கட்சியின் தலைமைப் பதவி இவரைத் தேடி வந்தது.

## திராவிட நாடு கொள்கையும், திராவிடர் இயக்கமும்

### அண்ணாதுரை

இராஜாஜி அரசின் மொழிக் கொள்கையின் காரணமாகத் திராவிட இயக்கத்தினர் திராவிட நாடு கோரும் நிலைக்கு வந்தனர். 1940 களின் முதல் பாதியில் உருவான இக் கொள்கை 1944 ஆம் ஆண்டில் இறுதி வடிவம் பெற்றது. பெரியார் தலைமையிலான இயக்கம் திராவிடர் கழகம் எனப் பெயர் மாற்றம் பெற்றதும் இவ்வாண்டிலேயே. இவ்வாண்டில் சேலத்தில் நடைபெற்ற கழக மாநாட்டில் வேறு பல தீர்மானங்களுடன் திராவிட நாடு கோரிக்கையும் முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. முழுத் தன்னாட்சி கொண்ட திராவிட நாடு, மத்தியில் கூட்டாட்சி என்பதே இக் கொள்கையின் முக்கிய அம்சமாக இருந்தது. பல துடிப்புள்ள இளைஞர்களையும் இணைத்துக்கொண்டு திராவிடர் கழகம் வளர்ந்து வந்தது. திராவிடர் கழகத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவராக சி. என். அண்ணாதுரை திகழ்ந்தார். திராவிடர் கழகத்தின் செயற்பாடுகள் சமுதாய மட்டத்திலேயே முனைப்புப்

பெற்றிருந்தது. சாதி ஒழிப்பு, மூடநம்பிக்கை ஒழிப்பு, பிராமண ஆதிக்க எதிர்ப்பு, பெண்களின் உரிமைகள் ஆகியவை தொடர்பான விடயங்களில் இவர்கள் தீவிர கவனம் செலுத்தினர்.

## திராவிடர் கழகப் பிளவும், திராவிட முன்னேற்றக் கழகமும்

1949 ஆம் ஆண்டில், பெரியாரின் செயல்பாடுகள் சிலவற்றில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் காரணமாகத் திராவிடர் கழகம் பிளவுபட்டது. அண்ணாதுரையின் தலைமையில் பெருமளவினர் திராவிடர் கழகத்திலிருந்து விலகிப் புதிய இயக்கமொன்றைத் தொடங்கினர். திராவிட முன்னேற்றக் கழகம் (திமுக) என்று பெயரிடப்பட்ட இந்த இயக்கத்துக்கு அண்ணாதுரை தலைமை தாங்கினார். மு. கருணாநிதி, இரா. நெடுஞ்செழியன் போன்றோர் இவருக்குத் துணை நின்றனர்.

தொடக்கத்தில் சமூக இயக்கமாகவே இருந்த திமுக 1957 ஆம் ஆண்டில் அரசியலிலும் குதித்தது. காங்கிரஸ் கட்சியின் ஆதிக்கத்திலிருந்த மத்திய, மாநில அரசுகளின் இந்தித் திணிப்பு முயற்சிகளுக்கு எதிராகவும், பிற நடவடிக்கைகளுக்கு எதிராகவும் தொடர்ச்சியான போராட்டங்களைத் திமுக நடத்தியது. இவற்றின் விளைவாகத் திமுக பெற்ற செல்வாக்கு, 1967 ஆம் ஆண்டில் காங்கிரசைத் தோற்கடித்து ஆட்சிபீடம் ஏற அவர்களுக்கு உதவியது.

## அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்

மிக விரைவிலேயே அண்ணாதுரை காலமானார். தலைமைப் பொறுப்பேற்ற கருணாநிதிக்கும், கட்சிப் பொருளாளராக இருந்த முன்னணி நடிகரான எம். ஜி. இராமச்சந்திரனுக்கும் (எம். ஜி. ஆர்) ஏற்பட்ட பிணக்கினால் கட்சி உடைந்து இரண்டானது. எம். ஜி. ஆர். தலைமையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (அதிமுக) என்னும் அரசியல் கட்சி உருவானது. அடுத்து நடந்த தேர்தலிலேயே அதிமுக ஆட்சியைப் பிடித்தது. எம். ஜி. ஆர் தமிழகத்தின் முதல்வர் ஆனார். இதன் பின்னர், மாறிமாறி ஏதாவது ஒரு திராவிட இயக்கத்தைச் சார்ந்த கட்சியே தமிழகத்தில் ஆட்சியமைக்க முடியும் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது.

## தொகுப்புரை

- அச்சு நூல்கள் பதிப்பு சமூகத்தில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது.
- ஐரோப்பியர்களின் வருகை கல்வியில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது.
- பழைய தமிழ் நூல்களைப் பதிப்பதில் உ.வே.சா, சி.வை. தாமோதரனார் ஆகியோரின் பங்களிப்பு அளப்பரியது.
- தென்னிந்திய நல உரிமை சங்கம் சமூகத்தில் அடித்தட்டு மக்களின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டது.
- திராவிட இயக்கங்கள் தோன்றிய காலம் முதல் இன்றுவரை தமிழகத்தில் நிலைபெற்று நிற்கின்றது.
- தன்னுரிமை, பெண்கல்வி, அடித்தட்டு மக்களின் தேவை ஆகியவற்றைத் திராவிட இயக்கங்கள் முதன்மையான முன்னெடுப்பாக வைத்துச் செயல்பட்டு வருகிறது.

## மாதிரி வினாக்கள்

### ஒரு மதிப்பெண் வினாக்கள்

**1.** தத்துவ போதகர் என்று அழைக்கப்படுபவர்?

அ) மார்கோசு ஆ) கால்டுவெல் **இ) இராபர்ட் தெ நோபிலி** ஈ) வீரமாமுனிவர்

**2.** வேத விளக்கம் என்னும் உரைநடை நூலை இயற்றியவர்?

**அ) வீரமாமுனிவர்** ஆ) எல்லீசு இ) இராபர்ட் தெ நோபிலி ஈ) ஹீராஸ் பாதிரியார்

**3.** இறையனார் களவியலுரை முதன்முலில் அச்சில் வெளிவந்த ஆண்டு?

**அ) 1883** ஆ) 1884 இ) 1885 ஈ) 1886

**4.** சீவகசிந்தாமணியைப் பதிப்பித்தவர்?

அ) சி.வை. தாமோதரம் பிள்ளை **ஆ) உ.வே.சா**

இ) ஆறுமுக நாவலர் ஈ) எஸ். வையாபுரிப்பிள்ளை

**5.** 'தமிழ்த் தாத்தா' என்ற பட்டத்தை உ.வே.சாவிற்கு அளித்தவர்?

அ) அறிஞர் அண்ணா ஆ) சி.வை. தாமோதரம் பிள்ளை

**இ) கல்கி** ஈ) இராஜாஜி

### ஐந்து மதிப்பெண் வினாக்கள்

1. தென்னிந்திய நல உரிமையாளர்கள் சங்கம் குறித்து எழுதுக.
2. திராவிட இயக்க காலம் தமிழர்களின் சமூக எழுச்சி காலம் என்பதை நிறுவுக.
3. உ.வே.சா அவர்களின் தமிழ்ப்பணி குறித்து எழுதுக.
4. சி.வை. தாமோதரனார் அவர்களின் நூற்பதிப்பு வரலாறு குறித்து எழுதுக.

### பத்து மதிப்பெண் வினாக்கள்

1. அச்சு நூல் பதிப்பு வரலாறு குறித்து எழுதுக.
2. தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி குறித்துக் கட்டுரை வரைக.
3. பதினெட்டாம் நூற்றாண்டுக்குப் பிந்தைய பதிப்பாசிரியர்கள் குறித்து எழுதுக.
4. திராவிட இயக்க காலம் குறித்துக் கட்டுரை வரைக.

## மாதிரி வினாக்களின் விடைகள்

### ஒரு மதிப்பெண் வினாக்கள்

1. இ) இராபர்ட் தெ நோபிலி 2. அ) வீரமாமுனிவர் 3. அ) 1883

4. ஆ) உ.வே.சா 5. இ) கல்கி

## பாட நூல்கள்


- தமிழக வரலாறும் பண்பாடும், டாக்டர் கே கேபிள்ளை ,உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி.சென்னை–113.2004
- தமிழர் நாகரிகமும் பண்பாடும்,டாக்டர் தட்சிணாமூர்த்தி, யாழ் வெளியீடு, மேற்கு அண்ணாநகர், சென்னை 40, 2011


## பார்வை நூல்கள்


- தமிழக சமுதாய பண்பாட்டு கலை வரலாறு, முனைவர்கு.சேதுராமன் என்சிபிஎச், 2011.
- தமிழர் கலையும் பண்பாடும், அ.கா.பெருமாள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-98, 2018


……………………